உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தீசுரன்கோயில்

ச. சோமசுந்தரதேசிகர்

இயற்றிய

# புள்ளிருக்குவேளூர்ப்

# புராணவசனம்.

மேற்படியாரால்

சென்னை கந்தன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

# சருக்கவகராதி.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அங்கசந்தானதீர்த்தமகிமைச்சருக்கம | 107 |
| 2. | அங்காரகனருச்சனைசெய்சருக்கம் | 151 |
| 3. | அசரீரிவாக்களித்தசருக்கம் | 128 |
| 4. | ஆதிகாவேரிதீர்த்தச்சருக்கம் | 88 |
| 5. | ஆதித்தனருச்சனைசெய்சருக்கம் | 145 |
| 6. | இந்திரன்சாபநீங்குசருக்கம் | 103 |
| 7. | இரணியவன்மச்சருக்கம் | 56 |
| 8. | இராமதீர்த்தச்சருக்கம் | 84 |
| 9. | இருடியர்முறைமைகூறியசருக்கம் | 40 |
| 10 | உதங்கச்சருக்கம் | 183 |
| 11. | எண்டிசைத்தீர்த்தமகிமைச்சருக்கம் | 98 |
| 12. | கங்கைபாவந்தீர்ந்தசருக்கம் | 43 |
| 13. | கந்தருவர்சாபநீங்குசருக்கம் | 89 |
| 14. | கபிலதீர்த்தச்சருக்கம் | 80 |
| 15. | காலவச்சருக்கம் | 167 |
| 16. | குமரநாயகனருச்சனைசெய்சருக்கம் | 143 |
| 17. | கௌதமதீர்த்தச்சருக்கம | 79 |
| 18. | சங்கரன்தலமகிமைகாட்டியசருக்கம் | 120 |
| 19 | சடாயுவருச்சனைசெய்சருக்கம் | 159 |
| 20 | சதானந்தச்சருக்கம் | 58 |
| 21. | சத்தியசன்மச்சருக்கம் | 66 |
| 22. | சந்திரனருச்சனைசெய்சருக்கம் | 157 |
| 23. | சனார்த்தனச்சருக்கம் | 93 |
| 24. | சித்தாமிர்ததீர்த்தச்சருக்கம் | 37 |
| 25. | சித்திரகேதுச்சருக்கம் | 171 |
| 26 | சிவதன்மன்பிரமாட்சசுநீங்குசருக்கம் | 109 |
| 27. | சீலவிருத்தச்சருக்கம் | 176 |
| 28. | சுதரிசனன்சாபநீங்குசருக்கம் | 76 |
| 29. | சுவாசினிச்சருக்கம் | 178 |
| 30. | சூரியதீர்த்தச்சருக்கம் | 72 |
| 31. | சூலதீர்த்தச்சருக்கம் | 95 |

32. செவ்வேள்திருவவதாரச்சருக்கம் .... 114
33. சேவ்வேள்வரம்பெறுசருக்கம் .... 11[illegible]
34. சேடதீர்த்தச்சருக்கம் .... .... [illegible]
35. சோமதீர்த்தச்சருக்கம் .... .... 8[illegible]
36. தக்கதீர்த்தச்சருக்கம் .... .... 74
37. தக்கனருள்பெறுசருக்கம் .... .... 50
38 தருப்பணபலன்கூறியசருக்கம் .... 48
39. தலமகிமைச்சருக்கம் .... .... 24
40. தாரகன்போர்புரிசருக்கம் .... .... 123
41. தாரகன்வதைச்சருக்கம் .... .... 125
42. திருச்சாந்துண்டைசெய்முறைமைகூறியசருக்கம் ... 111
43. திருவிழாச்சருக்கம் .... .... 136
44. துசீலச்சருக்கம் .... .... 86
45. துச்சீலச்சருக்கம் .... .... 180
46. துருவாசர்பிராந்திதீர்ந்தசருக்கம் .... 10[illegible]
47. தேவாருச்சனைசெய்சருக்கம் .... 131
48. நைமிசாரணியச்சருக்கம் .... ... 17
49. பராசரதீர்த்தச்சருக்கம் .... .... 82
50. பாரியைக்கொன்றபாவந்தீர்ந்தசருக்கம் .... 63
51. பிரமதீர்த்தச்சருக்கம் .... .... 71
52. புருடனைக்கொன்றபாவந்தீர்ந்தசருக்கம் .... 60
53. மாதபலன்கூறியசருக்கம் .... .... 45
54. மிருதசஞ்சீவனதீர்த்தச்சருக்கம் .... 91
55. முனிவர்தீர்த்தச்சருக்கம் .... .... 68
56. வாலாம்பிகையருச்சனைசெய்சருக்கம் .... 132
57. வித்தியாதரதீர்த்தச்சருக்கம் .... 75
58 வில்வதீர்த்தச்சருக்கம் .... .... 7[illegible]
59. வீரகத்திதீர்ந்தசருக்கம் .... .... 6[illegible]
60. வீரசேனச்சருக்கம் .... .... 17[illegible]
61. வேதமருச்சனைசெய்சருக்கம் .... 149

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# புள்ளிருக்குவேளூர்ப்புராணவசனம்

புள்ளிருக்குவேளூர்ப்புராணஞ் செய்யத் தொடங்கிய ஆசிரியர், தாமெடுத்துக்கொண்ட புராணம் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டும், பெரியோ ரொழுக்கம் பேணு தற் பொருட்டும், மாணுக்கர்க்கு அது தப்பாமற் செய்தல் வேண்டுமென்று அறிவித்தற் பொருட்டும் செய்யுள் ரூப மாகக் கூறிய விநாயகர் காப்பு முதலியவற்றை யாம் ஈண்டு வசன ரூபமாகக் கூறுகின்றும்.

### கற்பகப்பிள்ளையார்காப்பு

க. திங்கட் கண்ணியுங் கொன்றைப் பூவுஞ் செஞ் சடைச் சேர்த்த "சிவனெனு நாமந் தனக்கே யுடைய செம்மேனியெங்" கோமானும், நித்தியானந்தரும், ஞான சொரூபருமாகிய வைத்தியலிங்கப் பெருமான், தயிரில் நெய் போலச் சர்வ சங்கார காலம் வரையும் விளங்கி நின்று அடியார்கள் செய்யும் வழிபாட்டை யேற்று அருள்புரியு மகத்துவம் வாய்ந்த, புள்ளிருக்குவேளூர்ப்புராணத்தை, இனிய செந்தமிழாற் கூறுதற்கு இடையூறு வாராதவண்ணங் கற்பகப் பிள்ளையார் பொற்பதத்தை யாந் தியானிப்பாம்.

## கடவுள்வணக்கம்

காப்புக் கூறிய ஆசிரியர் "வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல்" என்னும் இலக்கண விதி பற்றிக் காவியத்திற் கங்கமாகிய வணக்கத்தை முன்னும் வாழ்த்தைப் பின்னும் கூறுகின்றார்.

### வணக்கம்

### வைத்தியலிங்கப்பெருமான்

க. திருமாலும், திசைமுகனும், ஏனைத் தேவர்களும், சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர் முதலிய முனிவர்களும், மற்றை மானுடரும் புள்ளிருக்கு வேளூரிற் போந்து தம்மைப் போற்றவும், அதனாலவர் ஆணவமலம் நீங்கி வீடு பெறவும், தம்மை வணங்குவோர்க்குள்ள வியாதி நீங்கத் திருச்சாந்துண்டை யென்னும் மருந்து கொடுத்துக் கருணை செய்யவுந் திருக்கைலாசமலையினின்றும் புள்ளிருக்குவேளூருக்கு எழுந்தருளிவந்த வைத்தியலிங்கப்பெருமானுடைய திருப்பாதங்களை யாம் நமஸ்கரிப்பாம்.

### தையனாயகியம்மை

உ. சச்சிதானந்த சொரூபமும், நித்தியானந்தமுமுடையராய், சகல லோகங்களுக்கு மாதாவாய், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்தொழிற்குங் காரணியாய், உமை, வாலாம்பிகை என்னுந் திருநாமங்களையுடையராய்ப் புள்ளிருக்குவேளூரில் விளங்கி வீற்றிருந்து, சகல லோகத்தாரும் உய்யும்வண்ணம் பெருங் கருணை பொழியும் தையனாயகியம்மையாரது திருவடிகளைச் சிரமீது சூடி யாம் வணங்குவாம்.

## விணைதீர்த்தவிநாயகர்

௩. தையல்நாயகியம்மையின் மூத்த குமாரரும், இளம் பிறையும், ஒரு கோடும், சிந்தூரந் தீட்டிய சுந்தர முகமும், கருணை மதமும் உடையவரும், புள்ளிருக்குவேளூரில் எந் நாளும் வீற்றிருப்பவருமாகிய விணைதீர்த்தபிள்ளையாரின் திருப் பாதங்களை யாஞ் சிரமீது சூடி நமஸ்கரிப்பாம்.

## குடவறைவிநாயகர்

௪. மோட்சத்தைக் கேட்டு மனமகிழ்கின்ற அன்பருக் குப் புறவிருளைப் போக்கும் பூதசூரியன்போல அகவிருளைப் போக்கும் ஞானசூரியராய் வரங்கொடுத்து நிலைபெற்றிருக் கின்ற தலைவரும், தம்மை யடைந்த அடியவரை மேலாகிய சிவஞானச் செல்வரென்று சொல்லும்படி செய்கின்ற சித்தி விநாயகருமாகிய குடவறை விநாயகருடைய திருவடிகளைச் சிரமீது வைத்து நமஸ்கரிப்பாம்.

## குமரகுருபரசுவாமி

௫. சகல லோகத்தாரும் வணங்க அவர்களைத் தாங்கு கின்ற இரண்டு பாதாரவிந்தங்களும், பெருங்கருணை பொழி கின்ற ஆறுதிருமுகங்களும், கடப்பமலர்மாலை யணிந்த பன் னிரண்டு திருப்புயங்களும், தம்மிடத்து விளங்க வீற்றிருக் கின்றவரும், காங்கேய னென்னுந் திருநாமமுடையவரும், பரிதிபுரியை வாழ்விக்கின்றவருமாகிய குமரகுருபர சுவாமியை யாந் தியானிப்பாம்.

## முத்துக்குமாரசுவாமி

௬. தேவர், சிறையினின்று மீளவும், உலகமெல்லாம் வாழவும், சுவர்க்கலோகத்தை இந்திரனாளவும், சூரன்மார் பம் போழவும், திருக்கரத்திலே வேலைத் தாங்கிய முத்துக் குமாரசுவாமியின் திருவடிகளை யாந் தியானஞ் செய்வாம்.

## திருநந்திதேவர்

எ. திருநீறணிந்த திருமேனியும், உபவீதந் தரித்த திருமார்பும், சிவந்த திருச்சடையும், மூன்று திருக்கண்களும், நான்கு திருக்கரங்களும், மானும், மழுவும், வாளும், பிரம்பும், தம்பால் விளங்க, கைலாச மலையைக் காத்துச் சிவாஞ்ஞையாகிய செங்கோலை நடாத்துகின்ற திருநந்திதேவருடைய திருவடிகளை யாந் தலையால் வணங்குவாம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

அ. நின்றசீர்நெடுமாறனுடைய வெப்புநோய் நீங்கவும், கூன் நிமிரவும், சமண ரொழியவும், பதினன்குலகத்தாரும் வணங்கித் துதிக்கவும், திருவெண்ணீற்றைத் திருமடைப் பள்ளியினின்றும் எடுப்பித்து மாறனென்னும் பரியாயப் பெயரையுடைய அப்பாண்டியனுக்குத் தரித்துச் சைவசமயத்தை விளங்கச் செய்தவரும், "ஊழிக்கடல் உலகெலாங் கொளினுங் காழியுட் புகா"தென்றுதேவாரத்துள் திருவாய்மலர்ந்தருளினவரும், கௌணியகோத்திரத்தை விளக்கும் இரத்தினதீபம் போன்றவருமாகிய திருஞான சம்பந்தப்பிள்ளையாரை யாம் தியானஞ் செய்வாம்.

## திருநாவுக்கரசுநாயனர்

கூ. சமணர் தாங்களுண்டாக்கிய நீற்றறையில் தம்மை வைத்தலும், நஞ்சு கலந்த பாற்சோற்றைத் தமக்குக் கொடுத்தலும், தம்மைக் கொல்லும்படி யானையைத் தமக்கெதிரே விடுத்தலும், தம்மைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிட் படுத்தலும், ஆகிய தீங்குகள் அடியாராகிய தம்மை யணுகாதென்னும் பெருமையை உலகத்தா ரறியும்வண்ணம் பிரத்தியட்சமாக அறிவித்துக் கடலிலே கல்லே தோணியாக மிதப்ப அதன்மேலிருந்து கரை சேர்ந்த திருநாவுக்கரசுநாயனை

ருடைய திருவடிகளை, பிறவிப் பெருங் கடலினின்றும் முத்திக் கரையிலேறும் பொருட்டு யாந் தியானிப்பாம்.

### சுந்தரமூர்த்திநாயனார்

கo. எமது சிவபெருமான் தமது திருவடிகள் வருந்தப் பரவைநாச்சியார் மாளிகைக்கு அத்தயாமத்திலே ஏவலாளாகத் தூது செல்லும்படி ஏவிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய பொன்போன்ற அருமையும் பெருமையு முடைய திருவடிகளை யாம் வணங்கி வாழ்த்துவாம்.

### மாணிக்கவாசகசுவாமிகள்

கக. அரிமர்த்தனபாண்டியனுடைய செங்கோலை நடாத்தும் முதன்மந்திரியும், அரசனுக்குக் குதிரை வாங்குதற்குக் கொண்டு சென்ற பொருள் முழுதும் திருப்பணியிற் செலவழித்தவரும், திருவாசகம் திருக்கோவையார் என்னுந் திருமுறைகளைச் செய்தவருமாகிய திருவாதவூரடிகளை யாம் வணங்குவாம்.

### சண்டேசுரநாயனார் முதலியோர்

க௨. மண்ணியாற்றங்கரையிலே, இடையறாத விருப்பங் கொண்டு, சிவபெருமான் திருமுடிமீது பால் சொரிந்தபிடேகஞ் செய்தவரும், அப்பொழுது பாற்குடத்தைக் காலாலுதைத்த பிதாவின் காலை மழுவால் வெட்டி மிகுமேன்மை பெற்றவருமாகிய சண்டேசுர நாயனாருடைய திருவடிகளையும், ஏனைச் சிவனடியார்களுடைய திருவடிகளையும் யாஞ் சிரமேற் கொள்வாம்.

### புள்ளிருக்குவேளூரைப்புந்திவைக்குந்திருத்தொண்டர்

கங. வெள்ளெருக்குவனத்திலே, விளரிப்பண்ணை, கள்ளருந்தும் வண்டினங்கள் கவின் பெறப்பாடும் விண்ணளக்கும் பூஞ்சோலை விரிந்த புள்ளிருக்கு வேளூரைப் புந்திவைக்

குந் திருத்தொண்டர்களுடைய, திருப்பாதங்களை யாஞ் சிந்தை வைத்து வணங்கி வாழ்த்துவாம்.

## வாழ்த்து

கச. உலகமெல்லாம் அரசனது நீதி நீடூழி வாழுக. அதனால் வேதப்பிராமணர்கள் யாகங்களை விதிப்படி செய்க. அதனால் முகில் மாதம் மும்மழைபெய்க. அதனால் முறை பிறழாது கற்ற கல்வியும், நுண்ணறிவுமுடைய வித்துவான்கள் எங்குஞ்சூழுக. அதனால் இராசாங்கத் தமர்ந்த சைவமோங்கி விளங்குக.

## நூற்பயன்

கடு. திருவிளங்கிய சீர்சால் இங்கிலவுலகத்திலே புகழ் விளங்கிய புள்ளிருக்கு வேளூர் மான்மியத்தை, அன்பு வைத்துப் படிப்போருங் கேட்போரும் அளவிடற்கரிய செல்வத்தினராய், எதிர்த்துவரும் பகையை வெல்லுபவராய், வித்தை விரும்பும் மக்களைப் பெறுபவராய், அரோகதிடகாத்திரராய் வாழ்ந்து, முடிவிலே சிவபெருமான் திருவடியைப் பெற்றுப் பேரானந்த முற்றிருப்பார்கள்.

## அவையடக்கு

கசு. எனது தமிழ்ப்பாடல் வித்துவ சபையின் முன், பூரண சந்திரனுக்கு முற்பட்ட நட்சத்திரம்போல விளக்க முறாதெனப் பாடா தொழியக்கருதினேனாயினும், என்னுடைய மனத்திற் பொருந்திய பேராசையானது நீ! இதனைப் பாடுக வென்று பிடர்பிடித்துந்துதலினால் யான் அதன் வசப்பட்டு நின்று, சிவபெருமானுடைய மகிமை என்பாடலிற் கலக்கப் பெறுதலின், வித்துவான்கள் எனது சொற்குற்றம் நோக்காது அம்மகிமைப் பொருட்குணம் நோக்கிக் கைக்கொள்வரெனத் துணிந்து, இப்புராணத்தை அவர் முன்பு பாடுவேனாயினேன்.

## கடவுள்வணக்கமுற்றிற்று

# பாயிரம்.

கடவுள் வணக்கமும், வாழ்த்தும், நூற்பயனும், அவையடக்கும் கூறிய ஆசிரியர், இப்பாயிரத்தால் புராண வரலாற்றை முன்னர்க் கூறி, இப்புராணத்தில் விரித்துக் கூறுஞ் சரித்திர வரலாறுகளைப் பின்னர்த் தொகுத்துக் கூறுகின்றார்.

## புராணவரலாறு

திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் ஆதியிலே பதினெண்புராணங்களையும் திருநந்தி தேவருக்குத் திருவாய் மலர்ந்தருள, அவர் சனற்குமாரருக்கும் சனற்குமாரர் சத்தியவதியின் புத்திரருக்கும் உபதேசித்தனர். அவர் சூதமுனிவருக்கு உபதேசித்தார். சூதமுனிவர் யாவருங் கதிபெற நைமிசாரணிய முனிவர்களுக்கு உபதேசித்தருளினர்.

பதினெண்புராணங்களாவன :—1. பிரமபுராணம், 2. பதுமபுராணம், 3. விஷ்ணுபுராணம், 4. சைவபுராணம், 5. பாகவதபுராணம், 6. பவிடியபுராணம், 7. மார்க்கண்டேய புராணம், 8. நாரதீயபுராணம், 9. ஆக்கினேயபுராணம், 10. பிரமகைவர்த்தபுராணம், 11. இலிங்கபுராணம், 12. வராகபுராணம், 13. காந்தபுராணம், 14. வாமனபுராணம், 15. கூர்மபுராணம், 16. மற்சபுராணம், 17. காருடபுராணம், 18. பிரமாண்டபுராணம், என்பனவாம். இப்பதினெட்டும் நான்கிலக்கங்கிரந்தமுடையன.

இவற்றுள் சிவபுராணங்கள் மூன்றிலக்கங்கிரந்த முடையன. விஷ்ணுபுராணம், பிரமபுராணம், சூரியபுராணம், ஆக்கினேயபுராணம் என்னும் நான்கும் ஓரிலக்கங்கிரந்தமுடையன.

சிவபுராணங்களாவன :—1. சைவபுராணம், 2. பவிடிய புராணம், 3. மார்க்கண்டேயபுராணம், 4. இலிங்கபுராணம், 5. காந்தபுராணம், 6. வராகபுராணம், 7. வாமனபுராணம், 8. மற்சபுராணம், 9. கூர்மபுராணம், 10. பிரமாண்டபுராணம் இப்பத்துமாம்.

விஷ்ணுபுராணங்களாவன :—1. வைணவபுராணம், 2. காருடபுராணம், 3. நாரதீயபுராணம், 4. பாகவதபுராணம் இந்நான்குமாம்.

பிரமபுராணங்களாவன :—1. பிரமபுராணம், 2. பதுமபுராணம் இவ்விரண்டுமாம்.

சூரியபுராணமாவது :—பிரமகைவர்த்தபுராணம் இவ்வொன்றேயாம்.

அக்கினிபுராணமாவது :—ஆக்கினேயபுராணம் இவ்வொன்றேயாம்.

சிவபுராணம்பத்தினுள், காந்தபுராணம் ஓரிலக்கங் கிரந்தமும், ஆறுசங்கிதையும், ஐம்பதுகாண்டமும் உடையது. ஆறு சங்கிதைகளாவன :—1. ஐம்பத்தையாயிரங் கிரந்தமுடைய சனற்குமார சங்கிதை, 2. ஆறாயிரங் கிரந்தமுடைய சூதசங்கிதை, 3. முப்பதினாயிரம் கிரந்தமுடைய சங்கரசங்கிதை, 4. ஐயாயிரங் கிரந்தமுடைய விண்டுசங்கிதை, 5. மூவாயிரங் கிரந்தமுடைய பிரமசங்கிதை, 6. ஆயிரங் கிரந்தமுடைய சூரசங்கிதை என்னு மிவ்வாறுமாம்.

சூதமுனிவர் பதினெண் புராணங்களுள் பவிடியம், பிரமாண்டம், காந்தம், சைவம் என்னும் நான்கு புராணத்தினின்றும் புள்ளிருக்குவேளூர்மான்மியத்தை வெவ்வேறாக எடுத்துத் திரட்டி நைமிசாரணிய வாசிகளுக்குச் சிறப்பாகவும், உபதேசித் தருளினர்.

புராணவரலாறு கூறிய ஆசிரியர் பின்னே விரித்துக் கூறுஞ் சரித்திர வரலாற்றை இங்கே தொகுத்துக் கூறுகின்றார்.

## சரித்திரவரலாறு.

கடவுள்வணக்கம், பாயிரம், நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு என்னுமிவைகளை விடுத்து, 1. நைமிசாரணியச்சருக்கம், 2. தலமகிமைச்சருக்கம், 3. சித்தாமிர்ததீர்த்தச்சருக்கம், 4. இருடியர் முறைமைகூறியசருக்கம், 5. கங்கைபாவந்தீர்ந்தசருக்கம், 6. மாதபலன்கூறியசருக்கம், 7. தருப்பணபலன்கூறியசருக்கம், 8. தக்கனருள்பெறுசருக்கம், 9. இரணியவன்மச்சருக்கம், 10. சதானந்தச்சருக்கம், 11. புருடனைக்கொன்றபாவந்தீர்ந்த சருக்கம், 12. பாரியைக்கொன்ற பாவந்தீர்ந்தசருக்கம், 13. சத்தியசன்மச்சருக்கம், 14. முனிவர்தீர்த்தச்சருக்கம், 15. வீரகத்திதீர்ந்தசருக்கம், 16. பிரம தீர்த்தச்சருக்கம், 17. சூரிய தீர்த்தச்சருக்கம், 18. தக்கதீர்த்தச்சருக்கம், 19. வித்தியாதர தீர்த்தச்சருக்கம், 20. சுதரிசனன்சாபநீங்குசருக்கம், 21. வில்வ தீர்த்தச்சருக்கம், 22. கௌதமதீர்த்தச்சருக்கம், 23. கபில தீர்த்தச்சருக்கம், 24. சோமதீர்த்தச்சருக்கம், 25. பாராசரதீர்த்தச்சருக்கம், 26. இராமதீர்த்தச்சருக்கம், 27. துசீலச்சருக்கம், 28. ஆதிகாவேரிதீர்த்தச்சருக்கம், 29. கந்தருவர்சாபநீங்கு சருக்கம், 30. மிருதசஞ்சீவனதீர்த்தச்சருக்கம், 31. சனார்த்தனச்சருக்கம், 32. சூலதீர்த்தச்சருக்கம், 33. சேடதீர்த்தச்சருக்கம் 34. எண்டிசைத்தீர்த்தமகிமைச்சருக்கம், 35. இந்திரன் சாபநீங்குசருக்கம், 36. துருவாசர்பிராந்திதீர்ந்தசருக்கம், 37. அங்கசந்தானமகிமைச்சருக்கம், 38. சிவதன்மன்பிரமராட்சசுநீங்குசருக்கம், 39. திருச்சாந்துண்டைசெய்முறைமை கூறியசருக்கம், 40. செவ்வேள்திருவவதாரச்சருக்கம், 41. செவ்வேள்வரம்பெறுசருக்கம், 42. சங்கரன்தலமகிமைகாட்டிய சருக்கம், 43. தாரகன் போர்புரிசருக்கம், 44. தாரகன்

வதைச்சருக்கம், 45. அசரீரிவாக்களித்தசருக்கம், 46. தேவ ரருச்சனைசெய் சருக்கம், 47. வாலாம்பிகை யருச்சனைசெய் சருக்கம், 48. திருவிழாச்சருக்கம், 49. குமாரநாயகனருச் சனைசெய்சருக்கம், 50. ஆதித்தனருச்சனைசெய்சருக்கம், 51. வேதமருச்சனைசெய்சருக்கம், 52. அங்காரகனருச்சனைசெய் சருக்கம், 53. சந்திரனருச்சனைசெய்சருக்கம், 54. சடாயுவருச் சனைசெய்சருக்கம், 55. காலவச்சருக்கம், 56. சித்திரகேதுச் சருக்கம், 57. வீரசேனச்சருக்கம், 58. சீலவிருத்தச்சருக்கம், 59. சுவாசினிச்சருக்கம், 60. துச்சீலச்சருக்கம், 61. உதங்கச் சருக்கம் ஆகச் சருகத்தொகை அறுபத்தொன்று. அவற்றைச் சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளியபடி யானுங் கூறுகின்றே னென்று கூறிய வழிநூலாசிரியர் நாட்டுச்சிறப்புக் கூறத் தொடங்குகின்றார்.

பாயிர முற்றிற்று

---

# திருநாட்டுச்சிறப்பு.

"பாயிரமில்லது பனுவலன்றே" என்னும் விதிபற்றிப் பாயிரங் கூறிய ஆசிரியர் நாட்டுவர்ணனையுங் காவியத்திற்கு அங்கமெனக் கூறும் இலக்கணம் பற்றி நாட்டு வர்ணனை கூறத் தொடங்குகின்றார்.

## சோணாடு

சோழநாடு; உமாதேவியார் பற்பல தலங்களிலே சிவ பெருமானைப் பூசிக்கப்பெற்றது. நல்லறிவும் நல்லொழுக்கமு முடைய பெரியோர்களும் இரப்பவர்க்கில்லை யென்னுதீயும் பெருங்குடி வள்ளல்களும் வசிக்கப் பெற்றது. தஞ்சமென வந்திடு சிறுபுறவின் பொருட்டுத் தயை பெரிதுமுடைய

சிபிச்சக்கிரவர்த்தி தன்தசையை அரிந்து வேடனுக்குக் கொடுக்கப் பெற்றது. மனுநீதிகண்டசோழன் தன்னேக புத்திரன் தேர்மீதேறி வீதியிற் செல்லும்பொழுது ஒரு பசுக்கன்று அவனை யறியாமற் றுள்ளிக்கொண்டு வந்து தேர்க் காலிற் பட்டிறந்தமையால் அவனையுந் தேர்க்காலின்கீழ் வைத்தூர்ந்து தேவரும் பூமாரிபெய்யச் செங்கோல் செலுத் தப்பெற்றது. மாதமும்மாரி பெய்து குறைவில்லாத பல வளங்களையும் எவர்க்குங் கொடுத்து மிக்க புகழடைந்து அழகு பொலிந்துள்ளது.

## குறிஞ்சி

குறிஞ்சிநிலத்தில் மலையருவிகள் இரத்தினங்களைப் புடைத்துக்கொண்டு நாற்புறத்திலுஞ் சூழுதலும், தலைவனுந் தலைவியும் ஊடல்நீங்கிக் கூடல்மிக்கு உவகையிற்றிளைத் திருத் தலும், குறத்தியர் தினைக்கதிர் கவருங் கிளிகளை யோட்டுதலும், முருகவேளுக்கு வெறியாட்டயர்தலும், அகின்மரங்களையும், குங்குமமரங்களையும், அகழ்ந்தெறிந்து இரத்தினங்களைப் போ ராகக் குவித்துத் தினை விதைத்தலும் மிக்கிருக்கும்.

## முல்லை

முல்லைநிலத்தில் பஞ்சகௌவியப் பசுக்களும் கான்யாறு களும் சேர்ந்திருத்தலும், தலைவி தலைவனைப் பிரிந்திருத் தலும், இடைச்சியர் மிடாவிற் பசுத்தயிர் கடைதலும், பாற் சோற்றையும் வேறு பல்வகை யுணுக்களையும் பரப்பி வைத் திருத்தலும், இடையர்கள் கம்பளத்தினாலே தங்கள் உடம் பைப் போர்த்துக் கொள்ளுதலும், கொன்றைக் குழல் வேய்ங்குழல் ஊதுதலும், மழவிளங் கன்றுகள், மேயச் சென்ற தாய்ப்பசுக்கள் வரும் வழியைப் பார்த்துக் கொண்டு நின்று உருகுதலும் மிக்கிருக்கும்.

## நெய்தல்

நெய்தனிலத்தில் பலவிதமீன்குவைகள் செறிதலும், தலைவரைப் பிரிந்த தலைவியர் அவரை நினைந் திரங்குதலும், பரத்தியர் முத்துக்களைக் குவித்தலும், பரதவர் சுறுமுள்ளை நட்டு வருணனுக்கு விழாச் செய்தலும், கடற்கரையிற் பரந்த வெண்மணல் நிலாவீச அதன் பக்கத்திற் பொருந்திய கருங் கடல் இருள் பரந்தாற் போன்றிருக்க அவ்விரண்டற்கும் மத்தியிற் பொருந்திய பவளக்கொடியினடுவிலே கண்கள் பொருந்திய வலைக்குவியல்கள் சூழ்ந்துகிடத்தலும் மிக்கிருக் கும்.

## மருதம்

மருதநிலத்தில் காவிரிப் புனலும் புகழும் பரத்தலும், தலைவனுந் தலைவியும் ஊடுதலும், கடைசியர்கள் தூற்றுத நெல்லைக் குவித்தலும், குவித்த நெல்லைக் கொழித்தலும் இந் திரனைக் குறித்து வள்ளைப்பாட்டுப் பாடுதலும், வண்டுக ளாகிய பாடகர் சூழ்ந்து மருதப்பண்ணைப் பாட, தாமரைக ளாகிய தாதாக்கள் அதனைக் கேட்டு உபகாரமாகத் தேனைச் சொரிதலும், நீரோடைகளிலேயுள்ள வள்ளையிலைகளை எருமை களுண்டு நித்திரைசெய்தலும் மிக்கிருக்கும்.

## நிலமயக்கம்

### குறிஞ்சியும் முல்லையும்

ஒருபாற் குறிஞ்சிநிலமும், முல்லைநிலமும் கலத்தலாற் குறிஞ்சிநிலக்கருப்பொருளாகிய மயில் முல்லைநிலக் கருப் பொருளாகிய காயாமரத்திலிருந்து கலாபத்தை விரித்தாடுதல் கண்ணுக் கழகா யிருக்கும்.

### நெய்தலும் மருதமும்

ஒருபால் நெய்தனிலமும், மருதநிலமும் கலத்தலால் மருதநிலக்கருப்பொருளாகிய தாமரையிலிருக்கும் வண்டின்

கூட்டங்கள் நெய்தனிலக்கருப்பொருளாகிய தாழைமலரின் மகரந்தத்தைக் குடைந்து அதனைத் தம்மீது அப்பிக்கொண்டு செவ்வழிப்பண்ணைப் பாடுதல் காதுக்கு இனிமையா யிருக்கும்.

## நான்கு நிலங்கள்

ஒருபால் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நான்கு நிலங்களும் ஒருங்கே கலந்த கலப்புநிலங்களும் மிக்கிருக்கும்.

## பாலை

ஒருபால் நான்கு நிலத்துள் "முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்கு துயருறுத்து, நண்பகற் பொழுதொடு விரவிப் பாலை யென்பதோர் படிவங் கொண்" டிருக்கும்.

## நானிலமாக்கள் வாழுநிலங்கள்

ஆறலைத்திடும் பாலைநிலமாக்களும், அத்தொழில் புரியுங் குறிஞ்சி நிலமாக்களும், ஆனேறு மேய்த்திடும் முல்லைநில மாக்களும், மீனேறுபடுத்திடும் நெய்தனிலமாக்களும், உழுதூண் கொள்ளும் மருத நிலமாக்களும் அவ்வவ் நிலங்களிலே வேறு வேறு குழாங் குழாமாய் விளக்கமுற்று வாழ்வார்கள்.

## முகில் வளப்பம்

வெண்ணிற முகில் நீலநிறக் கடலினைக் குடித்துக் கருநிற முகிலாய்ப் பொன்னென்று சொல்ல மின்னி நல்வளநிறைந்த சையமால் வரைமேல் வெள்ளி விழுதைப் போல நல்ல மழைத் தாரையைப் பொழிந்தது.

சையகிரியினின்றும் இழிகின்ற வெள்ளருவியானது செழித்த மாணிக்கங்களைத் திரைக்கையால் வாரிக்கொண்டு அம்மலையின்மேற் பரந்து சூழ்ந்தோடி அதன் சாரலிலுள்ள

குறிஞ்சிநிலத்தை மலைவாணராகிய குறவர்கள் மனந்தளர்ந்து கூச்சலிடும்படி பிளந்து முல்லைநிலத்திற் சென்றது.

அதிற் சென்ற அருவி குங்குமமரத்தின் கோடுகளை முரித்துச், சந்தனமரங்களைத் தகர்த்து, அகிற்கட்டைகளை எறிந்து, ஆசினிப்பலாவைப் பெயர்த்து மருதநிலத்திற் சேர்ந்தது.

அதிற் சென்ற காவிரிநீர், குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையேயுள்ள பாலை நிலத்தில் இருக்கும் வடவாமுகாக்கினி போலச் சிவந்த பருக்கைக் கற்கள் செறிந்திருந்த நிலப்பிளப்பிற் புகுந்து பாதலத்தினடிவரை ஆழ்ந்து மேலெழுந்து பக்கத்திலே பரந்து சூழ்ந்து அந்நில வெப்பத்தையும் நீக்கிற்று.

பின்னர் நெய்தனிலத்திற் சென்று அது மருதநிலமாகும்படி அதன் உவர் முழுதும் மாற்றிச் சமுத்திரத்தின் புலால் நாற்றமும் மாற்றுதற் பொருட்டு அதிற் சென்றது.

காவிரிநீர் விரைந்தோடி மதகினுள் மோதி வாய்க்கால்களின் இருமருங்கும் வழிந்து தாமரைத் தடாகங்கள், குளங்கள் பலவற்றையும் நிரப்பி வயல்கள் தோறுஞ் சூழ்ந்து நிறைந்து மடைகளை உடைக்கக் கண்ட மள்ளர்கள், விரைந்தோடிப் பரந்து நின்று மகிழ்ச்சியோடு தடைசெய்து எவ்விடங்களிலும் உழுவார்கள். உழுத சேற்றிலே நென்முளைகளை விதைப்பார்கள். கடைசியர்கள் நாற்று முடிகளையெடுத்துக் கொண்டு வந்து இந்திரனை வணங்கி, வயல்கள் பயிராற் பொலிந்து பயன்றருக வென வாழ்த்தி, மகிழ்ச்சியோடு நடுவார்கள்.

கடைசியர்கள் கள்ளைவார்க்க, மள்ளர் மகிழ்ந்துண்ணும் போது வழிந்து வயல்கள்தோறும் பெருகிய கள்ளை வாளை

மீன்கள் குடித்துத் துள்ளி யெழுந்து மதுமயக்கத்தால் தாமரை மலரில் நித்திரை செய்யும்.

மள்ளர்கள் களைபிடுங்கும் பருவமறிந்து கடைசியர்களுக்குத் தெரிவிக்க அவர்கள் களை பிடுங்கத் தழைந்த நெற்பயிர்கள் கருமுதிர்ந்து வெளிற்றறிவினரைப் போலக் கதிர்த்தலை நிமிர்ந்து மேலு மேலு முயர்ந்து பின் பெரும் பயன் மிக்க அன்பரொருவரை யொருவர் வணங்குதல்போல அரிசியாகிய பெரும்பயன் கொண்டு ஒன்றை யொன்று வணங்கி நின்றன.

நெற்பயிர் விளைந்து வளைந்தமையைக் கண்ட மள்ளர்கள் பலர் பரந்து நின்று அதனை யறுப்பார்கள். பலர் மலைகளைப் போல நெற்போரைச் செய்வார்கள். பலர் எருமைக் கடாக்களை நிரை நிரையாகக் கயிற்றிற் பூட்டி, சூட்டை மிதித்து, அரசனுக்கு ஆறிலொரு பங்கு கொடுத்து, ஐந்து பங்கில் தான தருமங்களுக்கும் வரையறுத்தபடி கொடுத்து எஞ்சிய நெல்லை வண்டியிலேற்றித் தத்தம் ஊர்களுக்குக் கொண்டு போவார்கள்.

திருநாட்டுச்சிறப்புமுற்றிற்று

---

# திருநகரச்சிறப்பு

நாட்டு வருணனை கூறிய ஆசிரியர் நகரவர்ணனையும் காவியத்திற்கங்க மெனக் கூறும் இலக்கண விதிபற்றி நகரச் சிறப்புக் கூறத் தொடங்குகின்றார்.

புள்ளிருக்குவேளூர்

இத்தகைய வளமும், புகழும் நிறைந்த சோழநாட்டிலே வைத்தியநாத மென்னும் புண்ணிய ஸ்தலம் மாடமாளிகைகள் பொலிந்து பொன்னுலகத்தினும் அழகு மிக்கிருக்கும்.

சந்திரகாந்தத்தாற் செய்த மேடைகளும், பொற்குடங்களிருக்கும் வேதிகைகளும், நவரத்தினங்கள் பதித்துச் செய்த சித்திரத்தூண்கள் பொருந்திய மண்டபங்களும், நீண்ட நிலையையுடைய பலகணிகளும் அந்நகரமெங்கணும் விளங்கா நிற்கும்.

அன்ன சத்திரங்களும், சிவாகமம் பயின்றிடும் சைவர் மடங்களும், பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் நால்வகை ஆச்சிரமிகளும் வசிக்கும் இருக்கைகளும் வீதிகளின் இருமருங்கிலும் நெருங்கி யிருக்கும்.

அந்தணர் இல்லந்தோறும் மந்திரவிதிதவரு து செய்கின்ற யாக குண்டத்து ஓமப்புகை நறுமணங்கமழும். அரசர், வணிகர், சூத்திரர்களுடைய இல்லந்தோறும் அவரவர் வருணத்திற்கியைந்த நல்ல சடங்குகள் பொலிந்திருக்கும். மேன் மாடங்கள் பொருந்திய வீடுகடோறும் பொன்னும், வெள்ளியும், நவரத்தினங்களும் பெண்களணிந்திருக்கின்ற ஆபரணங்களும் ஒளியை வீசி அங்கங்கேயுள்ள விருளையோட்டும். கடைவீதி, திரைகள் அசைதலினாலும் கொடிப் பவளங்கள் செழித்திருத்தலினாலும், வெண்முத்தும் வெண்சங்கும் மிக்கிருத்தலினாலும், இலக்குமி வசித்தலினாலும், எண்ணரிய கலன்கள் பரப்பப்பட் டிருத்தலினாலும் கடல்போலப் பொலிந்து விளங்கும்.

குபேரனது அளகாபுரியிலுள்ள செல்வங்க ளெல்லாம் ஒருகடைவீதியிலுள்ள செல்வங்களுக் கொப்பாகா. இலக்குமியும், சரசுவதியும் அந்நகரத்து மனைகள் தோறும் மகிழ்ந்து வீற்றிருப்பார்கள். வீதிகளின்மேல பரந்தெழுகின்றதுகள் அடங்கும் வண்ணம் பெண்கள் பனிநீரிற் கரைத்த சந்தனக் குழம்பைத் தெளிப்பார்கள். வேதிகைகளின்மேல் இரத்தினங்களைப்பரப்பி, பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்த பூரண கும்பங்களை வைப்பார்கள்.

பொன்மதில் உயர்ந்திருக்கும் புள்ளிருக்கு வேளூரில் இல்லந்தோறும் நல்ல கலியாணச் சிறப்பு நிலைபெற்றிருக்கும். அங்கே பிறந்த மானுடரும் மற்றைய வுயிர்களுஞ் சிவகணமாம்.

அந்நகரிலே செருந்தி, சண்பகம், பாதிரி, வில்வம், குருந்தம், ஆத்தி, மகிழ், தேமா, தேவதாரம், கோங்கம், மாதுளை, புன்னை என்னும் மரங்கள் பொருந்திய திருநந்தன வனம் அநேகம் உள்ளன.

முற்றிய பலாப்பழம் கனிந்தொழுகும் தேனும், பூக்களிதழ் விரிந்திடப் பெருகுந்தேனும், கண்களிக்கும்படி பூஞ்சோலைகளிலே கவின்பெற விளங்கும்.

புள்ளிருக்குவேளூரின் புராதனச் சிறப்பு முற்றும் சொல்லுதற்குத்தாமரை நள்ளிருக்கும் நான்முகனும், ஆயிரமுகமுறும் ஆதிசேடனும் எண்ணரும் பிறப்பெடுப்பினுஞ் சொல்ல முடியாதெனின், ஒரு முகமுடையே னொருபிறப்பில் ஒரு நாவாற் சொல்லுத லெங்ஙனம்? அங்ஙனமிருத்தலால் அச்சிறப்பிற் சிறிதறிந்தவாறுரைத்தேனென்று வழிநூலாசிரியர் கூறுவாராயினர்.

திருநகரச்சிறப்புமுற்றிற்று.

---

# க. நைமிசாரணியச்சருக்கம்.

இச்சருக்கத்தால், பிரமதேவர் விடுத்த சக்கரநேமி சென்று தங்கினமையின் நைமிசமெனப் பெயர் பெற்ற வனத்திலே சௌனகாதி நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களுமிருந்து யாகஞ்செய்து தவமியற்றினமை கூறப்படுகின்றது.

சிருட்டிகர்த்தராய், திசைமுகராய், வேதவிற்பன்னராய், தாமரையாசனராய், கலைமகள்காதலராய், கண்ணுதற்கடவுட்கு நண்ணுமோர் சத்தியாய் விளங்கும் பிரமதேவர், தமது மனத்திருளாகிய அஞ்ஞானம் நீங்கித் தெளிவடைதலையும் பொருட்டுச் சரசுவதி தேவியோடு காஞ்சிபுரத்தையடைந்து கச்சபாலயம் என்னும் சிவாலயத்திலே சிவாகம விதிப்படி சிவபெருமானைப் பூசை செய்துகொண்டிருந்தார்.

இருக்கு நாளிலே சௌனகாதி முனிவர்கள், காஞ்சித் திருநகரத்தையடைந்து பிரமதேவரைத் தரிசித்து நமஸ்கரித்து, சற்காரவசனங் கூறி, அஞ்சலியஸ்தராய் நின்று, மனமுருகி, அவரைப் பார்த்து, சிருட்டி கர்த்தரே! அடியேங்கள் பிரமசரிய விரதமநுட்டித்து, பின்பு கிருகஸ்தர்களாய் இல்லற தருமத்தையியற்றி முடித்தேம். இனி வானப்பிரஸ்தர்களாய், யாகமும் தவமும் செய்து உய்ய விரும்புகின்றேம்; அவற்றிற்கேற்ற தபோவனம் இஃதெனவொன்றைத் தெரித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அதுகேட்ட பிரமதேவர், ஒரு தருப்பையையெடுத்துச் சக்கரமாக்கி நிலத்திலுருட்டிவிட்டு, முனிவர்களே! நீவிர் இச்சக்கரத்தின் பின் செல்லுங்கள்; இது தங்குமிடத்தைத் தபோவனமாகக் கொள்ளுங்கள்; என்றருளிச் செய்தார். அவர்கள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அதன்பின் செல்ல, அது மேருமலைக்குத் தென்றிசையிலுள்ள ஒரு வனத்திற்சென்று தங்கிற்று. நேமிதங்கினமையின் நைமிசமெனப் பெயர்பெற்ற அவ்வனமே தாங்கள் யாகமும் தவமும் செய்தற்குரிய தானமெனக்கருதி அங்கே இருந்தார்கள். அது நிற்க.

இனி வழிநூலாசிரியர் அந்நைமிசாரணியத்தை வர்ணித்துக் கூறத்தொடங்குகின்றார். அது வருமாறு:—

அவ்வனத்திலுள்ள புன்னையுஞ் செருந்தியும் பூவைச் சொரிதல், சோலையாகியபெண், முனிவரது நல்வரவு கண்டு மகிழ்ச்சிகொண்டு வெள்ளி மலரையும் பொன் மலரையும் அவர்கள் திருவடியில் சொரிதல்போன்றிருக்கும். மரக் கொம்புகள் காற்றினலடிக்கப்பட்டு அடிக்கடி நிலத்தில் வளைந்து தாழ்ந்தெழுதல், அப்பெண், அவர்கள் திருவடிகளில் தனித்தனி வணங்கி எழுதல்போன்றிருக்கும்.

அங்குள்ள சுனைகளில் வெண்மையான நீர் நிறைந்திருத்தல் முனிவர் நடந்துவந்த இளைப்பாறும்படி அப்பெண், அவர்கள் உண்ணுதற்கு வைத்த அமிர்தம்போன்றிருக்கும்.

சோலையில் வண்டுகள் ஒலித்தல், இங்கே பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம், தேன், கிழங்கு முதலியவைகள் இருக்கின்றன; பசிதீர உண்ணுதற்கு வம்மினென்று அப்பெண் அவர்களை அழைத்தல் போன்றிருக்கும்.

இனி, அங்கேயுள்ள பாம்புகளும், மயில்களும் பகையின்றி மகிழ்ச்சியுடன் ஒன்றோடொன்று அன்பாயிருக்கும். பசுவும் புலியும் பகைதீர்ந்து ஒருசுனையில் ஒருங்கே நீருருந்தும்; யானையுஞ் சிங்கமும் ஒன்றையொன்று நினைத்துச் சென்று ஓரிடத்திற்கூடிநிற்கும். காட்டு மல்லிகையாகிய குளவி, பூவை யீன்றெடுக்கும். வேங்கைமரம், பூவாகிய புலிக்குட்டியைப்பெற்றெடுக்கும். குராமரம், மலராகிய பாவையையீன்றெடுக்கும்.

இன்னும் அந்நைமிசவனம் பற்பல வளங்களையும் இளமைப் பருவத்தையும், எட்டுச்சித்தியையும், கொடுத்

தலும், பிறப்பை யொழித்தலுமாகிய பற்பல அற்புதங்களை யுடையது.

அற்புதமாகிய அவ்வனத்தின் மத்தியில் தவாக்கினிச் சொலிப்பினலும், செஞ்சடைத் தேசினலும் அநேகஞ் சூரியர் போன்றிருக்கும் முனிவர்கள், சோலைவளங்களைப் பார்த்து, இது யாங்கள் யாகஞ்செய்தற்கேற்ற தானமென்று சந்தோஷமடைந்து, "விண்ணிலிருக்கும் விசுவகன்மனை மண்ணில் வரும்படி யெண்ணினர்கள்." எண்ணுமுன், அவன் அவரெதிரே வந்து நிற்க, அவர்களவனைக்கண்டு மகிழ்ந்து, "இவ்வனத்தில் யாங்கள் யாகஞ் செய்தற்குத் தகுந்த சாலையொன்று செய்யக்கடவா" யென்று பணித்தார்கள்.

விசுவகன்மன் முனிவர்சொல்லை மனத்திலிருத்தி, சிற்ப நூல் விதியைச் சிந்தித்து, யாகசாலைக்குப் பதினயிரம் யோசனைப் பரப்பு உள்ளேவைத்து, நான்குபக்கமுஞ் சுற்றளவு பதினயிரம் யோசனையாகவும், உயரம் நாலாயிரம் யோசனையாகவும் மதிலையெடுத்து, நாற்றிசையிலும் ஆறுயிரம் யோசனை உயரமுடைய நான்கு சித்திரக் கோபுரங்களை யெழுப்பி, அக்கோபுர வாயில்களில் வச்சிர நிலைகளை நிறுத்தி, மரகதக் கதவுகளை இட்டு, உள்ளிடத்தில் இரத்தினத் தூண்களை வரிசையாக நிறுவி, பொற்றகட்டால் வேய்ந்த மண்டபங்களும், தேவ கோட்டங்களும், நிலாமுற்றங்களும், முனிவரொருங்கிருக்குங் கோயிலும், ஓமகுண்டமும், வேதிகையும், ஓமாக்கினி மூட்டும் தண்டிலத்தானமும், தேவரவியருந்துமிடமும், பலவகைப் பொருளு மொருங்குவைக்குங்களமும், சுருக்குச் சுருவம் தீக்கடைகோலிருக்கு நிலமும், யாகத்தம்பச் சூழலும், யாகப்பசுக் கட்டுந்தேயமும், பூமாலை, பனி

நீர், சந்தனம், பச்சைக் கர்ப்பூரம், பாக்கு, வெற்றிலை, தனித்தனி வைக்கும் வைப்புகளும், அன்னசாலையும், அந்தணர் பன்னசாலையும், பொற்பொக்கிஷ சாலையும், இரத்தின பொக்கிஷ சாலையும், முதிரைத் தானியம் தினை யவை குளநெல் எள்ளு பழவர்க்கம் யாகத்துக்குரிய மற்றைப்பொருள்கள் வைக்கும் இல்லங்களும், யாகசாலையைச்சூழ்ந்து தருப்பை, பொரி, மாவிலை, சமித்து, நெய் இருக்கும் வளாகங்களும், யாகசாலையில் தேவரிருத்தற்குப் பீடங்களும் பொருந்த யாகசாலையை விதிப்படி செய்துமுடித்து, நைமிச முனிவர் செய்ய சேவடி சேவித்து விடைபெற்று, விண்ணுலகத்திற்கு விசுவகன்மன் சென்றான்.

சௌனகர், சநகர், கற்கர், அகத்தியர், வியாக்கிரபாதர், அத்திரி, விசுவாமித்திரர், உரோமசர், குச்சகர், சுகர், துருவாசர், *குணி, பரத்துவாசர், காசிபர், வசிட்டர், சாந்தர், கார்த்தியாயனர், மரீசி, புலத்தியர், ஆணிமாண்டவியர், தாற்பியர், நாசிகேது, ஆத்திரேயர், நாரதர், பருவதாக்கினி, ததீசி, சிலாதரர்,வாமதேவர், கிருதமாலிதர், மதங்கர், சுனச்சேபர், சனந்தரர், சனுதிபர், சாண்டில்லியர், பிருகு, இரைவதர், மாதேசர், பினுகி, மிருகண்டு, ஆங்கீரர், வைச்சிரவணர், சம்வர்த்தர், பார்க்கவர், கபிலர், நாதசன்மர், சமதக்கினி, பராசரர், மார்க்கண்டேயர், கண்ணுவர், உத்தாலகர், சாத்தியர், †குசிகோத்திரர், சுனப்புச்சர், வேதாரணியர் முதலிய முனிவர் யாவரும் முன்பு தாந்தாஞ்செய்த தவப்பயனே இவ்வுருவாய் வந்து சித்தித்ததென்று சொல்லிக்கொண்டு யாகசாலையையடைந்து அதனைக் கண்குளிரக்கண்டு இது ஈசுரகற்

---

* குணி-அஷ்டாவக்கிரர். இவர் கலைக்கோட்டு முனிவரின்சீடர்.

† குசிகோத்திரர்-கௌசிகர் பிதா; கௌசிகர்-விசுவாமித்திரர்.

அவ்வை சண்முகம்

பணியினலுண்டானதோ? பிரமாவினற் சிருட்டியாரம்ப காலத்திலே பூமியோடொருங்கு சிருட்டிக்கப்பட்டதோ? என்றுசொல்லி ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்கள்.

நான்மறையோதியுணர்ந்தவரும், நற்குணமாதி நிறைந்தவரும், கற்கு நூல் கற்று நிற்குநிலை நிற்பவரும், ஆருகதம், பௌத்தம் முதலாகிய புறச்சமய நூல்களின் பொய்ப்பொருளை யுணர்ந்து, அச்சமயங்கள் அபக்குவர்க்கேயெனவொழித்துச், சைவசாத்திரத்தை யோதி அதன் உண்மைப்பொருளைப் பகுத்தறிந்து, சைவசமயமே பக்குவர்க்குரிய மெய்ச்சமயமெனக்கொண்டு, அச்சமயக் கடவுளாகிய சிவபெருமானை யடைதற்குச் சாதனமாகிய விபூதி உருத்திராக்கங்களை அணிபவருமாகிய அம்முனிவர்கள், யாகத்துக்கு வேண்டும் உபகரணங்க ளெல்லாவற்றையும் அமைத்துக் கொண்டு, இருபத்தாறுயிரஞ் சீடர்கள் சாதகராய்ப் பக்கத்திலே சூழ்ந்திருக்க, வேதவொலியும், யாழொலியுப், முழவு காகளம் சின்னம் என்னும் வாச்சியவொலியும் இடிமுழக்கையடக்கி மேலெழ, தேவதுந்துபி ஆகாயத்திலே கறங்க, தேவர்கள் கற்பகப் பொற்பூமாரி பொழிய, யாகஞ் செய்யத்தொடங்கி, வேதவிதிப்படி எல்லாக் கிரியைகளுஞ் செய்து, யாககுண்டத்தக்கினியைச் சமித்துமுதலியவைகளினலே சொலிப்பித்து, நெய் சொரிந்து, பூரணகுதிபண்ணி, மும்மூர்த்திகளுக்கும் இந்திரன் முதலிய மற்றைத் தேவர்களுக்கும் அவிப்பாகங் கொடுத்துப், பின்னர்க் காமதேனுவினற் கொடுக்கப்பட்ட கிழங்கு, காய், கனி, அன்னம், சித்திரான்னம், நெய்பிற்செய்த சிற்றுண்டிகள், தேனேடுகலந்த பால் இனியசுவையையுடைய பொரிக்கறி முதலிய பல வகைப்பட்ட விசேட வுணவுகளை அந்தணர்க்கு அளித்தார்கள்.

உச்சுவாசம் நிச்சுவாசம் என்னும் இரண்டையும் அடக்குதலினலே நாதவொலியானது சுழுமுன மார்க்கத்தையுடைய யோகமுந் தவமுஞ்செய்கின்ற சௌனகாதி முனிவர் பன்னிரண்டு வருடம் அரிய யாகத்தைச்செய்து முடித்துப், பின்னர் அபவிருத ஸ்நானம் செய்து அனுட்டானம் பண்ணிக்கொண்டு, யாகசாலையில் வந்து கூடி, நாம் இந்நாள் வரையும் தவமும், யாகமுஞ்செய்து முடித்தோம்; சிவபெருமானேடு இரண்டறக்கலக்கும் அத்துவித பரமுத்தியை யடையும் வழியை நாம் அறிந்திலேம்; அறிவிப்பாரையுந் தெரிந்திலேம்; இனி அதற்கு நாம் செய்யக்கடவது யாது என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, உபவீத மணிந்த மார்பினராய், விபூதி உருத்திராக்கந்தரித்த மேனியராய், பின்ருங்கு சடையினராய், தண்டு கமண்டலந் தரித்தவராய் விளங்கும் சூதமுனிவர் அங்கே யெழுந்தருளி வந்தார்.

அவரது நல்வரவைக் கண்ட முனிவர் கரையிலாத மகிழ்ச்சியடைந்து தம்மையறியாது கைகள் சிரமீதேறிக் குவிய இருக்கை விட்டெழுந்து எதிர்கொண்டு சென்று வணங்கி, பல சற்காரவசனங்கூறி, அழைத்துக்கொண்டு சென்று பொற்பீடத்தின்மீதிருத்தி, பாத்தியாசமனர்க்கியங் கொடுத்துப், பூசைசெய்து, தேவரீருடைய நல்வரவு இவ்வனத்தில யாங்கள் செய்த தவயாகங்களின் பயனே என்றுவியந்து, இப்பொய்யுடல் புனிதமாயிற்றென்று கூறிப், பின்னரும் வணங்கி, வேதம் புராணம் முதலிய கலைகளை யோதியுணர்ந்த சற்குருவே! அடியேங்கள் தேவரீருடைய திருவருளினுற்றான் ஈடேறவேண்டும். ஆதலால் யாங்களும் ஏனையவுயிர்களும், பாச நீக்கமும் சிவத்துவப் பேறும் அடைதற்குரிய சாதனம் யாதெனவினவினர். சூத

புராணிகர் மாதவமுனிவர் வாய்மைதேர்ந்து, மனமுருகி, ஒரு முகூர்த்தம் ஆனந்த சாகரத்திலமிழ்ந்தி, நுமது வினு, விடையளிக்கத் தகுந்ததென்று கூறி வியந்தார்.

நைமிசாரணியச்சருக்கமுற்றிற்று.

---

## உ. தலமகிமைச்சருக்கம்.

சூதமுனிவர் சௌனகாதிமுனிவர் விரும்பிய வண்ணம் மோட்ச சாதனம் மூன்றனுளொன்ருகிய தலவாசத்திற்குரிய வைத்தியநாத தலமான்மியத்தை ஈண்டுக் கூறுகின்ருர்.

### தலம்.

சிருட்டிக் கடவுளாகிய பிரமாமுதலிய தேவர்கள் கற்ப காலந்தேடியுங் காண்டற்கரிய பரம்பொருளாகிய சிவபெருமானையே *உலகப்பற்று நீங்கும்படி, பற்றிநிற்கும் முனிவர்காள்! நீவிர்வினவிய வினவிற்கு விடையளிக்கின்றேம்; சாவதானமாகக்கேளுங்கள் என்று பணித்து, யோகஞ்செய்தல் சாந்திராயண முதலிய விரத மநுட்டித்தல், சிவஸ்தல வாசஞ்செய்தல் மூன்றும் முத்திசாதனமாம் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அதுகேட்ட முனிவர்கள் அவரைத் தோத்திரம்பண்ணி, சுவாமீ! தேவரீர் நன்றே கூறினீர்; ஆன்மாக்கள் யோகஞ் செய்தலும், விரதமநுட்டித்தலும் இலகுவன்று; தலவாசஞ் செய்தலே இலகு. ஆதலால், அத்தலமான்மியத்தைக்கூறி

---

* "பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப் - பற்றுக பற்று விடற்கு" என்னுந் திருக்குறளு மிக்கருத்துப்பற்றி எழுந்ததென்க.

யருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து, பின்னரும் தேவரீர் வியாச முனிவரிடத்திற் பதினெண் புராணங்களை யும், மற்றைக் கலைகளையும், சிவஸ்தல விசேடங்களையும் சிவதீர்த்த மகிமைகளையும், மேலாகிய சிவதீக்கைப்பேற் றிற்குரிய் சைவாசாரங்களையும், பிறவற்றையும் மிகத்திட்ப மும் நுட்பமுமாகக் கேட்டுணர்ந்திருக்கின்றீர்; அவ்வுணர்ச் சியினாலே சன்மார்க்கங்களுள் வைத்து விசேட சன்மார்க்க மாவது புராணசிரவணமே என்றறிந்து, அடியேங்களுய்யும் பொருட்டு அவற்றை உபதேசித்தருளிய சற்குரவரே! இக்கலியுகத்திலே மனிதர்கள் சிவபெருமானுடைய *கீர்த் திகளைச் சொல்லித்துதித்தலரிதென்றும், சிவ பத்தி பண் ணுதலரிதென்றும், சிவஸ்தலவாசஞ்செய்தல் அரிதென்றும், முத்திக்ஷேத்திரவாசஞ் செய்தல் அதனினு மரிதென்றும் முன்னர்த்தெரித்தருளினீர். யாங்கள் முற்பிறப்பிற் செய்த தவமானது இப்பிறப்பிலெங்களுக்குதவி செய்ய வோருரு வெடுத்து வந்தாற்போலப் புண்ணிய வுருவெடுத்துப் பரம குரவராய் எழுந்தருளிவந்த அருட்செல்வரே! இப்பூமியின் கண் தன்மாட்டு அரைமாத்திரைப் போதாயினும் வசித்தல் வேண்டுமென்று நினைக்கின்றவர்களுக்கும் சிவலோகத்தை யும் சிவரூபத்தையும் அட்டசித்தியையும் கொடுக்கின்ற வைத்தியநாதம் என்னும்தலமொன்றுளதெனப் பவிடியம் முதலிய புராணங்கள் வாயிலாகப்பொதுவாய் உபதேசித் தருளினீர். அவ்வாறாகிய அற்புதத்தையுடைய ஸ்தலமான் மியத்தைச் சிந்தித்தற்கு என்ன புண்ணியஞ்செய்தேமென் றறிகிலேம். தேவரீருடைய அருளுக்கிருப்பிடமாகிய அடி

* "ஞாலமின் புகழே யாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்— சீலமே யால வாயிற் சிவபெரு மானே யென்றார்" என்பது இங்கே சிந்திக்கற் பாலது.

யேங்கள் அதனை வாசஸ்தானமாகப் பெற்றுக்கொள்ளும் படி, அத்தலமான்மியத்தைச் சிறப்பாகவும் உபதேசித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து வேண்டிக்கொண்டார்கள்.

குருவாகிய தமதருளையும் அதனாற்சிவபிரானருளையும் பெற்றமுனி வரிவ்வாறு வேண்டுதலும், சூதமுனிவர் இரண்டு கண்களும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய, மெய்ம்மயிர்பொடிப்ப, இடையறுது மனமுருக, ஆனந்தபரவசராய், அவர்களைப்பார்த்து, அன்பர்களே! நீங்கள் சிவ புராணத்தும், சிவபுராணபோத கரிடத்தும் வைத்த பேரன்பினாலே சிவகைங்கரியத்தின் நீங்காத உங்கள் உடம்பினாலே புராணத்தையும் போதகரையும் வணங்குதலும் நினைத்துமனமுருகுதலும், வாக்காற்றுதித்தலும் உங்கட்கு இயல்பேயாம்; அதுநிற்க, சிவபுராணங் கேட்போர் சிவனேயாவர்; நீவிர் உண்மையாக நம்பி இடைவிடாது சிவபுராணங்கேட்டலால், விசேஷப்பெருமையுடையராயினீர். அத்தன்மையுடைய *உங்கட்கே சிவபுராணஞ் சொல்லுதலன்றி, பத்தியில்லாத மூர்க்கருக்குச் சொன்னவர்கள் நரகத்துன்பமடைவார்கள். முற்பிறப்பிலுஞ் சிவபுண்ணியஞ் செய்தவர்களே இப்பிறப்பிற் சிவபுராணங்கேட்கப் பெறுவார்கள். சிவபுராணங்கேட்டல், கோடி சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தபலனைத்தரும். சிவபெருமானை அமலா, பராபரா, பாலநேத்திரா, உமாசமேதா, சிவசிவா,

---

* மன்னவன் மதலை யாசான் மாமகன் றனது மைந்தன்
பன்னுசொற் கொள்வோ னீவோன் வழிபடு பண்பின் மிக்கோன்
என்னுமிங் கிவருக் கீவ தேனை நூலுங்கள் போலச்
செந்நெறி யொழுகு வோர்க்கே செப்புவன் புராண முற்றும்,

என்பது இங்கே சிந்திக்கற்பாலது.

சங்கரா, தற்பரா, ஆரணு என்று சொல்லித் துதிக்கும் நாவே நல்ல நா. சிவாலயத்தை நோக்கிச்சென்று வலம்வரும் கால்களே நல்ல கால்கள். சிவதரிசனஞ் செய்யுங் கண்களே நல்ல கண்கள். சிவபுராணங் கேட்குஞ் செவிகளே நல்ல செவிகள். சிவபெருமானை வணங்குஞ் சரீரமே நல்ல சரீரம். சிவநின்மாலியத்தை மோக்கும் மூக்கே நல்ல மூக்கு. இங்ஙனம் விதந்துகூறிய இலக்கணங்களமைந்த* அவயவங்களைப் பெற்றிருக்கின்ற முனிவர்களே! உங்களாற் சுட்டப்பட்டதும், உவமையில்லாததும், "ஞானிகளால் முத்திக்குவித்து" என்று சொல்லப்பட்டதுமாகிய வைத்தியநாத தலமான்மியத்தை முற்காலத்திலே உங்களுக்குப் பொதுவாகத் தொகுத்துக் கூறினேம். இக்காலத்திலே நீங்கள் விரும்பிய வண்ணம் சிறப்பாகவும் விரித்துக் கூறுகின்றேம் என்று திருவாய் மலர்ந்தருளி அவர்களைப் பார்த்து, முனிவர்களே! வைத்தியநாதஸ்தலம் †கீழ்கடலுக்கும் திருவெண்காட்டிற்கும் மேற்றிசையில் ஒரு யோசனை தூரத்திலும், சாயாவனத்திற்குத் தென் கீழ்த்திசையிலும், சீர்காழிக்குத் தென்மேற்குத் திசையிலும், திருவாளொளி புத்தூ

---

* "தலையே நீ வணங்காய்" என்னும் முதற் குறிப்பையுடைய அங்கமாலைத் தேவாரம் இங்கே சிந்திக்கற்பாலது.

† கீழ் கடலுக்கு மேற்கே யோசனை தூரத்தில் இத்தலம் உள்ள தென்பது,

"வாசநலஞ் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
ஈசனெம் பெருமானு ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே"

என்னுந் தேவாரத்தானுமறிக.

ருக்குக் கீழ்த்திசையிலும், இந்திரதலத்திற்கு வடமேற்றிசையிலும், தெற்கிலும் வடக்கிலுமுள்ள உபயகாவேரிக்கு மத்தியிலும் நிலை பெற்றிருக்கும்.

அது கிரேதாயுகத்தில் நாற்றிசையும் நான்கு யோசனை தூரமுள்ள கதம்பவனமெனவும், திரேதா யுகத்தில் மூன்று யோசனை தூரமுள்ள வில்வவனமெனவும், துவாபர யுகத்தில் இரண்டு யோசனை தூரமுள்ள வகுளவனமெனவும், கலியுகத்தில் ஒரு யோசனை தூரமுள்ள நிம்பவனமெனவும் பெயர் பெற்று விளங்கும். முதல் யுகத்துக் கடம்பவிருட்சமே மற்றை மூன்றுயுகத்திலும் முறையே வில்வ முதலிய விருக்கங்களாக வுருத்திரிந்து விளங்கும்.

இந்நிம்ப விருட்சத்தின்கீழ் யாவர்க்கும் அறம்பொருள் இன்பம் வீடென்னும் புருஷார்த்தம் நான்கையுங் கொடுத்தற் பொருட்டு விஷ்ணு, பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள் சேவிக்க வீற்றிருக்கும் வைத்தியநாத சுவாமியை ஒரு முறை தரிசித்தவர்கள், பின் பிறப்பிறப் பின்றிப் பேரானந்தத்தைத் தருகின்ற மோட்சத்தை யடைவார்கள்.

இம்மகத்துவம் பொருந்திய வைத்தியநாத தலத்தில் ஒரு மாத்திரைப்பொழுதேனும் அரைமாத்திரைப் பொழுதேனும் வசிப்பவர்கள் சகல பாக்கியமும் சிவபதமும் பெறுவார்கள். எப்பொழுதும் வசிப்பவர்பெறும் பேறு கற்பகாலஞ் சொல்லினுஞ் சொல்லி முடியாது.

பூமியின்கணுள்ள நுண்ணியதுகளையும், கடற்கரை மணலையும், மழைத்துளியையும், நட்சத்திரத்தையும் ஒன்றிரண்டென்று எண்ணி இவ்வளவென்று கடையிலக்கமறியலாம். வைத்தியநாததலத்தைத் தரிசித்தோர் பெறும் பயன் அளவிடல் அரியதினுமரியது.

இப்பிறப்பில் இறத்தற்குமுன் ஒரு முறை அதனைத் தரிசித்தவர்கள் இம்மையில் இஷ்ட காமியங்களைப்பெற்று, முடிவில் கைலாசமலையை அடைந்து தந்தை தாய் என்னும் இருகுலத்தவர் இருகோடி பேர் தம்மைச் சூழ மகிழ்ந்திருந்து, பின் மோக்ஷமடைவார்கள். இத்தலத்தின் பெயரையொருவர் சொல்லக் கேட்போர் பிரமகத்தியும், பிறந்த நாண்முதலாகச் செய்த பாதகங்களும், உடலிலுற்ற பிணிகளும் நீங்கி, சிவபுண்ணியஞ்செய்யும் உத்தமர் பெறும் பேறனைத்தையு மடைவார்கள்.

தூரதேசங்களிலுள்ளவர்களும், தீவுகளி லிருப்பவர்களும், தாந்தாமிருக்கு மிடத்திலிருந்தே இத்தலத்தின் திசையை நோக்கி நமஸ்கரித்தாலும், இத்தலத்தின் பெயரைச் சிந்தித்துச் செபித்தாலும், முறையே கைலாயத்தையும் சிவபதத்தையு மடைவார்கள்.

அன்போடு வைத்தியநாததலத்தில் வாசஞ்செய்வோமென்று சொல்லுபவர்கள் அத்தலவாசிகள் பெறும் பேற்றையும், அங்குப் போவேமென்று இருந்த விடத்தினின்றுமெழுபவர், அடிக்கொரு அசுவமேதஞ்செய்த பலனையும், கைலாசத்தையும், அதனை நினைப்போர் அப்பொழுதே கலியுகதோஷம் நீங்கிப் பெருமையையும், இட்ட காமியங்களையும், மோட்சத்தையும் முறையே அடைவார்கள்.

ஒருதினம், மூன்று தினம், ஐந்து தினம், தலவாசஞ் செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்வோர், தினமொன்றிற்குப் பதினாயிரம் அசுவமேதயாக பலனையும், மோட்சத்தையும் அடைவார்கள்.

அத்தலத்தில் வசிப்போர் தருமத்தையும், பொருளையும், இன்பத்தையும், முத்தியையும், புதல்வரையும், பூமியை

யும், நன்மனைவியையும், விரும்பினுல் எவ்வெவர் எவ்வெவற்றைவிரும்பினுரோ, அவ்வவர்க்கு அவ்வவற்றைக்கொடுக்கும். அஃதன்றி "உளதுபோலிலதாம் பண்பிற்" ருய மாயாகாரியமாகிய பிரபஞ்சக்கடலில் அழுந்துபவர்களை முத்திக்கரையிலேற்றும் நல்லதெப்பமும் ஆகும். அஞ்ஞானக் குருட்டை நீக்குதற்குத் தீபமாயிருக்கும். அன்றி, தீவினை நீங்குதற்கும் திருச்சாந்துண்டையாகிய மருந்தைக்கொடுக்கும்.

வைத்தியநாத தலத்திற்கு நடக்கின்றவர்களுடைய பாததூளியும், அத்தலப்பசுவின் அடித்துகளும், அத்தலத்தில் காற்றடித்து எடுத்துவந்ததுகளும், வீதியில் அங்கப்பிரதக்ஷிணம் செய்பவர்களுடைய சரீரத்துகளும், யாவருடம்பிற்பட்டாலும் அவர் அரசராவார். பின் உருத்திராவார். அங்கே ஒருவரங்கேட்டால் இருவரங்கிடைக்கும். ஒருபுண்ணியஞ்செய்தால் இருபுண்ணியமாய் விருத்தியடையும். ஞானமும் மோக்ஷமும் சித்திக்கும்.

வேதம் முதலிய கலைஞானங்களை உணர்ந்து தலவாசஞ்செய்யும் வேதியர்க்குச் சந்தியாவந்தனஞ் செய்தற்குப் படித்துறையும், வசித்தற்கு வீடும் இயற்றுவிப்போர் அரசராயிருந்து பின் மோக்ஷமடைவர்.

வைத்தியநாததலத்திலே அன்னசத்திரம், மடம், வீடு மாடம், மாளிகை, சித்திரகூடம் என்னும் இவைகளைக் கட்டிச் சிவனடியார்களுக்குத் தானஞ் செய்வோர் சுற்றத்தோடும் களத்திர புத்திர பௌத்திரரோடும், இருபத்தொரு குலத்தோடும் சகல போகங்களையும் அனுபவித்து மோக்ஷமடைவார்கள். அவற்றிற்கு உத்திரம், தூண், போதிகை, மரம், கல் இவைகளைக் கொடுப்போர் பீதாம்பரம் இரத்தி

ணுபாணம் முதலியவற்றைத் தரித்து வாழ்ந்து பேரின்ப மடைவார்கள்.

நடந்துவந்து தளர்ந்தவ ரிளைப்பாறும்படி, வீதியிலே தண்ணீர்ப்பந்தர், சத்திரம், மண்டபம் கட்டிவைத்த புண்ணியரும், அவருடைய இருபத்தொரு சுற்றத்தாரும் சிவலோகமடைவார்கள். இத்தலத்தில் பாடசாலை கட்டுவித்தோர் அரசராய் உலகத்தையாள்வார்கள். பசுச்சாலை கட்டுவித்தோர் பசுலோகத்திலும் சுவர்க்கலோகத்திலும் வாழ்ந்து, பின், முத்தியடைவார்கள்.

செங்கழுநீரோடைகளையும் தாமரைத் தடாகத்தையும் இயற்றுவிப்போர், அரசராய்ப்பிறந்து, கற்புடைமனையாளோடு கலந்திருந்து, கல்விசேர்புதல்வரைப்பெற்றுச், செங்கோல்செலுத்திப் பூமியையாண்டு, பின் சிவலோகமடைவர். அத்தலத்தின் நான்கெல்லைகளிலும் தீர்த்தக்கரைகளிலும் நிழலிடும் மரங்கள் வைத்து வளர்ப்போர் எல்லாச்செல்வங்களும்பெற்று நற்குண நற்செய்கைகளையுடைய மனையாளோடு இல்லற தருமத்தை நடாத்திச் சுவர்க்கலோகத்தையும் பிரமலோகத்தையும் முன்னும் பின்னும் பெற்று, அங்கங்குள்ள போகங்களை அனுபவித்து, அவற்றில் வெறுப்பு வந்தவுடன் பேரின்பமயமாகிய மோட்சமடைவார்கள்.

பூந்தோட்டம் வைப்பவர்களும், பத்திரத்திற்குரிய மரங்கள் வைத்துண்டாக்குபவரும் ஒரு புஷ்பத்திற்கு ஐம்பதினாயிர வருடமும் பத்திரமொன்றற்குப் பதினாயிரவருடமும் சித்திரச் சிவகணங்கள் தம்மைச் சூழ்ந்து சேவிப்பச் சிவலோகத்தில் வீற்றிருப்பார்கள்.

வாகனஞ் செய்துகொடுப்பவர் செய்வித்து கொடுத்தவர் அதனைப்பார்த்து மகிழ்ந்தவர், அதற்குப் பொருளுபக

ரிப்பவர், வாக்குபகாரம்செய்பவர் பூரணாயுசுடன் நல்வாழ்வு பெற்றிருந்து சிவலோகத்தையடைவர்.

சிவகைங்கரிய விசாரணை யொழுங்காகச்செய்வோர் இஷ்டசித்தியும் அட்டாங்கயோகமும்பெற்று வாழ்ந்து பின் தேவகணம் புடைசூழச் சிவலோகத்தை யடைவார்கள்.

மண், மரம், செங்கல் கருங்கற்களால் திருப்பணி செய்பவர் முறையே, பத்து, நூறு, ஆயிரம், மடங்கு புண்ணியமுடையவர்களாய்ப், பூமி முழுதாண்டு, பின், தேவவிமானமேறிச் சிவலோகஞ் சேர்வார்.

சுமையெடுத்துக்கூலிவாங்கிச் சீவனஞ் செய்பவராயினும் வைத்தியநாததலத்தை நினைத்து மனங்கசிந்து திருப்பணி செய்வேமென்று எட்டுச்செங்கற்களை எடுத்து, எட்டுத்திசைகளிலும் வைத்து, அதற்குபயோகமான மற்றைப் பொருள்களையும் நினைப்பவர்கள் மறுமையில் அரசராய்ப் பிறந்து நினைத்த திருப்பணிகளைச்செய்து பேரானந்தமடைவார்கள்.

செல்வப்பிரபுக்கள் இத்தலத்தில் சிவபெருமானுக்குத் திருப்பணி செய்தல்வேண்டும். திரவியங் குறைந்துவிடுமெனக்கருதி அது செய்யாது புதைத்துவைத்த கொடியவர்கள், பிரம கற்பமளவும் மிகக்கொடிய ரௌரவ முதலிய நரகங்களிலே வீழ்ந்துவருந்திப், பைசாசங்களாகப் பிறந்து உலைந்துதிரிவார்கள். திருப்பணிக்கென்று வாக்குதத்தம் செய்த பொருளைத்தவறாது அதற்கே கொடுப்பவர்கள் பிறவாது சிவலோகமடைவார்கள். கொடாதவர்கள் நரகமடைவார்கள்.

வைத்தியநாதர் திருப்பணிக்கென்று யாசித்து, அதனைச்செய்து முடிப்பவர்க்கு ஏழிலொருபங்கு புண்ணியமும், பொருள்கொடுப்பவருக்கு ஆறுபங்கு புண்ணியமும் உண்டாகும். தீர்த்தப்படித்துறை, மையமண்டபம், கொடுங்கை, சுற்றுமண்டபம், அடிநிலை, மதில்கள், ஆலயம், ஆகிய இவற்றைச்செய்வோர் பூமியை ஆண்டு இந்திரன், பிரமா, விஷ்ணு முதலிய தேவர் இரண்டு கைகளையுங்குவித்தஞ்சலி செய்யத் தேவவிமானத்திலேறிச் சிவலோகத்தை யடைவார்கள்.

கோபுரம், கொடிமரத்தைச்சூழ்ந்த மேடை, நிருத்த மண்டபம், இசைபாடு மண்டபம், யாகசாலை, மடைப்பள்ளி இவற்றைக் கட்டுவிப்பவர், அரசராய் உலகாண்டு மோட்சமடைவர். திருப்பணி செய்யும் ஏவலாளரும், எருமைக்கிடாய் இடபம்செலுத்துபவரும், வார் தோல் பதஞ்செய்து கொடுப்பவரும் புவியரசராய், பொன்னுலக வேந்தராய், முடிவிற் சிவகணமாவார். திருப்பணிசெய்யுஞ் சிற்பர், மரத்தச்சர், இருப்புக் கொல்லர், கொத்தர் உருத்திரராவர்.

பிச்சையெடுத்துத் திருப்பணி செய்வோர் பூவுலகவரசராய்ப் பிறப்பர். அவர் பூமியிலிருப்பினும் தேவரே! பின், உருத்திர கணங்களாய்ச் சிவலோகஞ்சேர்வர். அவரை மனிதரென்பார் நரகமடைவர். சிவபுண்ணியத்திற்குத் திரவியங் கொடுப்போர் அர்த்தோதய மகோதய புண்ணிய காலங்களிலே, கோடி கோதானஞ்செய்யும் பலனிலும் கோடிபங்கு அதிக பலன்பெற்றுக் கைலாசத்தை யடைவர்.

ஒருவர் திருப்பணி செய்தற்குக் கொடுக்கும் தனதானியங்களை அது செய்யாமல் தாம் உபயோகிப்பவர், அளவில்லாத கற்பகாலம் அக்கினி நரகத்திற்கிடந்தழுந்துவர். அவற்

றை அதற்குக்கொடுப்போர், பூமிதானப்பலனிலும் மேலான பலனடைவர். சிவபுண்ணியத்திற்கு இடையூறு செய்பவர் நரகத்துன்ப மநுபவிப்பார்கள். அதற்கு அணுவளவு பொருள் கொடுப்பவர் பிறவித்துன்ப நீங்கிப் பேரின்பமடைவார்கள்.

வைத்தியநாத சுவாமியுடைய முத்துமாலை, இரத்தினாபரணம், வஸ்திரம், அபிடேகத்திரவியம், பொன் என்னுமிவற்றைத் திருடுவோர்கள் கொடிய நரகவேதனை யடைந்து பிசாசாய்ப் பிறந்துழல்வர். இங்குத் தோன்றிய சராசரங்களெல்லாஞ் சிவகணங்களாம். இங்கு வாழும் பெரியோர்களுக்கும் மற்றைய வுயிர்களுக்கும் இடையூறு செய்வோர் நரகவேதனை யடைந்து பைசாசங்களாய்ப் பிறந்து உழல்வார்கள். பின்னும் யமதூதர்கள் அவரைப்பிடித்து இழுத்து வழியிடை வருத்திக்கொண்டு சென்று நரகத்திலிட்டு வைப்பார்கள்.

வைத்தியநாததலத்திலே பிறந்த சராசரங்களெல்லாம் சிவகணமாதலால், அங்கே வாசஞ்செய்யும்படி பிறந்த பிறப்பே அரியதினுமரிய பிறப்பாம். திருக்கோயில் முதலியவற்றிலே சீரணமான உறுப்புக்களை முன்போற் செய்பவரும் சிவகாரியநிமித்தம் உயிர்துறப்பவரும் முறையே சிவலோகத்தையும் திருக்கைலாச மலையையும் அடைவார்கள். சிவபத்தியிற்சிறந்த வேதியரை இகழ்ந்தவர்கள் பொருளுஞ் சீருங்குறைந்து நரகத்தில் வருந்துவார்கள்.

ஆலயப் பக்கத்திலும், தீர்த்தத்திலும், நந்தனவனத்திலும், மலசலங்கழிப்போர், குதத்திலும் கோசத்துளையிலும், இருப்புச்சலாகை யேற்றப்பட்டு அளவில்லாதகாலம் பெருநரகங்களில் வீழ்ந்து வருந்துவார்கள்.

*தீர்த்தத்திலே எச்சில் உமிழ்வோர், மூக்குநீர் சிந்துவோர், கோழையை உமிழ்பவர் என்னும் இவர்களுடைய மூக்குத்துளையிலும் வாயிலும் யமதூதர்கள் பாணத்தைக் கோத்து மெழுகையும் எண்ணெயையும் காய்ச்சி ஊற்றி மீளாநரகத்தில் வீழ்த்தி வருத்துவார்கள்.

ஆலயத்துட்புகும்பொழுது கால்கழுவிச் செல்வோர் இந்திர போகத்தை யநுபவித்துச் சிவலோகமடைவர். கழுவாது செல்வோர் அட்டதரித்திரராய்ச் சுகமிழந்து நரகவாதனைப் படுவார்கள். காசியில் இலட்சம் பிராமணருக்கு அன்னதானஞ்செய்யும் பலனும் ஸ்ரீ சைலத்தில் ஒரு பிராமணருக்கு அன்னதானஞ்செய்யும் பலனும் ஒக்கும். ஸ்ரீ சைலத்தில் இரண்டிலட்சம் பிராமணருக்கு அன்னதானஞ் செய்யும் பலனும் புள்ளிருக்குவேளூரிலே ஒரு பிராமணனுக்கு அன்னதானஞ்செய்யும் பலமும் ஒக்கும்.

இத்தலத்திலே செவ்வாய்க்கிழமையிலே மாகேசுர பூசை செய்பவர்கள் இஷ்டகாமியங்களையும் பிரம விட்டுணுக்களுடைய பதங்களையும், கைலாசத்தையும் ஒன்றன்பின்னொன்றாக அடைவார்கள். சிவனடியாருக்கு அன்னதானஞ் செய்வோர் அன்னம் ஒன்றினுக்கு ஆயிரம் யுகம் சிவலோகத்தில் வீற்றிருப்பார்கள். பசித்தவருக்கு ஒரு கவள அன்னம் கொடுப்போர் பொன்னுலகில் இந்திரபோகம் அநு

---

*பச்சிலை யிடினும் பலன்றரும் வயித்திய நாதனா லயம்பயி றீர்த்தத்
தெச்சிலையுமிழ்வோர்மூக்கினைச்சிந்தியெறிபவர்கோழைகான்றிடுவோ
ரிச்சிலை மகிழு மன்னவர் நாசித் துளையினும் வாயினும் வலிந்து [ர்
கைச்சிலையம்புகோத்தரக்கெண்ணெய்காய்ச்சியேயூற்றிடப்படுவார்.

என்னும் புள்ளிருக்குவேளூர்ப் புராணத்திலே தலமகிமைச் சருக்கத்தில்வரும் செய்யுள் இங்கே சிந்திக்கற்பாலது.

பவிப்பார்கள். வினையும் நோயும் விட்டொழியும். அதனாற் பிறப்பறும். அறவே, மோட்சத்தை அடைவார்கள்.

முத்துக்குமாரசுவாமி சூரன் மார்பைப்பிளக்க வேல் வாங்கியதும், தன்னிடத்து வசிக்கும் உயிர்கள் யமலோகமடையப்பெறாததும், பெண்களைப்பிடித்த பேய்கள் ஓடப்பெறுவதும், கைலாசபதி, நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையுந் தீர்க்கத் திருவுளங்கொண்டு, தையனாயகியம்மை தைலபாத்திரமும், சஞ்சீவியும், வில்வத்து அடிமண்ணும் எடுத்துக்கொண்டு தம்மோடு கூடவர வந்து, வெள்ளெருக்குவனத்தில் வைத்தியராகி அருள்செய்திருக்கப்பெற்றதும், அறுசுவையோடுகூடிய அன்னத்தைச் சிவனடியார்களுக்கு உண்பித்து மடங்கள்தோறும் மாகேசுரபூசை செய்யப்பெறுவதும், பிறந்தாலும், இறந்தாலும் முறையே போகமோட்சங்களைக் கொடுப்பதுமாகிய தலம், புள்ளிருக்குவேளூராம்.

இத்தலம், சடாயு பூசித்தலாற் சடாயுபுரி. வேதம் பூசித்தலால் வேதபுரி. கந்தசுவாமி பூசித்தலாற் கந்தபுரி. சூரியன் பூசித்தலாற் பரிதிபுரி. எனவும், முதன் மூன்றுஞ் சேர்ந்து புள்ளிருக்கு வேளூரெனவும் பெயர் பெறும். இன்னும் அங்காரகன் பூசித்தலால் அங்காரக புரமெனவும், அம்பிகை பூசித்தலால் அம்பிகாபுரம் எனவுங் கூறப்படும். இன்னும், அளவில்லாத தேவர் முதலாயினோர் பூசை செய்தமையினாலே அவரவர் பெயரினாற்பெற்ற நாமங்களும் அளவிடப்படாதனவாகும்.

கீழ்த்திசையில் வைரவக்கடவுளும், மேற்றிசையில் வீரபத்திரக்கடவுளும், தென்றிசையில் கற்பகவிநாயகரும், துர்க்கையும், வடதிசையிற் காளியும், வைத்தியநாதக் கடவுளைச் சூழ்ந்து காவல் செய்துகொண்டிருப்பார்கள்.

ஆதலாற் புள்ளிருக்கு வேளூருக்கு ஒப்புயர் வில்லையென்று சூதமுனிவர் அதன் மகிமையைக் கூறியருள அதனைக்கேட்டுத் தெரிந்துகொண்ட நைமிசாரணிய முனிவர்கள் சந்தோஷமிக்கு, தீர்த்தமகிமையைத் தெரித்தருளுகவென்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

தலமகிமைச்சருக்கமுற்றிற்று.

---

# ரு. சித்தாமிர்ததீர்த்த மகிமைச்சருக்கம்.

சூதமுனிவர், தலமான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம், ஈண்டுச் சித்தாமிர்த தீர்த்தமான்மியங் கூறுகின்றார்.

பலவகைச் சரீரங்களுள் வைத்து மிகச் சிறந்ததென்று நூல்களாலும் ஆன்றோர்களாலும் பாராட்டப்பட்ட மானுட சரீரத்தை எடுத்த ஆன்மாக்கள்செய்த புண்ணிய வடிவாய், விண்ணவர்போற்றும் எண்ணரும் விழுப்பமிக்கதாயுள்ள இந்திரதீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்கள் கலந்திருக்கப்பெற்றதாயுள்ள சித்தாமிர்ததீர்த்தத்தில், உண்மையாகவிரும்பி, ஸ்நானவிதியை ஆராய்ந்தறிந்து, அவ்விதிப்படி ஸ்நானஞ்செய்வோர்களுடைய பாவம் அவரைவிட்டு நீங்கும். இவ்வாறு நீங்கச்செய்தல் இத்தீர்த்தத்திற்கோர் பெரும்புகழாகுமோ? அன்று; பின்னை என்னைதான் பெரும்புகழெனின், இத்தீர்த்தத்தை விரும்பாத மகாபாவிகளும் இதனைக் கண்ணுற்கண்ட மாத்திரத்தே அவரது மகாபாதகங்களும் கலங்கி நீங்கும்; ஆதலால் இங்ஙனஞ் செய்யுமிதுவே அதற்குப் பெரும்புகழாம். இதனைத் தரிசித்த மாத்திரத்தே சிவசாரூபம் சித்திக்கும்.

கிருதயுகத்திலே சுவர்க்கலோகத்திலே கற்பகமூலிலே வசிக்குங்காமதேனு பூலோகத்தில்வந்து, தன்சாபந்தீர வைத்தியநாதசுவாமி மலரடிவணங்கி, தனது முலைக்குடப்பாலால் அவர் முடியில் அபிடேகஞ்செய்ய, அப்பால்பெருகி இதிற் கலந்தமையால் கோட்சீர தீர்த்தமென்னுங் காரணப்பெயர் பெற்று விளங்கிற்று.

திரேதாயுகத்திலே சிவப்பணிவிடை செய்கின்ற சிவபத்தரொருவருக்குக் கருப்பஞ்சாறுபோன்று மதுரமாயிருந்தமையால் இட்சுசாரதீர்த்தமென்னுங் காரணப்பெயர் பெற்று விளங்கிற்று.

துவாபரயுகத்திலே சடாயு பலமுறை இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன்கரையிற் * பலகாலம் வசித்தமையாற் சடாயுதீர்த்தம் என்னுங் காரணப்பெயர்பெற்று விளங்கிற்று.

இக்கலியுகத்திலே சித்தர்கணம் வைத்தியநாதசுவாமி திருமுடியில் தேவாமிர்தத்தால் அபிடேகஞ்செய்தபோது அவ்வமிர்தம் பெருகி இத்தீர்த்தத்திற் கலந்தமையால், சித்தாமிர்தமென்னுங் காரணப்பெயர்பெற்று விளங்குகின்றது.

பூவிரிசோலைசூழ் காவிரிக்கரையுளான்சுந்தரனென்னும் அந்தணனொருவன் வெண்குட்ட வியாதியாற் புண்பட்ட மேனியனாய் வருந்தி அதனைத் தீர்க்கவெண்ணி, மூர்த்தி

---

* அத்தியினீ ருரிமூடி யழகாக வனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்திருந்தான் புள்ளிருக்கு வேளூரே.

என்ற தேவாரமிங்கே சிந்திக்கற்பாலது.

யைத் தரிசிக்கவும், தலத்தில் வசிக்கவும், தீர்த்தத்தில் மூழ்கவும் விரும்பி, மகாமகிமை பொருந்திய சிவஸ்தலங்கள்தோறும் சென்று, அவ்வாறு செய்தும் அது நீங்கப்பெருமல், இனி என்செய்வேனென்று சொல்லித் துன்பமுற்றுச் சித்தாமிர்ததீர்த்தத்தையடைந்து அதனைத் தரிசித்து அதில் ஸ்நானஞ்செய்த மாத்திரத்தே வெண்குட்டம் நீங்கித் திவ்விய தேகம்பெற்று மகிழ்ந்தான்.

சங்கரன் வியர்வையில் அவதரித்த அங்காரகன் செங்குட்ட நோயால் வருந்தி வைத்தியநாத தலத்தையடைந்து, பங்குனி மாதத்துச் செவ்வாய்க்கிழமையிலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து செங்குட்டந்தீர்ந்து செங்கழுநீரோடை சிறப்புறவமைத்து அம்மலர்பறித்து வைத்தியநாதசுவாமி மலரடிக்கணிந்து வரம் பலபெற்ருன்.

குருபத்தினியை விரும்பித்தொட்டவன், கொலைஞன், திருடன், பேய்பிடியுண்டவன், சிவத்துரோகி, குருத்துரோகி, பிதிர்த்துரோகி, விசுவாசகாதகன், நம்பிக்கைத் துரோகி, கன்றினையிழந்த பசுவின்பாலைக் கறந்துண்டவன், வீணுக மரத்தை வெட்டினவன், குளக்கரையைத் தனக்குச் சேர்த்துக்கொண்டவன், எண்ணெய் விற்போன், என்னுமிப்பாவிகளும் இதில் ஸ்நானஞ்செய்யில் அவர்கள் பாவங்களை யொழித்து விடும்.

மரக்காட்டை அதில் தோன்றிய காட்டாக்கினியெரித்து நீருக்குதல்போல, சித்தாமிர்த தீர்த்தம் தன்னிற் படிந்தோர்களதுபாவக்காட்டினை அதிற்ருேன்றிய காட்டாக்கினி போல எரித்து நீருக்கும். தரித்திர நோய், காசநோய், பிரமகத்தி, சுராபான தோடம் என்னுமிவற்றையும் அழிக்

கும். பலவிந்துக்குப் பிறப்போன், பிறர்க்குக் கேடு நினைப்போன், பிறர் குற்றங்கூறுவோன், பந்தி வஞ்சனை பண்ணுவோன், மித்திரத்துரோகி, பொய்ச் சான்று கூறுவோன் என்னு மிவர்களுடைய பாவங்களையும் அகற்றும்.

விதிப்படி விவாகஞ் செய்த மனைவியரையும் கணவரையும் பிரித்துவிடும் பாவம், வேதமோதுவித்து வேதனம் வாங்கும் பாவம், வேதவிப்பிரன் மனைவியை விருப்பினுற்றீண்டும் பாவம், பொன் இரும்பு திருடின பாவம், தம்பதியின் சையோகத்தைக் கண்ட பாவம், பாவிகளுடனொருங்கிருந்துண்ணும் பாவம், பிறரைத் தூஷிப்போனும் ஊரையழிப்போனும் பூஞ்சோலையைக் கெடுப்போனும் ஆகிய துரோகிகளுடன் சினேகஞ் செய்யும் பாவம், திருடிய வீட்டிற்றீயிடும் பாவம் என்னும் இவற்றையும் நீக்கி, நன்மார்கஞ் சேர்தற்குரிய மனத்தெளிவையுந் தரும்.

சித்தாமிர்த தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# ச. *இருடியர் முறைமை கூறியசருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்தத்தின் மகிமையைக் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணம் அதன் இருடி முதலாயினோர் முறைமையையும் மற்றைத் தீர்த்த மான்மிய முதலியவற்றையுங் கூறுகின்றார்.

---

*இருடியர் முறைமை கூறலாவது:—சித்தாமிர்ததீர்த்தத்திற்கு நான்கு யுகங்களிலும் முறையே இவ்விவர் இருடியாயிருப்பர் என்னும் ஒழுங்கு கூறுதல்.

இப்பூலோகத்திற் சிறப்புற்றோங்கிய கங்கை, யமுனை, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரசுவதி என்னும் ஏழு நதிகளினும் மிகமேலானதாய், உவர்க்கடல், கருப்பஞ் சாற்றுக் கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற் கடல், நன்னீர்க்கடல் ஆகிய ஏழினும் பரிசுத்தமளிப்பதாய், எல்லா முனிவர்களும் வலம் வந்து பயன் பெறக்கருதும் மேன்மையை யுடையதாய், அங்காரகனுக்கு அணுக்கத் தென்றிசைக் கண்ணதாய், வினைதீர்த்தபிரானாகிய வைத்திய நாதசுவாமிக்கு நிருதிதிக்கில், வாலாம்பிகையாகிய தையல் நாயகி சந்நிதிக்கெதிரில் உள்ள தீர்த்தமே சித்தாமிர்த தீர்த்தமென்று சொல்லப்படும்.

இதற்கு இருடி கிருதயுகத்திற்பிரமா. திரேதாயுகத்திற் *புள்ளரசென்ற கருடன். துவாபர யுகத்தில் திருமால். கலி யுகத்தில் சதானந்தர். நான்கு யுகத்திற்கும் விருக்ஷமும் அதி தெய்வமும் காவற்கடவுளும், முறையே வெள்ளெருக்கும், வைத்தியநாத சுவாமியும், அங்காரகனுமேயாம். இதில் ஸ்நானஞ் செய்வோர் இதனை வலம் வந்து இரண்டு தரம் ஆசமனஞ்செய்து †இருடி முதலியோருடைய நாமங்க ளோடு கூடிய மந்திரங்களைச் செபித்து ஸ்நானஞ்செய்தலே விதியாம்.

---

* இப்புராணத்தின் முதனூற் கருத்தறியாது புள்ளரசென்ப தற்கு, சடாயுவெனப்பொருள் கோடல் சாலாதென்க. முனிதீர்த் தத்தில் புள்வேந்தனென்பது மது.

† இருடி முதலாயினோர் மந்திரங்கள் வருமாறு:—

பிரமமுனி மந்திரம்.

சதுர்முகமகாபாகவாணீநாதஸுரேசுவரா
தேக்யநுக்ஞ்ஞாம்மமஸ்வாமின்ஸ்நாதும்வஸித்தாமிர்தேஜலே.

இதில் ஸ்நானஞ் செய்தோர் பாவம் வேரற்ற மரம் போல் அடியோடு நீங்கும். இதில் ஒரு துளிநீர் பருகினோர் தரித்திரநோய் நீங்கிக் குபேரசம்பத்தையும், நல்லழகும் நற்குண நற்செய்கைகளும் பொருந்திய மனைவியையும் சற்புத்திரர்களையும் பெறுவர். இதனை ஒருதரம் வலம் வருவோர் மும்முறை பூமிப்பிரதக்ஷிணஞ் செய்த பலனடைவர். இதில் ஸ்நானஞ்செய்து இரணிய முதலியவற்றைத் தானஞ்செய்வோர் பலயாகங்கள் செய்தபலன் பெறுவர். நாடோறும் நியமமாக ஸ்நானஞ் செய்வோர்க்குப் பிரமகத்தி முதலிய எல்லாப் பாவங்களும் நீங்கும். அவர் பெருமைகள் அளவிடற்கரியனவாம்.

இச்சித்தாமிர்த தீர்த்தமே முதற்றீர்த்தமாகும். இன்னும் இத்தலத்தில் ஸ்நானஞ்செய்வோர், பரிசிப்போர், தரிசிப்போர்களுடைய கோடி குலங்களை யீடேற்றும் வலிமையும் பெருமையும் வாய்ந்த இருபத்து நான்கு தீர்த்தங்களுள்ளன.

இருடியர்முறைமைகூறியசருக்கமுற்றிற்று.

---

கருடமுனி மந்திரம்.

விஷ்ணுவாகநமஸ்த்துப்யம்வைநதேயமகாமதே
ஸ்நாதும்வித்தாமிர்தேதீர்த்தேக்யநுக்ஞ்ஞாம்மமப்ரபோ.

விட்டுணுமுனி மந்திரம்.

சதுர்ப்புசஸுரச்சிரேஷ்டசங்கசக்ரதராச்சுதா
லட்சுமீபதேமமாநுக்ஞ்ஞாம்தேகிதீர்த்தநிஷேவணே.

சதானந்தமுனி மந்திரம்.

சதானந்தரிஷிச்சிரேஷ்டசைவக்ஞ்ஞானவிதாம்வரா
ஸ்நாதும்சித்தாமிர்தேதீர்த்தேதேக்யநுக்ஞ்ஞாம்மமாத்யவை.

# ரு. கங்கைபாவந்தீர்ந்தசருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்ததீர்த்த மகிமையைப் பின்னும் ஒரு சரித்திரவாயிலாக அம்முனிவர்களுக்குக் கூறுகின்றார்.

முனிவர்களே! குமுதவதி, இரைவதி, குமரி, கங்கை, மன்னுவதி, கௌதமை, கபிலை, காவேரி, காத்தியாயனி, யமுனை, சரசுவதி, தாமிரபர்ணி, துங்கபத்திரி, கோதாவரி,

---

அங்காரகக்காவற்கடவுள் மந்திரம்.

கேசுவரானனசவேதபிந்துசாதமகாப்ரபோ
ஸ்நாதும்சித்தாமிர்தேதீர்த்தேதேக்யநுக்ஞ்ஞாம்மமாவ்யயா.

வெள்ளெருக்குவிருட்சராச மந்திரம்.

விருட்சராசநமஸ்த்தேஸ்த்துசூர்யகாந்திசமுத்பவா
சுராசுரசகத்வந்தியாகங்காதரமனப்ரியா.

அதிதெய்வவைத்தியநாதசுவாமி மந்திரம்.

சம்போசங்கரவயித்தியேசவாலாம்பாநாதமேப்ரபோ
சித்தாமிர்தேமகாதீர்த்தேதேக்யநுக்ஞ்ஞாம்நிமச்சனே.

விஷ்ணுமுனிவர், சதானந்தமுனிவர், என்னும் இவர்கள் சிலா விக்கிரகங்களே இக்காலத்தில் இத்தீர்த்தத்தின் அக்கினி மூலையிற் காணப்படுகின்றன. ஏனையோர் விக்கிரகங்கள் வேற்றரசரிடை யூற்றின் மிகுதிப்பாட்டினாலும் பண்டைத் தருமகர்த்தர் பராமுக மிகுதிப்பாட்டினாலும் அழிந்தொழிந்தனபோலும்.

ஏமவதி, பொன்முகலி, சந்திரபாகை, மலகரி, பிரியை, பிரயாகை முதலிய புண்ணிய நதிகளுக்கு அதிதேவர்களும், பராசர தீர்த்தம், இந்திர தீர்த்தம், நந்தி தீர்த்தம், சண்டிகா தீர்த்தம், சூரிய தீர்த்தம், முனி தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களுக்கு அதிதேவர்களும், ஒருங்கு கூடிச் சத்தியலோகஞ்சென்று, பிரமதேவர் திருவடிகளை வணங்கி, சுவாமீ! பாவிகள் எம்மிடத்து ஸ்நானஞ்செய்து விடுத்த பாவங்கள், பாசி குளத்தை மூடினாற்போல, எங்களை மூடிக்கொண்டன; அவைகள் நீங்கும் ஒருபாயம் உரைத்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தனர். பிரமதேவர் அதனைக்கேட்டருளி அவர்களை ஆசீர்வதித்து, பின்பு ஒரு முகூர்த்தகாலம் சிவபெருமானைத் தியானித்து, உபாயந்தெரிந்து கூறுகின்றார். "அதிதேவர்களே? உபயகாவேரிக்கு மத்தியிலே வேதபுரி என்னும் மகா மகிமை பொருந்திய தலமொன்றுளது; அதில் வீற்றிருக்குந் தையலம்மை சந்நிதியின்முன் சித்தாமிர்ததீர்த்தம் என்னும் திவ்விய தீர்த்தமொன்றிருக்கின்றது. அதிலே பங்குனி மாதத்துப் பௌர்ணிமையோடு கூடிய உத்தர நட்சத்திர தினத்திலே நீவிர்ஸ்நானஞ் செய்தால் அப்பொழுதே உங்கள் பாவம் சூரியனைக்கண்ட இருள்போல நீங்கிவிடும். அதுவன்றிப் பிற்காலத்தில் உங்களிடம் ஸ்நானஞ்செய்வோர் விட்டுப்போகும் பாவங்களை ஒழிக்குஞ் சத்தியும் உங்களுக்கு உண்டாகுமென்று கூறியருளினார்." அவ்வாறு கூறக்கேட்ட அவ்வதிதேவர்கள், பங்குனி மாதப் பௌர்ணிமையோடு கூடிய உத்தரநட்சத்திரத்திலே சித்தாமிர்த தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து பாவநீங்கி வைத்தியநாத சுவாமியைவணங்கி அவர்விடை பெற்றுத் தத்தம் வாசஸ்தானமடைந்தனர். ஆதலால், பங்குனிமாதப் பௌர்ணிமை

யோடுகூடிய உத்தரநட்சத்திரத்திலே அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வோர் பாவ நீங்கிச் சகல தீர்த்தங்களினும் ஸ்நானஞ் செய்த பலன்களையுமடைவர்.

நவக்கிரகங்களும் பங்குனி மாதத்திலே பௌர்ணிமையிலே உத்தரநட்சத்திரத்திலே அத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து விரும்பிய நல்வரங்களைப் பெற்றன. மனிதர்களுக்கு மற்றைத் திசாபலன்களினும் பார்க்கத் தனது திசாபலன் மேம்பட்டு அவர்கள் மகிழ்ச்சியடையும்படி, அங்காரகன் பங்குனி மாதப் பௌர்ணிமையும் உத்தரநட்சத்திரமுஞ் சேர்ந்த தினத்திலே இதில் விதிப்படி ஸ்நானஞ் செய்து மிகமேலாகிய அனேக நல்வரங்களைப் பெற்றுக் கொண்டான்.

கங்கைபாவந்தீர்ந்தசருக்கமுற்றிற்று.

---

# சா. மாதபலன்கூறியசருக்கம்.

—✿—

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்த மகிமையைக் கூறக் கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணம் மாதபலனைக் கூறுகின்றார்.

முனிவர்களே! புரட்டாதி மாதத்திலே அமாவாசையில் சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்வோர்கள் சகலரோகங்கள் நீங்கப்பெற்றுச் சுகமடைவார்கள். அதுவுமன்றி அவர்பிதிர்களும் அவர்செய்த ஸ்நானத்தினால் ஆனந்தமடைவார்கள். ஐப்பசி மாதத்திலே சுக்கில பட்சத்தில் வரும் நவமிதிதியில் ஸ்நானஞ் செய்வோர் இவ்வுலகமுழுதி

லுஞ் செங்கோல் செலுத்தி யரசாண்டு ஈற்றில் சிவபெருமான் திருவடிநீழலையடைந்து பேரானந்தப் பெருவாழ்வுறுவார்கள்.

கார்த்திகை மாதத்துச் சோமவாரத்திலே மூழ்குவோர்கள் இட்ட சித்திகளைப்பெற்று, பின்னர்க் கைலாயத்தையடைந்து, அங்கிருந்தபடியே சோபானமுறையாகப் பாமுத்தியைப் பெற்றுப் பேரானந்த மடைவார்கள். மார்கழி மாதத்திலே பௌர்ணிமையிலே வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் ஸ்நானஞ் செய்வோர்கள் குற்றங்களெல்லாம் நீங்கிக் குணமுழுதுங் கொண்டு பூலோகப் பேரரசராய் அரசாண்டு தேவர்கடளுகிற யாகங்களைச் செய்வித்துக் கொண்டு நெடுங்காலஞ் சுகத்தோடு வாழ்வார்.

தைமாதத்திலே செவ்வாய்க்கிழமையிலே ஐம்புலனுமடங்கிய மனத்தோடு ஒரு முறை ஸ்நானஞ் செய்வோர் சகித்தற்கரிய துன்பத்தைச் செய்யும் பெரும் பாவங்களெல்லாம் நீங்கி அளவில்லாத பேரானந்த மடைந்து வாழ்வார்கள். தை மாதத்திலே ஞாயிற்றுக்கிழமையிலே ஸ்நானஞ் செய்வோர் அறிவறியும் மக்களைப் பெறுவார்கள். தை மாதத்துச் சதுர்த்தசிதிதியிலே ஸ்நானஞ்செய்வோர் நவரத்தினங்களும் அவற்றை யொழிந்த சங்கமப் பொருள்களும் ஏனைத்தாவரப் பொருள்களுமாகிய எல்லாவற்றையும் ஒருங்கே பெற்றுவாழ்வார்கள். தைமாதத்திலெந்த வாரத்திலேனும் முழுகுவோர் நிலைபெற்ற செல்வத்தையும் நல்ல பதவிகளையும் பெறுவர். தைமாதம் முழுவதும் ஸ்நானஞ் செய்வோர் அடையும் பலன் எவராலுமிவ்வளவென்று கணக்கிட முடியாது. அம்மாதத்திலே செவ்வாய்க்கிழமையில் ஸ்நானஞ்செய்தல் உத்தமம். அவ்வுத்தம ஸ்நானஞ் செய்வோர் சிவலோகத்திலே மூன்றரைக்கோடிகற்பம் வாழ்வார்கள்.

பிறவிமலடியாகிய ஜென்மவந்தியும், பிறந்த பிள்ளைகள் ஐந்து வயதளவுமிருந்து இறக்கப்பெறும் மிருதவந்தியும், இரண்டாவது பிள்ளை பிறந்தபின் முதற்பிறந்த பிள்ளை இறக்கப்பெறுங்கதலிவந்தியும் ஆகிய மூவகை மலடிகளும் மாசி மாதத்துச் செவ்வாய்க் கிழமைகளிலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி, பொற்பசுவைப் பூதேவருக்குத் தானஞ்செய்து, பின் வைத்தியநாத சுவாமியையும் தையல் நாயகி யம்மையையும் மும்முறை வலம்வந்து வணங்கி, உப்பின்றிச் சமைத்த புற்கையை நெய்யொடுகலந்து வைத்திய நாத சுவாமிக்கு நிவேதிப்பித்துத், தையனாயகியம்மை சந்நிதியில் மாவிளக்கிட்டுக், கனிவர்க்கங்களுடன் நிவேதித்து, வணங்கித்துதித்துச், சுவாமிக்கு நிவேதித்த நெய்யவிசை யுண்டும் தரையிற்படுத்தும் இவ்வித நியமவிரதத்தை யனுட்டிப்பின், அவ்வந்திகளும் நற்குண நற்செய்கைகளும் பூரணாயுளும் வாய்ந்த உத்தம புத்திரர்களை உலகத்தார் வியந்து மகிழும்படி பெற்று வாழ்வார்கள்.

பங்குனி மாதத்திலே பௌர்ணிமையிலே சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர்கள் கோடிபாவம் செய்திருந்தாலும் சூரியன்முன் இருள்போல நீங்கப்பெற்று, அரசராகிப் பூமியையாண்டு, பின் தேவவிமான மேறிச்சென்று சிவலோகமடைந்து வாழ்வார்கள். பங்குனி உத்தரத்தில் ஸ்நானஞ்செய்வோர் இம்மை மறுமைப்பயன்களையடைவர். அதுவன்றிப் பதினாயிரம் இராசசூய யாகஞ்செய்த பலனையுமடைவர். பங்குனி மாதத்திலே, சுக்கிரவாரத்திலே, பௌர்ணிமையோடுகூடிய உத்தரநட்சத்திரத்திலே, ஸ்நானஞ்செய்வோர் பதினாயிரங் கிருச்சிரவிரத பலனடைந்து, அதன் பின்னர்ப் பிறவிநீங்கி, அதன்பின்னர்ச் சிவலோக மடைவார்கள். பங்குனிச் செவ்வாய்க்கிழமையில் ஸ்நானம்

பண்ணுவோர்களும் சிவலோகமடைவர். மாசி, பங்குனி, சித்திரை என்னும்மூன்றனுள் ஒருமாதத்திலே செவ்வாய்க்கிழமை தோறும் ஸ்நானஞ்செய்வோர், மிகுந்த சுகபோகங்களையும் ஐயாயிரங் கிருச்சிரவிரத பலனையும் அடைவார்கள்.

வைகாசிப் பௌர்ணிமையிலே விசாகநட்சத்திரத்திலே ஸ்நானஞ்செய்வோர் சகல பாக்கியங்களையும் சற்புத்திரர்களையும் பெற்று வாழ்ந்து சிவலோகத்தையு மடைவார்கள். ஆடி மாதத்திலே செவ்வாய்க்கிழமையில் ஸ்நானஞ் செய்வோர் கல்வியிற் சிறந்த புத்திரர்களைப் பெற்று வாழ்ந்து பின்னர்ப் பேரின்ப வாழ்வையு மடைவார்கள். ஆடிமாதமுழுதிலும் சூரியோதயகாலத்தில் ஸ்நானஞ் செய்வோர்கள், பொருட்செல்வம் அருட்செல்வம் முதலிய எல்லாப் பாக்கியங்களையும் அடைவார்கள். ஆவணிமாதத்திலே செவ்வாய்க் கிழமையிலே ஸ்நானஞ் செய்வோர் பற்பல சுகபோகங்களையும் மேலான பதவிகளையும் அடைவார்கள்.

மாதபலன்கூறியசருக்கமுற்றிற்று.

---

# எ. தருப்பணபலன் கூறியசருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்த மகிமையைச் சரித்திரவாயிலாகக் கூறக்கேட்ட நைமிச முனிவர் விரும்பிய வண்ணம் தருப்பண பலனைக் கூறுகின்றார்.

சித்தாமிர்ததீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அதன் கரையில் பிதிர்கள் பொருட்டுத் தருப்பணஞ் செய்வோரும் தண்ணீர்ப் பந்தல் வைப்போரும் தங்கள் கோடி குலத்திற் பிறந்த பற்பலரோடுஞ் சிவலோகத்தில் வாழ்வார்கள். அமாவாசையிலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து

பிதிர் தருப்பணஞ் செய்வோரும் பிதிரரைக்குறித்துப் பற்பல தானஞ் செய்வோரும் பிதிர்களோடு சிவலோகத்தை யடைவார்கள். அத்தீர்த்தக் கரையில் ஒரு முறை தில தர்ப்பணஞ் செய்யின் கோடி தினம், கயாவிலே சிரார்த்தஞ் செய்த பலனடைவர். தங்குலப் பிதிரர்களைச்சுட்டி ஆம சிரார்த்தமும் இரணிய சிரார்த்தமும் அதன் கரையிற் செய்வோரும் கோடி பிதிரர்களோடுஞ் சென்று சிவலோகமடைவார்கள். சதுர்தசி திதியோடுகூடிய செவ்வாய்க்கிழமையாகிய புண்ணியகாலத்திலே பிதிரர்பொருட்டு ஸ்நானஞ் செய்வோர்கள் பூலோகத்தை யாள்வார்கள். அவர்கள் பொருட்டு நவரத்தினுபாணங்களைத் தானஞ் செய்வோர் கோடி பிதிரர்களோடுஞ் சிவலோகஞ் சேர்வார்கள். செவ்வாய்க்கிழமை, விதிபாதயோகம், உத்தராயணம், தக்ஷிணாயனம், அருத்தோதயம், சோமவாரம், துவாதசி, சூரியகிரகணம், சந்திரகிரகணம், *கபிலைசட்டி என்னும் புண்ணிய காலங்களில் பிதிரர்பொருட்டு ஸ்நானஞ்செய்தால் செய்தவர்களுக்கும் அவர்கள் பிதிரர்களுக்கும் கோடி யாகஞ் செய்த பலன் உண்டாகும். இதில் ஸ்நானம்பண்ணி நவக்கிரகங்களுக்கு இனிய நவதானியங்கள், உருத்திராக்கம் சிவமூர்த்த சாளக்கிராமம், சங்கு இவற்றைப் பிதிரர்பொருட்டுத் தானஞ் செய்தவர்களும், பிதிரர்களும், தவத்தாலும் பெறுதற்கரிய பெரும்பேற்றைப் பெறுவார்கள். சென்ம நட்சத்திரத்திலே பிதிரர்பொருட்டு ஸ்நானஞ் செய்வோர் பெருஞ்செல்வமடைவர். அவருடைய எழு தலைமுறைப்

---

*புரட்டாசி மாதத்திலே கிருட்டிண பக்கத்திலே சஷ்டி திதியிலே ஞாயிற்றுக் கிழமையிலே அஸ்த நட்சத்திரம் வரினும், செவ்வாய்க்கிழமையில் விதிபாத யோகமும் உரோகணி நட்சத்திரமும் சேர்ந்துவரினும், கபிலைசட்டியாம்.

பிதிரர்களும் சிவலோகத்தை யடைவார்கள். தினந்தோறும் இத்தீர்த்தத்திற் பிதிரர்பொருட்டு ஸ்நானஞ் செய்வோரும் பிதிரர்களும் பெரும் புகழோடு மேலான பதவிகளையும் பெறுவார்கள். ஏனைய புண்ணிய காலங்களில் பிதிரர்பொருட்டு ஸ்நானஞ் செய்வோர் நூறு கிருச்சிரவிரதத்தாலுண்டாகும் பதவிகளைப்பெற்றுப் பின் சிவலோகத்தை யடைவார்கள்.

தருப்பணபலன்கூறியசருக்கமுற்றிற்று.

---

## அ. தக்கனருள்பெறுசருக்கம்.

சூதமுனிவர், தருப்பணபலன் கூறக்கேட்ட நைமிச முனிவர் விரும்பியவண்ணம் தக்கனருள்பெறு சரித்திரங் கூறுகின்றார்.

முற்காலத்திலே பிரமதேவர் பெற்ற தலைமைப் புதல்வனாகிய சிறுவிதி யென்னுங் காரணப் பெயரையுடைய த்க்கன் சிவபெருமானிடத்திலே தனது மேம்பாட்டிற்குரிய பெருவரங்களெல்லாம் பெற்றிருந்தும் தீவினை வசத்தினாலே அவர் செய்த நன்றியை முற்றும் மறந்து விண்டு பிரமா முதலிய அண்டரும் வணங்கும் அத்தொண்டர் நாதனாகிய சிவபெருமானை என்றும் இகழ்ந்துகொண்டிருந்தான்.

இவ்வாறிருக்குந் தக்கன் சிவபெருமானுக்குக் கொடுக்கும் அவிப்பாகத்தைத் தடுத்தற்பொருட்டுத் தான் யாகஞ் செய்யத் தொடங்கி யாகசாலையில் வந்திருந்த இந்திரன் முதலிய தேவர்களை நோக்கிப், பின்பு தனக்கு வருங் கேட்டை யறியாதவனாய்ப் பெருங்கோபங்கொண்டு தேவர்

களே! நீவிர் சேவிக்குஞ் சிவன் தாமத குணத்தன். தலையோட்டிற் பிச்சை யேற்றுண்ணும் பித்தன். ஆகலான் அத்தன்மையனுக் கவிப்பாகம் அளிக்காதீர். அவனை வணங்கி அவிப்பாகமளித்தால் எனது தண்டம் பெறுவீர்கள் என்றிகழ்ந்து சொல்லுகின்ற சமயத்தில் திருநந்திதேவர் அந்த யாகசாலைக்கு எழுந்தருளி வந்தார்.

பிரமதேவர் அதுகண்டு, இருக்கைவிட்டெழுந்து வரவேற்று, அவரை விதிப்படி நமஸ்கரித்து நிற்க, அதுகண்ட தக்கன், மனத்தடங்காத பெருங்கோபத்தோடெழ, திருநந்திதேவர் அவன் செயலைக் கருதிச் சிவபெருமானைத் தூஷித்துக்கொண்டு செய்யப்படும் யாகம் கணப்பொழுதுள் அழியும்படி சாபமிட்டுப் பூதகணங்கள் புறத்துச் சூழக் கைலாச மலைக்குச் சென்றார். அதுகண்ட தேவர்கள், "ஒன்றை நினைக்க அது ஒழிந்திட்டொன்றாயிற்றே" இனி யாதாய் முடியுமோ இந்த யாகம் என்று கூறி ஏக்கமடைந்திருந்தார்கள்.

சிவபெருமானைத் தூஷித்துக் கொண்டிருந்த தக்கன், அந்நாட் செய்யாதொழிந்த யாகத்தைப் பன்னாட் சென்ற பின் செய்யத் தொடங்கினான். பிரம விட்டுணுக்களும், இந்திரன் முதலிய தேவர்களும், அவன் ஆஞ்ஞைக்குப் பயந்து யாகத்திற்கு வந்தார்கள். அந்தச்சமயத்தில் கைலாச மலையிலே தக்கன் மகளெனப் பொருள்படும் தாட்சாயணியாகிய உமாதேவியார் சிவபெருமானை நமஸ்கரித்து வாட்டத்தோடு அவர் முன்னின்று எனது பிதாவாகிய தக்கன் செய்யும் யாகத்தைப் பார்க்க விரும்பினேன். விடை கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அது கேட்ட சிவபெருமான் பாந்த கல்வி கேள்வி யில்லாத

தக்கன் உன்னை அவமதிப்பா னாதலால், நீ போதலை யொழி வாய் என்று திருவாய்மலர்ந் தருளினர்.

அதுகேட்ட அம்மையார் மிக்க முகவாட்டத்தோடு பின்னரும் போகவேண்டுமென்று, விடைபெற்றுப் பரிசனங் கள் புடைசூழச் சென்று யாகசாலையை அடைந்தனர். அதுகண்டு தக்கன் கண்சிவந்து கொடுஞ்சொற்கள் கூறக் கேட்டுப் பெருமூச்செறிந்து தக்கனே! நான்குவேதங்களும் நெற்றிக்கண்ணுடைய நிமலரே பரம்பொருளென்று உறுதி யாகக் கூறியதை உற்று நோக்கின யில்லை. அதுவன்றி எம்மை நீ பெற்ற புதல்வி யென்றுகருதி, குறைவாக இகழ்ந் தாய். ஆதலால் உனது செருக்குக்குக் காரணமாகிய வரங் களும், யாகமும் விரைந்தழிருக. என்று சாபங்கூறி மனம் பதைப்போடும் யாகாக்கினியில் வீழ்ந்தனர். அதுகண்டு தேவர்கள், இனி விளைவு என்னையோவென நடுநடுங்கினர். சிவபெருமான் அதனை யுணர்ந்து பெருமுச்செறிந்து தமது சடையினாலே நிலத்தில் அடித்தனர்.

அப்பொழுது ஆயிரஞ் சிரங்களோடும், இரண்டாயிரங் கரங்களோடும் வீரபத்திரக் கடவுள் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும், சகல அண்டங்களும் நடுநடுங்கும் படி தோன்றி எம்பெருமான் எதிர்நின்று சத்தசமுத்தி ரங்களும் வற்றவும், அட்டகுல பர்வதங்களும் பிளக்கவும், எட்டுத் திசைகளும் நிலைகுலையவும் செய்யவேண்டுமா? பிரமபதத்தையும், விண்டு பதத்தையும் நொடிப் பொழுதில் அழிக்க வேண்டுமா? என்று கேட்டு நின்றனர்.

சிவபெருமான் அவரைப் பார்த்தருளி நன்றியில்லாத தக்கன் யாகபதியாகிய நம்மை யழையாமல், வேள்வியொ ன்று செய்கின்றான். நீ சென்று எமக்குரிய அவிப்பாகத்

தைக் கேட்பாயாக. மறுத்தானாயின் அவன் வலிதொலையத் தலையை யறுத்து யாகத்தையும் அழித்து அவனைச் சார்ந்த தேவர்களையும் வதைத்து வெற்றிகொண்டு வருகுதி யெனக் கூறி விடுத்தருளினார். அப்பொழுது வீரபத்திரக் கடவுள் பூதகணங்கள் துள்ளியார்த்துத் தம் புடைசூழ உமாதேவியார் கோபத்தினாற்றோற்றுவித்த பத்திரகாளி தன் பரிவாரக் காளிக் கூட்டங்களுடனே துணையாகப் பக்கத்தில்வரத் தக்கனுடைய யாகசாலையையடைந்து அதைச் சூழும்படி பூதகணங்களைக் காவலாக நிறுத்திக் கோபாக்கினியெழத் தக்கனை விழித்துப்பார்த்து அவன் முன் சென்றார்.

வீரபத்திரக் கடவுள் கொண்ட கோபாக்கினியையும், பூதப்படைத் தலைவர்கள், பூதசேனைகளை அணிவகுத்துக் கொண்டு நிற்கும் நிலையையும் தேவர்கள் கண்ணாரக் கண்டு யாகம் அழிந்தது என்றார்கள். அவருள் இந்திரன் நடு நடுங்கினன். பிரமதேவர் பதைபதைத்தனர். தக்கன் தன்னுயிர் அழியவந்த நாளிதுவோ வென்று புலர்ந்து நின்றான்

வீரபத்திரரைக் கண்ட தக்கன் பின்னொருவாறு தன் மனத்தைத்தேற்றித் தன்முன்னின்ற வீரபத்திரக்கடவுளைப் பார்த்து, நீ யார்? இங்கே வந்த காரணமென்னை? என்று கேட்க, வீரபத்திரர் அவனை நோக்கித் தக்கனே! யான் ஈசுவரன் புத்திரன்; அவருக்குரிய அவிப்பாகத்தை வாங்க அவரருளாஞ்ஞையால் வந்தேன் என்றார். அது கேட்ட தக்கன், நுந்தையாகிய சிவனுக்கு அவிப்பாகம் கொடேன். அதுவன்றி உலகத்தில் நடக்கும் எந்த யாகத்திலும் கொடுக்காமல் தடுத்துவிடுவேனென்று மறுத்துக் கூறினன். அப்பொழுது வீரபத்திரக்கடவுள் பிரமவிட்டுணு முதலிய தேவர்களைப் பார்த்து, இவன் யாகபதியாகிய எந்தைக்கு

அவிப்பாகம் இல்லை யெனக் கூறல் உங்களுக்கு உடன்பாடு தானே? வென்று கேட்க, அவர்கள் ஒன்றும் பேசாது ஊமர்போலிருந்தார்கள். வீரபத்திரர் அதுகண்டு இவர்கள் வலிமை இருந்தவண்ண மறிவேனென்று சொல்லிக் கடுங் கோபங்கொண்டு, பெருநகை செய்து, உதட்டை மடித்துக் கடித்துத் தண்டாயுதத்தாற் கண்டோரஞ்சும்படி எல்லா ரையுமடித்து வீழ்த்தினர். விஷ்ணுமூர்த்தி மூர்ச்சையடைந் தார். பிரமாவின் சிரம் வீரபத்திரர் குட்டினால் வெடித் தது. தக்கனைப் பிடித்து உடல் பதைப்பத் தலையைத் துண்டமாக வெட்டி யாகாக்கினிக்கு இரையாக்கினர். அப் பொழுது பத்திரகாளி யம்மையும் அவர் பரிவாரத்தராகிய ஏனைக்காளிகளும், வீரபத்திரக் கடவுளைப் பிரியாமல் நின்று, ஒழியாமல் அவரவர்க்கு ஏற்ற தண்டஞ் செய்தனர்.

விஷ்ணுமூர்த்தி மூர்ச்சை தெளிந்தெழுந்து ஆராய்ந்து விட்டபடைகளெல்லாவற்றையும் வீரபத்திர தேவர் வெற்றி கொண்டார். அப்போது கோடாகோடிபூதங்கள் யாகத்தை முழுது மழித்துத் தும்பைமாலை சூடித் துணங்கைக் கூத்தா டின. இது நடக்கும்போது விஷ்ணுமூர்த்தி வீரபத்திர தேவருடைய பெருங்கோபம் தணிய உபாயந்தேடி எனது சக்கரப்படை தேவரீருக்கு அச்சமுற்றால் தேவரீருக்கு ஒப் புயர்வு உண்டோ! வென்று பற்பல புகழ் வாக்கியங்களைக் கூறித் தோத்திரஞ் செய்ய வீரபத்திரக் கடவுள் கோபந் தணிந்து பூதகணங்கள் புடைசூழ்ந்துவரக் கைலையங்கிரிக்குச் சென்று சிவபெருமான் திருவடியைத் தோத்திரஞ் செய்து சிரசினால் வணங்கி நின்றார். யாகத்திற்குவந்த தேவருள்ளே இறந்தவரொழிய இறவாத பிரமா முதலிய சில தேவர்கள் மூர்ச்சை தெளிந்து கைலையங்கிரிக்குச் சென்று கண்ணு தற் கடவுளை வணங்கித் தேவரீரது திருவருளல்லாமல்

தக்கன் உய்யுந்திறனுண்டோவெனக்கூறிப் பின்பு உண்மைப் பொருளை யுணர்ந்தானேனும் அவ்வுணர்ச்சியை மிகுவித்தற் கேதுவாகிய பேறில்லாத சிறுவிதி யென்று தேவரீர் திருவுள்ள மறிந்ததே. அவன் செய்த சிவத் துரோகமாகிய பேரபராதத்திற்குத் தக்க பெருந் தண்டனையு மடைந்தான். இனி இறந்த அவன் எழும்வண்ணம் திருவருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்

அது கேட்டருளிய சிவபெருமான் பெருங்கருணையினாலே வைத்திய நாதமென்னுந் தலத்திலே சித்தாமிர்த மென்னுந் தீர்த்தத்திலே மாசிமாதத்துச் செவ்வாய்க்கிழமை யாகிப புண்ணிய தினத்தில், வெட்டுப்பட்ட அவனது உடலையும் ஆட்டுத்தலையையும் வெவ்வேருக நீங்கள் எடுத்து வைமின் என்று திருவாய்மலர்ந்து வரங்கொடுத் தருளினார். தேவர்கள் அவ்வாறே செய்தார்கள். சித்தாமிர்த தீர்த்தம் அவற்றிற்பட, உடலும் சிரமும் ஒன்று சேர்ந்து உயிர் பெற்றுத் தக்கன் ஆட்டுத்தலை விளங்கப் பாவம் நீங்கி நிற்றலை யாவருங் கண்டார்கள். அப்பொழுது அவன் சென்று வைத்தியநாத சுவாமி திருவடியை வணங்கினான். தேவதுந்துபியாகிய பஞ்சதூரியங்களும் ஒலித்தன. வித்தியாதரர்களாகிய தேவர்கள் பொழிந்த பூமாரியானது பூமியை மூடிற்று. மற்றைத் தேவர்களும் சிவபெருமானருளினால் உயிர்பெற் றெழுந்தார்கள்.

பாவங்களெல்லாவற்றுள்ளும் தனக்கு உயர் வொப்பில்லாத பெருங் கொடும்பாவம் பிராயச்சித்தத்தாலும் நீங்காத சிவத்துரோகமேயாம். பாவங்களை நீக்குகின்ற புண்ணிய தீர்த்தங்க ளெல்லாவற்றுள்ளும் தனக்கு உயர்வொப்பில்லாத மிகமேலாகிய தீர்த்தம் சிவத்துரோகத்தை நீக்கவல்ல

சித்தாமிர்த தீர்த்தமேயாம். சிவத் துரோகத்தைச்செய்து இறந்த தக்கன் உயிர்பெற்று, பல நன்மைகளை யடையச் செய்த மங்களம் பொருந்திய சித்தாமிர்த தீர்த்தத்தைத் தரிசித்தோரும் பரிசித்தோரும் பின்னும் பின்னும் பிறந் திறந்து துன்புற் றுழலாது சிவலோகஞ் சேர்வார்.

தக்கனருள்பெறுசருக்கமுற்றிற்று.

---

## ௯. இரணியவன்மச்சருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்ததீர்த்த மகிமையைப் பின்னு மோர் சரித்திர மூலமாகச் செவ்விதிற் கூறியருளுகின்றார்:

நால்வகை யுகங்களுள் மிகமேலாகிய சுகபோகங்களை யே கொடுக்கின்ற திரேதாயுகத்தில் உயர்ந்தோர் போற் றும் சிவஞானி யொருவர் வைத்தியநாத சுவாமியை மனத் தில் வணங்கித் தியானித்துக்கொண்டு பின் இனிய சித்தா மிர்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தார். அவருக்கு அத் தீர்த்தநீர் மிகச்சிறந்த கருப்பஞ்சாறுபோலினிதாயிருந்தது. அதனை யுணர்ந்த அச்சிவஞானியார் அவ்வுகத்திலே அர சாண்ட இரணியவன்மச் சக்கிரவர்த்தியினிடத்தில் அந்த மகிமையை அறிவித்தார். அவ்வரசன் அதனை நம்பாது சோதனை செய்யக்கருதி, சேனைகளோடு வைத்தியநாததலத் தை யடைந்து சித்தாமிர்ததீர்த்தத் துறையையும் பூஞ்சோ லையையும் தூரத்தேகண்டு மிகச் சந்தோஷமடைந்தான். சமீபத்தில் வரும்போது பிராமணர்கள் சூரியோதயத்துக்கு முன் ஐந்துநாழிகை யுண்டென்னுமளவில் நித்திரைவிட்டெ ழுந்து சித்தாமிர்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து துறை

களில்நின்று தருப்பணஞ்செய்து காயத்திரிமந்திரஞ் செபித்துக்கொண்டு நிற்கின்ற திடபுத்தியைத் தங்கிநின்று பார்த்து அதிசயங்கொண்டு பின்னர்ச் சித்தாமிர்தத்தின் அழகிய படித்துறையைப் பார்த்து மனநிறைந்த மகிழ்ச்சி யடைந்தான். பின் சித்தாமிர்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதில் ஒருதுளி உட்கொண்டான். அது கருப்பஞ்சாற்றினும் இருமடங்கு சுவையாக விருந்தமையாலும், அதுவன்றித் தன் சரீரத்தில் நெடுங்காலம் நீங்காதிருந்த பெருவியாதியாகிய வெண்குட்டம் முழுதும் நீங்கிப் பொன்வண்ணம் பொருந்தியிருக்கக் கண்டமையாலும் பேருவகையெய்தி அத்தீர்த்தத்தைப்புகழ்ந்து நின்றான்.

கருப்பஞ்சாற்றினும் மிகுசுவையாயிருத்தலின் இட்சுசாரமென்னும் பெயரையுடைய அச்சித்தாமிர்த தீர்த்தக் கரையில் அவ்வரசன் இரத்தினம், பொன், முத்து, வஸ்திரம் என்னுமிவற்றை வேதப்பொருளையுணர்ந்த பேரறிவினையுடைய பூதேவர்களுக்கு அவாநீங்கும்படி மகாதானஞ்செய்து பெருமகிழ்ச்சி யடைந்தான்.

பின்பு சந்தியாவந்தன முதலிய கடன்களை விதிப்படி செய்து வைத்தியநாதர் தையனாயகியோடு எழுந்தருளியிருக்கின்ற கோயிலை வலம்வந்து அவர்களைப்பூசித்து அவரருள்பெற்று அநேக திருப்பணிகளைச் செய்துகொண்டு பல காலம் அங்கே வசித்தான்.

அவனவ்வாறிருக்குங் காலத்தில் வைத்தியநாதசுவாமி நவமணிபதித்து அலங்கரிக்கப்பட்ட மாற்றுயர்ந்த பொன் விமானமொன்றைப் பூரணகருணையோடு கொடுத்தருளினார். புகழ்மிக்க வேலரசன் அதனைப்பெற்று அதிலேறிக்கொண்டு தன்னகர்சென்று செங்கோல்செலுத்தி, குடிகளைப்பாதுகாத்

துக்கொண்டிருந்து முடிவிலே அவ்விமானத்திலேறித் தெய்வப்பெண்கள் வெண்சாமரை வீசவும் தேவர்கள் பூமழை சொரியவும் திலோத்தமை முதலிய அரம்பையர் நடனஞ் செய்யவும் கைலாசமலையை யடைந்தான்.

இரணியவன்மச்சருக்கமுற்றிற்று.

---

## கo. சதானந்தச்சருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்தத்தின் மகிமையைச், சதானந்தர் சரித்திர வாயிலாகவும் அம்முனிவர்களுக்கு அருளிச்செய்கின்றார்.

சித்தாமிர்ததீர்த்த மான்மியம் படிப்போரும் கேட்போரும் கங்காஸ்நானஞ்செய்த பலனடைவர். அஃதன்றிச் சித்தாமிர்ததீர்த்த ஸ்நானபலனும்பெற்று இயமவாதையின் நீங்கிச் சிவபெருமானுடைய திருவடியையும் அடைவார்கள். இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து முத்தும், விண்டு முதலாகிய தேவர் உருவமெழுதிய பொற்றகடும், ஊமத்தைமலர், தும்பை மலர்களுடன்சேர்த்துத் தானஞ் செய்வோர் பூதானம், கோதானம், யாகமென்னும் இவைகளைச்செய்த பலனடைவர்கள். புத்திரப்பேறில்லாத பெண்கள் இத்தீர்த்தத்தில் உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்து புத்திருக்கு நெய்வார்த்து தையனாயகி சந்நிதியில் மாவிளக்கேற்றின் நற்குண நற்செய்கைகளையுடைய புத்திரரைப் பெறுவார்கள். ஒவ்வொரு மாதத்திலும் செவ்வாய்க்கிழமை தோறும் உதயகாலத்திலே தவறாது ஸ்நானஞ்செய்வோர்கள் கழிந்த மூன்று சென்மங்களிலுஞ்செய்த பாவங்கள் நீங்கிக் கைலாசமலையை அடைவார்கள்.

சிவனருள்பெற்ற முனிவர் குழாத்துள் முதன்மைபெற்றவரும், அரிய பக்குவம், நல்லொழுக்கம், தருமம், ஆசாரம், பேரறிவு, விரதம் என்னும் இவற்றையுடையவருமாகிய சதானந்தமுனிவர் சித்தாமிர்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து வேதாதீதராகிய சிவபெருமானைத் தியானித்துப் பஞ்சாக்கரத்தைச் செபித்துப் பின்னர்த் தியானஞ் செய்திருந்தார்.

அத்தீர்த்தத்திலிருக்கின்ற பச்சைத தவளையொன்று அம்முனிவர் தலையிற்றுள்ளி விழுந்தது. உடனே அவர் தியானம் நீங்கினமையால் மனம்புழுங்கி இருகண்களுஞ் சிவந்து கோபாக்கினிபறக்கக் கோபித்து இத்தீர்த்தத்தில் எக்காலமும் தவளைகள் ஒழியக்கடவனவென்று சாபமிட்டனர். அந்நாட்டொடங்கி இந்நாள்காறும் அத்தீர்த்தத்தில் தவளைகள் இல்லாதொழிந்தன. அம்முனிவர் தானிருந்த தானத்தைவிட்டகலாமல் என்றும் அதிலிருக்கும் வரத்தைப் பெற்று இன்றுமிருக்கின்ருர்.

அந்தத் தீர்த்தம் இவ்வாருகிய அளவில்கோடி மகிமைகளை எல்லாயுகங்களிலும் பெற்றிருத்தலினல், அதனை நினைப்பவரும், அதில் ஸ்நானஞ்செய்வோரும் நீங்கற்கரிய கொடிய துன்பங்களெல்லாவற்றையும் நீங்குவார்கள். எந்நாளுமிதில் ஸ்நானஞ்செய்வோர் அனேக கொடிய பாதகங்களெல்லாம் நீங்கி மேலாகிய பதவிகளைப்பெற்று ஈற்றில் கைலாசமலையைக் காணியாகக்கொள்ளுவார்கள்.

சதானந்தச்சருக்கமுற்றிற்று.

# கக. புருடனைக்கொன்றபாவந் தீர்ந்தசருக்கம்.

—❀—

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்தத்தின் மகிமையை மற்றுமொரு சரித்திர வாயிலாக அம்முனிவர்களுக் கருளிச் செய்கின்றார்.

காஸ்மீர நாட்டிலே ஏமாசுரனென்னு மரசனிருந்து அரசுபுரிந்த இராசதானியாகிய ஏமாவதியென்னு நகரத்திலே வேதங்களை யறிந்தவனும், நல்வழியில் நடப்பவனும், சகலகுண சம்பன்னனும், பரிசுத்தமுடையவனும், அந்தணர் குலத்திலவதரித்தவனுமாகிய உஞ்சவிர்த்தி என்னு நாமமுடைய ஒரு பிராமணனிருந்தான். அவன் மனைவி பெயர் சண்டி, அவள் தன் குலத்துக்குரிய ஒழுக்கமும், அறிவும், ஆசாரமுமின்றி நல்லொழுக்கமுள்ள தன் நாயகனோடு இரவும் பகலும் வலாற்காரமாகப் புணர்ச்சிசெய்ய நினைத்தாள். பூமியிலே எந்தத் தேசத்திலாவது எந்த நகரத்திலாவது இவ்வாருகிய துற்செய்கை நிகழவில்லை. இச்செய்கை நகாதென்று புத்திசொல்லும் பிதாமாதாக்களுடைய சொற்களைக்கேளாள். அதுவன்றி அவர்களை இகழ்ந்து, யோசித்து யோசித்துப், பற்பல நிந்தனை வார்த்தைகளைக் கற்பித்துச் சொல்லுவாள். பிதிர் தினத்திலும் தன் நாயகனை வலிந்து புணர்ந்து பிதிர்க்கடன் செய்யவொட்டாது தடுக்கும் முரட்டுத்தனமுள்ளவள். பரபுருஷர்களோடு பரிகாச வார்த்தை பேசி மகிழுமன்புள்ளவள். குருமார்களையும் நிந்தைசெய்யுங் கொடியவள். நாயகனோடு சேர்ந்திருந்தும் அவனிடத்திற் கடுஞ்சொற்களைச் சொல்லுவாள். தன் நாயகனாகிய உஞ்சவிர்த்தியை இகழ்பவரிடத்தும் அவனிடத்தன்பிலா

ரிடத்தும் மிகநேசமுள்ளவள். பொருள் கொடுக்கும் பரபுருஷர்களை அன்போடு தோத்திரஞ்செய்து உபசரிப்பவள்

இவ்வியல்பினையுடைய பஞ்சமாபாதகி தான் நினைத்த நேரமெல்லாம் மகிழ்ச்சியுடன் புணர்ச்சிக்குடன்படாத தன் நாயகனைக் கொல்லல்வேண்டுமென்னும் வன்னெஞ்சமுள்ளவளாய் இராட்சதிபோல அவன் பெருநித்திரை செய்யும் வேளைபார்த்து, தான் படுக்கையிலிருந்து எழுந்து அவன் தலையில் கல்லைத்தூக்கிப்போட்டாள். அதனல் அவன் இறந்துவிட அவ்விரவிற்றனே தாமதமின்றி அவனுடலையெடுத்துப் பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டு, காமநோய் அதிகரித்தலால் தத்தங்கணவரோடு சேருங்கற்புடைய பெண்களைப் பரிகசித்துச் சிரித்துப் பற்பலசாதிப் பரபுருடர்களைப் பகற்பொழுதினும் புணர்ந்து வாழ்ந்தாள்.

இவள் இளமைப்பருவத்தளாயினும் பரபுருடர் பலரோடு சகித்தற்கரிய புணர்ச்சிசெய்தலால் அவள் அழகு நீங்கி தளர்ச்சி உண்டாயிற்று. கொடிய நோய்கள் அதிகரித்துச் சரீரம் வீங்கிற்று. அவளைக் கட்டித்தழுவிப் புணருந்தூர்த்தர்கள் அவளுடன் சேரும் விருப்பத்தை முழுதும் விடுத்துத் தூரத்தே விலகிப்போயினர். நோய்கள் மாத்திரம் விலகாது அவளுடம்போடு கலந்துகொண்டன. அதனல் பின்பு பெருஞ்சன்னி முதிர்ந்து மூடிக்கொள்ள இறந்து இயமலோகத்தை யடைந்தாள். அவளை இயமதூதர்கள் பற்பல கற்பகாலம் எல்லா நரகங்களிலும் வீழ்த்தி அவள் என்னபாவஞ்செய்தேனே என்று அழும்படி வருத்தினர்கள். நரகத்துன்பத்தை யனுபவித்தபின்பு நூறுதரம் நாய்ப்பிறப்பாய் பிறந்தாள். இழிந்த நாய்ப்பிறப்பு

வந்து சேர்ந்ததேயல்லாமல் உடலினின்றும் புழுச்சொரிந்திட துக்கத்தோடலைந்து திரிந்தாள்.

முற்சென்மத்திலே ஒழுக்கமும் ஆசாரமுமுள்ள தன் தந்தையோடுசென்று அவன் நண்பனாகிய கங்காதரனென்னும் அந்தணன் பிரதோஷகாலத்திலே செய்யும் சிவபூசையைத் தரிசித்த புண்ணியத்தினாலே வைத்தியநாதம் என்கின்ற திவ்விய தலத்திலே நூறுவது நாய்ப்பிறப்பை எடுத்து, உடல்மூத்துத் துன்பமிகப், புழுச்சொரிய, ஏங்கித்திரிந்து அந்த வைதியநாத தலத்தில் சுசன்மாவென்னும் பிராமணனுடைய வீட்டுவாசலில் அவள் நாயுடம்பானது வலிமை நீங்கி இளைத்து ஒடுங்கி நின்றது.

இது இவ்வாறு வந்து நிற்றற்கு முன்னரே சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யச்சென்ற அந்தணன் ஸ்நானஞ் செய்து தீர்த்தத்தை ஒரு பாத்திரத்திலெடுத்துக்கொண்டு தன் வீட்டில்வந்து ஜெபஞ்செய்யுந் தானத்தில் அத்தீர்த்தத்தைத் தெளித்தான். அதிலொருதுளி தெறித்து அந்த நாயினுடைய சரீரத்திற்பட நாயுடல் நீங்கக்கண்டு களிப்படைந்தாள். அப்பொழுதே தான்செய்த பாவம்விட்டு நீங்கப் பரிசுத்தமான திவ்விய மேனியையுடையவளாய் அரம்பா ஸ்திரீகள் தன்னைச்சூழத் தேவவிமானத்தின்மேலேறிச் சுவர்க்கலோகத்தை யடைந்து இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் வந்து தோத்திரம்செய்ய மகிழ்ந்திருந்தாள். ஆதலால் சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் அடையும்பலன் இவ்வளவிற்றென்று ஒருவராலுஞ் சொல்லமுடியாது.

புருடனைக்கொன்றபாவந்தீர்ந்தசருக்கமுற்றிற்று.

# கூ. பாரியைக்கொன்றபாவந் தீர்ந்தசருக்கம்.

—❀—

சூதமுனிவர், சித்தாமிர்ததீர்த்த மகிமையைப் பிறிதொரு சரித்திர வாயிலாகவும் நைமிசமுனிவர்களுக்குத் தெரிவிக்கின்றார்.

கோதாவரி தீரத்திலே நந்தவடமென்னுமூரிலே போதாயன சூத்திரத்தைக் கைக்கொண்ட சிவப்பிராமண குலத்திற்பிறந்தவன். வேதவேதாந்தங்களை ஓதியுணர்ந்த மேன்மையுடையவன். அநேக புதல்வரைப்பெற்றவன். சிவபூசை செய்பவன். கீதத்தை இனிமையோடு பாடுபவன். கற்றல் கேட்டலுடையவன். இவை யுணர்ந்தவனாயினும் இவைகளை மறந்து தீச்செய்கையுடையவனாய் நல்வழிவிடுத்து நிந்திக்கப்படும் நெய்த்தான முதலிய தானங்களெல்லாவற்றையும் வாங்கி, சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்களையும் விடுத்தான். அதுமட்டோ! முக்காலத்தும் ஆசாரமின்றி தாம்பூலந்தின்ற வாயோடு சிவனைப் பூசைசெய்வதன்றியும் சிவத்திரவியா பகாரமும் செய்தான். நூல்களால் விலக்கப்பட்ட *பிரேதவூணை விரும்பியுண்டான். அங்ஙனஞ்செய்தும் மனக்கலக்கஞ்சிறிதுமிலன். கற்புடைய தன் மனைவியின் மனங்கொதிக்கப் பரத்தையினின்பம் நுகரும்படி அவளைப் புணர்ந்தான். அத்தன்மையனாகிய கணவனுடைய பாதத்தை அன்போடு வணங்கி என் நாயகரே என்னை யிகழ்ந்து பொருட்பெண்டிர்மேலிச்சைவைத்து அவளில்லத்தை நீங்

---

*பிரேதவூண்:—இறந்ததினந்தொடங்கிப் பதினொராம் நாளில் முப்பத்திரண்டு கவள அன்னத்தைத் தனம் வாங்கிக்கொண்டு புசித்தல்.

காமல் மகிழ்ச்சிகொண்டு அடியேனை மறந்தீர். இழிந்த தானங்களையும் பாவமிக்க *உக்கிராந்தி கோதானத்தையும் வாங்கினீர். பிறர்பொருளைக் கவர்ந்தீர். "கல்லாத மூடரைக் காணலுந்தீது" என்ற திருமந்திரத்திற்கு மாருகக் கல்லாத மூடரோடு சினேகங்கொண்டீர். தேவரீர் செய்யுங் காரியங்களுள்ளே பயனுனகாரியம் ஒன்றுமில்லை. எல்லாம் பிறர் சிரித்தற்கிடனுனவைகளே. என் ஆன்மநாயகரே! உமது அரிய புதல்வர்கள் இளைத்து வாட்டமடைந்தார்கள். உபநயனத்துக்கு விதித்த காலங்கழிந்தும் அதனை நினைந்தாயினுமவர்க்கு உபநயனச்சடங்கு செய்யாதொழிந்தீர். இது தருமமோ என்று தளர்வடைந்து கூறினுள். கற்பினையுடைய அம்மனைவி இவற்றைக் கூறியதேயல்லாமல் பின்னுமிவ்வாறு கூறுகின்ருள். கோதாவரி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பஞ்சாக்கரம் செபித்தலைவிட்டீர். பொதுப் பெண்கள்மேல்வைத்த ஆசை தீங்கெனவிடுத்து, நீர்செய்யும் பாவத்தால் நுமக்குவரும் ஏதம்நோக்கி வருந்துகின்ற அடியேனைப் பாதுகாத்தருளுமென்று கூறிச் சோகபாஷ்பம் சொரிந்து நின்ருள்.

அருந்ததிக் கற்பினளாகிய மனைவி கணவன் பாதங்களை வணங்கி இவ்வாறுசொல்ல அவன் இதனைமடித்துப் பல்லாற்கடித்து வன்னெஞ்சனுய் உலக்கையை எடுத்து அவள் தலையிலடித்தான். அவள் பூமியிலே துடித்துவீழ்ந்து பொறிகலங்கிச் சோர்ந்தாள். அவன் உயிரிருக்குதென்று கருதி உலக்கையால் சிரத்திலிடித்தான் அவளிறந்தாள். சிவகணங்கள் வந்து அவளை விமானத்தில் ஏற்றிக்கொண்டுசெல்ல, தேவர்கள் பூமாரிபொழியச்சென்று சிவபெருமானுடைய திருவடியை யடைந்தாள்.

---

* உக்கிராந்தி கோதானம் :—உடலைவிட்டு உயிர்நீங்கும் சமயத்தில் கொடுக்கப்படுங் கோதானம்.

அவள் புத்திரர்கள், தந்தை உணவு முதலியன கொடுத்துக் காப்பாற்றுமையால் பசிநோயால் வருந்தி யிறந்தார்கள். அந்த நகரமாந்தர் இவன் மனைவியைக் கொன்ற பாவத்தால் குன்மம் முதலிய கொடிய நோய்களால் வருந்துகின்றான்; இப்பாவி நகரத்திருத்தல் தகாதென நீக்கி விட்டனர். அவ்வூர்ப் பிராமணர்களும் இக்கொடும்பாவி கோவிலில் சிவலிங்கபூசை செய்தல் விதிக்குமாறெனக்கருதி அது செய்யாது விலக்கிவிட்டனர். அவன் இனி மனிதர் தன்னைக்காணவுங் கூசுவதொன்றெண்ணி மனிதர் சஞ்சாரமில்லாத காட்டையடைந்து, புலியாற் கொல்லப்பட்டான். இயமதூதர் அவனைப் பிடித்துச்சென்று அக்கினி நரக முதலிய கொடு நரகங்களில் வீழ்த்தி எட்டு யுகங்கள் கொடுந் துன்பம் அநுபவிக்கச் செய்தார்கள்.

பின் அப்பாவி பூமியில் பற்பல இடங்களில் தொண்ணூற்றொன்பது முறை பறவையாகப்பிறந்து, முடிவில் முற்பிறப்பில் கார்த்திகைச் சோமவாரத்தில் சிவபூசை செய்த புண்ணியத்தால் நூறுவது முறை வைத்தியநாத தலத்தில் சித்தாமிர்த தீர்த்தக் கரையிலுள்ள ஆலமரத்தில் முன்போலப் பறவையாகப் பிறந்து இராப்பகல் அதைவிட்டு நீங்காமல் இருக்குங் காலத்தில் மாசி மாதத்து மூன்றுஞ் செவ்வாய்க்கிழமையிலே ஒரு வேடன் அதைக்கண்டு பாணத்தைச் செலுத்தத் துன்பமுற் றிறந்து அத்தீர்த்தத்துள் வீழ்ந்தான். அத்தீர்த்தம் பட்டபோது பாவமனைத்து நீங்கிப் பட்சியுடம்புவிட்டு மகிழ்ச்சியடைந்து சிவபெருமானால் அனுப்பப்பட்ட தேவவிமானத்திலேறிச் சிவலோகத்தை யடைந்தான்.

பாரியைக்கோன்றபாவந்தீர்ந்தசருக்கமுற்றிற்று.

---

# கரு. சத்தியசன்மச்சருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்த மகிமையைப் பலப் பேறு பெரிதுடைய பிறிதோர் சரித்திரவாயிலாகவும் சௌனகாதி முனிவர்களுக்கு உணர்த்துகின்றார்.

முத்தி நகரமேழனுள் முதன்மை பெற்ற மதுரைத் திருநகரத்திலே மறையவர் குலத்திலே பிறந்த சத்தியசன்ம னென்பவ னொருவனிருந்தான். அவன் பிராமணநிந்தை, சைவநிந்தை, வேதநிந்தை, தெய்வநிந்தைகளைத் தினந்தோறுஞ் செய்கின்றவன். சிவபுராணங்களையும், அவற்றைப் படிக்கின்றவர்களையும், தூஷிப்போன். அன்னந் தண்ணீர் முதலிய எல்லாப் பொருள்களையும் விற்போன். சிவத்திரவியங்களைத் திருடுபவன். இது தருமம் இது பாவம் என்று சிறிதும் சிந்தியான். இராச சபையில் வரும் வித்துவான்களுக்கும், பிராமணர்களுக்கும் பொருள் கொடாமற்றடுக்கும் பாதகன். வயிறார வுண்பவனைக் கண்டால் பேருணவு கொள்ளு முனக்கு யார் அன்னமிடுவாரென்று பழித்துக் கூறுவான். எந்நாளும் மிகுந்த கோபமுள்ளவன். எந்நாளும் வஞ்சனை செய்யுங் கொடியவன். சிற்றினத்தரோடு சேர்பவன். எல்லாப் பாவங்கட்கும் இருப்பிடமானவன். கங்கா தீர்த்த ஸ்நான பலனையும், கன்னிகையையும் விற்பவன். திரவியம் நாசமாகுமெனக் கருதித்தானுமுண்ணான். தன் புத்திரர்களுக்கும் அன்னங்கொடான். அவன் பாவங்களை நான்கு முகங்களுடைய பிரமதேவராலும் எண்ணி அளவிடமுடியாது. அப்பாவங்களின் பயனாக அவனுக்கு வந்த க்ஷயரோகத்தினால் அவன் இறந்தான். யமதூதர்கள் அவனை நரகத்தில் வீழ்த்தி அக்கினியிற் காச்சிய கொடிற்றி

ஞாலே அவன் சரீரத்தைப் பிடிங்கியும், இருப்பு முளைகளை நெருங்கக் கடாவிய தண்டத்தினாலே முதுகிலடித்தும், ஈர் வாளினால் தூள்தூளாக அரிந்து உண்ணக் கொடுத்தும் இவ்வாறு வருத்தினார்கள்.

இவன் *மூன்று மனுவந்தர காலம்வரை நரகத்திற் கிடந்து வருந்தினான். அவன் இறத்தற்கு முன்னமே தரித்திரப் பிராமணனொருவனுக்குச் சிவக்குறி பொருந்திய சாளக்கிராம மொன்றைக் கொடுத்த புண்ணியத்தினால் நரகத்தினின்றும் நீங்கி, வைத்தியநாத தலத்திலே சித்தாமிர்த தீர்த்தக்கரையிலுள்ள பாதிரி விருட்சத்திலே முனியாகி நெடுங்கால மிருந்தான்.

அவனவ்வாறிருக்குங் காலத்தில் மிருகண்டு முனிவர் தைமாதத்திலே நான்காஞ் செவ்வாய்க் கிழமையிலே வருகின்ற முத்துக்குமாரக்கடவுள் தீர்த்தோற்சவத்திலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி விபூதி தரித்து வைத்தியநாத சுவாமி கோயிலை வலம்வந்து பாதிரி விருட்ச நிழலிலிருந்து செபஞ்செய்யக் கருதி, கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தை அள்ளிச் செபஞ் செய்யுந்தானத்தில் அது சுத்தியாகும்படி தெளித்தார். அதிலொரு துளி தெறித்து மரத்தின் மேலிருந்த முனியுடைய சரீரத்திற் பட்டது. உடனே பிரமராட்சத வடிவம் நீங்கி, தேவவடிவாகிப்பாவங்களெல்லாம் நீங்கி ஆடை, ஆபரணம், சந்தனம் இவைகளையணிந்து நவரத்தின கசிதமாகிய முடியைச்சூடி, மிருகண்டு முனிவரை வணங்கி, தனது முற்பிறப்பின் வரலாற்றையும்

*மூன்று மனுவந்தரம்—ஒரு மனுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாக, மூன்று மனுவந்தரத்துக்கும் இருநூற்றுப்பதின் மூன்று சதுர்யுகம். மனுவந்தரம்-மனுவின் முடிவு. அஃதாவது அவரிறக்குங்காலம்.

முனிவடிவம் நீங்கியதையுங்கூறி முனிவரே! யான் தேவருலகஞ் செல்கின்றேனென்று தெரிவித்து விடைபெற்று, தேவவிமானத்திலேறித் தேவர் பூமழை பொழிய, சிவகணங்கள் சாமரைவீச, அரம்பையர் நடனஞ் செய்ய, இந்திரன் வந்தெதிர் கொண்டுபசரிக்க, விவானத்திலிருந்த வண்ணமே சொர்க்கலோகத்தைப் பார்த்துக்கொண்டு அதற்கு மேலுள்ள பிரமலோகத்தையும், அதன் மேலுள்ள விண்டுலோகத்தையும் கடந்து சென்று அதன் மேலுள்ள சிவலோகத்தை அடைந்து மிக்க மகிழ்ச்சியோடிருந்தான்.

சத்தியசன்மச்சருக்கமுற்றிற்று.

---

# கச. *முனிவர்தீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், சித்தாமிர்த தீர்த்தமொன்றன் மகிமையைப் பத்தற்புத சரித்திரவாயிலாகக் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணம் இரண்டாவதாகிய முனிவர் தீர்த்த மகிமையைக் கூறுகின்றார்.

வைத்தியநாத தலத்திலே, கிழக்குத் திக்கிலே, திருக்கோயிலுக்கு மூன்று விற்கிடை தூரத்தில், முனிவர் தீர்த்தம் இருக்கின்றது. அதனைக் காப்பவன், அதற்கிருடி, அதன் விருட்சம், அதன் அதிதெய்வம், முறையே கருடனும் மிருகண்டும், ஆலமாமும், சந்திரசேகாருமாம்.

ஆவணி மாதம் மூலநட்சத்திரத்திலே ஆலவிருட்சத்தைப் பிரதட்சிணஞ்செய்து, கருடன் முதலாயினோரை

---

*இத்தீர்த்தம்—கீழைக்கோபுரத்திற்கு முன்னரே கீழை வீதிக்குக் கிழக்கில் உள்ளது. இதனை இக்காலத்து வெட்டுக்குளமென்பர்.

வணங்கி அதில் ஸ்நானஞ்செய்வோர், செய்வினை தீர்ந்து சிவகணங்களாவார். தை மாதத்திலே சுக்கில பக்கத்துப் பஞ்சமியோடுகூடிய வெள்ளிக்கிழமையிலே ஸ்நானஞ்செய் வோர் சிவசாரூபமடைவார்கள். மற்றைத் தினங்களில் ஸ்நானஞ்செய்வோர் எல்லாப் பாவங்களையும் நீக்கி அசுவ மேதயாகஞ்செய்தபலனடைவர். முனிவர் தீர்த்தநீர் ஒருவர்மேற் படின் அவருக்குக் கருச்சிதைத்தல், பிதிர்கத்தி, *வீரகத்தி, பதிகத்தி, தாசகத்தியாகிய பெருங்கொடும் பாவங்களும் நீங்கிவிடும்.

இத்தீர்த்தத்தை வலஞ்செய்து ஆலவிருக்க நிழலிலே கபிலைப்பசு, வெள்ளி, பால், சருக்கரை தானஞ்செய்வோரும் பாவம் நீங்கி அசுவமேத யாகஞ்செய்த பலனடைவர்.

முனிவர்தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# கரு. வீரகத்திதீர்ந்தசருக்கம்.

சூதமுனிவர், முனிவர்தீர்த்த மகிமையைப் பின்னருமொரு சரித்திர வாயிலாகக் கூறுகின்றார்.

கணநாதிபரான வீரபத்திரர் தக்கன் யாகத்தைப் பாழ்படுத்தி, அவன் றலையை வாளுக்கிரையாக்கியதனால் வந்த வீரகத்தி, வருத்தவருந்திச் சுவர்க்க மத்திய பாதல மூன்றி

* வீரகத்தி—வீரக்கொலையாலாகிய துன்பம். பதி-யசமானன். தாசன்-அடிமைத்தொழில் செய்பவன். ஹத்தி என்னும் வடமொழி தமிழில் கத்தி என்றாய்த்து; கஸ்தி-துன்பம்.

னுஞ் சுற்றித்திரிந்தும் தீராமையால், அழகுநீங்கிச் சரீரங் கறுத்து, வாட்டத்துடன் கைலாயத்தை யடைந்து, பரமசிவனுடைய பாதாரவிந்தங்களைப் பரவி, "சுவாமீ! இது நீங்கு நெறிதெரிந்திலது! எல்லையில்லாத்துயர்க்கடலிற் படிந்தேன். அதனால் நித்திரை நீங்கிற்று. ஆகாரம் அற்றது. இஃதொழியுமுபாய மொன்றருளிச் செய்யவேண்டுமென்று வேண்டி நின்றனர். கைலாசபதி வீரபத்திரக் கடவுளை நோக்கி "நீ வைத்தியநாத தலத்திலுள்ள முனிவர் தீர்த்தத்திலே மூழ்கில் வீரகத்திப்பாவம் விட்டொழியுமென் றருளிச்செய்தனர்.

அவ்வுறுதி வாக்கைக்கேட்ட வீரபத்திரர் அங்கு நின்றும் முனிவர் தீர்த்தத்தையடைந்து காற்கியன், காசிபன், வீதிகோத்திரன், மயிந்தன், பராசரன், அகத்தியன், தக்கன் என்னும் முனிவரெழுவரும் அதில் ஸ்நானம்பண்ணி, கரையிலிருந்து நற்றவஞ்செய்து மிகுபலனடைந்த காரணத்தால், முனிவர் தீர்த்தமெனக் காரணப்பெயர் பெற்றதை யுணர்ந்து, அதன் எழிலனைத்துங்கண்டு, தை மாதத்துச் சுக்கில பக்கத்துப் பஞ்சமியோடுகூடிய சுக்கிரவாரத்தில் ஸ்நானஞ்செய்தனர். வீரகத்தியும் விட்டொழிந்தது. அதனால் மிகுமகிழ்ச்சியெய்தி அத்தீர்த்தத்தை மும்முறை வலஞ்செய்து வைத்தியநாத வள்ளலாரை வணங்கித் துதித்து அத்தீர்த்தத்தை நோக்கிக் கீழைக்கோபுர வாய்தலில், துவாரபாலகராய் நிலைபெற்றனர். இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் இவரருள்பெற்றுப் பாதகமெல்லாந்தீர்ந்து இன்பவீட்டினை யெளிதிற்பெறுவர்.

வீரகத்திதீர்ந்தசருக்கமுற்றிற்று.

# கசு. *பிரமதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், முனிவர் தீர்த்த மகிமையைக் கூறக் கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுப் பிரம தீர்த்த மகிமை கூறுகின்றார்.

மிக்க மகிமைபெற்ற வைத்தியநாத தலத்தின் தென் கீழ்த்திசையில் பிரமதீர்த்த மிருக்கின்றது. இதற்கு இருடி பிரமா. அதிதெய்வம் சூரியன். இரட்சகன் சண்டீசன், விருட்சம் பாதிரி, இவர்களை நமஸ்கரித்து விருட்சத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து பின் ஸ்நானஞ் செய்வது உத்தம மாகும்.

பிரமதேவர் இத்தீர்த்தத்தைச் சிருட்டித்து அந்நீரால் வைத்தியநாதரைத் திருமஞ்சனமாட்டிப் பூசனைப்புரிந்து, சரஸ்வதி தேவியுடன் அத்தீர்த்தக்கரைக்கண் வதிந்து ஓர் பெரிய யாகத்தைப் பதினாயிரம் வருடஞ்செய்து முடித்து அத்தீர்த்தத்திற்குப் பல நல்வரமளித்துத் தமதுலகஞ் சேர்ந்தனர். பிரமதேவர் உண்டாக்கிய காரணத்தால் இது பிரம தீர்த்தமெனப் பெயர்பெற்றது. இதில் ஸ்நானஞ் செய்யின் வேதத்தைவிற்றல், வேதத்தை ஓதிமறத்தல் என்னுமிவைகளால் வரும் பாவமும், ஏனைய பாவங்களும் விலகும்.

ஆவணி மாதத்து அமாவாசையில், இதில் மூழ்கிக் கன்னிகை, பொன், பொருள், அன்னம் என்னும் இவற்றுளொன்று தானஞ்செய்வோர், பன்னிரண்டு வருடம் சிவராத்திரியிற் சிவபூசை அன்புடன் செய்வோர் பெறும் பல

---

* இது கங்கைக்குளமென வழங்கப்படுகிறது.

னடைவர். அட்டமியோடு கூடிய மங்களவாரத்திலே மூழ்குவோர் நல்லோராவர். பலயாகங்கள் செய்த பலனையும், வேதாத்தியயனஞ் செய்த பலனையும் பெறுவர். இத்தீர்த்தத்தைப் பிரதட்சிணஞ் செய்வோர் இப்பூமி முழுவதும் வலம் வந்த பலனடைந்து தங்கள் முக்கோடி குலத்தையும் ஈடேற்றிக் கைலை விட்டகலாதிருக்கச் செய்வர். இப்பிரம தீர்த்தம் குருபத்தினி, சகோதரன் மனைவி, சிநேகிதன் மனைவி முதலாயினோரைச் சேர்ந்த பாவங்களையுந் தீர்க்கும்.

பிரமதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

## கஎ. *சூரியதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், பிரமதீர்த்த மகிமையைக் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுச் சூரியதீர்த்த மகிமை கூறுகின்றார்.

வைத்தியநாதர் கோயிலுக்குத் தெற்கே இராம தீர்த்தத்திற்குக் கிழக்கே இரண்டுவிற்கிடை தூரத்தில் சூரிய தீர்த்தமுள்ளது. இதற்கு இருடி கண்ணுவர். அதிதெய்வம் சூரியன். காவற்கடவுள் நந்திதேவர். விருட்சம் அரசமரம். இருடி முதலியோரை வணங்கி விருட்சத்தை வலம்வந்து ஸ்நானஞ்செய்யின் பேரானந்தப் பெருவாழ்வளிக்கும்.

முற்காலத்தில் துவட்டா என்னும் அசுரத்தச்சனுக்

---

*இது, தையனாயகி சந்நிதிக்கு நேரே தெற்கு ரத வீதிக்குத் தெற்கே உள்ளது. இக்காலத்து அம்மன் சந்நிதிக்குளமென வழங்கப்படுகின்றது.

சாணையிலிட்டுக் கடையப்பட்டமையால் தன்னொளிமழுங்கி, வலியிழந்து, செயலொழிந்த சூரியன், வைத்தியநாதரை வந்து பூசித்து அவரருளினால் அவையனைத்தும் பெற்றுத் தான் வசித்த விடத்தில் ஒரு தீர்த்தமமைத்து அதற்குச் சூரியதீர்த்த மென்று காரணப்பெயரிட்டு அதற்குப் பல வரங்களளித்துத் தனது மண்டலமடைந்தனன். இதில் ஸ்நானஞ் செய்வோரை நவக்கிரகதோடம் நணுகாது. ஞாயிற்றுக்கிழமையின் மூழ்கி விபூதி தரித்துச் "சூரியாய நம" என்னும் சூரிய மந்திரத்தைப் பதினாயிரமுருச்செபித்து அரசின் நிழலில் கோதுமை, நெய், பாயசம், வெல்லம் முதலியவற்றைத் தானஞ்செய்யின் ஒரு தானத்திற்கு நூறு தானஞ்செய்த பலனுண்டாகும்.

ஆடிமாதச் சுக்கில பக்கத்தில் எந்தக்கிழமையில் மூழ்கினும் எடுக்க எடுக்கக் குறையாத செல்வம், சற்புத்திரப் பேறு, சத்துரு ஜெயம், நன்மனையாட்பேறு, நோயற்ற வாழ்வு, தீர்க்காயுள் என்னும் இம்மைப் பயன்களும், தேவராய்த் தேவபோகங்களை யனுபவித்தலாகிய மறுமைப் பயன்களும், சோபான முறையிற்பெற்று ஈற்றில் வீடடைதலுமாகிய ஒன்றற்கொன்று அதிக நற்பலன்களை மூழ்கினோர்க்குக் கொடுக்கும்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் மூழ்குவோர் பெருஞ் செல்வம்பெற்றுக் கங்கா ஸ்நானஞ்செய்த பலனையுமடைவர். இந்திராதிபர் வாழ்வும், இட்டசித்தியும் பெறுவர். அவர்க்குக் கோகத்தி முதலிய தோடங்களும் நீங்கும். இதில் ஸ்நானஞ் செய்து கரையிலிருந்து சிவபூசை செய்வோர் எப்போகங்களையு மநுபவித்துச் சிவசாரூபமடைவர்.

சூரியதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

# ௧அ. *தக்கதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், சூரியதீர்த்த மகிமையைக் கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுத் தக்கதீர்த்த மகிமையைக் கூறுகின்றார்.

வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கு வடகீழ்த்திசையிலே அரைக்குரோச தூரத்திலே தக்கதீர்த்தமிருக்கின்றது. அதற்கு இருடி காத்தியாயனர். அதிதெய்வம் விநாயகர். இரட்சகர் கந்தக்கடவுள். விருட்சம் வில்வம்.

சிவதூடணஞ் செய்தமையால் தலையறுப்புண்டு ஆட்டுத் தலைபெற்ற தக்கன் பலநாள் அத்தீர்த்தத்துண் மூழ்கி வைத்தியநாத சுவாமியைப் பூசித்து அவரருளாற் சிவத்துரோகம் நீங்கப்பெற்றனாதலின் அது தக்கதீர்த்தமெனக் கூறப்பட்டது. இதில் ஸ்நானஞ்செய்வோர் இருடி முதலாயினோரை வணங்கி வில்வவிருட்சத்தை வலஞ்செய்து புரட்டாசி மாதத்திலே சுக்கில பக்கத்திலே நவமி திதிசேர்ந்த குருவாரத்திலே சிரத்தையோடு ஸ்நானஞ்செய்து பசுப்பால், பசுத்தயிர், பசுநெய், பச்சையரிசி இவைகளைத்தானஞ் செய்தால் பிராயச்சித்தத்தால் நீங்காத சிவத்துரோகமும் ஒழியும். மோட்சமடைதற்குச் சாதனமாகிய விபூதி, உருத்திராக்கம், சைவசாத்திரம் என்னும் இவற்றினைத் தூடிக்கும் அதிபாதகனேயாயினும் அதில் ஸ்நானஞ்செய்த அப்பொழுதே அவனுக்கு அப்பாதகந்தீரும். அதுமட்டோ! செல்வமும் பெருகும். அத்தீர்த்தக்கரையில் பிதிர் தருப்பணஞ் செய்யின் அது செய்தோர் குலத்தவர் கோடிபேரைச் சிவபதத்திருத்தும்.

தக்கதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

* இத்தீர்த்தம் சீர்காழிக்குப்போகும் சாலையில் நயினர் தோப்பு என்ற இடத்தில் இருக்கிறது.

# கக. வித்தியாதரதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், தக்க தீர்த்த மகிமையைக் கூறக்கேட்ட முனிவர் விரும்பிய வண்ணம் ஈண்டு வித்தியாதர தீர்த்த மகிமையைக் கூறுகின்றார்.

வைத்தியநாத சுவாமி கோவிலுக்கு ஐந்து விற்கிடை தூரத்திலே முன்னர்க்கூறிய தக்கதீர்த்தத்திற்குக் கிழக்கிலே தாமிரபர்ணி என்ற வித்தியாதர தீர்த்தமிருக்கின்றது. அதன் இருடி கபிலர். அதிதெய்வம் முருகவேள். காவற் கடவுள் அக்கினிதேவன். விருட்சம் வில்வம். இவர்களை வணங்கி இதில் ஸ்நானஞ்செய்து வில்வவிருட்சத்தின் கீழிருந்து பிராமணர்களுக்குக் கலவைச் சந்தனமும் அன்றலர்ந்த புட்பங்களுந் தரித்து, பருத்திப் பஞ்சு எள்ளு, சர்க்கரை பச்சரிசியென்னும் இவைகளைத் தட்சிணையோடு தானஞ் செய்வோர் சகல மங்களங்களும் நிறைந்து கல்வி, செல்வம் ஆகிய இருவகைப் பொருள்களையும் அடைவார்கள்.

தட்சிணாயனத்திலே ஆடிமாதத்திலே ஸ்நானஞ் செய்யின் கோடிபாதகங்கள் நீங்கிப் பிறவிக் கடலிற் கிடக்கும் தமது நூற்றொரு குலத்தவரை முத்திக்கரையிலேற்றி, தாமும் அவர்களோடு சிறப்புடன் வாழ்வார்கள்.

வைகாசி மாதத்திலே, விசாக நட்சத்திரத்திலே, ஸ்நானஞ் செய்வோர் பிறவிதோறும் தொடர்ந்துவரும் வினைகளின் நீங்கி உலகத்தை ஆளும் நலமிக்க புதல்வர்களைப் பெறுவார்கள்.

கன்னிப்பெண்கள் ஸ்நானஞ்செய்தால் அறிவும் அழகும் வாய்ந்த கணவர்களை விவாகஞ்செய்து கொள்ளுவார்கள்.

வித்தியாதரதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

# உ0. சுதரிசனன்சாப நீங்குசருக்கம்.

—❀—

சூதமுனிவர், ஈண்டு வித்தியாதர தீர்த்த மகிமையைப் பின்னுமொரு சரித்திரவாயிலாகக் கூறுகின்றார்.

தேவலமுனிவர் கங்கா ஸ்நானஞ் செய்யச் சென்ற போது அங்குச் சுதரிசனன் என்னும் வித்தியாதரன் நங்கையர் திலகமாய்ப் பொங்கெழின்மிக்க அமுத குணத்தாள் குமுதவதியென்னும் தன் மனைவியுடன் சலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். முனிவர் அதுகண்டு மிக அருவருத்துத் தணியாத கோபத்தராய் இத்துற் செய்கை செய்த நீவிர் புலியாய்ப் போகக் கடவீரென்று சாபமிட்டார். அவ்வாறு கூறக்கேட்ட வித்தியாதரன் ஐய! தேவரீர் அடியேங்களுக்கிட்ட சாபநீங்குங் காலத்தைத் தெரிவித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தனன்.

அதுகேட்ட முனிவர் வித்தியாதர! நீ துன்பம் நீங்கி இன்புறுங் காலத்தை வினவினை. அதனைப் பின்னர்க் கூறுவேன். இப்போது என் பெருந்துன்பத்தை எடுத்துரைப்பேன் கேள். தம்பதி சையோகத்தைப் பார்த்தவன் செய்த புண்ணியமெல்லாம் அழிந்துபோம். கொலைப்பாவமே செய்கின்ற புலி, காடியாய்ப் பிறப்பன். ஒரு பெண் ஏகாந்த ஸ்தலதில் தன் கணவனோடு உள்ளப்புணர்ச்சிசெய்து மகிழ்ந்திருத்தலைப் பார்ப்பவனும், அதற்கிடையூறு செய்தவனும், நீர்ப்புழுவாய்ப்பிறப்பன். நோயுற்றுவருந்துவன். அதுநிற்க,

நீயும் நின்மனைவியும் ஆடையின்றி நின்றதை யான் பார்த்த பாவத்தாலே நான்செய்த தவங்களெல்லாம் இப்பொழுதே நாசமாயின. இன்னும் நந்திக்குஞ் சிவனுக்குங் குறுக்கே போதலும், குருவுக்குஞ் சீடனுக்குங் குறுக்கே

போதலும் இவைபோன்ற பிறவும் செய்த புண்ணியங்களைச் சிதைக்கும் பாவங்களாம்; என்றெடுத்துக் கூறியதன்பின் நீ இவளுடன் வைத்தியநாததலத்தில் தாமிரபர்ணிநதிதீர்த்தத் தையடையுங் காலத்தில் அங்கிருக்குங் கங்காதரனென்னும் பூசுரனைப் பசியாற் கொன்றுண்ணக்கருதிப் பிடிக்கப்போ வாய்; அவன் அத்தீர்த்தநீரை நும்மீது தெளிப்பான். அப் போது இருவீரும் புலி வடிவத்தைவிட்டு விஞ்சையர் வடி வங்கொண்டு வித்தியாதர வுலகத்திற்செல்லுவீரென்றுகூறித் தன்னுடைய பாவத்தை நீக்குதற்கு முனிவர் வைத்தியநாத தலத்தை அடைந்தனர்.

அவர் சென்றபின் சுதரிசனன் மனைவி குமுதவதி யோடு ஆணும் பெண்ணுமாய புலியுருவடைந்து தண்டக வனத்திற் பற்பலகாலஞ் சஞ்சரித்துப் பின்னர் வைத்திய நாத தலத்தையடைந்து தாமிரபர்ணி தீர்த்தக்கரையில் நித் திய கருமமாகிய சந்தியாவந்தனஞ் செய்துகொண்டிருந்த கங்காதரனென்னும் பூசுரனை அடித்துக்கொன்று தின்னுதற் குப் பிடிக்கச்சென்றான். அதனைக்கண்ட அப்பூசுரன் அத் தீர்த்தநீரைத் தெளித்தான். அது உடலிற்பட்ட மாத்தி ரத்தே புலிப் பிறப்பிற்செய்த பாவங்களும் புலி வடிவங்க ளும் நீங்கி மகிழ்ச்சியுற்றுப் பூசுரன் பொற்பதம்பணிந்து விடைபெற்றுக்கொண்டு தேவவிமானத்திலேறித் தனது வித்தியாதர வுலகத்தை அடைந்தான்.

வித்தியாதரன் புலிவடிவமும் அவன்செய்த பாவங்க ளும் தாமிரபர்ணி தீர்த்தத்தாற் றீர்ந்தமையால் அது வித் தியாதர தீர்த்தமென்னுங் காரணப்பெயர் பெற்றது. இத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் இம்மையிலே புத்திரப்பே ற்றையடைந்து முடிவிலே முத்தியையும் அடைவார்கள்.

சுதரிசனன்சாபநீங்குசருக்கமுற்றிற்று.

# உக. வில்வதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், வித்தியாதா தீர்த்த மான்மியங் கூறக் கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணம் வில்வதீர்த்த மான்மியத்தை ஈண்டுக் கூறுகின்றார்.

வைத்தியநாத சுவாமி திருக்கோயிலுக்கு வடக்கில் மூன்று விற்கிடை தூரத்தில் வில்வதீர்த்தமென்னும்பெயர் பெற்ற விசேடதீர்த்தம் உள்ளது. அதற்கு இருடி விசுவ தேவர். அதிதெய்வம் இந்திரன். காவற்கடவுள் தண்ட பாணி. விருக்கம் வில்வமரம். இவர்களை முன்னர் நமஸ்க ரித்து வில்வ நிழலில் இருந்து அன்னதானம், கோதானம், என்பவற்றை விருப்பத்துடன் செய்யின் ஒருதானத்திற்கு அளவில்லாத கோடி தான பலனுண்டாகும்.

விசுவதேவர்கள் வில்வதீர்த்தத்தை யுண்டாக்கி அதன் எட்டுத்திக்குகளிலும் வில்வமரம் வைத்து அத்தீர்த்தத்தால் அபிடேகஞ்செய்து வில்வ பத்திரத்தால் அருச்சனைசெய்து அனேக காலம் வழிபட்டார்கள். வில்வமரம் சூழ்ந்திருக் கின்ற காரணத்தால் அத்தீர்த்தம் வில்வ தீர்த்தமென்று சொல்லப்படும். அத்தீர்த்தத்தை வலஞ்செய்வோர் தேவ விமானமேறித் திருக்கைலாச மலையை அடைவார்கள்.

விசுவதேவர்கள் நியமமாகநாடோறும் வில்வத்தினாலே வைத்தியநாத சுவாமிக்கு அன்புடன் பூசை பண்ணிக் கொண்டு, உச்சிப்போதில் வில்வ தீர்த்தக் கரையில் வந்தி ருந்து முத்தி சித்திக்கும்படி அரிய தவத்தைச் செய்தார் கள். சிலகாலம் சென்றபின் மகாதேவராகிய சிவபெருமான் வெளிப்பட்டு அவர் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளி

ஞர். அவ்வரங்களுள் சிரார்த்தங்களில் விசுவ தேவஸ்தானத்தில் வரிக்கப்படுந் தேவர்களாகப் பெற்றவரமும் விசேடமாகக் கூறப்படுகின்றது. வரம் பெற்ற அவ்விசுவதேவர் அத்தீர்த்தத்திற்குச் சிறந்த வரங்களைக் கொடுத்துவிட்டு சாயுச்சிய முத்தியடைந்தார்கள்.

வில்வதீர்த்தத்திலே வில்வநிழல் படுமிடத்திலே நின்று ஸ்நானஞ்செய்வோர் வினைநீங்கிக் கங்கை பிரயாகையில் ஸ்நானஞ்செய்த பலனையுமடைவர். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து முக்கிளை வில்வத்தால் சிவபெருமானை நாடோறும் பூசை செய்தவர் வினைச்சம்பந்தம் நீங்கி நிருமலராவர்.

வில்வதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# உஉ. கௌதமதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், வில்வ தீர்த்த மான்மியம் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் கௌதம தீர்த்தமான்மியங் கூறுகின்றார்.

இராம தீர்த்தத்திற்குப் பக்கத்திலே தென்கீழ்த்திசையிலே ஐந்து விற்கிடை தூரத்திலே பாவக்காட்டிற்கு அதிற்றோன்றிய காட்டாக்கினிபோன்ற கௌதம தீர்த்தமிருக்கின்றது. அதற்கு இருடி கௌதமர். அதிதெய்வம் வாயுபகவான். காவற்கடவுள் சந்திரன். விருட்சம் மாமரம்.

இவர்களை வணங்கிக்கொண்டு மாமர விருட்சத்தின் கீழிருந்து, திலதானஞ் செய்வோர் பூமியிலே மிக்க சுகபோகங்களை யநுபவித்து முடிவிலே பரமுத்தி யடைவார்கள்.

கைகண்ட பலனுயுள்ள கௌதம தீர்த்தக் கரையிலிருந்து குதிரை, யானை, பொற்குவியல் என்னுமிவற்றைத் தான பாத்திரயோக்கியரான வைதிகப் பிராமணருக்குத் தானஞ்செய்வோர் தாம் முன்னொரு காலத்தும் அனுபவித்தறியாத பதமுத்திச் சுகபோகங்களையும் பரமுத்திச் சிவபோகத்தையு மடைவார்கள்.

வைகாசி மாதத்திலே பூர்வ பக்கத்திலே பஞ்சமி திதியிலே அமுதம்போலும் கௌதம தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்வோர் கட்குடித்தல் முதலாகிய பாவங்களெல்லாம் நீங்கிப் பூலோகத்தை ஆள்வார்கள்.

கௌதமதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

## உரு. கபிலதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், கௌதம தீர்த்தமான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணங் கபிலதீர்த்தமான்மியங் கூறுகின்றார்.

தையனாயகி சமேத வைத்தியநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சமீபத்திலே நிருதிதிக்கிலே அரைக் குரோச தூரத்திலே கபில தீர்த்த மென்னும் பெயரினையுடைய தேவாமிர்தம் போலுந் திவ்விய தீர்த்தமொன்றுண்டு. அதற்கிருடி கபிலர். அதிதெய்வம் சங்கரர். காவற்கடவுள் சண்டேசர். விருக்கம் நெல்லிமரம். அவர்களை வணங்கிக்கொண்டு "கபிலாயநம" என்னும் அம்முனிவர் மந்திரத்தைச் செபஞ் செய்வோர், பெருங் கொடும் பாவங்களெல்லாம் நீங்கிச் சிவபுண்ணியத்தையும் சிவபோகத்தையு மடைவார்கள்.

பங்குனி மாதத்திலே கிருட்டிண பக்கத்திலே அட்டமி திதியிலே அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து பசுக்களையும் நல்ல வாசனாதிரவியங்களையும் வேதபாராயண வேதியர்க்குத் தானஞ் செய்தால், ஒரு தானத்திற்கு அனந்ததான பலனுண்டாகும் ஒருவருக்கு ஒரு பொருளைத் தருவேனென்று வாக்குத் தத்தஞ்செய்து பின்னர்க் கொடாதொழிந்தோன் நாயாய்ப் பிறக்கும் பாவமும் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் நீங்கும்.

கபில முனிவர் கண்ணுதற்பிரானைத் தோத்திரஞ் செய்து கபில தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்வோர் விரும்பியபொருளை விரும்பிய வண்ணமே கொடுக்கும் வரத்தினைப் பெற்றனர். ஆதலால் "அறிவறிந்த மக்கட்பே"றில்லாதவர் அத்தீர்த்தத்திலே பங்குனி மாதத்து அபரபக்க அட்டமி திதியிலே உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்யில் அத்தகைய புதல்வர்களைப் பெறுவார்கள்.

கபிலதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# உச. சோமதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், கபில தீர்த்த மான்மியங்கூறக் கேட்ட நைமிச முனிவர் விரும்பிய வண்ணம் சோமதீர்த்த மான்மியங் கூறுகின்றார்.

வைத்தியநாதர் திருக்கோயிலுக்கு வாயுதிக்கிலே இராமதீர்த்தத்தின் வடக்கில் ஐந்து விற்கிடைதூரத்திலே உள்ளது சோமதீர்த்தம். அதற்கு இருடி பரத்துவாசர். அதிதெய்வம் சந்திரன். காவற்கடவுள் இரிடமுனி. விருட்சம் மந்தாரம்.

இவர்களை வணங்கி இதில் ஸ்நானஞ்செய்து மந்தாரமர நிழலிலிருந்து சற்பிராமணருக்குப் பசு, பால், தயிர், அன்னம், கன்னிகை இவைகளைத் தானஞ்செய்வோர் பாவமொழிந்து சோமயாகஞ்செய்த பலன் பெறுவர். முற்காலத்திலே சந்திரன் சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, குருமனைவியைச்சேர்ந்த பாவம் நீங்கிப்பின்பு சோமதீர்த்தக்கரையிலிருந்து மூன்று வருடம் அருந்தவம் புரிந்தபின், வைத்தியநாத சுவாமி வெளிப்பட்டு அவன் விரும்பிய வரங்களைக்கொடுக்கப்பெற்று, அப்பாவந்தீர்ந்து பேரானந்தமடைந்து, வைத்தியநாத சுவாமிக்கு வசந்தோற்சவம் நடத்திவைத்து, சோமதீர்த்தத்திற்கு நல்ல வரமளித்துத் தனது மண்டலத்தையடைந்தான். அதுமுதல் இது சோமதீர்த்தமெனப்பட்டது.

இதில் வைகாசி மாதத்திலே சுக்கிலபக்கத்துச் சஷ்டிதிதியிலும் விசாகநட்சத்திரத்திலேவரும் பௌர்ணமையிலும் ஸ்நானஞ் செய்தால் பிதாமாதாக்களைக் கொன்ற பாவமும், மற்றெல்லாப் பாவங்களும் தீர்ந்து சுத்தராகிப் பிரமா, இந்திரன், விட்டுணு முதலியோர் பதங்களை முறையே அடைந்து ஆங்காங்குள்ள போகங்களை யனுபவித்து முடிவில் மோட்சத்தையு மடைவார்கள்.

சோமதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

## உரு. பராசரதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், சோமதீர்த்த மான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுப் பராசர தீர்த்த மான்மியம் கூறுகின்றார்.

திருக்கோயிலுக்குக் கீழ்த்திசையிலே அங்கசந்தான தீர்த்தத்திற்குச் சமீபமாகத் தென்றிசையிலே பராசரதீர்த்த முள்ளது. பராசரர் முற்காலத்திலே மங்களம் பொருந்திய ஞானதீர்த்தமாக உண்டாக்கினமையினலே அவர் நாமத்தால் பராசரதீர்த்தமென்னுங் காரணப்பெயர்பெற்றது. அதற்கு இருடி பாராசரமுனிவர். அதிதெய்வம் சண்டேசுரர். காவற்கடவுள் வருணபகவான். விருட்சம் மாமரம். இவர்களை வணங்கி மாமர நிழலிலேயிருந்து அந்தணர்க்கு வெள்ளைப் பசுவும், உளுந்தும், எள்ளுந் தானஞ்செய்தால் அசுவமேதயாக பலனுண்டாகும்.

இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி தரித்து அதன் கரையிலிருந்து "சரவணபவாயநம" என்னும் கந்தசுவாமி மந்திரத்தை அன்போடு செபஞ்செய்தால் ஒரு செபத்திற்குக் கோடி செபத்தின் பலனுண்டாகும். அரசர் திரவியம், குரவர் திரவியங்களைத்திருடுவோரும், வேதத்தை விற்பவரும், இன்னோரன்ன பிறபாவங்களைச் செய்வோரும் இதின் மூழ்கினல் அவைகளெல்லாம் நீங்கிச் சுகம்பெறுவர். இத்தீர்த்தத்தை ஒருதரம் நினைப்பவரும் இதில் ஒரு பொழுது ஸ்நானஞ்செய்வோரும் கணப்பொழுதினுள்ளே கோடி பாவங்களை நீங்குவர். நவநிதி முதலிய எல்லாப் பொருள்களையு மடைவர். அட்டமாசித்திகளையும் செய்வர். சிவரூபம் பெறுவர்.

ஐப்பசி மாதத்திலே பூர்வ பக்கத்திலே தசமி திதியிலே இதில் ஸ்நானம் செய்வோர் பதினுயிரம் அசுவமேதயாகஞ் செய்த பலனடைவர். அதுவுமின்றிக் கைலாய மலையையடைந்து யுகமுடிவிலும் விட்டு நீங்காதிருந்து பேரின்பமடைவர்.

பராசரதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

## உசூ. *இராமதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், பராசரதீர்த்த மான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டு இராமதீர்த்த மான்மியங் கூறுகின்றார்.

வைத்தியநாத சுவாமி திருக்கோயிலுக்கு நிருதி திசையிலே மூன்று விற்கிடை தூரத்திலே இராமதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி சுதீட்சண முனிவர். அதிதெய்வம் இராமபிரான். காவற்கடவுள் இலக்குமணர். விருட்சம் வன்னிமரம். அவர்களை வணங்கி வன்னிமரத்தின் கீழிருந்து காராம் பசு, காராடு, குங்குமம், கோரோசனை, தயிர், வெண்ணெய், எள்ளு, பலவகைக்கனியென்னு மிவைகளைப் பிராமணர்களுக்குத் தானஞ் செய்தால் ஒரு தானத்திற்கு நூறு கோடி தானஞ் செய்த பலனுண்டாகும்.

வைத்தியநாத மான்மியத்தைப் புராணிகர்கள் கூறக் கேட்டறிந்த துசீலன் என்னும் பிராமணனுக்கு ஞானசித்தங் கிடைத்தலால் சித்தர் என்னுங் காரணப்பெயரும் அச்சித்தர் அத்தீர்த்த மகிமையை யுணர்ந்து அதன் கரையில் வாசஞ் செய்தமையால் முற்காலத்திலே அத்தீர்த்தத்திற்கு சித்ததீர்த்த மென்னுங் காரணப்பெயரும் உண்டாயிற்று. அந்த அற்புத சித்ததீர்த்தத்திற்கு இராமதீர்த்த மென்னும் பெயர் வந்த வரலாற்றைச்சொல்லுகிறேன்.

அயோத்திமாநகர்க்கரசன் தசாதன் என்பான் செங்கோல் செலுத்தி, மாதமும்மாரி பெய்ய மாநிலமகிழ

---

* இது கடைத்தெருவிநாயகர் கோயிலுக்குச்சமீபத்தில் நிருதி திக்கிலுள்ளது. தற்காலம் தாமரைக்குளமென வழங்குகின்றது.

அரசுபுரிந்து வருங்காலத்திலே புத்திரப் பேறின்மையால் வேதமந்திரத்தினாலே புத்திர காமேஷ்டி யாகஞ்செய்தான். யாகாக்கினியினின்றும் புத்திரோற்பத்திக்கேதுவாகிய பாயசான்னந் தோன்றிற்று. அவன் மனமகிழ்ந்து அதைத்தன் மனைவியராகிய கோசலை, கைகேசி, சுமித்திரை யென்னும் இராசமாதேவியர் மூவர்க்கும் பகிர்ந்து கொடுத்தான். அவர்கள் இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன் என்னும் நான்கு புத்திரர்களைப் பெற்றார்கள். அவருள் விஷ்ணுவின் அவதாரத்தனாய் இளவரசாதற்குரிய இராமனென்பான் தன் தம்பியர் மூவரோடும் அரசர்க்குரிய அஸ்திர சஸ்திர வித்தைகளையும், யானை குதிரை தேர் செலுத்தும் வித்தைகளையும், உலகத்தில் ஒருவரும் ஒப்புபர்வில்லை யென்று சொல்லும்படி கற்றான்.

விசுவாமித்திரர் அவன் வித்தையின் வலிமையைக் கேள்வியுற்றுத் தசரதரிடத்துவந்து, இராமனை வேண்டிப்பெற்று, தம்முடனழைத்துக் கொண்டு சென்று, தண்டகாரணியத்தை யடைந்தார். அவன்விசுவாமித்திர முனிவர் வேள்விக் கிடையூறு செய்த இராக்கதர்களை வென்று, யாகத்தை நிறைவேற்றி, மிதிலையைநோக்கி விசுவாமித்திரரோடு செல்லும் வழியில் கல்லுருவாய்க்கிடந்த அகலிகையின் மீது தனது அடி பட்டமாத்திரத்தே அவள் சாபம்நீங்கித்தன்னுருவடைந்து இல்லிற் செல்ல, அது கண்டு மகிழ்ந்து மிதிலை நகரை யடைந்தான். அங்கே ஏனைய வில்வீரர்களால் எடுத்து வளைக்கப்படாத வில்லை இராமன் எடுத்து வளைத்து முறித்து, சனகன் புதல்வியாகிய சானகியை விவாகஞ்செய்து கொண்டு, அயோத்தியை நோக்கி வரும்பொழுது இடைவழியில் வந்தெதிர்த்த பரசிராமன் வில்லை முறித்து, வெற்றி கொண்டு, அயோத்திமா நகரை யடைந்தான். தசரதமகா

ராசன் மூத்தகுமாரனுகிய இராமனுக்கு முடிதரித்து அவனை இளவரசனுக்க எண்ணும்போது கைகேசி வந்து தசாதமகா ராசனை நோக்கி, நீர் என்னகாரியஞ் செய்ய எண்ணினீர்! அதனை விடுத்து என் குமாரனுகிய பாதனுக்கு முடிசூட்டல் வேண்டுமென்று கூறினுள். அவ்வரசன் அவளுக்குத் தான் முன்னர்க் கொடுத்த வாத்தினுலே மறுக்க முடியாதவனுய்ப் பெருந்துன்ப மடைந்தான். நிகழ்ந்ததையறிந்த இராமன் சீதையும் இலக்குமணனும் தன்னுடன் செல்லச்சென்று தண்டகாரணியத்தை யடைந்தான்.

அங்கு நின்றும் உபயகாவேரியின் நடுவிலுள்ள வைத்தியநாத தலத்தை யடைந்து திருக்கோயிலுக்குப் பக்கத்திலே நிருதி திசையிலேயுள்ள சித்ததீர்த்தத்தைக் கண்டு, அதில் ஸ்நானஞ்செய்து, வினைதீர்த்த வைத்தியநாத சுவாமியினுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு தன்குலத்துப் பிதிரர்களுக்குத் தருப்பணஞ் செய்து மனமகிழ்ந்தான். அக்காரணத்தால் சித்ததீர்த்தமானது இராமதீர்த்தமெனப் பெயர்பெற்றது

இன்னும் இத்தலத்திலே இராமன் செய்த நற்காரியங்கள் சடாயுமான்மியத்திற் கூறப்படும். ஆண்டுக்காண்க இராமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் பிறவித்துன்பம் நீங்கி முத்தியின்ப மடைவார்கள்.

இராமதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

## உஎ. துசீலச்சருக்கம்.

சூதமுனிவர், ஈண்டு இராமதீர்த்த மான்மியத்தைப் பிறிதொரு சரித்திரவாயிலாகவும் நைமிசமுனிவர்களுக்குக் கூறுகின்றார்.

அண்டருலகினுஞ் சிறந்த குண்டின புரத்திலே பிராமண குலத்திலே பிறந்து எல்லா நன்மையு நிறைந்த "எக்கியசீலன்" என்னும் அந்தணனொருவன் இருந்தான். எண்ணரும் புகழ்நிறைந்த அன்னவன் பண்ணிய தவப்பலன் ஓருருவெடுத்தாற்போல நண்ணிய அவன் மனைவிபெயர் புண்ணியவதி; அருந்ததிக் கற்பினளும், சகல குணசம்பன்னியும் உமாதேவியாரிடத்து உழுவலன் புடையவளுமாகிய அவள், சிறு பிராயத்திற்றானே ஒரு புதல்வனைப் பெற்றாள். அவனுக்கு இருமுதுகுரவரும் துசீலனென்று பெயரிட்டுப்பின் சிவலோகமடைந்தார்கள். அவன் அவர்களுக்கு ஈமக்கடன் முதலிய உத்தரக்கிரியைகள் ஒன்றும் செய்திலன். அஃதறிந்த ஊரவர்கள் புண்ணியவதி வயிற்றில் திண்ணிய பாவி வந்து பிறந்தானேயென்று சொல்லியழுதிரங்கினர். துசீலன் காளைப்பருவத்தில் காமநோயால் வருந்தி நெடுங்காலம் பொதுப் பெண்களை விரும்பிச் சேர்வானாயினான். அதனால் இருந்தபொருள் அழிந்துபோகக், கடைகளிற் கடன்பட்டும் வீடுகளில் திருடியும் வேசிகளுக்குக் கொடுத்து இவ்வாறு காலங்கழிப்பானாயினான்,

சிறியாரைத் துணைக்கொண்டு பெரியாரை நிந்திப்பான். செல்வர்கள் வறியார்க்கொன்றீயின் அதனை அவர் அறியாமற்றடுப்பான். அந்தணர்க் கிடுக்கண் சந்ததம் செய்வான்.

இவன் செய்த இப்பாதகங்களெல்லாம் நாளுக்கு நாள் வளர்ந்து முதிர்ந்தபடியால் அவற்றின்பலனாக அவன் குமாகண்ட வலியாலும் பிறநோயாலும் பீடிக்கப்பட்டுத் தேசந்தோறும் காடும் மேடும் கலங்கித் திரிந்து விழுந்து புரண்டு வருந்தி.மெலிந்து வாடிச் சுழன்று முடிவில் பங்குனி மாதத்திலே பௌர்ணிமையோடு கூடிய உத்தர நட்சத்திரத்திலே வைத்தியநாத தலத்திலே வந்து இராம தீர்த்தக்கரையை

யடைந்து குமாகண்ட வலியினால் கீழே வீழ்ந்தான். அத் தீர்த்தம் சரீரத்திற் படுதலுங் குமாகண்டவலியும் பிறவும் நீங்கித் தன்னுடம்பு தேவசரீரத்தினு மிகவழகாயிருப்பக் கண்டு அதிசயித்து அத்தீர்த்த மகிமையைப் புராணிகரிடத் துக் கேட்டறிந்து இன்பமுற்றான். இராமதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வோர் பதினாயிரம் யாகஞ் செய்த பலனைப் பெற்று முடிவிலே சிவலோகத்தை யடைந்து அங்குள்ள சுகபோகங்களை யநுபவித்துக் கொண்டு நிலையாக வாழ்ந்தி ருப்பார்கள்.

துசீலச்சருக்கமுற்றிற்று.

---

## உஅ. *ஆதிகாவேரிதீர்த்தச் சருக்கம்.

சூதமுனிவர், இராமதீர்த்த மான்மியத்தைக் கூறக் கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டு ஆதிகா வேரி தீர்த்தமான்மியங் கூறுகின்றார்.

வைத்தியநாத சுவாமி எழுந்தருளியிருக்குந் திருக்கோ யிலுக்கு மேற்கே இரண்டு விற்கிடை தூரத்திலே ஆதிகா வேரி தீர்த்தமென்ற கந்தருவ தீர்த்தமுள்ளது. அதன் இருடி சுக்கிரன். அதிதெய்வம் விஷ்ணு. காவற்கடவுள் நிருதி. விருக்கம் சண்பகமரம். இவர்களை வணங்கி, சண்பகமரத்தின் கீழிருந்து சந்தனம், இரத்தினம், குங்குமம் என்னுமிவற் றைத் தானஞ்செய்தால் ஒருதானம் கோடிதானப் பலனைக் கொடுக்கும் . .

---

* இது மேற்குச் சந்நிதித்தெருவுக்கு மேற்கே உள்ளது.

சித்திரை மாதத்திலே சுக்கில பக்கத்திலே திருதியை கூடிய சுக்கிரவாரத்திலே விதிப்படி அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வோர் இம்மையிலே விரும்பிய சுகபோகங்களெல்லாவற்றையும் அனுபவித்து முடிவிலே சிவபெருமானுடைய திருவடி நீழலையடைவார்கள். ஐப்பசி மாதக் கடைசியில் மூன்றுதினம் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் கங்கையில் பதினாயிரந்தரம் ஸ்நானஞ் செய்த பலனடைவார்கள். அதுவன்றி, பின்பு கைலாசமலையை அடைந்து வாழ்வார்கள்.

அகஸ்தியமுனிவர் வைத்தியநாத தலத்தையடைந்து வினைதீர்த்த தம்பிரானைத் தரிசிக்கப் போம்பொழுது கையில் கொண்டுவந்த கமண்டலத்தை வித்தியாதர தீர்த்தத்தில் அமிழ்த்தி வைத்தார். தீர்த்தநாயகியாகிய காவேரி அதில் ஒருதினம் வாசம் பண்ணினள். மற்றைநாள் அகஸ்தியமுனிவர் அத்தீர்த்தத்தில் பதிந்திருந்த கமண்டலத்தையெடுத்துக்கொண்டு சையகிரிக்குப் போயினர். அக்காரணத்தால் வித்தியாதர தீர்த்தத்தைப் பெரியோர்கள் ஆதிகாவேரி தீர்த்தமென்று கூறுவார்கள்.

ஆதிகாவேரிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# உகூ. கந்தருவர்சாபநீங்குசருக்கம்.

சூதமுனிவர், ஈண்டு நைமிச முனிவர்களுக்கு ஆதிகாவேரி மான்மியத்தை மற்றுமொரு சரித்திரவாயிலாகக் கூறுகின்றார்.

அகத்தியமுனிவர் சையகிரியிலே நெடுங்காலமாகச்

சிவபெருமானை அன்போடு பூசைசெய்துகொண்டிருந்தார். அப்பொழுது அங்கே ஐந்து கந்தருவர் தங்கள் மனைவியர்களுடன்வந்தார்கள். அவர் அகஸ்திய முனிவர்மிருத்திகை இலிங்கபூசை செய்வதைப்பார்த்து, நீர் மண்ணில் இலிங்கம் பிடித்துவைத்துப் பூசித்தாலும் அது சும்மாவிருக்குமே யன்றி அதில் தெய்வமிருக்குமோ? நீர் நிததியமும் வீணே பட்டினிகிடந்து பூசைசெய்தலாலன்றோ நாளுக்குநாள் உடல் குறுகி குறுமுனியென்னும் பெயரைப் பெற்றுக் கொண்டீர் என்று பரிகசித்துக்கூறிச் சித்து வீணேபூசை செய்து வீண்பொழுது போக்குகின்றீர் என்று அவர்கள் சிவதூஷணஞ்செய்ய அதுகண்ட முனிவர்பெருமான் கண் சிவந்து கோபாக்கினிசிதறத் தனக்கு முன்னேநின்ற கந்தருவர்களைப்பார்த்து அவருட்சுந்தரன் ஒற்றைக்கண்ணனாகவும், சித்திரவருணன் செவிடனாகவும் சுவர்ச்சனன் முடவனாகவும், சித்திராதன் கருநிறமாகவுங் கடவது என்று சாபங்கூறினர்.

அதுகேட்டபொழுதே அவர்களேங்கி "அழகினைப் பெற்றதன்றி யறிவினைப்பெறாத நாங்கள் இச்சாபம் நீங்க உம்முடைய அருளல்லாது வேறுவழி காணோம் ஆதலால் அதற்குரிய வழியைச் சொல்லியருளவேண்டு"மென்று அவருடைய பாதத்தை வணங்கிக் கேட்டார்கள். கேட்டபொழுதே இரங்கிய உள்ளத்தராகிச் சிவனது திருவருளினலே முன்னாள் யான் தென்றிசை யாத்திரை செய்தபோது வைத்தியநாத தலத்திலே ஒருதினம் விருப்பத்தோடு வசித்தேன். அந்தத்தலத்திற்கு மேற்றிசையிலே ஆதிகாவேரி தீர்த்தம் விளங்கும். நீவிர் இப்பொழுதேசென்று அதில் ஸ்நானஞ்செய்யில் இச்சாபம் நீங்கி அழகிய திவ்விய தேகத்தைப்பெறுவீர் என்றருளிச்செய்தார் அவர்கள் அகஸ்திய முனிவரைத்துதித்து, வைத்தியநாத தலத்தையடை

ந்து, ஆதிகாவேரியிலே ஸ்நானஞ்செய்து, திவ்விய தேகத்தைப்பெற்று, வைத்தியநாத சுவாமியினுடைய திருவடிகளைப்பணிந்து, கந்தருவலோகத்தை யடைந்து இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்து முடிவிலே மேலுலகத்திற் சென்று பேரின்பத்தை யடைந்தார்கள். அன்றுமுதல் அத்தீர்த்தத்தைக் கந்தருவ தீர்த்தமென்று கூறுவார்கள்.

குருடர், செவிடர், மூடவர் முதலாயினோர் அத்தீர்த்தத்தில் ஒருபொழுது ஸ்நானஞ்செய்தால் குருடு முதலிய குற்றங்களினின்றும் நீங்கித் திவ்விய தேகத்தை யடைந்து அரசர் இணைபிரியாத நண்புசெய்யப் பெறுவார்கள். அஃதன்றி நல்ல செல்வத்தையும் சுகத்தையும் பெறுவார்கள். கல்வியிற் சிறந்த புத்திரனையும் பெறுவார்கள். முடிவிற் கைலாச மலையை யடைந்து அங்கேயுள்ள இன்பத்தையும் பெறுவார்கள்.

கந்தருவர்சாபநீங்குசருக்கமுற்றிற்று.

---

# ௩௦. *மிருதசஞ்சீவனதீர்த்தச் சருக்கம்.

சூதமுனிவர், இராமதீர்த்த மான்மியத்தைச் சரித்திரவாயிலாகவும் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டு மிருதசஞ்சீவன தீர்த்த மான்மியங் கூறுகின்றார்.

---

* இது வடக்கு வீதியில் ஆவுடையம்மன் சந்நிதிக்கெதிரில் வடக்கே போகும் ரோட்டுக்குச்சமீபத்தில் மருவத்தூரில் உள்ளது.

வைத்தியநாத சுவாமி திருக்கோயிலுக்கு வடக்குத்திக்கிலே ஒரு குரோச தூரத்திலே மிருதசஞ்சீவன தீர்த்தமுள்ளது. அது இலக்குமிதீர்த்த மெனவும் அமிர்த தீர்த்தமெனவுங் கூறப்படும். அதற்கு இருடி காசிப முனிவர். அதிதெய்வம் துர்க்கை. காவற்கடவுள் வீரபத்திரர். விருக்கம் மருத மரம்.

அவர்களை வணங்கி மிருதசஞ்சீவன தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அந்த விருக்க நிழலிலேயிருந்து தாமிரகும்பம், பவளம், கன்னிகை இவற்றைத்தானஞ் செய்தல் உத்தமம். கார்த்திகை மாதத்திலே பௌர்ணிமையில் ஸ்நானஞ் செய்தால் சந்ததிவிருத்தியும் தனப்பெருக்கமும் அடைந்து பெருஞ்செல்வராவர்.

அங்கே வீற்றிருக்கும் ஸ்ரீ அபின்ன பத்மநாயகி சமேத ஆதிமத்தியார்ச்சுன நாதரை வணங்கித் துதிப்போர் அரசராய் உலகாண்டு பெருஞ்சுகமடைவர். மார்கழி மாதத்திலே பூர்வபக்கத்துச்சதுர்த்தசியில் ஸ்நானஞ்செய்தால்நோய்கள் நீங்கும். ஆவணி மாதத்துச் சதுர்த்தசியில் ஸ்நானஞ் செய்தால் விஷங்களெல்லா மெளிதின்நீங்கும்.

விநதையின் சிரேட்ட புத்திரனாகிய கருடன் தன் தாய் மாற்றாளாகிய கத்துருவுக்கு அடிமையாயிருத்தலை நீக்குதற்காகக் கொண்டுவந்த அமிர்தகலசத்தை அததீர்த்தத்துள் வைத்துவிட்டு, பக்கத்திலுள்ள வைத்தியநாத தலத்தை யடைந்து பங்குனி மாதத்திலே மங்கள வாரத்திலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து கற்பக விநாயகர், வைத்தியநாதர், வாலாம்பிகையாகிய தையனாயகி முத்துக்குமாரர் இவர்களை முறையே தரிசித்துப் பின் பரிவார தேவர்களைத் தரிசித்து விபூதி குண்டத்தையும் வலம்வந்து வணங்கி முடிவில் சண்டேசுர தரிசனமுஞ்செய்து மீண்டு

வந்து அமிர்தகலசத்தை எடுத்துக்கொண்டு அடிமையால் வந்த பயந்தீர்க்கவேண்டி வேகமாகச் சென்றான். அமுத கலசம் இரண்டு முகூர்த்தகாலம் அதிற்றங்கியிருந்த காரணத்தால் அது அமிர்ததீர்த்தமெனவும் பெயர்பெற்றது.

இலக்குமி உண்டாக்கியதனால் இலக்குமி தீர்த்தமெனவும் பெயர்பெற்ற மிருதசஞ்சீவன தீர்த்தத்தில் காலங்கருதாது ஸ்நானஞ்செய்யினும் பழியும் பாவமும் இவற்றைச் செய்வாரோடு சேரும் பாவமும், பிறபாவமும் நீங்கும். நற்குணமும் நல்லொழுக்கமுமுள்ள குலத்திற்பிறந்த மனைவியோடுகூடி வாழ்வார்கள். முடிவிற் சிவலோகமடைந்து பேரின்பம் பெற்றிருப்பார்கள்.

இறந்த பிராமணப்பிள்ளையின் உடம்பு அத்தீர்த்தநீர் பட்டபொழுதே உயிர்பெற் றெழுந்தமையால் அதற்கு மிருதசஞ்சீவனமென்று பெயர்.

மிருதசஞ்சீவன தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# நுக. சனர்த்தனச்சருக்கம்.

சூதமுனிவர், ஈண்டு மிருத சஞ்சீவன தீர்த்த மான்மியத்தை நைமிசமுனிவர்களுக்குப் பின்னுமொரு சரித்திர வாயிலாகக் கூறுகின்றார்.

வில்வவனமென்னு மூரிலே வேதங்களை யுணர்ந்தவனும் காசிபகோத்திரத்திற் பிறந்தவனுமாகியசனர்த்தனனென்னு மொரு பிராமணனிருந்தான். அவனுக்கு, மிகுந்த கிழப்

பருவத்திலே ஒரு புத்திரன் பிறந்தான். அப்பிள்ளை மேல் அவனுக்குள்ள அன்பும் உருக்கமும் இரக்கமும் இவ்வளவென்று அளவிட முடியாது. புத்திரனழகைக்கண்டு தந்தை சுந்தரனென்று பெயரிட்டு வேதங்களையு மோதுவித்தான். அவன் வளர்ந்து காளைப்பருவ மடைந்தபின், தந்தையின் நித்தியாகுதிக்குத் தருப்பையும் சமித்தும் எடுத்துக் கொண்டு வருதற்கு வளங்குலவும் அந்நகர் வேதியர் இளங் குமரர்களோடு வீட்டினின்று காட்டுக்குப் போயினான்.

அங்கே சமித்தொடித்தற்குப் பலா மரத்திலேறும் பொழுது, அம்மரப்பொந்திலிருந்து ஒருபாம்பு படமெடுத்துக்கொண்டெழுந்து அவனைக் கடிக்க, விடந்தலைக்கொண்டு பூமியில் வீழ்ந்து இறந்தான். அவனுடன் வந்த சிறுவர்களதைப் பார்த்துப் பதைபதைத்துக்கொண்டு விரைந்தோடி யூரையடைந்து நிகழ்ந்ததை அவன் பிதாவுக்குத் தெரிவித்துவிட்டு தங்கள் இல்லங்களுக்குப் போயினர்.

சனார்த்தனன் அதுகேட்டு வாய்புலர்ந்து வருந்தி மனைவியோடு காட்டிற்சென்று, இறந்து கிடந்த புதல்வனைக் கண்டு, கண்கள் சோகபாஷ்பஞ்சொரியத் துன்பசாகரத்தில் அமிழ்ந்தினான். பின் சிறிது தேறிச் சிவபெருமான் திருவடியைத் தியானித்து, அத் தியான பலத்தினால் சுந்தரன் முற்பிறப்பில் வைசியனாய்ப் பிறந்து பசுவின் கண்களை முள்ளினாற் குத்தி வருத்திக் கொன்றான். அப்பாவம் பாம்பின் விடமாக உருக்கொண்டு இப்பிறப்பிலிவனைக் கடித்தலால் இறந்தானென்றறிந்து, பசுக் கொலைப் பாவம் வைத்தியநாத தலத்திற் சென்றால் தீருமென்று நிச்சயமாக வுணர்ந்து, வில்வ வனத்துக்குச் சமீபமாக நிருதி திக்கில் மூன்று குரோச தூரத்திலும் வைத்தியநாத சுவாமி திருக்கோயி

லுக்கு ஒரு குரோச தூரத்திலுமிருக்கின்ற மிருதசஞ்சீவன தீர்த்தத்தில் சரீர சுத்தியின் பொருட்டு ஸ்நானஞ் செய்ய விரும்பி இறந்த புதல்வனை யெடுத்துக் கொண்டு சிறந்த மனைவி பின்வரச்சென்று அத்தீர்த்தத்தைக்கண்டு ஸ்நானஞ் செய்து புதல்வனுடைய உடம்பையும் அதிற்றோய்த்தான். அத்தீர்த்தம்பட்டவப்பொழுதே நித்திரை செய்தெழுகின்ற வனைப்போல் அவன் உயிர் பெற்றெழுந்தான். அவ்வற்புதத்தைக்கண்ட மறையவனும் மனைவியும் முகமலர்ந்து மிக மகிழ்ந்து உடம்பு பூரித்தார்கள்.

பின்பு சனுர்த்தனன் ஆதி மத்தியார்ச்சுனேசுரருக்கு அபிடேகஞ்செய்து, குவளைமலர் சாத்திப் பூசித்து, அவர் திருவடிகளைவணங்கி விடைபெற்று வைத்தியநாத தலத்தை யடைந்து, மூவரும் சித்தாமிர்த தீர்த்தத்தை மும்முறை வலஞ்செய்து, ஸ்நானம் பண்ணி, வைத்தியநாத சுவாமியை யும் தையனுயகி யம்மையையும் மூன்று தரம்வலம்வந்து, அவர் திருவடிகளை நமஸ்கரித்துப் பின்பு அவரைச் சூழ்ந்திருக்கின்ற மற்றைத் தேவர்களையும் வணங்கிக் கொண்டு, விடைபெற்றுச்சென்று, தன்னூராகிய வில்வ வனத்தை யடைந்து வாழ்ந்திருந்தான்.

சனுர்த்தனச்சருக்கமுற்றிற்று.

---

## ௩௨. சூலதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், மிருதசஞ்சீவனதீர்த்த மான்மியத்தைப் பிறிதொரு சரித்திரவாயிலாகவுங் கூறக்கேட்ட நைமிசமுனி

வர் விரும்பியவண்ணம் ஈண்டுச் சூலதீர்த்த மான்மியங் கூறுகின்றார்.

கற்பந்தோறும் அழியாது நல்வளஞ் சேர்ந்து விளங்கும் வைத்தியநாத சுவாமிகோயிலுக்கு அக்கினி திக்கிலே வெள்ளெருக்கு வனத்திலே ஏழுலகங்களிலுமுள்ள தீர்த்தங்களிலும் பார்க்க நன்மைமிக்க சூலதீர்த்தம் விளங்கும். அதற்கு இருடி சுக்கிரன். அதிதெய்வம் வைத்தியநாத சுவாமி. காவற்கடவுள் கணபதி. விருக்கம் மகிழமரம்.

மார்கழி மாதத்திலே சத்தமிதிதியோடு கூடிய விதிபாதயோக தினத்திலே அதில் ஸ்நானஞ்செய்து, இருடி முதலாயினோரை வணங்கி, மகிழமர நிழலிலிருந்து, உருத்திராக்கம் விபூதி சிவக்குறிபொருந்திய சாளக்கிராமம் என்னும் இவற்றைத் தானஞ் செய்தால் மிகவிசேட பலனுண்டாகும். சகல பாவங்களும் நீங்கும். அத்தீர்த்தத்தை நினைப்பவருக்கும் பாவநீங்கும்.

தேவர்கள் தாரகாசுரனோடு நெருங்கிப் போர் செய்து பலர் யுத்தகளத்திலே மூர்ச்சையடைந்தனர், சிலர் இறந்தார்கள். வைத்தியநாத சுவாமி அவர்களைப் பிழைப்பிக்கத் திருவுளங்கொண்டு தமது சூலப்படையால் உண்டாக்கிய காரணத்தால் அது சூலதீர்த்தமென்று சொல்லப்பட்டது.

அதில் ஸ்நானஞ் செய்தால் நீங்காத சூலைநோயும் நீங்கும். கெடாத வினைகளும் கெடும். விரும்பிய பொருள்களெல்லாம் சேரும். முத்தி சித்திக்கும்.

சூலதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# ௩௩. சேடதீர்த்தச்சருக்கம்.

சூதமுனிவர், சூலதீர்த்தமான்மியங்கூறக்கேட்ட நைமி சமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுச் சேடதீர்த்தமான்மி யங் கூறுகின்றார்.

சூலதீர்த்தத்திற்குப் பக்கத்திலே, ஒருவிற்கிடை தூரத் திலே, வாயுதிசையிலே, சேடதீர்த்தம் இருக்கின்றது அதற் கிருடி மார்க்கண்டேய முனிவர். அதிதெய்வம் ஆதிசேடர். காவற்கடவுள் புதன். விருக்கம் கடப்ப மரம். அத்தீர்த் தத்தில் ஸ்நானம் பண்ணி அதன் கரையிலிருந்து கட்டித் தயிர், புத்துருக்கு நெய், நென்மா, சருக்கரை, தாம்பூலம், மெல்லியநூலாற்செய்த வஸ்திரம், கம்பலம் என்னுமிவற்றை உண்மைப்பிராமணருக்குத் தானஞ் செய்வோர் பசியால் வருந்தாது பூமியை அரசாண்டு வாழ்வார்கள்.

அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அன்போடு வெண் ணிற விபூதியணிந்து சர்ப்பராசன் மகிழும் "சேஷாயநம" என்னும் மந்திரத்தைப் பதினாயிரம் உருச்செபித்தால் பல வகை விடங்களும், குன்மம் முதலிய கொடு நோய்களும் நீங்கும். பூமி முழுவதிலும் செங்கோல் செலுத்தி மெய்ம் மையாகிய புகழைப் பெறுவார்கள்.

சேடதீர்த்தத்திலே, மார்கழி மாதத்திலே, பூர்வ பக் கத்திலே, சதுர்த்தி திதியிலே ஸ்நானஞ் செய்தால் மிக்க செல்வமுண்டாகும். பஞ்சமி திதியிலே ஸ்நானஞ் செய் தால் செல்வமிகுதற்குக் காரணமான செங்கோல் செலுத்தி நெடுங்காலம் அரசாண்டு வாழ்வார்கள். சிவனருளிச்செய்த பல நூல்களையும் கற்றுணர்ந்த பெரியோர்கள், சூத்திரான்

வீட்டன்னம், மனைவிசேடம், மக்கள்சேடம், சிரார்த்தசேடம் உண்டதனால் வந்த பாவங்களெல்லாம் அப்பொழுதே நீங்கும். சேடதீர்த்தம், ஸ்நானஞ்செய்வோர் கரையேறுமுன் அவர்கள் கொடிய பாதகங்களை யொழிக்கும். நூறு சாந்திராயண விரதத்தாலும் நீக்கமுடியாத முன் சொன்னவர்களுடைய சேஷத்தை யுண்ணும் பாவத்தை நீக்குமேயானால் அதற்கு ஒப்பும் உயர்வுமான தீர்த்தம் உலகத்திவில்லை.

யானை, புலி முதலியன பற்றுதல்போலக் காணும் பயங்கரமான சொப்பனங்களையும், பிறர் மனைவியர், பொதுப் பெண்கள் புணர்தல்போலக்காணும், துச்சொப்பனங்களையும் சேட தீர்த்தம் நீக்கிவிடும்.

சேடதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

---

# ௩௪. எண்டிசைத்தீர்த்த மகிமைச்சருக்கம்.

சூதமுனிவர், சேடதீர்த்த மான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பிய வண்ணம் சித்தாமிர்த தீர்த்தத்தின் எட்டுத்திக்கிலும் விளங்கும் எட்டுத் தீர்த்தங்களின் மான்மியங்களை ஈண்டுக் கூறுகின்றார்.

## 1. இந்திரதீர்த்தம்.

சிந்தித்த பலன் தருஞ் சித்தாமிர்த தீர்த்தத்திலே கிழக்குத் திக்கிலே இந்திரதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி இந்திரன். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்

கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கி, அமாவாசையிலே அதில் ஸ்நானஞ் செய்வோர், பிறன் மனைவிழைதல் முதலிய பாவங்களினின்றும் நீங்கி மங்களமெல்லா மெய்துவர். அதில் ஸ்நானஞ் செய்து சற்பிராமணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமுஞ் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை இதிற்செய்யின் அப்பலன்களையு மடைவார்கள்.

## ௨. பத்திதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்திலே தென்கீழ்த்திசையிலே பத்திதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி வைரவர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர். விருட்சம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கிப் பௌர்ணிமையிலே இதில் ஸ்நானஞ்செய்து சற்பிராமணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமுஞ் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை இதிற்செய்யின் அப்பலன்களையு மடைவர்.

## 3. சர்வதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் தென்திசையில் சர்வதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி வைரவர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கிப் பூர்வ பக்கத்துச் சஷ்டி திதியிலே அதில் ஸ்நானம் பண்ணிப் பிராமணர்களுக்குத் தானமும், பிதிர்களுக்குத் தருப்பணமுஞ் செய்வோர் அளவிடப்படாத பலனை அடைவர். அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை அதிற்செய்யின் அப்பலன்களையு மடைவார்கள்.

## 4. முத்திதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் தென்மேற்குத் திசையில் முத்திதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி நந்திதேவர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர் விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கி மாத சிவராத்திரியிலே அதில் ஸ்நானஞ்செய்து சற்பிராமணர்களுக்குத் தானமும், பிதிர்களுக்குத்தருப்பணமும் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை அதிற் செய்யின் அப்பலன்களையும் அடைவார்கள்.

## 5. பிணுகதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் மேற்றிசையிற் பிணுகதீர்த்தம் இருக்கின்றது அதற்கு இருடி பிரமா. அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கித் தை மாதப் பிறப்பிலே அதில் ஸ்நானம்செய்து, சற்பிராமணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமும் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை அதிற் செய்யின் அப்பலன்களையு மடைவார்கள். அது தீர்த்தங்களுள் உத்தமோத்தம தீர்த்தமென்று சொல்லப்பட்டது.

## 6. மங்களதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் வடமேற்குத்திசையில் மங்களத்தீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி மாண்டபுத்திரர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கி, ஆவணி மாதப்பிறப்பிலே அதில் ஸ்நானஞ்செய்து சற்பிரா

மணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமும் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை அதிற்செய்யின் அப்பலன்களையும் பெறுவார்கள்.

## 7. ஞானதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் வடதிசையில் ஞானதீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி கந்தசுவாமி. அதிதெய்வம் வைத்தியநாத சுவாமி. காவற்கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களை வணங்கி, உத்தராயண புண்ணிய காலத்திலே அதில் ஸ்நானஞ்செய்து, சற்பிராமணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமுஞ் செய்வோர் அடையும்பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச்சொல்லப்பட்ட தானங்களை அதிற் செய்யின் அப்பலன்களையும் பெறுவார்கள்.

## 8 .துர்வாசதீர்த்தம்.

சித்தாமிர்த தீர்த்தத்தின் வடகீழ்த்திசையிலே துருவாச தீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி பாராசர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அனந்தர். விருக்கம் வெள்ளெருக்கு. அவர்களைவணங்கித்தட்சிணயன புண்ணிப காலததிலே அதில் ஸ்நானஞ் செய்து, சற்பிராமணர்களுக்குத் தானமும் பிதிர்களுக்குத் தருப்பணமுஞ் செய்வோர் அடையும் பலனுக்களவில்லை. அதுவன்றிச் சித்தாமிர்த தீர்த்தத்திற்குச் சொல்லப்பட்ட தானங்களை அதிற்செய்யின் அப்பலன் களையும்பெறுவார்கள். இது சர்வதீர்த்தங்களினுஞ் சிரேஷ்டமென்று கூறப்படுகின்றது.

இன்னும் அட்டசித்தியை விரும்பினோர் இந்திர தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் அணுவினும் அணுவாதலாகிய

அணிமாவையும், பத்தி தீர்த்ததில் ஸ்நானஞ் செய்தால் பெரிதினும் பெரிதாதலாகிய மகிமாவையும், சர்வதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் அணுப்போலிலகுவா யிருக்கின்ற யோகியைத் தூக்கினுல் மேருப்பாரம்போலிருத்தலாகிய கரிமாவையும், முத்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் மேருப்பாரம்போலிருக்கிற யோகியைத் தூக்கினுல் அணுப்போலிருத்தலாகிய இலகிமாவையும், பினுக தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் நினைத்தவிடத்தில் நினைத்தபோது அடைதலாகிய பிராப்தியையும், மங்கள தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினுல் பரகாயப் பிரவேசம் செய்தலும், ஆகாயகமனஞ் செய்தலும் இச்சித்த பொருளை இருந்தவிடத்தில் வரச்செய்தலுமாகிய பிராகாமியத்தையும், ஞானதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினுல் முத்தொழிலியற்றலும் நவக்கிரகங்கள் பணிசெய்யப்பச் செய்தலுமாகிய ஈசத்துவத்தையும், துர்வாசதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினுல் புள், விலங்கு, பூதம், மனிதர் திசைப்பாலகர் முதலியோரைத் தன் வசமாக்கிக்கொள்ளுதலாகிய வசித்துவத்தையும் பெறுவார்கள். அதுவுமன்றி முறையே அடிமை இராசாங்கம், சுற்றம், நெல், பொன், புதல்வர், இரத்தினம் வாகனமென்னும் அட்ட ஐசுவரியங்களையுமடைவர்.

முன்னொகாலத்திலே அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன் என்னும் அட்டவசுக்களும், காமதேனுவைக் கண்ணீர் ததும்பும்படி உறுக்கிப் பிடித்திழுத்த மிக்கபாவம் நீங்கும்படிவந்து முறையே இந்திரதீர்த்தம் முதலிய எட்டுத்தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணின அப்போது பாவம் நீங்கினதைக்கண்டு தையனுயகி சமேதராகிய வைத்தியநாதசுவாமியினுடைய திருவடியைப் பூக்களாலருச்சித்து நமஸ்கரித்துத் தோத்தி

ரஞ் செய்து பாவம் நீங்கிச் சுத்தர்களாய் இன்னும் அங்கு வசிக்குங் காரணத்தால் எட்டுத் தீர்த்தங்களும் முறையே அனலதீர்த்தம், அனிலதீர்த்தம், ஆபச்சைவதீர்த்தம், சோமதீர்த்தம், தரதீர்த்தம். துருவதீர்த்தம் பிரத்தியூசதீர் த்தம் என்றும் பெயர்பெறும்.

காசிபர், அத்திரி, பரத்துவாசர், வியாசர், கௌதமர் சமதக்கினி, வசிட்டர், தேவலர் என்னும் எட்டு முனிவரும் முறையே இந்திரதீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்களிலும் வந்து ஸ்நானம்பண்ணிப் பாவம் நீங்கி நேசங்கொண்டு வசித்தகாரணத்தால், காசிபதீர்த்தம், அத்திரிதீர்த்தம், பாரத்துவாசதீர்த்தம், வியாசதீர்த்தம், கௌதமதீர்த்தம், சமதக்கினி தீர்த்தம், வசிட்டதீர்த்தம், தேவலதீர்த்தம் எனவும் பெயர் பெற்றன.

எண்டிசைத்தீர்த்தமகிமைச்சருக்கமுற்றிற்று.

---

# ௩௫. இந்திரன்சாபநீங்குசருக்கம்.

சூதமுனிவர், எண்டிசைத்தீர்த்த மான்மியங் கூறக் கேட்ட நைமிசமுனிவர்களுக்கு அவற்றுள் முதற்கணுள்ள இந்திரதீர்த்த மான்மியத்தை ஈண்டு அவன் சாபநீங்கு மான்மிய வாயிலாகவுங் கூறுகின்றார்.

துருவாசமுனிவர் இறக்கமுத்திதருந் தலமாதலால் கருவாசனை கழிக்குங் காசிமாநகரத்திலே, தம்பெயர் விளங் கத் துருவாச இலிங்கமெனத் திருப்பெயரிட்டு ஒரு சிவலிங் கந்தாபித்துப் பூசித்துத் தோத்திரஞ் செய்யும்போது சிவ

லிங்கப்பெருமான் திருமுடியிலிருந்து ஒரு தாமரைப்பூ விழ துருவாசமுனிவர் தமதிருகரங்களாலுமேந்திக் கண்களிலொற்றிச் சிரத்தில் வைத்து மார்போடணைத்துக்கொண்டு மிக்க சந்தோடத்தோடு காசியைநீங்கிக் கற்பகநாட்டையடைந்தார். அப்போது இந்திரன் தானவரைக் கொன்று வெற்றிமாலைசூடி வெள்ளானையிலேறிச் சேனைகள்சூழ, பல்லாண்டொலியும் வேத ஒலியும் முழங்கப், பவனிவந்தான். அவ்விடத்திலே தேவர்கள் தத்தமக்கேற்ற கையுறைகளைக் கொடுத்துக் கைகூப்பி நிற்கக்கண்ட துருவாசர் நீங்கரிய ஆசிகூறி, கரத்தில் நீங்கரிய தாமரைப்பூவை நீட்டத் தாங்கரிய செல்வத் தருக்கினனாகிய இந்திரன், மதியிலனாய் ஒருகையினால் வாங்கிமதயானையின் மத்தகத்தில்வைத்தான். அந்த யானை அதனையெடுத்துக் காலால் மிதிக்கக்கண்ட முனிவர்பெருமான் "சிவனடியார் அருவருத்துத் தள்ளிய செல்வச்செருக்குடைய இந்திரனே! நீ தேவர் கையுறையை மதித்துச் சிவன்முடிமேற்போதை மதியாதிகழ்ந்த பாவத்தால் பாண்டிமன்னவன் வளையாயுதத்தால் உனது தலை சிதறக்கடவ"தென்று கொடிய சாபமிட்டார்.

இந்திரன் அச்சாபம் நீங்குதற்குப் பூமியில்வந்து சிவஸ்தலங்கடோறுஞ்சென்று தீர்த்த ஸ்நானம் சிவதரிசனஞ் செய்தும் நீங்கப்பெறாமையால் குருவருளினாலே வைத்திய நாத தலத்தையடைந்து, சித்தாமிர்த தீர்த்தத்திலே கீழ்த் திசையிலே, மாசி மாதத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்யச் சாபம் நீங்கிற்று. அதுகண்டு மகிழ்ந்து திருக்கோயிலிற் சென்று கற்பக விநாயகர் முதலிய கடவுளரைத் தரிசித்து வணங்கிக்கொண்டு தான் ஸ்நானஞ்செய்த தீர்த்தக்கரையில் வடக்கு நோக்கியிருந்து ஐந்தெழுத்தையும் அம்மந்திரத்தையும் ஒரு மண்டலம் இடைவிடாமல் மானதமாகச்

செபித்துக்கொண்டிருக்கும்பொழுது வைத்தியநாதசுவாமி உமையொருபாகராக வெழுந்தருளிவந்து இந்திரனே! நீ மனத்தில் நினைத்த வரங்களெல்லாவற்றையும் தருவோம்; அவற்றைக் கேட்பாயாகவெனத் திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்ட இந்திரன் சுவாமீ! யான் ஸ்நானஞ்செய்த இடம் இந்திரதீர்த்தமென வழங்கவும், அசுரரோடு போர் செய்து யான் அவரை வெல்லவும் வரந்தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்துப் பின்னரும், அடியேன் உபாசனமூர்த்தியாகக்கொண்டு பூசித்த கற்பக விநாயகரை முன்னர் வணங்கிப் பின்பு துவாரபாலகராகிய வீரபத்திரரையும் பத்திரகாளியையும், வைரவரையும், துர்க்கையையும் தரிசித்து வணங்கி, உள்ளே சென்று வைத்தியநாதரைத் தரிசித்து உமது திருவடிகளை வணங்கி வழிபாடு செய்வோர்களுக்குத் தரித்திரத்தை யொழித்துப் பூரணபலனைக் கொடுத்தருள வேண்டும்; இவ்வாறு வழிபடாதவர்களுக்குத் தரித்திரத்தைக் கொடுத்துத் தரிசனபலனைக் கொடாதொழியவேண்டும் என்று பிரார்த்தித்தான். வைத்தியநாதர் கருணையினல் அவ்வரங்களைக் கொடுத்தருளினர். இந்திரன் அவ்வரங்களைப்பெற்று விடை பெற்றுக்கொண்டு தனதுலகுசென்று பலமிக்க அசுரரைக்கொன்று வாகைசூடிச் சுவர்க்க வுலகத்தை இனிதாக அரசாண்டு வாழ்ந்திருந்தான். இந்திரன் வரம்பெற்ற காலந்தொடங்கி சித்தாமிர்த தீர்த்தத்தின் கிழக்குப்பக்கம் இந்திர தீர்த்தமெனக் கூறப்படுகின்றது.

இந்திரன்சாபநீங்குசருக்கமுற்றிற்று.

# ௩௯. துருவாசர்பிராந்திதீர்ந்த சருக்கம்.

சூதமுனிவர், இந்திரதீர்த்த மான்மியத்தை மற்றொரு சரித்திர வாயிலாகவும் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டுத் துருவாசதீர்த்த மான்மியத்தை அவர் சரித்திர வாயிலாகவும் கூறுகின்றார்.

இந்திரனுக்குச் சாபமிட்ட துருவாசமுனிவர் அதனால் சித்தப்பிரமைகொண்டு பற்பல தலங்கள் சென்றும் அது நீங்காதபடியால் வைத்தியநாத தலத்தையடைந்து சித்தாமிர்த தீர்த்தத்திலே வடகீழ்த்திசையிலே ஸ்நானஞ்செய்து கரையேறினபொழுதே சித்தப்பிரமை தீர்ந்தது. அக்காரணத்தால் உலகினர் அதனைத் துருவாச தீர்த்தம் என்று கூறுவர். அது இட்டகாமியமெல்லாங் கொடுக்கும். அது நிற்க, மற்றுமோர் சரித்திரம் இங்கே கூறுகின்றேன்.

கார்த்திகைப் பெண்களறுவரும் சித்தாமிர்தக் கரையில் வசித்து அதில் ஸ்நானஞ்செய்து இட்டசித்தியடைந்து பின் தங்கள் பெயர்களால் சித்தாமிர்தத்தில் ஆறு தீர்த்தங்களை உண்டாக்கி, மனமிக மகிழ்ந்தார்கள். அவர்களுண்டாக்கிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வோர் இட்டகாமியமடைந்தின்பத்தோடு வாழ்வார்கள். அவற்றைத் தரிசித்தோரும் பூமிமுழுது மொருகோலோச்சிப் புகழுடன் அநேகாண்டு நெடுங்காலம் வாழ்வார்கள்.

துருவாசர்பிராந்திதீர்ந்தசருக்கமுற்றிற்று.

# ௩௭. *அங்கசந்தானதீர்த்த மகிமைச் சருக்கம்.

—✿—

சூதமுனிவர், துர்வாசதீர்த்த மான்மியத்தைச் சரித்திர வாயிலாகவுங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் விரும்பியவண்ணம் ஈண்டு அங்கசந்தான தீர்த்தமான்மியத்தைக் கூறுகின்ருர்.

தையனுயகி என்றும் தான் வீற்றிருந்து தவஞ்செய்ய விரும்பிய வைத்தியநாத தலத்திலே வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சமீபத்திலே வட கீழ்த்திசையிலே அங்கசந்தான தீர்த்தம் இருக்கின்றது. அதற்கு இருடி வசிட்டர். அதிதெய்வம் வைத்தியநாதர். காவற்கடவுள் அஸ்திரதேவர், விருக்கம் விளாமரம்.

அதில் ஸ்நானஞ் செய்து அவ்விருக்க நிழலில் இருந்து பால் நிறைந்த வெண்கலப்பாத்திரம், வெண்குதிரை, இரும்புப்பாத்திரம் இவைகளைத் தானஞ் செய்யின் ஒரு தானத்திற்குக் கோடிதானஞ்செய்த பலனைக் கொடுக்கும்.

தாரகாசுரனேடு போர் செய்து மூர்ச்சித்து மயங்கிக் கிடந்த தேவர்களைக் காக்கத் திருவுளங்கொண்ட வைத்தியநாதக்கடவுள், கைலாயத்துள்ள சஞ்சீவி வில்வமரத்தின் அடியிலுள்ள மண்ணை யெடுத்துச் சரகாண்டவனத்தின் எல்லையிற் கிடந்த தேவர்களுக்குக் கொடுத்துச் சோகமோகத்தை நீக்கித் தமது சூலத்தாலொரு தீர்த்தமுண்டாக்கி எஞ்சிய மண்மருந்தை அதில் வைத்து அத்தேவர்களது சிதைந்த அங்கத்தை அத்தீர்த்த நீரால் நனைத்துப் பொருந்

---

*இது வடக்கு, கிழக்கு வீதிகளிலிருந்து சீர்காழி போகும் சாலைக்கு வடக்கில் உள்ளது.

தச் செய்தமையின் அங்கசந்தான தீர்த்தமென்று அதற்குப் பெயருண்டாயிற்று.

இத்தீர்த்தத்தில் வைகாசி மாதத்திலே, பௌர்ணிமை திதியிலே, ஸ்நானஞ்செய்து வைத்தியநாத சுவாமியினுடைய திருவடிகளை யன்போடு வணங்கித் தயிரன்னம் நிவேதனஞ் செய்தவர் தீராத வினையெலாந் தீர்ந்து நல்ல புகழுக்கேது வாகிய எல்லா மங்களங்களையும் அடைவார். முடிவிற் கைலாசமலையிற் சென்று வாழ்வார்.

நான்கு வேதங்களும், பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்தி அங்கங்கள் சிதைவுற்று அங்கசந்தானதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து வைத்தியநாத சுவாமியை ஒன்பதுநாள் அருச்சித்துச் சிதைந்த அங்கங்கள் பெற்றுக் களிப்படைந்தன. அதன் கரையில் தண்ணீர்ப் பந்தல் வைத்தவரும், நந்தனவனம் வைத்தவரும், சற்பிராமணருக்கு அன்னசத்திரம். வீடு கட்டிவைத்தவரும், பாவங்கள் நீங்கித் தங்கள் பலகோடி குலத்தோரைப் பிறவிக்கடலில் நின்றும் எடுத்து மோட்சக் கரையில் ஏற்றுவார்கள்.

அதுவுமன்றி வைகாசி மாதத்திலே சுக்கில பக்கத்திலே பஞ்சமிதிதியிலே ஸ்நானஞ் செய்யின் செய்த பாவமெல்லாம் நீங்கும். குமரகண்டவலி, தரித்திரநோய், அஞ்ஞானதிமிரம், பிறவித் துன்பம், காசம், குட்டம், முதலிய பெரிய நோய்கள் என்னும் இவைகளும் நீங்கும், இதனைப் பரிசித்தால் துச்சொப்பனமும், துர்நிமித்தமும் நீங்கும்.

புதல்வர்ப் பேறில்லாத பெண்கள் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணித் திருச்சாந்துண்டையைச் சித்தாமிர்த தீர்த்த நீரோடு கலந்துண்டால் நல்ல பதவிகளும் உதவிசெய்கின்ற அநேகவிதமான செல்வங்களும் அதிகரிக்கும். சற்புத்திரர்

களைப் பெறுவார்கள். அன்றியும், தீர்க்கசுமங்கலிகளாகவும் இருப்பார்கள். இவ்வுண்டை பண்ணும்விதியும், உண்ணும் விதியும், காலமும், பிறவும் "திருச்சாந்துண்டை செய் முறைமை" கூறிய சருக்கத்தில் விரித்துக் கூறப்படும். ஆத லான் இங்கே சுருக்கப்பட்டது.

அங்கசந்தான தீர்த்தமகிமைச்சருக்கமுற்றிற்று

---

# ௩௮. சிவதன்மன்பிரமரட்சசு நீங்குசருக்கம்.

சூதமுனிவர், ஈண்டு நைமிசமுனிவர்களுக்கு அங்கசந் தான தீர்த்த மான்மியத்தைப் பின்னுமொரு சரித்திரவாயி லாகக் கூறுகின்றார்.

முற்காலத்திலே வைத்தியநாத தலத்திலே பரத்துவாச கோத்திரத்திற் பிறந்த சுமதி யென்னும் பிராமணனொருவன் இருந்தான். அவன் ஆசாரமும் சகல சாஸ்திர உணர்வும் சதுர்வேத ஞானமும் உடைய பெரியோன். அவன் வைகா சிமாதப் பௌர்ணிமையிலே சூரியன் உதிக்க ஐந்துநாழிகை உண்டென்னு மளவிலே எழுந்து அங்கசந்தான தீர்த்தத் திலே ஸ்நானம் பண்ணி விளாமரத்தின்கீழ் விதிப்படி பஞ் சாக்கர ஜெபம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பிரமரட்சசு அவனை உண்ணும்படி பிற்பக்கத்திலே வருதலைக்கண்டு பயமடைந்து பஞ்சாக்கரத்தை இடை விடாது செபித்தபடியே அத்தீர்த்த நீரை அள்ளி அதன் உடல் நனையும்படி வீசினான்.

அப்பொழுதே பிரமராட்சசு வடிவம் நீங்கி இரத்தின கிரீடம், பொன்னரிமாலை, மணங்கமழுஞ் சந்தனம், பீதாம்பரம், திவ்விய தேகம் என்னும் இவற்றையுடையவனாய்த் தேவ வியானத்திலே ஒருவன் தோன்றி நின்றான். அது கண்ட சுமதி யென்பவன் அதிசயமடைந்து இப்பிரமராட்சசு தன்வடிவம் நீங்கிற்று ஆ! ஆ! இதனுடைய வரலாற்றை அறிவேனென்று, அப்புருடனுடைய முகத்தைப் பார்த்து, நீ யார்? உன்குலம் யாது? எவ்விடமிருந்து வந்தாய்? பிரமாட்சசு வடிவம் வந்த வரலாறும் அது நீங்கியதுமாகிய யாவற்றையும் சொல்லுக; என்று கேட்டான். அதற்கவன் உளமகிழ்ந்து கூறுவானாயினான்.

"அந்தணர் திலகரே! யான் சௌராட்டிர தேசத்திலே பிராமண குலத்திலே பிறந்தவன். சிவதன்மன் என்னும் பெயருடையவன். யான் சித்தப்பிரமை பிடித்துத் திரிந்து பிராமணர்களுக்குரிய நித்திய கருமம் முதலிய செய்கடனைத்தும் விடுத்து அந்தணரையும், அவர் செய்யும் நித்திய கருமங்களையும் தூஷித்தேன். அதுமட்டோ! தீயவழியொழுகினேன்; அதுமட்டோ! செய்துவந்த சிவபூசையையும் விடுத்தேன், அதுமட்டோ! வித்தியா கர்வத்தினால் சாதுக்களையும் மதியாது இகழ்ந்தேன். இவ்வாறு செய்தற்கு நான் செய்த தீவினை என்னையோ! அதனை யானறியேன். என் மனைவியுமிறந்தாள். என் புத்திரர்களெல்லாருமிறந்தார்கள். பூமியையு மிழந்தேன். அரசன் திரவியம் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டனன். கவராதுவிட்ட பசு முதலிய எல்லாப் பொருளையும் திருடர் கொண்டு சென்றனர். சுற்றத்தாரெல்லாரும் என்னை யிகழ்ந்தனர். ஊரிலே தலைவராயுள்ளவர்கள் ஊரைவிட்டென்னைத் துரத்தினார்கள். யான் வழியில்வரும்போது வெள்ளிடிவிழுந்திறந்து

கொடிய நாகங்களெல்லாவற்றிலும் கிடந்து வருந்தினேன். பின்பு, பூமியிலே பிரமராட்சசாய்ப் பிறந்தேன். அது நிற்க.

"முற்பிறப்பிலே ஒரு பிராமணனுயிருந்தபொழுது ஒரு பிராமணனுக்கு உருத்திராட்சமாலையை அபுத்திபூருவமாகக் கொடுத்த புண்ணியத்தினுல் இத்தீர்த்தக்கரையில் வந்து உம்மைப் பிடித்துண்ணும்படி வந்து நின்றேன். நீர் இத்தீர்த்த நீரை எண்மேல் வாரி இறைத்தமையால் இத்திவ்வியதேகம் பெற்று உண்ணும் விருப்பமின்றி, தேவரீரது கிருபைக்குப் பாத்திரனுனேன். பிராமணோத்தமரே! சிவகணங்கள் என் வரவை நோக்கித் தாமதித்து நிற்கின்றன. ஆதலால், அவர்களோடு யான் கைலையங்கிரிக்குச் செல்லுகின்றே"னென்று சொல்லிவிட்டு, தேவர்கள் சாமரைவீசப் பூமழை பொழியக் கைலாசமலையை யடைந்தான். பின் சுமதி யென்னும் அந்தணன் அங்கசந்தான தீர்த்த மகிமையை யாவருக்குங் கூறினுன். அத்தீர்த்தம் உத்தமத்தினும் உத்தமம். சுத்தத்திலும் சுத்தம். அதைத் தரிசித்தால் யாகபலனுண்டாகும். பரிசித்தால் பதமுத்தி கிடைக்கும். ஸ்நானஞ் செய்தால் சிவத்துவப் பேறெய்தும்.

சிவதன்மன்பிரமராட்சசுநீங்குசருக்கமுற்றிற்று.

# ௩௯. திருச்சாந்துண்டைசெய் முறைமைகூறியசருக்கம்.

சூதமுனிவர், அங்கசந்தான தீர்த்த மான்மியத்தைச் சரித்திரவாயிலாகவுங் கூறக்கேட்ட நைமிசமுனிவர்க்குப்

பின்னும் அதன் மகிமையை ஈண்டுத் திருச்சாந்துண்டை செய்யும் முறைமை கூறும் வாயிலாகவுந் தெரிவிக்கின்றூர்.

### திருச்சாந்துண்டைசெய்யும்விதி.

திருச்சாந்துண்டை செய்து அதனை யுண்டு பலனடைய விரும்புவோர் சுக்கில பக்கத்திலே, நல்ல வாரத்திலே, நல்ல நட்சத்திரத்திலே, நல்ல இலக்கினத்திலே, சுத்தர்களாய் நியமத்தோடு வேதவொலி வாத்தியவொலிதழைய நல்ல சகுனம் பார்த்துத் திருக்கோயிலில் நின்று புறப்பட்டு வலது பக்கமாகச் சென்று, அங்கசந்தான தீர்த்தத்தை யடைந்து, அதனை வலம் வந்து, அதில் ஸ்நானம் பண்ணித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, விபூதி யணிந்து, உருத்திராக்க மாலைபூண்டு, தீர்த்தமத்தியிற்சென்று மிருத்தி கையை யெடுத்துப், புதுப்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, அங்குநின்று புறப்பட்டு, முன்போல வேதவொலி, வாத்தியவொலியோடு வைத்தியநாதசுவாமி சந்நிதியையடைந்து, மிருத்திகையைச் சந்நிதியில் வைத்து, அதிலே விபூதி குண்டத்திலுள்ள விபூதியுஞ் சித்தாமிர்த தீர்த்த நீருங்கலந்து பஞ்சாக்கரத்தைப் பதினுயிரம் உருச்செபித்து முத்துக் குமாரசுவாமி சந்நிதியிலுள்ள குழியம்மியிலிட்டரைத்துக் கடுகளவாகத் திருச்சாந்துண்டை செய்து தையனுயகி அம்மை திருவடியில் வைத்து அருச்சித்து எடுத்துச், சுத்தமான மரப்பெட்டியில் வைத்துக்கொள்க.

### உண்ணும் விதி.

பின்பு நல்ல வாரத்திலே நல்ல இலக்கினத்திலே துவாக வேளையிலே இந்திர தீர்த்தம் முதலிய எட்டுத் தீர்த்தங்களோடு சேர்ந்திருக்கின்ற சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, அதனை வலம் வந்து, பின்பு கற்பக விநாயக

ரைத் தரிசித்து, அதன்பின் துவாரபாலகரைத் தரிசித்துக் கொண்டு, உள்ளே சென்று, வைத்தியநாத சுவாமியையும் தையனுயகி அம்மையையும் தரிசித்து வலமாகவந்து விபூதி குண்டத்தையுந் தரிசித்து, வலஞ்செய்து, அங்கு நின்று முத்துக்குமாரசுவாமி சந்நிதியையடைந்து, அவரைப் பூசித்து, இறுதியில் அங்காரகனைத் தரிசித்து, தரிசனபலனடைந்தபின் திருச்சாந்துண்டையைச் சித்தாமிர்ததீர்த்தத்தோடு கலந்து உட்கொள்ளுதலே விதியாகும்.

## பலன்.

இவ்விதிப்படி உண்டால் குன்மம், காசநோய், பெருநோய், சன்னிபாதம், வெண்குட்டம், சுரம், தலைவலி, நீரிழிவு, பக்கப்பிளவை முதலிய எல்லாவியாதிகளும் நீங்கும். தீராவினைகளுந்தீரும். சரீரவன்மை யுண்டாகும். பூதப்பிரேதபாதையும், வேதாளமும் கிட்டவாரதெட்டிப்போகும். அட்டமாசித்திகிட்டி நிற்கும். வசியம், மோகனம், ஞானம், பத்தி, பசு, புத்திரர் இவைகள் விருத்தியாகும். சர்வாபீட்டமுஞ் சித்திக்கும். இம்மைச் சுகபோகங்களனைத்தையும் முன்னர்க்கொடுத்துப் பின்னர் முத்தியின்பத்தையுங் கொடுக்கும்.

இத்துணை விசிட்ட பலனளிக்கும் திருச்சாந்துண்டையை அதனிடத் தன்பில்லாதவன், அதனைத் தூஷிக்கின்றவன், இடாம்பிகன், காமி முதலானவர்களுக்குக் கொடுக்கலாகாது. கொடுத்தவர் தப்பாது நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

திருச்சாந்துண்டையின் மகிமையைச் சொல்லுபவருங் கேட்பவரும் பதினுயிரம் யாகஞ் செய்த பலனடைவர். அதன் பெருமை இத்துணைத்தென்று எவராலும் அளவிட்டறியமுடியாது.

திருச்சாந்துண்டைசெய்முறைமைகூறியசருக்கமுற்றிற்று.

# ௪0. செவ்வேள் திருவவதாரச் சருக்கம்.

சூதமுனிவர், அங்கசந்தான தீர்த்த மான்மியத்தைத் திருச்சாந்துண்டை செய்முறைமை கூறுதல் வாயிலாகவுங் கூறக்கேட்ட நைமிசமுனிவர் நாயகராகிய சௌனக முனிவர், அவரை நோக்கிச் சுவாமீ! கைலாசபதியாகிய சிவபெருமான் வைத்தியநாதரெனவும், உமாதேவியார் வாலாம்பிகையெனவுங் கூறப்படுவதற்குக் காரணம் என்னை? தேவரீர் திருவாய் மலர்ந்தருளல்வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் அவற்றைத் தெரிவிக்கப் புகுந்து அக்காரணத்திற்கியைபுடைய சரித்திரங்களுள் முதற்கண் செவ்வேள் திருவவதார மான்மியங் கூறுகின்றார்.

சௌனக! முன்னொரு காலத்திலே தாரகனென்னுமோரசுரன் தனது குலப்பகைவராகிய தேவர்களோடு போர்செய்யுங் காலத்தில் தானுந் தன்னைச்சார்ந்த அசுரர்களும் இறவாமலிருத்தற் பொருட்டு வரம் பெறக்கருதி, கைலாசமலையை யடைந்து, நெடுங்காலந் தவஞ்செய்து கொண்டிருந்தான். "வேண்டுவார் வேண்டுவதே ஈயுஞ்" சிவபெருமான் அவனுக்கு வரங்கொடுக்க விரும்பி, சிறிய பிரமசாரி வடிவங்கொண்டு அவன் முன்னெழுந்தருளி வந்து நின்று தாரக! உன்னுடைய தவத்திற்கு மகிழ்ந்தோம். நீ விரும்பிய வரத்தைத் தருவேம் கேளென்று திருவாய் மலர்ந்தருளினார்.

அது கேட்ட தாரகன் ஆண்டவரே! யானும் என்னைச் சார்ந்தவர்களும் தேவர்களாலும், முனிவர்களாலும்,

தேவரீராலும் இறவாதிருக்கும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் அவ்வாறே தந்தோமென்று அருளிச் செய்தார். அவர் பிரமசாரியா யிருத்தலைப் பார்த்து, அவருக்குப் புத்திரர் இல்லையெனக் கருதி, உமது புத்திராலும் இறவாதிருக்க வேண்டுமென்று வரங் கேளாதொழிந்தனன். உடனே அவர் மறைந்தருளி னார்.

மறைந்தவுடன் அவன் மற்றொரு வரங்கேட்க மறந்து விட்டேனென்று சிந்தித்துப் பின்னும் அறுபதினாயிரம் தேவவருடம் அரும் பெருந்தவஞ் செய்தான். சிவபெருமான் வெளிப்பட்டுத் தாரகனே! உனது தவவலிமைக்கு மிகுமகிழ்ச்சி யடைந்தோம். உனக்குவேண்டும வரம் யாது? அதனைக் கூறுவாயாக என்று ஆஞ்ஞாபித்தார். அது கேட்டு மிக்கசந்தோஷமடைந்த தாரகன், எம்பெருமானே! அசுரர்கள் பகைவர்களா லிறவாமலிருத்தல் மாத்திரமே யன்றி அவர்களுடைய பாணம்பட்டு அசுரர்களுடைய சரீரத்திலிருந்து ஒருதுளி யிரத்தஞ் சிந்தினாலும் அதிலிருந்து அளவிடப்படாத அசுரர்கள் உற்பத்தியாகும் வரத்தையுந் தந்தருளுக என்று வேண்டினான். அதனையுங் கொடுத்து மறைந்தருளினார்.

தாரகன் இறவாவரம் பெற்ற செருக்கினால் தான் தனியே சென்று தேவர்களோடு போர் செய்ய, அவர்கள் சேனைத்தலைவர்களோடு புறங்கொடுத்தோடக் கண்டு, பரிகசித்துச் சிரித்து, தனது நகரஞ்சென்று, பின்னரும் நெடுங் காலம் தேவர்களைச் சொலற்கரிய துன்பஞ் செய்து கொண் டிருந்தான்.

அத்துன்பஞ் சகிக்கமுடியாது இந்திரனும் தேவர்க

ளும் ஓலமிட்டுக்கொண்டு கைலாச மலையையடைய, கைலாசபதி அவர்களுடைய மெலிவைப் பார்த்து, அஞ்சன்மின்! அஞ்சன்மின்! என்று அபயாஸ்தம் கொடுத்தருளினர். தேவர் வேறு புகலிடமின்மையாற் கைலையங்கிரியிலிருந்தார்கள். அது நிற்க.

கைலாசபதி தேவர்களுடைய துன்பத்தை நீக்கக் கருதி, உமாதேவியாரைத் திருமணஞ் செய்து, அளவில்லாத காலம் அவரோடுகூடி உத்தியோகித்துக் கொண்டிருந்தார். அதனை யறிந்த தேவர்கள், இவரிங்ஙனமிருந்தால் இவரிடத்துப் புத்திரன் தோன்றி எங்கள் துயரத்தை நீக்குவது எக்காலமென்று கருதி, அம்மையப்பர்களைப் பிரித்தற்குபாயமெண்ணி, அக்கினி தேவனைப் பார்த்து, அவர்களிருக்கு மிடத்திற்சென்று அவர்களைத் தரிசி என்றுகூறி, அவனை யனுப்பினர்கள். அவன் அங்ஙனஞ் செய்ய, உமாதேவியார் அவரைப் பிரிந்து அவ்விடம் விட்டகன்றனர். அதுகண்ட சிவபெருமான் அக்கினிதேவனை நோக்கி, நின் வரவு சத்திபிரிதற் கேதுவாயிற்று; அதனால் தேவர்கள் துன்பந் தீர்தற்குக் காலந்தாழ்க்கின்றது. ஆதலால், புத்திரோற்பத்திக் கேதுவாகிய வீரியத்தை நீயே தாங்கக் கடவாய் என்று கூறியருளிக் கோபிக்க, அக்கினிதேவன் அதற்கஞ்சி அவ்வீரியத்தை எடுத்தான். எல்லாவற்றையும் வெதுப்புகின்ற தான் அவ்வீரியத்தால் வெதும்பி, உய்யும் வழியறியாது தேவர்களுக்கறிவிக்க, அவர்கள் அவனோடு கங்கையை யடைந்து பிரார்த்திக்க, அவ்வீரியத்தைக் கங்கை தாங்கினள்.

பின் அவளுந் தாங்கமுடியாமல் அலையால் வீரியத்தை ஆறுகப் பிரித்துக்கொண்டு சென்று, காவேரிக்கு வடக்கி

லும் கொள்ளிட நதிக்குத் தெற்கிலுமுள்ள சரவணப்பொய்கையில் விடுத்தாள். "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்" என்றியாருமறிதற்கரிய சிவபெருமான் அவ்வாறு பங்கையும் ஆறு திருவுருவமாகக் கொண்டு அதில் எழுந்தருளியிருந்தார்.

கார்த்திகைப் பெண்களாறுவரும் ஆறு சிற்றுருவங்களையும் ஒருவர் கொண்ட வடிவமாகக் கருதிப் பாதுகாத்து வந்தார்கள். அங்கே அப்படிநிகழ, கைலாசகிரியிலெழுந்தருளியிருந்த சிவபெருமான் இந்திரன் முதலிய தேவர்களும் பூதகணங்களும் புடைசூழ, உமாதேவியாரோடு மதுரைமா நகரை நோக்கி எழுந்தளி, சரவணப்பொய்கைக்குச் சமீபமாக வரும்பொழுது, உமாதேவியார் சிவபெருமானை நோக்கி நாயகரே! தனங்களில் நின்றும் பால் சொரிகின்றதற்குக் காரணமென்னை யென்று வினவ, சிவபெருமான், தாரகனைக் கொல்லுதற்குச் சாவணப்பொய்கையில் உனது புதல்வன் வளர்கின்றான், அதனால் உன் கொங்கையில் நின்று பால் சொரிகின்றது. அக்குழந்தை யுண்ணப் பால் ஊட்டுக என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சரவணப்பொய்கையிலே தனித்தனி தவழ்ந்த ஆறு குழந்தைகளையும் இரண்டு கைகளாலும் அணைத்துத்தூக்க, ஆறும் ஒன்றாய்ச் சேரக்கண்டு மகிழ்ந்து, உச்சிமோந்து, பாலூட்டி, முதுகுதடவி, இந்திரன் முதலிய தேவர்களைப் பார்த்துத் தந்திரக் குழந்தைவேலன் றன்னருள் பெற்றுத் துன்பம் நீங்கி, இன்பமடைவீர்களாகவென்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் கந்தசுவாமியின் திருவடிகளைத் தோத்திரஞ்செய்தற்குச் சரவணப் பொய்கையைச் சூழ்ந்து காலம்

பார்த்திருந்தார்கள். உமாதேவியார் இடபவாகனத்திலேறிச் சிவபெருமானோடு சென்றனர்.

சேவ்வேள் திருவவதாரச்சருக்கமுற்றிற்று.

---

## ௪௧. செவ்வேள்வரம்பெறு சருக்கம்.

சூதமுனிவர், முதற்கண் செவ்வேள் திருவவதாரங் கூறக்கேட்ட சௌனகாதி முனிவர்களுக்கு இரண்டாவது அதற்கியைபுடைய செவ்வேள் வரம்பெறுமான்மியங் கூறு கின்றார்.

சிவபெருமான் உமாதேவியாரோடு புத்திரன் சீக்கிரம் வளர்ந்து தேவர் துயரந்தீர்க்க வேண்டுமென்கின்ற திருவுள்ளத்துடன் செல்லும்போது, வழியிலுள்ள திருநின்றியூர் திருநீடூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு, காவிரிக்குத் தென்கரையிலுள்ள மாயூரத்தை யடைந்தபோது, மாயூரமென்னும் பெயர்க் காரணத்தைச் சிவபெருமானால் உமாதேவியார் உணர்ந்து, ஐப்பசி மாத முப்பது நாளும் காவேரி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, மாயூரநாதரை அருச்சித்து, வணங்கிக்கொண்டு சிவபெருமானோடு திருவாஞ்சிய மென்னுந தலத்தையடைந்து, கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் வாஞ்சியநாதரை அருச்சித்துக் கொண்டு, அம்மாதம் முழுதும் அங்கே தங்கியிருந் தார்.

பின்பு திருச்சாய்க்காடென்னுந் தலத்தை யடைந்து, சாயாவனேசரைவணங்கி, அங்குநின்று திருவெண்காட்டை

யடைந்து, முக்குளத்தில் ஸ்நானஞ்செய்து, சுவேதவ னப் பெருமானை வணங்கிப், பின் சீர்காழியை யடைந்து, தோணியப்பரை வணங்கிக் கொண்டு, அங்கு நின்று திரு விடைமருதூரை யடைந்து, இந்திரன் பூசித்த மருதவாண ரைச் செங்கழுநீர் மலரினால் அருச்சனை செய்து மகிழ்ந்தார். அங்கு நின்று திருமண்ணிப்படிக்கரையை யடைந்து, நீல கண்டேசுரரைத் தரிசனஞ்செய்து கொண்டு, அங்கு நின்று திருக்குறுக்கை யென்னுந் தலத்தை யடைந்து, சுவாமி தரி சனஞ்செய்து கொண்டு, அங்கு நின்று வைத்தியநாத தலத் தையடைந்து வலமாக வந்து, கார்த்திகைப் பெண்கள் வளர்க்க வளர்ந்த முருகக்கடவுளைப் புகழ்ந்து, தாரகனைக் கொன்று இந்திரனைக் காப்பாற்றுக என்று திருவாய் மலர்ந் [illegible]ளி, நீ வளர்ந்திருக்கின்ற வயித்தியநாத தலத்தில் வசிப் போரும் அதனை நினைப்போரும் பாவம் நீங்குவார். உன் னைத் தரிசித்து வணங்குவோர் அட்டமாசித்தி அடைவர். விண்டுபதம் பிரமபதங்களுமடைவர். இட்டகாமியம் யாவும் பெறுவர். ஈற்றில் சிவசாரூபம் அடைவார் என்று பற்பல வரங்களையுங் கொடுத்தார்.

அதன்பின் என்தனப் பால் பெருகிச் சித்தாமிர்த தீர்த் தத்தை யடைந்தமையால் அதில் உதித்திடும் கிருமி கீடம் முதலிய எல்லாவுயிர்களும் தேவர்களாகிப், பின் முத்தியின் பத்தைப் பெறக்கடவனவென்று தீர்த்தத்திற்கும் வரமளித் தார். சிவபெருமானும் நல்ல வரங்களைக் கொடுத்து முத்துக் குமாரருக்கு வேற்படையும் கொடுத்தருளினார். அப்பெரு [illegible] அவற்றைப் பெற்றுக்கொண்டு இருமுதுகுரவரையும் வணங்கிக் கைலாயமலைபோலும் வைத்தியநாத தலத்தில் வீற்றிருந்தருளினார்.

செவ்வேள்வரம்பெறுசருக்கமுற்றிற்று.

# சஉ. சங்கரன் தலமகிமை காட்டியசருக்கம்.

—✿—

சூதமுனிவர், இரண்டாவது செவ்வேள் வரம் பெறு மான்மியங் கூறக்கேட்ட சௌனகாதி முனிவர்களுக்கு அதற்கியைபுடைய மூன்ருவது சங்கரன் தலமகிமை காட்டிய மான்மியங் கூறுகின்ருர்.

சிவபெருமான் உமாதேவியாரை வைத்தியநாத தலத்தினின்று அழைத்துக்கொண்டு சென்று, மாயூர முதலிய சிலதலங்களின் மகிமையைத் தெரிவித்து, மீண்டும் வைத்தியநாத தலத்திற்கு வந்து, முத்துக்குமாருக்கு வரத்தையும் வரத்தையுடைய வேலையுங்கொடுத்து மதுரைக்கு எழுந்தருளும்போது, உமாதேவியாருக்குக் காவிரியின் இருமருங்கிலுமிருக்கின்ற சிவதலங்களின் மகிமைகளை நேரிற்பார்த்துச் சிவதரிசனஞ் செய்து செல்லல் வேண்டுமென்று விரும்பும் உமாதேவியாருடைய உளளக்குறிப்பை யறிந்து, உலகத்தார்க்கு, நடந்து யாத்திரை செய்தலே விசேட புண்ணியமென்பதை யுணர்த்துதற்காக அவரை நடத்தி யழைத்துக் கொண்டு முன்னர்ச் செம்பொன் பள்ளி யென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தை யடைய, அம்மையார் அங்கே வீற்றிருக்குஞ் சொர்ணபுரி நாதரைத் தரிசித்து, அங்கு நின்று தருமபுரத்திற்குச் சென்று, யாழ்மூரிநாதரைத் தரிசித்து, அங்கு நின்று திருப்பந்தணைநல்லூரையடைந்து பசுபதிநாதரைத் தரிசித்து வணங்கி, அங்குநின்று ஓமாம்புலியூரை யடைந்து துயரந்தீர்த்த நாதரைத் தரிசித்து, தோத்திரஞ்செய்து, அங்கு நின்று திருப்பனந்தாளை யடைந்து, சடையப்பரைத்

தரிசித்துப் போற்றி, அங்கு நின்று திருமங்கலக்குடிக்குச் சென்று, புராணேசுரரைத் தரிசித்தேத்தி, அங்கு நின்று திருக்கோடிகாவை யடைந்து, கோடீசுரரைத் தரிசித்துப்பணிந்து, அங்குநின்று திருவாவடுதுறைக்குச்சென்று, மாசிலாமணீசுவரரைத்தரிசித்து வணங்கி, அங்கு நின்றுகும்பகோணத்தை யடைந்து, கும்பேசரைத் தரிசித்து வலம் வந்து வணங்கி, அங்கு நின்று திருவையாற்றை யடைந்து செம்பொற்சோதி அம்பொற்பாதம் அன்புடன் பணிந்து துதித்து, ஆங்கு நின்று செல்லும் வழியிலேயுள்ள தலங்களையும் வணங்கிக்கொண்டு, திரிசிரபுரத்தை யடைந்து, தாயுமானவரைத் தரிசித்து வணங்கி, அங்கு நின்று வாட்போக்கியையடைந்து, இரத்தினகிரி நாதரைத் தரிசித்து, அங்கு நின்று திருவானைக்காவிற்குப்போய்ச் சம்புகேசுவரரைத்தரிசித்துத் தோத்திரஞ் செய்து, அங்கு நின்று சோமசுந்தரக் கடவுள் அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்தருளிய மதுரைத் திருநகரத்தை யடைந்து, மனமுருக விழிகளிப்ப வேணவாவோடு அத்தலப் பெருமையைச் சிந்தித்துத் தன்னை மறந்து நின்றார்.

சிவபெருமான் அம்மையார் தெளிவடைந்தபின், அவரைநோக்கி, முத்தமிழ்க் கூடலாகிய வித்தக மதுரையில் யான் சுந்தரனாய்க்கோலங்கொண்டுஎழுந்தருளியிருப்பேன். நீ அங்கயற்கண்ணியாய் இடப்பக்கமமர்ந்திருந்து மலையத்துவச பாண்டியனுடைய அரசைநடாத்துகவென்று அருளிச்செய்ய அம்மையார் திருவுளமகிழ்ந்தார்.

தேவரும், மனிதரும், தெய்வீகம் பொருந்திய சிறப்புமிக்க எமது திருமணக்கோலப் பொலிவைத் தரிசித்து, பேரின்ப சாகரத்தில் அழுந்திப் பேரானந்த முற்றிருப்பார்கள். ஐப்பசி மாதத்திலே சுக்கிரவாரத்திலே ஆடவர்களும்

பெண்களும் எம்மை வணங்கினால் இட்ட காமியங்களெல்லாம் சித்திக்கப் பெறுவார்கள். கார்த்திகை மாதத்திலும் மார்கழி மாதத்திலும் செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளிலே உன்னைத் தரிசித்துத் துதித்தவர்களுடைய பலன் இவ்வளவென்று சொல்லமுடியாது. அட்டசித்தியையும் அடைவார்கள். அது நிற்க.

மதுரை, திருக்கேதாரம், திருவானைக்கா, திருவாஞ்சியம், வைத்தியநாதம் என்னுந் தலங்கள் பூமியிலுள்ள தலங்களுள்ளே நமக்கு விருப்பமுள்ள மிகச் சிறந்த தலங்களாம். இவ்வைந்தனுள்ளும் மதுரை தன்கண் வசிப்பவர்களுக்கும் தன்னைத் தரிசிப்பவர்களுக்கும் நினைப்பவர்களுக்கும் இம்மையிலே போகத்தையும் சீவன்முத்தியையுங் கொடுத்து முடிவிற் பரமுத்தியையுங் கொடுத்தலால் மிகவிரும்பப்படும் விசேட புண்ணிய ஸ்தலமாம். வைத்திய நாதஸ்தலம் போக மோட்சங்களைக் கொடுத்தலேயன்றி நமது குமாரனாகிய முத்துக்குமாரன் அவதாரஞ்செய்யப் பெற்றமையால், மதுரையினும் பார்க்க எம்மால் மிகவிரும்பப்படும் மிக்க புண்ணிய விசேட ஸ்தலமாம் எனத் திருவாய் மலர்ந்தருளினார். அப்பொழுது ஆகாயத்திலே பஞ்ச தூரியங்கள் முழங்கின. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். அம்மையப்பராகிய இருமுதுகுரவரும் திருவுளமகிழ்ந்து அத்தலத்தில் வீற்றிருந்து, சிலதினஞ் சென்றபின் பூதகணங்கள் புடைசூழ, வேத ஒலி மிக, முழவம் அதிர்ந்திட, தேவரேந்தொலி கடல்போல் முழங்க, நலமிகு கைலையை யடைந்து நவரத்தின கசிதமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்தார்கள்.

சங்கரன் தலமகிமைகாட்டியசருக்கமுற்றிற்று.

# சஉ. தாரகன்போர்புரிசருக்கம்.

சூதமுனிவர், மூன்ருவது சங்கரன் தலமகிமை கூறக் கேட்ட சௌனகாதி முனிவர்க்கு அதற்கியைபுடைய நான்காவது தாரகன் போர்புரி மான்மியங் கூறுகின்ருர்.

சிவபெருமான் வைத்தியநாத தலத்தினின்று மதுரைத் தலத்தை உமாதேவியாரோடு அடைந்து அங்கு நின்று கைலையங்கிரிக்கெழுந்தருளிச் செம்பொற்றிருக்கோயிலிலே இரத்தின சிங்காசனத்தில் வீற்றிருக்குங் காலத்திலே, மகாவரப்பிரசாதியாகிய தாரகாசுரன் சேனைகளோடு தேவருலகம் சென்று இந்திரன் அஞ்சச் சுந்தரவில் வளைத்துக் கொடிய பாணமழை சொரிந்தான். அதுகண்ட இந்திரன் தன் கைத்தனுவை வளைத்து அக்கினிபோன்ற பிறைமுகாஸ்திரம் பலவற்றைத் தாரகன் மீது செலுத்தினன். அவை அவ்வசுரன் மார்பிலிட்ட கவசத்தை யறுத்துத்தள்ளி மார்பினுட்புகுந்து முதுகின் வழியாற் புறப்பட்டுச்சென்றன.

தெய்வப் பெண்கள் மெய்யிற் கண்ணீர் சொரியக் கற்பகநாட்டையழித்துக் கடும்போர் செய்து நின்ற தாரகன் சேனவீரர் இந்திரன்பாணம் தங்கள் அரசன் மார்பை ஊடுருவி முதுகாற் கழன்ருேடியதைக் கண்டு கோபங் கொண்டு தங்கள் கைகளில் வேல், வாள், பாணங்களைப் பிடித்துக்கொண்டு தேவசேன வீரர்களுக்கு முன் வந்து தேவரெல்லாம் சித்தந்தடுமாறித் திசைதோறுஞ் சென்றிறக்கும்படி குத்துங்கள் வெட்டுங்கள் என்றுசொல்லி எதிர்த்தார்கள்.

தேவசேனதிபர்களும் அசுரசேனதிபர்களும் ஒருவர்மீ

தொருவர் பலவகைப் பாணமழை பொழிந்து போர் செய்யும்போது தேவத்தலைவர் தங்கள் படைக்கலங்களைச் செலுத்தி அசுரத்தலைவர்கள் மனந்தடுமாறி நிலத்தில் விழும் படி செய்தார்கள். பின் வந்தெதிர்த்த அசுரர்களோடு தேவர் தொந்த யுத்தஞ்செய்து அவர்கள் விட்ட பாணங்க ளையும் அவர்கள் வெற்றி முரசங்களையும் அழிக்க, முன்னணி யினின்ற கொடிப்படையு மதுகண்டஞ்சி ஓடிற்று.

பின்னர் அதுகண்டு வந்தெதிர்த்த தேர்வீரர், யானை வீரர், குதிரை வீரர், காலாள் வீரர்கள்மேல் தேவர்கள் பாணங்கள் பலவற்றைச் செலுத்தி அவர்கள் கவசத்தை யறுத்து மார்பைப் பிளந்து தலைகள் யுத்தகளத்தில் உரு ளும்படி செய்தார்கள்.

அதுகண்ட தாரகன் அசுரகுருவாகிய சுக்கிரனையடை ந்து நமஸ்கரித்து எங்குல குருவே! தேவர்கள் செலுத்திய பலவகைப் பாணங்கள் பட்டுப் பற்பல அசுரர்கள் இறந்தார் கள். புண்பட்ட மேனியராய்ச் சிற்சிலவசுரர் நின்றார்கள். அது கண்ட யான் பகைவர் முன்னிற்க வெள்கித்தேவரீரை யடைந்தேன்.

மரத்திற்கு வேரும், பறவைக்குச் சிறகும், பெண்களுக் குக் கற்பும், குழந்தைகளுக்கு அழுகையும், பசுவிற்குப் புல் லும் துணையாம். அதுபோல அரசர்களுக்குப் படையே துணையாம். குரவரே! என் படைகளெல்லாம் இறந்தன. அவற்றை எழுப்புதற்கு உபாயம் யாதென வினவி நின் றான்.

அசுரகுருவாகிய சுக்கிரன் அதுகேட்டுச் சஞ்சீவி மந்தி ரத்தைச் செபித்து இறந்த அசுரர்களை எழுப்பினர். அது வன்றி அவர்களுடைய இரத்தம் ஒரு துளி பூமியில் விழுந்

தால் அதிற் பலகோடி அசுரர்கள் தோன்றிப் போர்செய்யும்படி சிவபெருமான் கொடுத்த வரத்தோடு தாமும் அவ்வரத்தைக் கொடுத்தனர். அதனையறிந்த தேவர் முத்துக்குமாரரை யடைந்து வழிபட்டுத் துதித்து நிகழ்ந்ததை விண்ணப்பஞ் செய்தார்கள்.

தாரகன்போர்புரிசருக்கமுற்றிற்று.

---

## சச. தாரகன்வதைச்சருக்கம்.

சூதமுனிவர், நான்காவது தாரகன் போர்புரி மான்மியம் கூறக்கேட்ட சௌனகாதி முனிவர்க்கு அதற்கினையுடைய ஐந்தாவது தாரகன்வதை மான்மியங் கூறுகின்றார்.

தேவாசுர யுத்தத்திலே அசுரர்களால் பலதேவர்கள் இறக்கக்கண்ட இந்திரன் இராப்பகல் துயரமதிகரிக்க, முத்துக்குமாரசுவாமியை யடைந்து, அவர் திருவடிகளை வணங்கி, அவர் சந்நிதானத்திலே நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்து, இரக்கமடைந்து நிற்க, ஆறுமாமுகப்பிரான் அஞ்சற்கவென்று அபயாஸ்தம் கொடுத்து, "மணிமுடிசூடி" தாரகனை நமது வேற்படைக்கு உண்டியாகக் கொடுப்பேமென்று திருவாய்மலர்ந்து சிங்காசனத்தினின்று மெழுந்து வெற்றிச் சங்கம் முழங்கவும், இரணபேரிகை ஒலிக்கவும், பூமழை பொழியவும், தேவர்குலந் தலையெடுக்கவும், இந்திராணி தீர்க்கமங்கிலியாக விருக்கவும், பூதகணம் புடைசூழவும், திக்குப்பாலகர் பணிசெய்யவும், கோபாக்கினி சிதறும் கண்ணினராகி வெற்றிக்கொடியோடுவந்து தாரகன் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் அமைந்த தமது பாடிவீட்டில் வீற்றிருந்தருளினர்.

வெற்றிச்சங்கின் ஓசைகேட்ட தாரகன் மந்திரிகளைப் பார்த்து, இவ்வொலி எழுதற்குக் காரணமென்னையென்று வினவ, முதன் மந்திரியாகிய செம்பன் கூறுகின்றான். அரச! சிவகுமாரன் தேவர்களுக்கு அவர் பதவியைக் கொடுத்தற் பொருட்டு எம்மோடு போர்செய்தற்குப் படையெடுத்து வந்தனன்; என்றுகூறி உமது உயிரையுண்டு ஊனைப் பல்லுக் கிரையாகக்கொடுக்கும் இயமன் வந்து உமக்கு முன்னின்றானென்றே நிச்சயமாக வெண்ணுதிர். ஆதலால் மாற்றலன் உயிரை உடனே மாற்றிடாது கணப்பொழுதேனுந் தாமதித்தல் தக்கதன்றென வணங்கிக் கூறினான். அதுகேட்ட தாரகன் கவசமிட்டு வில்லைக் கையிலெடுத்து யுத்தசன்னத்தனாய்த் தேர்மேலேறி, எதிர்த்துச்சென்று, அறுமுகங்கொண்டு சிறுவர்போல்நின்ற சிவகுமாரர்மீது பாணங்களைச் சொரிந்தான்.

தாரகன் சிவகுமாரர்மேல் விடுத்த பாணங்களை நாசமாக்குதற்கு இந்திரன்முற்படலும், முற்பட்டுவந்த இந்திரனோடு செம்பனும், அக்கினிதேவனோடு தெம்பனும், இயமனோடு கைடபனும், நிருதியோடு முரனும், வருணனோடு மேகாட்சனும், வாயுதேவனோடு சரபனும், குபேரனோடு காலனும், ஈசானரோடு சுரதெற்பனும், மேல்மண்டலத்துக் கிறையாகிய பிரமதேவரோடு காலகனும், பாதலத்துக்கிறையாகிய விஷ்ணு மூர்த்தியோடு காலநேமியும் போர்செய்தார்கள்.

சம்பரன், சபரன், முனிகண்டன், சண்டன், சுசுண்டன் என்னும் ஐவரும் அந்தராள பஞ்சப்பிராண தேவர்களோடு போர்செய்தார்கள். தூசரன், தீப்தாசியன், தூமிரகேது, தூமமாலி, தூர்ச்சயன், தூமிரகாமி, சர்வகிருதுகரீன் என்னும் எழுவரும் பதினான்கு உலகங்களுள் இரண்டிரண்டு

உலகத்து அதிதேவர்களோடு ஒவ்வொருவராய்ப் போர் செய்தார்கள்.

மேல்மண்டலத்தின் அதிதேவனாகிய பிரமதேவனோடு த லகனென்னு மசுரனும், பாதலத்தின் அதிதேவராகிய விஷ்ணுவோடு காலநேமி யென்னும் அசுரனும் போர்செய்து தோல்வியடைய, சாம்பன், சமரன், சண்டகன், சண்டன், சுசுண்டன் என்னும் ஐவரும் அவ்வதிதேவரோடு தனித்தனியே போர்செய்தார்கள். தூசரன், தீப்தாசியன், அதிதீப்தாசியன், தூமிரகேது, தூர்ச்சயன், தூமிரகாமி, சர்வகிருதுகரன் என்னும் ஏழு அசுரர்களும் மேலேழுலகத்து அதிதேவர்களோடும் போர்செய்தார்கள். அதுகண்ட ஆறுமுகக்கடவுள் மந்தகாசஞ்செய்து இவ்வசுரர்க ளெல்லாரையும் பற்பல பாணங்களினாற்கொன்று அவர்களுடம்பிலுள்ள இரத்தம் பூமியிற் சிந்தினால் அதில் நின்றும் அளவிடப்படாத அசுரர் தோன்றிப் பின்னும் யுத்தம் செய்வார்களாதலால் வாயவ்வியாஸ்திரத்தினாலே அவருடம்புகளைக்கடலில்வீழ்த்தினார். அதுகண்ட தாரகன் இதழைமடித்துப் பல்லாற்கடித்து அவரை உண்பவன்போலப் பெரிய வாயைத் திறந்துகொண்டு எதிர்த்துவர, சிவகுமாரர் நஞ்சினுங்கொடிய பாணமழையைப் பொழிந்து தாரகன் மார்பிலழுத்தினார். தாரகனும் சிவகுமாரர் புயத்திலே ஐந்து பாணங்களை யழுத்தி வேறு பாணத்தால் இந்திரன் குலிசத்தையும் ஒடித்தான். அப்பொழுது சிவகுமாரர் சூலப்படை, இருப்புலக்கை முதலிய ஆயுதங்களை யெடுத்துத் தாரகன் மார்பில் விடுத்து அவனுக்குச் சமீபமாக எதிர்த்துச்செல்ல, அவன் ஆகாயத்திலே மறைந்து பின் பூமியிலேவந்து சிவகுமாருடைய மார்பிலே இரத்தஞ் சொரியும்படி ஆயிரம் பாணங்களைச் செலுத்தி உடனே மறைந்து ஆகாயத்திலே நின்று பாணங்களைச்

செலுத்த, தேவர்கள் உயிர்பதைத்துச் சாய்ந்து பூமியில் விழுந்தார்கள். தேவசேனாதிபதிகள் பலரிறந்தார்கள். யுத்தகளத்தில் நின்ற ஐராவதம், இந்திரனாகிய பாகன் இல்லாமையால், பெருவலிகுன்றி வாடி நீங்காத்துக்கத்தோடு சோர்வடைந்தது.

அதுகண்ட சிவகுமாரர் தாரகனுடைய தேரையும், பாகனையும் அழித்தார். அழிக்கவே தாரகன் கையில் தாங்கிய வில்லோடு பூமியிற்குதித்து எதிர்த்து வந்தான். அப்பொழுது சிவகுமாரர், தாரகன் கையிலுள்ள வில்லைக் கொடிய பாணத்தினாலே துண்டாக்கி நிலத்தில் வீழ்த்தினர். அவன் யுத்தகளத்திற்கிடந்த வாளை யெடுத்துக்கொண்டு எதிர்த்துவந்து புயவலிமைகாட்டிப் போர்செய்யத் தொடங்கினான். முருகக்கடவுள் சிவபெருமான் கொடுத்த வேற்படையைச் செலுத்தித் தாரகன் மார்பை இரண்டாகப்பிளந்து சமுத்திரத்தில் எறிந்துவிட்டனர்,

தாரகன்வதைச்சருக்கமுற்றிற்று.

---

# ௪௫. அசரீரிவாக்களித்தசருக்கம்.

சூதமுனிவர், தாரகன் வதை மான்மியங் கூறக்கேட்ட சௌனகாதி முனிவர்களுக்கு ஈண்டு அதற்கியைபுடைய ஆறாவது அசரீரிவாக்களித்த மான்மியங் கூறுகின்றார்.

சண்முகக்கடவுள், தேவர்களுக்கு நேர்ந்த சோகமேலு மாணங்களை நோக்கி இரக்கங்கொண்டு கைலாயமலையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தியானித்துப், பின்பு தேவர்கள் சுக்கிரன்செய்த சூழ்ச்சியினாலே அறிவுமயங்கித்

தாரகன் கொல்லப்பட்டதை யறியாதவர்களாய்க் கிடக்கின்றனர்; அவர் மூர்ச்சையைத்தீர்த்து அனுக்கிரகஞ் செய்தல் சிவபிரானுடைய திருவருளின்பாலதே யென்றும் இவ்வுலகத்திலே காசி, திருக்கேதாரம், வேதவனம், திருவையாறு, திருவானைக்கா, திருவாஞ்சியம் இத்தலங்களெல்லாம் சிவபெருமான் மகிழ்ந்துறையுந் தானங்களென்றும் நிச்சயித்துணர்ந்து, இவற்றுள் சிவபெருமான் தேவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணுதற்குத் தவஞ்செய்யும்பொருட்டு எத்தலத்திற் செல்லக்கடவேனே என்றுங் கூறியருளினர். பஞ்சகிருத்திய பதியாகிய குமரநாயகர்க்கு அருமையாகவும் எளிமையாகவும் ஒரு செயலிருக்கின்றதோ? அங்ஙனமாகவும் இத்தேவர்களைத் தாமே எழுப்பாமல் தவஞ்செய்து சிவபெருமானைக்கொண்டு எழுப்பக்கருதியது ஓர் திருவிளையாடலோ? பிறிதோர் காரணமோ? பசுவர்க்கத்துட்பட்ட சிற்றறிவினனாகிய யான் அறியேன். அதுநிற்க.

தவஞ்செய்தற்கு மேற்கூறிய தலங்களுள் எத்தலத்திற்குச் செல்வேமென்று குமரநாயகரெண்ணும்போது, அண்ணலே! நீ அவதரித்த வைத்தியநாத தலத்திற்சென்று வைத்தியநாதரைத் தியானித்துத் தேவர்களுடைய வடிவங்களைச் சித்தாமிர்த தீர்த்தக்கரையிலே சேர்த்தற்பொருட்டு வாயு மந்திரத்தைச் செபிக்குக. அவர்களுடைய மயக்கம் நீங்குதற்கு கைலாயபதி உமதேவியாரோடு இடபாரூடராய் அவ்விடத்திற்கு, எழுந்தருளுவார் என்று ஓர் அசரீரி வாக்கெழுந்தது. அக்கணமே சண்முகப்பிரான் வைத்தியநாத தலத்தை யடைந்து வாயு மந்திரத்தை மானதமாகச் செபித்தார். ஆறுமுகக் கடவுளுடைய குறிப்பை வாயுதேவன் அறிந்து தேவர்களுடம்பை எடுத்துக்கொண்டு வந்து சித்தாமிர்த தீர்த்தக்கரையில் வைத்தனன். குமர

வேள் சித்தாமிர்த தீர்த்த நீரைத்தேவருடம்பின்மேற் றெளித்துச் சிவகவசத்தைப் பாராயணஞ்செய்து கொண்டிருந்தார்

இவரிங்கே இப்படியிருக்கச், சப்த இருடிகளும் தேவர் பொருட்டிரங்கிக் கைலாசமலையை அடைந்து, சிவபெருமானை வணங்கிச் சுவாமீ! "பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்" அதனைக் கேட்டருளுக. சுவர்க்க லோகம் அழிந்துபோயிற்று. அதிலிருந்த தேவர்கள் சுக்கிரனுடைய சஞ்சீவி மந்திரத்தினாலே மயக்கமுற்றனர். அவர் மயக்கந் தீர்ந்தெழுதற்குத் தேவரீருடைய திருவருளேயன்றிப் பிறிதொரு பற்றுக்கோட்டை யாம் காண்கிலேம்; இதுவே எங்கள் விண்ணப்பம் என்றுகூறி நின்று பிரார்த்தித்தார்கள். கைலாசபதி அஞ்சன்மின் என்று திருவாய் மலர்ந்து அபயாஸ்தங் கொடுத்தருளினார். அவர்கள் இவ் விண்ணப்பங் கூறியதன்றியும் கைலாசபதியின் திருவருள் கிடைக்குங் காலத்தை நேரே பெறக்கருதிக் கைலையை விட்டகலாமல் எம்பெருமான் சந்நிதானத்தில் நின்றார்கள்.

அவரங்ஙனங் கருதி நிற்கக் கைலாசபதி, மிருத்திகையும், தைலபாத்திரமும், சஞ்சீவியும், வெண்ணீறும் எடுத்துக் கொண்டு உமாதேவியார் உடன்வரச் சிவகணங்கள் புடைசூழ வைத்தியநாதராகப் புள்ளிருக்கு வேளூரை யடைந்தார். சௌனக! பசுபதிப் பெயரிய ஒரு தனி முதல்வனாஞ் சிவபெருமான் வைத்தியநாத ரென்னும் திருப்பெயர் பெற்றதற்குக் காரணம் இதுவே யென்றறிக.

புள்ளிருக்கு வேளூரையடைந்த சிவபெருமான் விபூதியையும், மிருத்திகையையும் தைலத்திற் றோய்த்துச் சஞ்சீவி மருந்தை அதிலே பிழிந்து, தமது திருக்கரத்தினாலே தேவர்களுடைய சரீரத்திற்றடவினார். அவர்கள் ஒரு

மாத்திரைப் பொழுதினுள்ளே மயக்க மொழிந்து திவ்விய தேகம்பெற்று எழுந்து

மிக்கமயக் குறுமோக வஞ்ஞானந் தீர்ந்திமையோர் வேறு ரூது
தக்கசரு வாங்கபூ ரணராகி யெழுந்து தயாபரனே போற்றி
செக்கர்வானந்தனில்வந்துதித்தசிறபிறையணிந்தசெல்வ போற்றி
புக்கவிடமுண்டளித்தவருட்கடலேபோற்றியெனவேத்தினின்றார்.

அசரீரிவாக்களித்தசருக்கமுற்றிற்று.

---

## சசூ. தேவரருச்சனைசெய்சருக்கம்.

சூதமுனிவர், அசரீரி வாக்களித்த மான்மியங் கூறக் கேட்ட சௌனகாதி முனிவர்களுக்கு ஈண்டு இயைபு பற்றித் தேவரருச்சனைசெய் மான்மியங் கூறுகின்றார்.

மயக்கம் நீங்கி மகிமைபெற்று மனமகிழ்ந்த தேவர்கள், வைத்தியநாத சுவாமியை மீட்டுந்துதித்து வணங்கிச், சுவாமீ! அடியேங்கள் தேவரீருக்குப் பூசைபண்ணித் திருவிழாச் செய்யப் பூரணகிருபை செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர் அவ்வாறே ஆகுக என்று அருள் புரிந்து, தேவர்களே! வினைவயத்தால் வந்து, பதிபுண்ணியத்தாலன்றித் தீராத விடாச்சுரம், பித்தசுரம், முறைச்சுரம், வாய்புலம்பற்சுரம், சன்னிபாதம், கண்ணோய், சிரோரோகம், சுவாசகாசம், காதுநோய், குன்மநோய், வெண்குட்டம், வயிற்றுவலி, கயரோகம், மேகநோய், வைசூரிநோய், நீரிழிவு, நகநோய், தந்தநோய், மார்படைப்பு, பில்லி, சூனியம், பேய்பிடித்தல் முதலிய

நோயாளர்கள் வைத்தியநாததலத்தில் வந்து அடிவைத்த அப்பொழுதே புகுமிடந்தெரியாமல் விட்டு ஓடிப்போகும் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அந்தத் திருவாக்கை நன்றாயுணர்ந்த தேவர்கள், மான் மழுத்தரித்த கரங்களையும், அருள் பொழியுந் திருக்கண்களையும், விபூதிபொருந்திய திருமேனியின் ஒளியையும் மனமுருகக்கண்டு தரிசித்துக் கொண்டுநின்று, பூவையும் நீரையுஞ்சொரிந்து, வைத்தியநாதசுவாமிக்குப் பூசை செய்து, அன்னம், பழம், இளநீர், பானீயம், பாயசம், தாம்பூலம் இவைகளை நிவேதனஞ்செய்து, தூபதீபங்காட்டிக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணித் தோத்திரஞ் செய்தார்கள்.

பின்பு வசந்தோற்சவம் நடத்திப்பூர்த்திசெய்து, அன்பு கொடுத்து அருள்வாங்கி, இந்திரன் முதலிய இமையவர் யாவரும் அறிவும் ஆற்றலும் உடையராய், வைத்தியநாதசுவாமி மலரடி வணங்கிவிடை பெற்றுக்கொண்டு பொன்னுலகஞ்சென்று நன்னிலையராய் வாழ்ந்தார்கள்.

தேவரருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

---

# ௩௭. வாலாம்பிகையருச்சனைசெய் சருக்கம்.

சூதமுனிவர், தேவர் அருச்சனைசெய் மான்மியங் கூறக்கேட்ட சௌனகாதி முனிவர்களுக்கு மேல் இடையீடு

பட்ட மான்மியத்திற்கிணையுடைய வாலாம்பிகை யருச்சனை செய் மான்மியங் கூறுகின்றார்.

திருக்கைலாசமலையிலே செம்பொற்றிருக் கோயிலிலே சுத்த சாட்குண்ணிய கைலாசபதியாகிய சிவபெருமான் விஞ்சையர் இசைபாட, முனிவர் தோத்திரஞ் செய்ய, தேவர் தங்குறைகளைச் சொல்லிப் பிரார்த்திக்க, பூதகணம் குடை கொடி ஆலவட்டம் பிடித்தல் வீசுதல் முதலிய தத் தமக்குரிய பணிகளைச் செய்ய, இரத்தின சிங்காசனத்திலே தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியா ரோடு வீற்றிருந்தபோது, தேவர்களுக்கு அருள்புரியத் திருவுளங்கொண்டு உமாதேவியாரோடு முத்திமண்டபத்தின் தென்திசையை யடைந்து பூலோகத்திற்குச் செல்லத் திரு வுளங்கொண்டருளினர். அப்போது உமாதேவியார் தமதழ கினைப்பார்த்துச் சிவபெருமானை நோக்கி ஐய! என்னைப் போன்ற அழகுள்ள பெண்களும் தேவரீரைப்போன்ற அழ குள்ள புருடரும் எவ்விடத்தும் எக்காலத்தும் இல்லையென வியந்து கூறிச் செருக்குற்று மகிழ்ந்தார்.

அது கேட்டருளிய சிவபெருமான் அப்பொழுதே மறைந்தார். நெற்றிக்கண்ணும், நீண்டசடையும், நீறணிந்த மேனியும், நீலகண்டமும், மான்கன்றும் மழுவும் பொருந் திய திருக்கரங்களும் உடைய அற்புத மேனியர் அனேகர் உமாதேவியாரைப் போன்ற ஒவ்வொரு சத்திமாரோடு புணப்பட்டார்கள். உமாதேவியார் அவர்களைப் பார்த்த திசயித்து, சிவபெருமானைத் துதித்தார். அவர் வெளிப் பட்டார். அம்மை அப்பிரானை நோக்கி, சுவாமீ! இவர் கள் யாரெனவினவ, வைத்தியநாத தலத்திலே எம்மை அருச்சித்து இப்பேறுபெற்ற, விஷ்ணு, பிரமா, இந்திரன்,

சந்திரன், சூரியன், முனிவர்கணம், சித்தர்கணம் முதலிய பத்தர் கூட்டமென்று விடையளித்தார்.

அதுகேட்ட அம்மையார் நாயகரே! அத்தலத்தில் அடியேனுந் தேவரீரைப் பூசித்தற்கு அருள்செய்தல்வேண்டும் என்று பிரார்த்திக்க, அவ்வாறே செய்கவென்றருளிச் செய்தார். உமாதேவியார் வைத்தியநாத தலத்தையடையக் கருதி விமானத்திலேறி உருத்திரகணங்களும், தேவர்களும், தெய்வப்பெண்களும் பக்கத்திற்சூழ, முழவொலி யாழொலி வேதவொலி முதலியன நாற்றிசையினும் எழச்செல்லும் பொழுது, திருக்கேதாரத்தைக்கண்டு இருகரங்களையுங் குவித்து அஞ்சலித்து நின்று கண்கள் ஆனந்த அருவிசொரிய மனங்கசிந்துருகக் கேதாரநாதரைப் பூசித்தார்.

அங்குநின்று காசியை அடைந்து விசுவநாதசுவாமியைப் பூசைசெய்துகொண்டு, அங்கு நின்று நைமிசாரணியத்தையடைந்து அங்குள்ள முனிவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்து, அங்கு வீற்றிருக்குஞ் சிவபெருமானைப் பூசித்தார். அங்கு நின்று குருக்கேத்திரத்தை அடைந்து, சிவபெருமானைவணங்கி, அங்கு நின்று ஸ்ரீசைலத்தை யடைந்து பருப்பதநாதரைத் தரிசித்து வணங்கி, அங்குநின்று தக்ஷிண கைலாயத்துக்கு வந்து காளத்தியப்பரைத் தரிசித்து வணங்கிக், காஞ்சீபுரத்தையடைந்து, ஏகாம்பரநாத சுவாமியைத் தரிசித்து வணங்கி, திருவண்ணாமலையை அடைந்து வலம் வந்துதரிசித்து வணங்கி, விருத்தாசலத்தை யடைந்து, பழமலைநாதரைத்தரிசித்து வணங்கிச், சிதம்பரத்தை யடைந்து, நடேசப்பெருமானைப் பூசை செய்து வணங்கி, அங்கு நின்று சீர்காழியை அடைந்து, பிரமபுரீசரைப் பூசை செய்து, வைத்தியநாத தலத்தை யடைந்து பூஞ்சோலையையும்,

தாமரைத் தடாகத்தையும், இரத்தின விமானத்தையும், திருக்கோபுரத்தையும், பொன் மதிலையும், தேரோடும் வீதிகளையும், மாடமாளிகைகளையும், உமாதேவியார் மனமுருகக் கண்டு மகிழ்ச்சிமிகுந்து, விமானத்தினின்று இறங்கி வாலைப் பருவங்கொண்டு, சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, விபூதி தரித்து, நெற்றியிற் குங்குமமிட்டு, உருத்திராக்கந்தரித்து, வலம்வந்து, திருக்கோயிலுட் சென்று வைத்தியநாதசுவாமியினுடைய திருவடிகளைத் துதித்துச், சிவாகம விதிப்படி பூசை செய்யத் திருவுளங்கொண்டு செங்கழுநீர், கோஷ்டம், ஏலம், இலாமிச்சவேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, பச்சைக் கர்ப்பூரம் என்னுமிவைசேர்ந்த திருமஞ்சனம், எண்ணெய்க்காப்பு, பசுப்பால், பசுத்தயிர், குங்குமப்பூ, கோரோசனை, இளநீர், முக்கனி, தேன், கருப்பஞ்சாறு, சருக்கரை, புத்துருக்கு நெய், இளவெந்நீர் புனுகு, குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கர்ப்பூரம், சவ்வாது, கஸ்தூரி என்பவைகளோடு சேர்ந்த சந்தனக்குழம்பு முதலியவற்றால் அபிஷேகஞ்செய்து, திருவொற்றாடை சாத்தி, திருவெண்ணீறணிந்து, பீதாம்பரந்தரித்து, பொற்பூணூல் சாத்தி, மணிமகுடந்தரித்து, இரத்தினாபரணங்கள் அணிந்து, பூமாலை வில்வமாலைகளாலலங்கரித்து, தூபதீபங்காட்டி, சுத்தான்னம், கறியமுது, பருப்புப் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், மிளகோதனம், புளியோதனம், ததியோதனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந்தோதனம், பாயசம், வடை, மோதகம், பிட்டு, அப்பம், தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி, நெய், காய்ச்சுப்பால், தயிர், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேங்காய்க்கீறு, சர்க்கரை, பானகம், பானீயம், வெற்றிலை, பாக்கு, முகவாசம் என்னும் நைவேத்தியங்களைப் பற்பல பொற்றட்டுகளில்

வைத்து, அன்போடு நிவேதித்து, வாத்தியமுழங்க, அலங்கார தீபமுதல் கர்ப்பூரதீபம் இறுதியாக உள்ள தீபங்களைக் காட்டிச், சோடசோபசாரத்தோடு பூசை செய்து, வேத வாக்கியங்களைச் சொல்லித் துதித்தனர்.

வைத்தியநாதர் வாலாம்பிகையம்மை அன்போடுசெய்த பூசையை மகிழ்ந்து, அம்பிகைக்கு நித்திய வாலப்பருவமும் இடப்பாகமுங் கொடுத்தருளினார். அம்மையார் மகிழ்ச்சி கூர்ந்து அடியார் விரும்பிய வரங்களைக் கொடுத்தற்பொருட்டு வைத்தியநாத தலத்தில் இன்றும் மகிழ்ந்து வீற்றிருந்தருளுகின்றார்.

சௌனக! அசரீரி வாக்களித்த மான்மியத்தால் கைலாசபதி 'வைத்தியநாதர்' என்னும் நாமமெய்திய காரணங் கூறி இங்கே உமாதேவியார் வாலாம்பிகை யென்னும் நாமம் எய்திய காரணமுங் கூறப்பட்டது. நன்கிதினுணர்க.

வாலாம்பிகையருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

---

# ச அ. திருவிழாச்சருக்கம்.

சூதமுனிவர், சௌனகர் வினவிய இரண்டு வினாக்களுக்கும் தக்க பதிலளித்து நைமிசாரணிய முனிவர் நாற்பத்தெண்ணாயிரவர்மீதுங் கருணைகூர்ந்து இன்னும் சில மான்மியங்கள் கூற வேணவாக்கொண்டு முதலில் திருவிழா மான்மியங் கூறுகின்றார்.

பிரமதேவர் வைத்தியநாத தலத்தின்மகிமையை வேத முதலிய எல்லா நூல்களும் வியந்து கூறுதலையுணர்ந்து,

தேவர்கள் தம்மைச் சூழவும, பலவகை வாத்தியங்கள் ஒலிக்கவும், வைத்தியநாத தலத்தையடைந்து, வைத்தியநாத சுவாமியின் இரண்டு திருவடிகளையும் நமஸ்கரித்துப் பின்,

ஆரணந் தேடிக் காணு வையனே போற்றி மூல
காரண போற்றி யுன்னுங் கற்பனை கடந்தாய் போற்றி
தாரணி தன்னிற் *றேன்றுத் துணையதா யிருந்தாய் போற்றி
வாரணி செம்பொற் கொங்கை மங்கைதன் பங்கா போற்றி

என்று இவ்வாறு தோத்திரஞ்செய்து, பின்னரும் நமஸ்கரித்து எழுந்து ஆனந்தபாஷ்பம்சொரியநின்று, உமது திருவடியைப்பூசைசெய்து திருவிழா நடாத்துதற்குத் திருவருள் செய்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதுகேட்ட சிவபெருமான், எமது சத்தியாகிய உமையவள் வைத்தியநாத தலத்தின் மகிமையை அறிந்து, அத்தலத்தில் நம்மை நாடோறும் பூசிக்கவிரும்பி, வேதவாக்கியங்களால் தோத்திரஞ்செய்து, அவ்வரத்தைப் பெற்றுப் பூசை செய்துகொண்டிருக்கின்றாள். ஆதலால், நீ விருப்பிய வரத்தைத் தருதல் எவ்வாறு? யான் வீற்றிருக்குங் கைலைமலையையும், கையிற் பிடித்திருக்குஞ் சூலத்தையும் விட்டுவிடவேண்டுமென்று அடியவர் விரும்பினுல் அப்பொழுதே விட்டுவிடுவேன். அன்பர்க்குக்கொடுத்த வரத்தை ஒரு காலத்தும் நீக்கிவிட நினையேன். ஆதலால் நீ உமையவளைத் துதித்து அவள் அருள் பெற்றுத் திருவிழா நடத்துகவென்று அருளிச்செய்தார்.

---

*"ஈன்றுளு மாயெனக் கெந்தையு மாயுடன் றேன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்று ணிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றுத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

என்னுந் தேவாரம் இங்கே ஒப்பு நோக்கற் பாலது.

அதுகேட்ட பிரமதேவர் மனமகிழ்ச்சியுடனே வாலாம்பிகை அம்மையை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்தனர். அம்மை அவரை நோக்கி நீ விரும்பிய வரத்தைக்கேள். அதனை யாம் தருவேம் என்றருளிச்செய்ய, பிரமதேவர் வைத்தியநாதரைப் பூசைசெய்து திருவிழா நடத்த விரும்பினேன் என்று கூறினர். நாள்தோறும் யாம் பூசைசெய்தலால் அவ்வரந் தாத்தக்கதன்று; அங்ஙனமாயினும், விரும்பிய வரம் தருவேமென்று கூறிய வாக்குப்பிழையாது; ஆதலால் அவ்வரத்தைத் தந்துவிட்டேம்; பிரமனே! நீ திருவிழா நடத்துங் காலத்தில் சிவபூசைக்குண்டாய இடையூறு தவிர்ந்துய்யும் பொருட்டு வைத்தியநாத சுவாமியை யாம் பூசைசெய்வேம்.

இடபவாகனக்காட்சி கொடுக்கின்ற ஐந்தாந்திருவிழாவில் வைத்தியநாத சுவாமியைப் பூசைசெய்தால் எல்லா வரங்களுஞ் சித்திக்கும். சிவபூசையில் உண்டாகும் குற்றங்களெல்லாம் நீங்கும். அவரைத் தரிசித்தோர் அடையும் பலன் யாவராலுஞ் சொல்லமுடியாது. முன்னாளிலே ஞானநாயகராகிய சிவபெருமானை மந்திரலோபம் முதலிய குற்றங்கள் பொருந்தப் பூசைசெய்கிறதில்லையென்று உறுதிபண்ணிக்கொண்டு நாடோறும் நியமமாகப் பூசைசெய்தேம். நித்திய பூசைசெய்யும் அதிகாரத்தை உனக்குத் தந்தபடியால், அக்குற்றந்தீர நீ நடாத்தும் உற்சவத்தில் சிவாகம விதிப்படி சோடசோபசாரத்தோடு பூசைசெய்வேமென்று கூறி, சிவபூசை செய்யும்பொழுது உண்டாகும் அபசாரங்களும் குருத்துரோகமும் முதலிய எல்லாப் பாவங்களும், பூசாகாலத்தில் கொட்டாவியை உமிழ்தல், வைதல், கோபித்தல், வீண்வார்த்தைபேசல், புதல்வரைப் பாராட்டல் இவற்றால் வருந்தோடமும் ஐந்தாந் திருவிழாவில் இடபாரூடரைத் தரிசித்தலால் நீங்கும் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இங்ஙனங் கூறக்கேட்ட பிரமதேவர் வைத்தியநாத சுவாமிக்கு அதனை விண்ணப்பஞ்செய்து அவரருள்பெற்று நித்திய பூசையையும், மகோற்சவத்தையும் நடத்தினர். அதன் சிறப்பு எவராலுஞ் சொல்லமுடியாது. ஆயினும் ஆசைமிகுதியாற் சிறிதுகூறுகின்றேன்.

பொன்னுலகம், பூவுலகத்தில் வந்திருந்ததென்னும்படி சிறக்க, சங்கநிதியும், பதுமநிதியும், சிந்தாமணியும், காமதேனுவும், சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகமென்னும் ஐந்தருவும், குபேரனுடைய செல்வமுழுதும் திருக்கோயிலிலே ஒரு பக்கத்திலே நிறைந்திருந்தன. வீதிகளிலே ஆகாயத்தை அளாவும்படி வெள்ளிச்சாந்து தீற்றி இரத்தினங்கள் அழுத்திச் செய்யப்பட்ட மாடங்களிலும், இரத்தினத்தினல் பிரகாசிக்கும் வீட்டுச்சுவர்களிலும், இங்குலிகச் சேற்றைச் சந்தனக்குழம்பிற்றோய்த்துச் சித்திரங்கள் எழுதப்பட்ட சித்திரகூடங்களிலும், தென்றல்வீச நிலாவெறிக்கப் பெண்களும் ஆடவர்களும் சந்தோஷமிகுந்து, அவருள் ஆடவர்கள் வைத்தியநாதர் மகோற்சவத்திற்காகத் தங்கள் தங்கள் வீடுகளின் வாயில்கடோறும் வச்சிரத்தூண்களை நிறுத்தி, அதன்மீது மாணிக்க உத்திரங்களை வைத்து, மாகத இரத்தினங்களினலே வேய்ந்த பந்தரிலே நவரத்தின மாலைகளைத் தொங்கக் கட்டி, இளநீர் பாக்குக்குலை வாழைக்குலைகளைத்தூக்கி, பரந்த நெடிய வீதி அழகு பெறும்படி வாயிலின் இருபக்கமும் அலங்கரித்தார்கள்.

பெண்கள் வீதிகடோறும் இரத்தின மேடைகளில் வெள்ளியாற்செய்த பூரணகும்பங்களையும், பொன்னுற்செய்த பூரணகும்பங்களையும், பூமாலை முதலியவற்றுல் அலங்கரித்து வைத்து, வீதிகளில் பனிநீரிற்கரைத்த கலவைச்சாந்

தைத் தெளித்து, தாமரைப் புஷ்பங்களைப் பரப்பிவைத்தார்கள்.

பிரமதேவர், பங்குனி மாதத்திலே சுக்கில பக்கத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே வைத்தியநாத சுவாமியினுடைய மகோற்சவத்திற்காக எட்டுக் கொடியேற்றத்தோடு பெரியகொடி ஏற்றப்படும். புனர்பூச நட்சத்திரத்திலே இடபாரூடக் காட்சியாகிய ஐந்தாந்திருவிழா நடத்தப்படும், ஆயிலிய நட்சத்திரத்திலே தேர்த்திருவிழா நடத்தப்படும். உத்தரநட்சத்திரத்திலே தீர்த்தத்திருவிழா நடத்தப்படும். என்று திருமுகம் எழுதி அசுவினிதேவர் கையிற்கொடுத்து இந்திரன், முனிவர், இயக்கர், தேவர், சித்தர், அன்றிப் பதினென்குலகத்தவர்கள் யாவருக்கும் திருமுகத்தைக் காண்பித்து நல்ல மங்களகோலத்தோடு அவரவர்கள் வாகனங்களில் வரும்படி சொல்லி வாருங்களென்று அனுப்பினர்.

அசுவினிதேவர்கொண்டு சென்றுகாட்டிய திருவிழாத் திருமுகங்கண்டு, தேவருலகத்தில் உள்ளவர்களும், அண்டமுகட்டில் உள்ளவர்களும், மற்றைய உலகங்களில் உள்ளவர்களும், மலைப்பிரதேசத்தில் இருப்பவர்களும், திருமுகத்தில் எழுதிய திருவிழா நிகழ்ச்சியைத்தெரிந்து, அளவிலாச் சந்தோடம் பொங்கிப்பெருக, வைத்தியநாததலத்தை யடைந்து, உற்சவ தரிசனத்திற்கு வருவோர் உண்ணுதற்கமைத்த அன்னசாலையையும், சிவபெருமானுக்கமைத்த யாகசாலையையும், பிறவற்றையுங் கண்குளிரப்பார்த்து, தத்தமக்குத் தனித்தனி யமைத்த சாலைகளிலே யிருந்தார்கள்.

அதன்பின் பிரமதேவர், ஐந்தாமிடம் சுத்தமாகவும இலக்கின முதலியவைகள் அநுகூலமாகவும் இருக்கும் நன்முகூர்த்தம் பார்த்து, மனவுருக்கத்தோடு கொடியேற்றிச்

சோடசோபசாரங்களைக் குறைவின்றி அழகாகச்செய்து, வைத்தியநாத சுவாமியினுடைய சிவந்த திருவடியை நமஸ்கரித்துத் திருவிழாவைச் சிறப்பாகச் செய்தார். அப்பொழுது, எங்கும் சங்குகள் முழங்கின; அந்தணரோதும் வேதவொலி யெழுந்தது; தேவதுந்துபிகள் ஒலித்தன; ஏழிசைப்பாடல் எழுந்தது; அப்பொழுது மிருதங்கம் ஒலிப்ப, சிலம்பொலி பரம்ப, தாளங்கணீரென்னத் தேவதாசிகள் நடனஞ்செய்தார்கள்.

தேவருட்பலர் துர்க்கையின் சிங்கக் கொடியையும், காளியின் யாளிக்கொடி அலகைக் கொடிகளையும், சிவபெருமானுடைய இடபக்கொடியையும், பிரமாவின் அன்னக்கொடியையும், சுப்பிரமணியக் கடவுளின் கோழிக்கொடியையும், மன்மதனுடைய மகரக்கொடியையும், பூமியெங்கும் விளங்குகின்ற திருவிழாவின் கீர்த்திக்கொடியோடு உயரப் பிடித்தார்கள். சிலதேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். திருவிழாவைத் தரிசித்தோர் யாவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மயில்விசிறி, மயிற்றோகை, கண்ணாடி, சுருட்டி, சாமரம் ஈயோட்டி, பூச்சக்கரவாளக்குடை, வெண்கொற்றக்குடை, இரத்தினமிழைத்த பொற்குடை, இரத்தினமிழைத்த வெள்ளிக்குடை, முத்துக்குடை, பவளக்குடை, ஈட்டி, வாட்படை முதலியனவும் அளவில்லாத தீவர்த்திகளும் நிறைந்தன.

பிரமதேவர், அன்போடு செய்த ஐந்தாந்திருவிழாவிலே, அடியார்க்கு நன்மையை யடைவிக்கின்ற வாலாம்பிகையர்கிய உமாதேவியார் பேரன்போடு பூசித்தார். அருட்செல்வத்தையுடைய குமாரக்கடவுள் ஐந்தாந்திருவி

ழாவிலே வைத்தியநாதரைப் பூசித்து வேலாயுதத்தைப் பெற்றனர். ஒன்பதாந் திருவிழாவிலே அலங்கரிக்கப்பட்ட திருத்தேரிலே வைத்தியநாதர் எழுந்தருளிவருதலைத் தரிசனஞ்செய்து யாவரு மகிழ்ச்சியடைந்து, பத்தாந்திருவிழாவிலே பருவதினத்திலே ஏனைய தீர்த்தங்களிலும் பெரும் பயன் கொடுக்கும சித்தாமிர்த தீர்த்தத்திலே வைத்திய நாதசுவாமி திருவுளப்பாங்கோடு திருமஞ்சனமாடியருளி ஞர். அப்பொழுது தரிசனத்திற்கு வந்த யாவரும் ஸ்நானஞ் செய்து பெரும் பயனடைந்தார்கள். பிரமதேவர், பல புவனங்களினுமிருந்து மகோற்சவ தரிசனத்தின் பொருட்டு வந்த தேவர் முதலிய யாவருக்கும் விருப்பமிகும்படி நல்ல உபசார வசனங்கள் கூறி, நவரத்தினங்களை மழைபோலச் சொரிந்து, பொன்விமானங்களையும் கொடுத்து, ஏனையுபசாரங்களுஞ் செய்து, அவர்கள் மனமகிழ்ச்சியோடு தத்தநகரங்கட்குச் செல்ல விடைகொடுத்தார்.

திருவிழாவுக்கு வந்த முனிவர்களும், வித்தியாதரர்களும், தேவர்களும், பதினென்குலவாசிகளும் வைத்தியநாதரை வணங்கித் தோத்திரஞ் செய்து மனமகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் நகரங்களுக்குச் சென்றார்கள்.

பின்னர் அளவில்லாத வுயிர்கள் பேரின்பமடைய வைத்தியநாத சுவாமிக்குச் சிவாகமவிதிப்படி திருவிழாச் செய்த பிரமதேவர், அவர் கிருபை மிகுந்தளித்த பலவரங்களைப் பெற்றுக்கொண்டு சரஸ்வதி பின்னே செல்லப் பிரம லோகத்தை யடைந்தார்.

திருவிழாச்சருக்கமுற்றிற்று.

# ௪௬. குமரநாயகன் அருச்சனைசெய்சருக்கம்.

சூதமுனிவர், பிரமதேவர் வைத்தியநாதருக்குத் திருவிழாச்செய்த மான்மியங் கூறக் கேட்ட சௌனகாதி நைமிச முனிவர்க்கு ஈண்டுக் குமரநாயகன் அருச்சனைசெய் மான்மியங் கூறுகின்றார்.

முத்துக்குமாரசுவாமி எங்கும் நிறைந்த முதற்றெய்வமாகிய வைத்தியநாதருடைய அசரீரி வாக்கைக் கேட்டு அன்பு மிகுந்து சரவணப் பொய்கையிலே, பலவகை வாத்தியங்கள் ஒலிக்க, சுபகாரியங்களைச் செய்து பயன்பெற விரும்புவோர் கிழக்கு நோக்கியிருந்து செய்தல் வேண்டுமென்பதை அவர்க்குத் தெரிவித்தற் பொருட்டுத் தாம் கிழக்குத் திசையை நோக்கிச் சிவத்தியான பராயிருந்தார். வைத்தியநாத சுவாமியும், கைலாசத்தை நீங்கி அந்த வைத்தியநாத தலத்திற்கு வந்து அங்கே அழகு பொருந்தத் தழைத்து விளங்குகின்ற வேப்பமரத்தின் அடியிலே பங்குனி மாதத்துப் பூர்வ பக்கத்து ஏகாதசி திதியிலே ஆயிலிய நட்சத்திரத்தோடுகூடிய செவ்வாய்க் கிழமையிலே சூரியோதய காலத்திலே மேற்றிசையை நோக்கிக் கைலாசத்திலிருப்பதுபோலவே குமாரருக்கு எதிர்முகமாக வீற்றிருந்தருளினர்.

முத்துக்குமாரசுவாமி இருமுதுகுரவர்களையுந் தரிசித்து மகிழ்ந்து பின் வேப்பமரத்தின்கீழ் வீற்றிருந்த வைத்தியநாதசுவாமியின் திருமுடிமே லபிஷேகஞ் செய்து பூமாலையணிந்து திருவமுதை நெய்யொழுகுகின்ற கறியமுதோடு

நிவேதித்துத் தூபதீபங் கொடுத்து, ஏற்றிய அலங்கார தீபத்தை முகமண்டலம் பிரகாசிக்கும்படி மும்முறை சுற்றிச் சோடசோபசாரஞ் செய்து, பண்ணோடு தோத்திரம் பண்ணித் தன்வசமின்றி நின்று செய்யும் உண்மைப் பூசையை வைத்தியநாதசுவாமி மகிழ்ந்து, உலகத்தோர் மகிழும்படி முத்துக்குமார சுவாமி விரும்பிய வரமனைத்துங் கொடுத்தருளினார். அப்பொழுது, வாலாம்பிகை யம்மையாரும் அன்போடு உச்சிமோந்தார். அவ்விருமுது குரவர்களுடைய திருவடிகளைவணங்கிச் சிவபெருமானைப்பார்த்து, எம்பெருமானே! அடியேனுடைய நா தேவரீரைத் துதிக்கவும், கை பூக்கொய்து சாத்தவும், *தலை அன்பர்க்கருள் செய்கின்ற உமது திருவடிகளை வணங்கவும், கண் தேவரீர் திருமேனியைத் தரிசிக்கவும், மூக்கு உமது திருமுடியிலணிந்த நிருமாலியக் கொன்றைமலரை மோப்பவும், செவி உமதுண்மைப் புகழை யெப்பொழுதுங் கேட்கவும் அருள் பாலித்தல் வேண்டும்; என்று பிரார்த்தித்தார். வைத்தியநாதக் கடவுள் முத்துக்குமாரரைப் பார்த்தருளி அவ்வரத்தைக்கொடுத்து மிகமகிழ்ந்து, உன்னைவழிபடுகின்ற அடியார்கள் மனோபீட்டத்தை யடையும்படிவரங்கொடுத்து "பொழிமதுரத் தமிழ்ச்சங்கப் புலமைதெரி யறிவுடைய புதல்வர்ப் பேறும்" சுவர்க்கலோக முதலாயுள்ள மேற்பதவிகளும் கொடுக்கக் கடவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

எனதருமைப் புதல்வ! உன்னை முன்பு நமஸ்கரித்து மனமுருகத் தோத்திரஞ் செய்து உனதருளைப் பெற்றுக்

* "தலையே நீவணங்காய" என்பதை முதலாகவுடைய திருவங்கமாலையும், "கோளில்பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்-றாளை வணங்காத் தலை" என்ற குறளும் இங்கே சிந்திக்கற்பாலன.

கொண்டு பின்பு என்னை வணங்கினவர்களுக்கே இத்தல வாசஞ்செய்யும் பலனும் இத்தல புராணங் கேட்கும் பலனுஞ் சித்திக்கும்; அங்ஙனஞ் செய்யாதவர்களுக்கு அப்பலன்களில்லை. இஃதுண்மையாகும் என்று வைத்தியநாத சுவாமி திருவாய் மலர்ந்தருளினார்.

வைத்தியநாதசுவாமியினுடைய அன்பிற்குரிய முத்துக்குமாரசுவாமி இச்சா சத்தியாகிய வள்ளி நாயகியாரும், கிரியா சத்தியாகிய தெய்வயானை யம்மையும் இருமருங்கிலுமிருப்பத் தேவர்குழாம் வணங்க வைத்தியநாத சுவாமிக்குப் பக்கத்திலே வீற்றிருந்தருளினார்.

குமரநாயகனருச்சனைசெய்சருக்கமுற்றிற்று

---

# ரு௦. ஆதித்தனருச்சனைசெய் சருக்கம்.

சூதமுனிவர், குமரநாயகன் அருச்சனைசெய் மான்மியங்கூறக் கேட்ட சௌனகாதி முனிவர்க்கு ஈண்டு ஆதித்தன் அருச்சனைசெய் மான்மியங் கூறுகின்றார்.

வரத்தினால் மகிமைவாய்ந்த தக்கனுக்கு அதிதி யென்னும் பெயரையுடைய ஒரு பெண் பிறந்தாள். அவளைத் தக்கன் காசிபமுனிவருக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். அவள் வயிற்றில் சூரியன் பிறந்தான். அவன் தான் விவாகஞ் செய்த மனைவியாகிய சாயாதேவியோடு கூடிவாழுங் காலத்திலே, துவட்டாவென்னும் அசுரத்தச்சன் பெண்ணாகிய காந்திமதியையும் இரண்டாவது மனைவியாக விவாகஞ்

செய்துகொண்டான். அவ்விரு மனைவியருள் மூத்தமனைவி சாயாதேவி யிருக்கின்ற கமலாசனத்திலே ஒருநாள் இளைய மனைவியாகிய காந்திமதி யிருப்பச் சாயாதேவி கண்டு கடுங் கோபங்கொண்டு தன்னாயகனாகிய சூரியனுக்கு முன்னே சென்று, காந்திமதி யென்பாள் தன்னை யெனக்குச் சமான மாக வெண்ணி, சென்ற தினத்திலே யானிருக்கின்ற பொற் பதுமாசனத்தில் இருந்தனள் என்று கூறினாள்.

அவள் பின்னரும் இங்ஙனங் கூறுகின்றாள்; என தான்ம நாயகரே! உயர்குலப்பெண் அழகில்லாதவளாயி னும், கொடியவளாயினும், கூனியாயினும், குருடியாயினும் அவளே இல்லறத்திற்கு மிகவிசேடமுள்ளவள். இழி குலப் பெண் கொடுமை, கூன், குருடு இல்லாத அழகினளாயி னும், இனிய மொழியினளாயினும், இல்லறத்திற்கு விசேட மில்லாதவளேயாம். அத்தகைய இழிந்தவளைத் தொட் டால், தொட்டவரும் அவருடைய குலத்தவரும் நரகில் வீழ்வர். அவள்பெற்ற புதல்வர்களால் மேலுலகமுங் கிடை யாது. ஆதலால், நீர் அக்காந்திமதி யென்னுந் தச்சப் பெண்ணுக்கு இழிவாகிய தண்டனை செய்யா தொழிந்தால் என்னுயிரை இப்பொழுதே இழந்து விடுவேனெனக் கூறி னாள். எனது பட்டத்துத் தேவீ! இங்கே வா, யான் சொல் வதைக் கேள்; நீயே என்னுடைய மனைவி; அவள் என் னுடைய தாசியே; இவ்வாறாக நம்மிருவரையும் பகுத் துணர்ந்து தாரதம்மியமாக நடத்துவே னென்று கூறி னான்.

நீதி சாஸ்திர முறைப்படி ஒரு வழக்கை விசாரித்தறி யாது மனம் போனவாறு தண்டஞ் செய்தால் செய்தவன் வேடனாய்ப் பிறப்பான், மனைவி செய்யுங் குற்றத்திற்குத் தண்டனை, நாயகனானவன் கோபித்துப் பேசுதலும், ஒரு

சயனத்திற் றம்பதியாகப் படுத்திராமல் வேறு சயனத்திற் படுத்திருத்தலுமாம். தாசர்களுக்குக் கொடிய தண்டனை அடித்தலும், தாசிகளுக்குக் கொடுந் தண்டனை முண்டனஞ் செய்தலுமாம். இழிகுல மனைவியருக்குச் செய்யுந் தண்டனை தொடாமல் நீக்கிவிடுதலே யாகும். என் பிராண நாயகியே! இனி அவளை மனத்தினாலே நினைப்பதுமில்லை; வாயால் அவளோடு பேசுவதுமில்லை யென்று சொல்லித் தன்னுடைய உஷ்ண கிரணத்தினாலே காந்தி மதியைத் தாக்கினான். அவள் உடல் வெதும்பி, அதனைச் சகிக்கலாற் றாது தன் பிதாவின் முன்சென்று நமஸ்கரித்து நடந்ததைக் கூறினாள்.

கூறக்கேட்ட பிதாவாகிய துவட்டா, தன் புதல்வியின் கருகிய சரீரத்தைப் பார்த்துச் சூரியனுக்கெதிரே நின்று மருக! என் புதல்விமேல் விருப்பமின்மைக்குக் காரணத்தை யான் அறியும்படி சொல்லுக வென்றான். சூரியன் கோபித் துப் பெருமூச்சுவிட்டு, துவட்டாவே! நீ இழிந்த சாதி ஆத லால் யான் உன்னோடு பேசுதல் தகாதென்று கூறினான்.

அங்ஙனங் கூறக்கேட்ட துவட்டா என்பான், மருக! நீ கூறியது உண்மையே. ஆயினும் உயர்ந்தோரை இழிந் தோர் சேர்ந்தால் இழிவு நீங்கி உயர்ந்தோ ராவரென்று நூல்களும் ஆன்றோரும் ஒருங்கொத்துக் கூறலை நீயறியாய் போலும் எனக் கூறினான்.

சூரியன் அதுகேட்டு, துவட்டாவே! உனது புதல் வியை எனக்கு விவாகஞ்செய்து தருகவென்று யான் வருந்தி இரந்து கேட்டதுண்டோ! மூன்று பனையுயரத்திற் குமேலே தம்பத்திலிருந்த உனது கைவிரல் மோதிரத்தை உன் மகள் சுயம்வரத்திற்கு வந்திருந்த ஏனையோர் எய்து

வீழ்த்தும் வலிமையிலராயினர். அதுகண்டு கீழேயுள்ள நீர்நிழலிலே பார்த்துக் கண்ணுடியில் உளுந்துருளுதற்கு முன் யான் ஒரு பாணத்தால் எய்து கீழே வீழ்த்தக்கண்டு என் வில்வித்தையை வியந்து, உனது புதல்வியை எனக்குப் பரிசாகக் கொடுத்தாய்.

ஆதலின் உன் மகள் விலைப்பொருளாயினள் என்று இகழ்ச்சியாகச்சொல்ல, துவட்டா அதனைச்சகியாதவனாய்க் கோபங்கொண்டு பிரமாவினாற் கொடுக்கப்பட்ட சாணைக் கல்லின் வாயில்வைத்து அழகு குன்றும்படி கடைந்தான்.

அப்பொழுது சூரியன் யாதுஞ்செய்ய இயலாதவனாய்த் துவட்டாவைப் பார்த்து உன் மகளிடம் இனி அதிக ஆசையும் அன்பும் வைத்து உரிமையாகக் கொள்ளுவேன் என்று கூறக்கேட்ட துவட்டா, சாணைக்கல்லைச் சுற்றுமல் நிறுத்திவிட்டான். சூரியன் வருந்தி மீண்டான். அது கண்ட காந்திமதி வியாழகுருவை யடைந்து எனது கணவனாகிய சூரியன் என்னை இகழ்ந்ததை முன்பு என் பிதாவுக்குச் சொல்ல, அவர் தமது சாணைவாயில் எனது கணவரை வைத்துக் கடைந்தார். அதனால் கணவருக்கு அழகு குறைந்து துன்பமுண்டாகியது. அவைகள் தேவரீர் அருளால் நீங்கவேண்டும் என்று கூறி வேண்டினள்.

வியாழன் அவள் கூறியதைக்கேட்டு, வைத்தியநாத தலத்தில் அத்துன்பம்நீங்கி அழகெய்துமென்று சொன்னார். சூரியன் தன் மனைவி காந்திமதியோடு அத்தலத்தையடைந்து, சித்தாமிர்ததீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் புரட்டாசி மாதத்திலே சாயாட்சையில் மூன்று நாளும், மாசி மாதத்திலே சாயாட்சையில் மூன்று நாளும் வைத்தியநாதரைப் பூசித்தான். அவர் அப்பூசைக்கு மகிழ்ந்து மிக்க வலிமையையும் நல்வரங்களையுங் கொடுத்தருளினர்.

வரம் பெற்ற சூரியன் காந்திமதியுடன் வைத்தியநாத சுவாமியின் திருவடிகளை வணங்கித் துதித்துத் தனதுலகத்தையடைந்து காந்திமதிக்குத் தன்னோடொருங்கிருக்கும் உரிமை நல்கி விண்ணில் விளங்குவானாயினான்.

ஆதித்தனருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

---

# ருக. வேதமருச்சனைசெய் சருக்கம்.

சூதமுனிவர், ஆதித்த னருச்சனைசெய் மான்மியங் கூறக்கேட்ட சவுனகாதி நைமிச முனிவர்க்கு ஈண்டு வேத மருச்சனைசெய் மான்மியங் கூறுகின்றார்.

முன்னொருகாலத்திலே அளவிலாற்றலையும், தீயசெயலையுமுடைய சோமுகனென்னும் அசுரனொருவனிருந்தான். அவன் தேவர்கள் வேதங்களை யோதியுணர்ந்து அவற்றில் விதித்த புண்ணியங்களைச் செய்து விலக்கிய பாவங்களை ஒழித்தலா லன்றோ அசுரரினும் வலிமைபெற்றுப் பொன்னுலகம் முதலிய மேலுலகங்களை யடைந்து சுகத்தையநுபவிக்கின்றார்கள். ஆகலான், அவ்வேதங்களை எடுத்து மறைத்துவிட்டால் அவர்கள் வலனையும் பலனையுமிழந்து வருந்துவர்; அப்போது அவரைத் தான் இலகுவில் வெற்றிகொண்டு அவர்கள் பதவிகளைத் அசுரர்களுக்குக் கொடுத்துத் தானும் அவர்களோடு இன்பமடையலாமென்று கருதி அவ் வேதங்களைத் தேவரறியாமற்றிருடிக் கடலின் மத்தியிற் சேற்றிற்புதைத்து மறைத்துவைத்தான். வேதத்தையிழந்த தேவர்கள், அஞ்சி யேங்கி அயர்ந்து வலிகுன்றி வைதிக கர்மங்கள் எல்லாவற்றையுங் கைவிட்டனர்.

அவர்கள் கைலாசமலையை அடைந்து தமக்கு நேர்ந்த குறையைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து தோத்திரம் பண்ணக் கைலாசபதி இரக்கமுற்றுச் சோமுகனைக் கொன்று வேதங்களை எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்துத் துன்பத்தைக் கெடுத்து இன்பத்தை மடுத்து அவரைக் காக்கும்படி விட்டுணு மூர்த்தியை நினைத்தருளினார்.

சிவபெருமானிவ்வாறு செய்யும்படி தம்மை நினைந்ததை யுணர்ந்த விஷ்ணுமூர்த்தியானவர் மற்சாவதாரமெடுத்துச் சோமுகனோடு போர்செய்து அவனைக் கொன்று சமுத்திரத்தின் மத்தியிற் புதைத்து வைக்கப்பட்ட வேதத்தைத் தேடியெடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்து அவர்கள் துன்பத்தை நீக்கிச் சுகமடையும்படி செய்தார்.

அதன்பின், வேதங்கள் அசுரனால் தீண்டப்பட்டுக் கடலுட்கிடந்த குற்றம் நீங்குமாறு வைத்தியநாத தலத்தை யடைந்து, வைத்தியநாத சுவாமியினுடைய திருவடிகளைத் தோத்திரஞ் செய்து, ஆகமவிதிப்படி பேரன்போடு மந்திரக் கிரியா பாவனைகள் உலோபமின்றிப் பூசைசெய்ய விரும்பி, அபிடேக திரவியங்களின் வாசனை மிக்க திருமஞ்சனத்தினால் பூசாகாலங்கள் தோறும் மனமுருகி அபிடேகஞ் செய்து, ஆலமுண்ட கடவுளுக்கு அன்ன நிவேதனம் நிவேதித்து, சோடசோபசாரத்தோடு ஒன்பதுநாட் பூசித்துத் தோத்திரஞ்செய்து குற்றம்நீங்கி மற்றும் வரங்களும் சிவபெருமான் கொடுக்கப்பெற்றன.

ஆதலால், வைத்தியநாத தலத்தை வேதபுரி என்றும் மேலோர் கூறுவர்.

வேதமருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

# ௫௨. அங்காரகனருச்சனைசெய் சருக்கம்.

—✥—

சூதமுனிவர், வேதமருச்சனைசெய் மான்மியங் கூறக் கேட்ட சௌனகாதி முனிவர்க்கு ஈண்டு அங்காரகன் அருச்சனை செய்மான்மியங் கூறுகின்றார்.

கழிந்துபோன இராதந்திர மென்னுங் கற்பத்திலே இமயமலைச் சாரலிலே கைலைநாதர் உலகத்தாருக்குப்பயன் கொடுக்கக் கருதி உமாதேவியாருடன் மகிழ்ந்து திருவிளையாடல் செய்யவிரும்பி, சூரியகிரணம் வெப்பமிக்க உச்சிப் போதில் பஞ்சாக்கினியின் மத்தியினின்று தவஞ்செய்வோர் போலத் திருக்கண்களைத் திறந்து சூரியனைப் பார்த்துக் கொண்டு வீற்றிருந்தருளினார். திருமுகத்தில் எழுந்த வேர்வைத்துளி ஒன்று வடவாமுகாக்கினி போன்று வெப்பத்தோடு பூமியில் விழுந்தது. அப்போது பூமிதேவி உபநிடதவாக்கியங்களால் சிவபெருமானைத் துதிசெய்து, ஜெகத்பிதாவே! தேவரீர் முற்றறிவினாலே அடியேன் படுந்தாயத்தை யறிவீர். பொறுத்தற்கரிய விந்துவக்கினியானது கொடுமையாய் வருத்துகின்றது. எந்த உதவியினால் இத் துன்பம் நீங்குவேன். காத்தருள்க! காத்தருள்க! என்று கூறி வருந்தி நின்றாள்.

பூமிதேவி இவ்விதங் கூறுதலும், சிவபெருமான் அதனைக் கேட்டருளி, கருணைமீக்கூர்ந்து, இப்பொழுதே வெப்பம் நீங்கிவிடும். நீ வருந்த வேண்டாம் என்று சொல்லும் பொழுதில், அங்காரகன் சூரியனைப்போன்ற செந்நிறமுடையவனாய்ப் பூமியினின்றெழுந்து கண்ணுதற் கடவுளின்

புண்ணியப் பதத்தை நண்ணிப் பணிந்தான். சிவபெருமான் அங்காரகனை நோக்கி மகிழ்ந்து, உன்னிடத்திருக்குங் கொடூரத்தைச் சாந்தமாகப் பண்ணிப் பூமியிலுள்ளவர்களுக்கு அனுகூலத்தைச் செய்யக் கடவாய். அது நிற்க, உபயகாவேரியின் மத்தியில் கீழ்க்கடலுக்கு மேற்றிசையில் வைத்தியநாதமென்னுந்தலஞ் சிறப்பாக விளங்கும். அப் புண்ணிய தலத்தை நீ தரிசனஞ் செய்த அப்பொழுதே அது, நீ மனத்தில் நினைத்த காமியங்களெல்லாவற்றையுங் கொடுக்கும் என்று திருவாய் மலர்ந்தருள, அங்காரகன் மிகமகிழ்ந்து தென்றிசையை நோக்கிச் செல்வானாயினான்.

செல்லும் வழியிலே இருக்கின்ற சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, காசியை யடைந்து கங்கையில் ஸ்நானம் பண்ணி, விசுவநாத சுவாமியினுடைய திருவடிகளைச் சந்தோஷத்தோடு பூக்களாலருச்சித்து, வைத்தியநாததலத்தையடைந்து, சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, பட்டு வஸ்திரம் உடுத்து, விபூதி தரித்து, உபவீதமணிந்து, உருத்திராக்கமாலை பூண்டுசென்று, முன்னர்க் கற்பக விநாயகரைத் தரிசித்து வணங்கி, பின் வைத்தியநாத சுவாமியைத் தரிசித்து மகிழ்ந்து, அபிஷேக திரவியங்களிடப்பட்ட திருமஞ்சனம், பஞ்சாமிர்தம், பஞ்சகௌவியம், முப்பழம், இளநீர் முதலியவற்றால் விருப்பத்தோடு அபிஷேகஞ் செய்து, பீதாம்பரம், இரத்தினாபரணந் தரித்து, சித்திரான்னம், அப்பவருக்கம், இனிய பழவர்க்கம் என்னும் இவ்வித நிவேதனங்களை நிவேதித்து, நாடோறும் இவ்வாறு வைத்தியநாத சுவாமியைப் பூசித்து வணங்கிப் பலவகைத் தோத்திரஞ்செய்ய, அவர் அங்காரகன் கண்ணுக்கு முன்னே எழுந்தருளி, பூமகனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்; யாந்தருவே மென்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வருண்மொழிகேட்ட அங்காரகன், தேவரீருடைய திருவடியை மறவாத மனமும், ஏனைய கிரகங்களினும் மிக்க மேன்மையும் தந்தருளல் வேண்டும்; அஃதன்றி, பன்னிரு மாதங்களிலும் வருகின்ற செவ்வாய்க்கிழமைகளில் இத்தலத்திலே மாகேசுவர பூசை செய்தவர்கள் இம்மையிலே சகல செல்வங்களையும் சற்புத்திரரையும் பெற்று, முடிவில் கைலையங்கிரியை யடைந்து, பேரின்பம் பெறும் வரத்தையுந் தந்தருளுக! தந்தருளுக! வென்று ஒரு முறைக்கு இருமுறை விண்ணப்பஞ்செய்து வேண்டினான். வைத்தியநாதர் அங்காரகன் விரும்பிய வரங்களை விரும்பிய வண்ணங் கொடுத்தருளி மேற்றிசை நோக்கி வீற்றிருந்தருளினார். வரம் பெற்ற அங்காரகன் தென்றிசையை நோக்கி, வைத்தியநாதரை மகிழ்ச்சியோடு பூசைசெய்துகொண்டு இருந்தான்.

முனிவர்களே! அங்காரகன் சரித்திரம் இன்னும் ஒன்றுளது; அதனையுங் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லுகின்றார்.

முன்னொரு கற்பத்திலே சிவபெருமான் திருவுளத்திற் கருதிய திருவிளையாடல் இன்னதென்று அறியேம்; தமது திருமுகத்தினின்றும் ஒரு வேர்வைத்துளியைப் பூமியில் வீழ்த்தினார். அதிலிருந்து அங்காரகன் இரத்த மேனியனாய்க் கரத்தில் வேலோடு தோன்றினான். சிவபெருமான் அவனை நோக்கி, அங்காரக! நீ உலகங்களைக் காப்பாற்றுக! உன்னைச் செவ்வாய்க்கிழமைகளில் வணங்கி உனது மகிமையைக் கூறித்துதிப்போர்க்குப் பூதவேதாளகிரக பீடையை நீக்கி நன்மைசெய்! வணங்காதவருக்குச் சொறிசிரங்கு முதலிய நோய்களைச்செய்! கிரகசிரேட்டனாய் விளங்கு, புகழுண்டாக வாழுக என்று இவ்வரங்களைக் கொடுத்தருளினார்.

குட்டரோகி, சிவத்துரோகி, தேசத்தோடு பகைத்தவன், விபூதி உருத்திராக்கம் திருடினவன், பிரமகத்திசெய்தவன் என்னும் இவர்களுக்குப் புத்திரப் பேறில்லை யென்றும், இவர்களைக் காணினும் முற்பிறப்பிற் செய்த புண்ணியம் நீங்குமென்றும், கருங்குட்டத்தினும் வெண்குட்டம் கோடிமடங்கு தோடம் என்றும், வெண்குட்டத்தினுஞ் செங்குட்டம் கோடிமடங்கு தோடம் என்றும், அத்தோடமுடையாரைப் பிராதக்காலத்திற் பார்த்தவர்களுக்கு அனந்தமடங்கு தோடமென்றும், அஃதன்றி அதற்குமுன் செய்த புண்ணிய மெல்லாம் அப்பொழுதே நீங்கிவிடும் என்றும் நூல்கள் கூறுதலால், குட்டரோகங்களுள் தலைமையான செங்குட்ட நோயையுடைய அங்காரகனைக் காணுதற்குத் தேவர்கள் பயந்து நடுங்க எம்பெருமானவர்களைப் பார்த்து அங்காரகனுடைய வடிவத்தில் செங்குட்டநோய் சேர்ந்திருத்தலால், நீவிர் அஞ்சுதற்கேதுவாயிற்று; அதனை நீக்கியருளுவோம்; அஞ்சாதொழிமின் என்றருளிச் செய்தார்.

அத்திருவாக்கைக் கேட்ட அங்காரகன், எம்பெருமானே! அடியேனுடைய குட்ட நோய் தீரும் வழியைத் தெரிவித்தருள வேண்டும் என்று இரந்து கூறினான். சிவபெருமான் வைத்தியநாத தலத்திலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, வைத்தியநாதருடைய திருவடிகளைத் தரிசித்து வணங்கினால் நீங்கிவிடும் என்று அருளிச் செய்தார்.

அங்காரகன் அதனைக் கேட்டு, சுவாமீ! இதற்குமுன் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து குட்டநோய் நீங்கினவர் யாவர்? அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

மாகிஷ்மதி தேசத்திலே புருகீர்த்தி யென்னும் அரசன் ஒருவனிருந்தான். அவன் மனைவி ஏமவதி குட்டரோயாற் பீடிக்கப்பட்டு வருந்த, அரசன் அது நீங்கும்பொருட்டு பல்லாத் தானதருமங்களையும் செய்தான்; கங்கை முதலிய எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்வித்தான். அதற்குரிய பிராயச் சித்தங்களெல்லாம் பண்ணினான். ஒன்றினாலும் அது நீங்கவில்லை. இனி யென் செய்வே னென்று அவன் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதில் தர்ச்சனமுனிவர் அவனிடம் வந்தார். அவருக்கு ஆசனங் கொடுத்து அருக்கிய முதலிய செய்தபின் தன் மனைவியின் வெண்குட்டம் நீங்கும் உபாயத்தைச் சொல்ல வேண்டு மென்று வேண்டினான்.

தர்ச்சனமுனிவர் ஒரு முகூர்த்தகாலஞ் சிவபெருமானைத் தியானித்திருந்து, பின்னர் அரச! நீ முற்பிறப்பில் மகத தேசத்தில் தனவைசியனாய்ப் பிறந்திருந்தாய்; இந்த ஹேமவதி கலியாணி யென்னும் பெயருடன் வைசிய குலத்திற்பிறந்து உனக்கு மனைவியாயிருந்தாள்; அவளை விரும்பாமல் தாசி கமனஞ்செய்து வந்ததுமன்றி எப்பொழுதும் அவளைக் காரணமின்றித் தண்டித்தாய்! அதைப் பொறுக்க முடியாமல் அனேக மந்திர யந்திர அவுடதங்களால் உன்னைத் தன் வசப்படுத்திக் கொண்டாள். அந்த மருந்தினால் உனக்குக் கயரோக முண்டாயிற்று. அதனால் நீ இறந்து வினைக்கீடாய்ப் பற்பல பிறவிகளை யெடுத்துப் பின்பு முற்சென்மத்திலே திருக்கோகர்ணநாதர் சந்நிதியிலே சிவராத்திரியிலே நீ செய்த உருத்திராட்ச தான புண்ணிய விசேடத்தினால் இம்மையிலே அரசனாய்ப் பிறந்தாய். உன் மனைவி உனக்கு மருந்திட்ட தோஷத்தினாலே எட்டு யுகம் காலசூத்திர நரகத்தில் வீழ்ந்து வருந்திப் பின் மூன்று

சென்மம் கழுதையாகவும், பதினைந்து சென்மம் நாயாகவும் பிறந்து, முற்சென்மத்தில் அனுட்டித்த சோமவார விரத புண்ணிய விசேடத்தால், இப்பிறப்பிலும் உனக்கு மனைவியாய், முன் உனக்குச்செய்த பாவசேடத்தால் வெண்குட்ட நோயாற் பீடிக்கப் பட்டாள். இந்நோய் வைத்தியநாத தலத்தை யடைந்து, பங்குனி மாதப் பூரணையோடு கூடிய உத்தர நட்சத்திரத்திலே சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, வைத்தியநாத சுவாமியையும் வாலாம்பிகையையும் பூசித்தால் நீங்கும் என்று முனிவர்கூறக் கேட்ட அரசன் அப்படியே செய்வித்து, மனைவியின் நோய் நீங்கினமையின் தன் தேசத்திற் பாதி வைத்தியநாத சுவாமிக்குத் தானஞ்செய்து, மீண்டு சென்று, சிலகாலம் அரசாண்டு, சுந்தரனென்னும் புத்திரனைப் பெற்று, உரிய பருவத்தில் முடிசூட்டி, அரசுரிமையுங் கொடுத்துத் தன் தேசத்தை யாளும்படி வைத்துவிட்டு, தன் மனைவியோடும் வைத்தியநாத தலத்திற்கு வந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்து, கோபுரம், அழகிய மண்டபம், மதில் முதலியவற்றை மிகு விசித்திரமாகக் கட்டி முடித்துப் பின்னும் சில காலம் சிவபூசை சிவதரிசனஞ் செய்து கொண்டிருந்து, திருக்கைலாச மலையிற் சென்று பேரானந்த மடைந்திருக்கின்றான் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதுகேட்ட அங்காரகன் சிவாஞ்ஞைப்படி வைத்தியநாத தலத்தை யடைந்து, அங்கேயுள்ள மகிமையைக் கண்ணாற்கண்டு, மாசி மாதத்திலே ஸ்நானஞ் செய்து, கரையேறுமுன் குட்டநோய் நீங்கித் தன் சரீரம் பொன் மயமாயிருக்கக்கண்ட செவ்வாய், வீரபத்திரர் முதலாகிய கடவுளரைப் பிரகாரத்தில் வணங்கி, உள்ளே சென்று, வைத்தியநாத கவசத்தைக் கூறி முடிந்துப் பின் திருக்கோயிலுங்கு

ஈசான திசையில் செங்கழுநீரோடை யொன்றியற்றி, அப் பூவினால் வைத்தியநாதரை யருச்சித்து,

"கமலநான்முகனுங்காணாக்கண்ணுதற்பிரானேபோற்றி
அமலனே போற்றி யெங்க ளையனே போற்றி நீங்காத்
தமலம தொழிப்போர்க் கென்றுந் தயைபுரி பரனே போற்றி
நுமலநீர்த்துயிர்க்குத்தோன்றாத் துணையதாயிருந்தாய்போற்றி",

என்று தோத்திரஞ் செய்து மீண்டு சித்தாமிர்த தீர்த்தத்திற்கு வடக்கே திருக்கோயிலுக்கு மேற்கிலே தென்முகமாக வீற்றிருந்தான். அத்தலத்தி லிருப்பவர்களும், யாத்திரையாக வந்தவர்களும் செபம், தபம், திலதருப்பணம், ஆகுதி இவைகளை அங்காரகனை நினைத்து அர்ப்பணஞ் செய்யாவிட்டால் பலனில்லை. அவனுக்கு அர்ப்பணஞ் செய்வோர்க்கு அனேக மங்களங்களும், பொன்னும், மணியும், புகழும் உண்டாகும். அஃதன்றி அவர்கள் நினைத்தவைகளெல்லாம் நினைத்தபடியே கைகூடும்.

ஆதலால் அவைகளைச் செய்து பலன்பெற விரும்புவோர் அங்காரகனை நினைத்து அவைகளை அர்ப்பணஞ் செய்தல்வேண்டும் என்பதைக் கடைப்பிடிக்கக் கடவர்கள்.

அங்காரகனருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

# ருரு. சந்திரனருச்சனைசெய் சருக்கம்.

சூதமுனிவர், அங்காரகனருச்சனைசெய் மான்மியங் கூறக்கேட்ட நைமிசமுனிவர்க்கு ஈண்டுச் சந்திரனருச்சனை செய் மான்மியங் கூறுகின்றார்.

பிரமபுத்திரனாகிய தக்கன் வரத்தால் எழின்மிகும் இருபத்தேழு புத்திரிகளைப் பெற்றுச் சந்திரனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். அவன் உரோகிணிப் பெண்ணை விரும்பி ஏனையோரை வெறுத்து அவர்களுக்குத் துன்பஞ் செய்தமையால், அவர்கள் சிலகாலஞ்சென்று சந்திரனைப் பிரிந்து தந்தையிடம் சென்று நடந்தவற்றை நடந்தபடி சொல்ல, தக்கனாகிய தந்தை மிக்க கோபங்கொண்டு மருகனாகிய சந்திரதேவனைச் சபிக்க, அவனுக்குக் கயரோகம் உண்டாகிக் கலைகுறையச் சரீரங் கறுத்தலால் அதனைத் தீர்த்தற்பொருட்டு வைத்தியநாத தலத்தை யடைந்தான்.

அங்கே சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிச் சந்தியாவந்தனஞ் செய்துமுடித்து விபூதிதரித்து, உருத்திராக்கமணிந்து, வைத்தியநாத சுவாமியைத் தரிசித்து வணங்கித் தோத்திரஞ்செய்து பின் வைத்தியநாதருக்கு விதிப்படி அபிடேகஞ்செய்து திருவமுது நிவேதித்து, தூபதீப முதலியன கொடுத்து, உருகுகின்ற மனத்தில் அன்பு ஊற்றெடுப்பப் பூசையை விதிப்படி செய்து முடித்தான். வைத்தியநாதர் சந்திரன் பூசைக்கு மகிழ்ந்து அவன்முன் எழுந்தருளி வந்து கயரோகத்தை நீக்கி, பூர்வபக்கத்தில் கலைகள் செழித்து வளரவும், அபரபக்கத்தில் அவைகள் குறையவும், பௌர்ணிமையில் பதினாறு கலைகளும் நிறையவும், உலகம் போற்றவும் வரங்கொடுத்தருளினார்.

சந்திரனுடைய இருபத்தேழு மனைவியரும் ஒரே மனமுடையராய்ச் சந்திரனோடு சேர்ந்தின்ப மநுபவிக்கும்படி சிவபெருமான் திருவருள்புரிந்தார். மருந்தாயும் மருத்துவராயுமிருந்து உயிர்ப்பிணி உடற்பிணியாவும் நீக்கி ஆன்மாக்களுக்கு முத்திகொடுக்கும் அருள்வள்ளலாகிய வைத்தியநாத சுவாமி நல்வரங் கொடுக்கப்பெற்ற சந்திரன் அந்நன்

றிக்கு வேறு கைம்மாறின்மையால், இதுவே செய்யத் தகு ந்ததென்று கருதி, அவரை வலம்வந்து, விடைபெற்றுத் தனது சோமலோகத்தை யடைந்து இருபத்தேழு மனைவி யர்களும் இம்மை மறுமைப் பயன்களடையும்படி அவர்க ளோடு விருப்பத்துடன் சேர்ந்து வாழ்ந்தான்.

சந்திரனருச்சனைசெய்சருக்கமுற்றிற்று,

---

# ருச.சடாயுவருச்சனைசெய்சருக்கம்

சூதமுனிவர், சந்திரனருச்சனைசெய் மான்மியங் கூறக் கேட்ட நைமிசமுனிவர்க்கு ஈண்டுச் சடாயுவருச்சனைசெய் மான்மியங் கூறுகின்றார்.

பிரமாவின் புதல்வரும் மகதியாழ்த் தலைவருமாகிய நாரதமுனிவர் முற்காலத்திலே, ஒருநாள், அம்பரீட மகா ராசனுடைய சபைக்கு அவன் மகிழ்ச்சியடையும்படி சென் றார். அரசன் எதிர்கொண்டழைத்துச் சென்று ஆசனத் திருத்திப் பாதபூசைசெய்து, தேவரீர் இங்கெழுந்தருளு தற்கு யானும் என் குலத்தவருஞ்செய்த தவம் என்னையோ வென்று தோத்திரஞ்செய்தான். முனிவர் அவனுடைய உண்மை வார்த்தையையும், உள்ளன்பையும் மனதிற்கொ ண்டு அவன் மகிழும்படி பலவகை ஆசிகூறினார். அப்பொ ழுது அரசன் அவரைப் பார்த்து, முனிவர் பெருமானே! நரர், சுரர், நாகர் முதலிய யாவருக்கும் இம்மை மறுமைப் பயன்களையும், முத்தியையும் எளிதிற்றரத்தக்க தலம் யாது? அதனைக் கூறியருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். முனி வர் அதுகேட்டு, அரசனே! காவிரிக்கு வடகரையில் தேவ

ரும் புண்ணிய தலமென்றேத்தும் முத்திரகாமாகிய வைத்தியநாத தலமெனப் பெயரியவொரு தலமுண்டு. அங்குச் சடாயுவென்னுங் கழுகு வைத்தியநாத சுவாமியை வில்வத்தாலருச்சித்த காரணத்தால் அது சடாயுபுரி யென்றுங் கூறப்படும். அதுதான் இம்மை, மறுமை, வீடென்னும் மும்மைப் பயன்களேயுங் கொடுக்கும் விசேட தலமென விடைகூறினர்.

அரசன் முனிவரைப் பார்த்து, சிவபூசை செய்த சடாயுவைப் பெற்றவன் யாவன் எனவும், குலவரலாற்றின் முறையாதெனவுங் கூறல் வேண்டுமெனக் கேட்டான். தக்கன் மனேவியும் காசிபர் புதல்வியுமாகிய வினதை அருணனென்னும் புதல்வனை முன்னரும், கலுழனென்னும் புதல்வனேப் பின்னரும் பெற்ருள். முன்னவனுகிய அருணன் சேணியென்னும் பெண்ணே விவாகஞ் செய்தான். அவள் சம்பாதி, சடாயுவென்னுமிரு புதல்வரைப் பெற்ருள். அவர்கள் ஒருகாலத்தில் கைலாசபதியைத் தரிசித்து, முத்தியடைய விரும்பி, கைலாசமலேயை யடைந்து, அதன் சாரலில் ஏறினர்கள். அங்குள்ளார் பட்சிசாதிகள் இங்கே வரக்கூடாதென்று கூறித்தடுத்தார்கள்.

அப்போது சம்பாதி அக்கொடியவர்களேப் பார்த்துப் பிறவியை ஒழிக்க நினேத்துச் சிவதரிசனஞ் செய்வோர்களேச் சைவர் தடைசெய்தல் நீதியன்றெனக்கூற, வாயிற் காவலாளர்கள் கழுகு ஞானம்பெற்றுப் புண்ணிய பாவங்களேப் பகுத்தறியுமோ என்று சொல்லிச் சிரித்து நித்தியகன்மம் இல்லாத கழுகினுக்குச் சிவபெருமான் ஞானங்கொடுக்க மாட்டார்; அங்ஙனமாகவும், ஞானமில்லாத நீ முத்தியடைய விரும்பியது என்ன புல்லறிவென்று

இகழ்ந்து சொல்லி, இவ்விடத்தைவிட்டு விரைந்தோடிப் போவென்று கடிந்து நீக்கிவிட்டார்கள்.

அக்கழுகு அன்பு அதிகரிக்கும்படி அதிவிநயத்துடன் அவர்களைப் பன்முறை நமஸ்கரித்து முத்தி அடையும் மார்க்கத்தைக் கூறுவீரென்று யாசித்து அனேக தோத்திரங்களைச்செய்தது. அதன்பின் அம்முத்தி நெறியைக் கூறுவாராயினார். கழுகே! நித்திய கருமத்தை நியமமாகச் செய்து பிரபஞ்சம் சிவாஞ்ஞையினாலே நடக்கின்றது என்று எண்ணுகின்றவனுடைய எண்ணத்திலே ஞானத்திற்கு ஏதுவாகிய நிட்டை நிகழும். அதன்பின் அவன் சிவஞானியாவான். நீ அறிவில்லாத பட்சி; ஆதலால் உன்னையும் உன் நம்பியையும் கைலாசமலையில் ஏறவிடோமென்றுசொன்னார்.

அதுகேட்ட சம்பாதி, எளிய பட்சிசாதியாகிய யான் சொல்லுகின்ற ஞானசாதகமாகிய வேதமார்க்கங்களைக் கேளுங்கள். பிராமணர்களுக்குச் சிவார்ச்சனையும், அரசர்க்கு அந்தணர் சேவையும், வணிகர்க்கு அந்தணர் அரசர் சேவையும், சூத்திரர்க்கு மூவர் சேவையும், தேவர்க்குத் தவமும், கந்தருவருக்கு இசையும், சித்தருக்கு மௌனமும், கின்னரருக்குப் பூமாலை கட்டுதலும், வித்தியாதரருக்கு வாத்திய முழக்குதலும், பட்சிசாதிக்குச் சிவபெருமானும் மகிழும்படி மேலே எழுந்து, சாய்ந்து, தாழ்ந்து உயர்ந்து வட்டமிட்டு, ஆகாயத்திலேறிச் செல்லுதலும் ஞானசாதகமாகும். ஆதலால், அவரவர் சாதி தருமமே அவரவர் விரும்புவாரென்று சொல்லக் கேட்ட காவலாளர்கள், நீ பறந்திடும் வேகம் யாம் அறிந்த பின்னர்ச் சிவதரிசனஞ் செய்ய விடைதருவேமென்று கூறி, பின்னரும் நீ இளையவனோடு சூரியமண்டலம் வரை செல்லும்பொழுதில் வலிமை

நீங்கி அஞ்சி வீழ்ந்திடிற் செய்வதென்னை யென்று கேட்டலும், யான் நரகத்திற் புகக்கடவேன் என்று உறுதியாகச் சபதங்கூறி, பின் இருவரும் வேகமாய்ப் பறந்து சூரிய மண்டலத்தை அணுகும்பொழுது சடாயுவாகிய இளையவன் வைத்தியநாத தலத்திலே மணிமந்திர ஔடத குண்டத்தின்மேல் வீழ்ந்தான், சம்பாதியாகிய மூத்தவன் விந்த மலையில் வீழ்ந்தான். சடாயு மணிமந்திர ஔடத குண்டத்தையும், வைத்தியநாத சுவாமியையும், வாலாம்பிகையையும், முத்துக்குமார சுவாமியையும் மூர்ச்சை தெளிந்து தரிசித்த மாத்திரத்தில் இன்பம் மிக மூன்று தினத்துள் அழகு பொருந்திய வடிவத்தைப் பெற்றெழுந்து, தண்டகாரணிய மெனவறிந்து வைத்தியநாதரைப் பூசைசெய்ய விரும்பி, சித்தாமிர்ததீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து திருக்கோயிலை மும்முறை வலஞ்செய்து வணங்கிக் கார்த்திகை மாதத்திலே அபாபக்கத்தட்டமி திதியிலே வேதாகம விதிப்படி பூசைசெய்து, அருள்பெற்றுத் தண்டகாரணியத்திலே மகிழ்ச்சியுடனிருந்தான்.

அக்காலத்திலே அயோத்தி மன்னன் தசரதனென்பான், காட்டில் மிருகங்கள் மிகுந்து நாட்டில் வந்து குடிகளுக்குத் துன்பஞ் செய்தலால் மந்திரத்தலைவர் முதலியோருடன் தண்டகாரணியத்திற் சென்று வேட்டையாடினான். அவன் உச்சிப்போதில் வெப்பமிகுந்து தண்ணீர்த் தாகத்தால் வருந்திப் பரிசனங்களோடு சோர்வடைந்து ஆலவிருக்க நீழலில் துயிலும்போது, கான்மாட்டிலிருந்த புற்றினைத் தூக்கமிகுதியால் உதைக்கப் புற்றிலிருந்த பாம்பு மேலெழுந்து தசரதனைக் கடிக்கவருதலைக் கண்ட சடாயு மலைபோலெழுந்து போய்ப் பாம்பைக் கடித்துக் கொன்றனன். அப்பொழுது அரசன் ஆரவாரத்தால் நித்திரை நீங்கி

எழுந்து யமன் பிடிக்க வந்திருந்தானென்று கருதிப் பாண த்தை எடுக்க, அதுகண்ட சடாயு பாணப்பிரயோகஞ் செய் யுமுன் நடந்தனயாவும் விரைந்து கூறினன்.

அதன்பின் அரசன் உண்ணுதற்குப் பழமும் நீருங் கொடுத்து அவன் உண்டு களித்துக் களைதீர்ந்தபின், சடாயு அரசனைப் பார்த்து, இன்று முதல் நீர் எனக்குத் தமையன், இவ்வெண்ணத்தை எக்காலத்தும் மறவாதிருப்பீராக எனக் கூறித்துதித்து, தன்னுடைய குலமுறையும் தான் தண்டகா ரணியத்துக்கு வந்த வரலாறும் கூற, அரசன் மகிழ்ந்து தன் மார்போடவனை யிறுகத்தழுவி, பழமும் நீரும் கொடுத்தமையைப் பாராட்டி, சடாயுவை மறவாத அன் போடு அயோத்திமா நகரை அடைந்தான்.

அரசன் சென்றபின் சடாயு கங்கை, காவேரி, கோதா வரி என்னும் நதிகளில் தினமும் ஸ்நானஞ் செய்துகொண்டு தண்டகாரணியத்தில் ஐம்பதினயிரம் வருடமிருந்தான்.

இத்தண்டகாரணியத்திலே இராமரும் இலக்குமண ரும் சீதையும் வந்து முனிவர்களால் ஆசீர்வதிக்கப்பட் டிருக்குங் காலத்தில், இராவணன் மாரீசனுடன் அவ்வனத் தில்வந்து, அவர்கள் வாசஸ்தானத்திற்குப்பக்கத்திலே தேரை நிறுத்திச் சீதையைப் பார்த்துக் காமபரவசனாய் அவளைக் கவரக் கருதி, மாரீசனைப் பொன் மான் வடிவங்கொண்டு மின்மான் சீதை முன் நிற்கும்படி செய்தான். அதைக் கண்ட சீதை இராமபிரானிடம் அதனைப் பிடித்துத் தருக என்று கூற, அவன் அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு சீதைக்குக் காவலாக இலக்குமணனை வைத்துப் பொன் மான் பின் போயினன். அது, சமீபிப்பதுபோலக் காட்டிக் காட்டி நெடுந்தூரஞ் செல்லச்செல்ல, இனித் தாமதித்தால்,

மறைந்து விடுமெனக்கருதி, இராமன் செலுத்தியபாணம் பட்டு விழுகின்றமான் "ஆ! சீதா!" என்று கூப்பிட்டு வீழ்ந்தது. அதனைச் சீதை கேட்டுத் தன் நாயகனுக்கு யாதோ தீங்கு நேர்ந்ததெனவெண்ணி, இலக்குமணனை அங்குப் போகும்படி சொன்னாள். அவன் தமையன் ஆஞ்ஞைக்குப் பயந்து போகாமல் நின்றான்; தமையன் இறந்துவிட்டால் தம்பியாகிய நீ தமையன் மனைவியாகிய என்னை விவாகஞ்செய்து வாழலாமென்றெண்ணி நிற்கின்றனையோ என்று சீதை சொல்ல, வெட்கமடைந்து அச்சத்தோடு இராமனைத் தேடி இலக்குமணன் சென்றான்.

இலக்குமணன் செல்லக்கண்ட இராவணன், சந்நியாச வேடந் தரித்துச் சீதையிடம் சென்று, பிச்சை கேட்டான்; பற்றில்லாத சந்நியாசி யெனக் கருதிப் பிச்சையிட வந்த சீதையைத் தூக்கிக்கொண்டு தேரிலேறித் தென்றிசை நோக்கி இலங்கைக்குச் சென்றான். அவள், இராமா! இராமா! என்று கூப்பிட்டழுதாள். வேறென் செய்வாள்? தீவினையை வெல்வார் யார்?

பாலி நதிக்கரையிற் செல்லும்போது, சீதை யழுகின்ற குரல் கேட்ட சடாயு, தேர் செல்லாதவண்ணம் மலைபோல எதிர் வந்து நின்று தடுத்தான். இராவணன் அவனைத் தள்ளிவிட்டுப் பெண்ணையாற்றங் கரையை யடைந்தான். சடாயுவும் விடாமற்றொடர்ந்து அவன் முடியைக் கொத்திச் சிதறினான்; தேரைத் தூளாக்கினான்; குடையைத் தலை கீழாக வீழ்த்தினான், பாகனைக் கொன்றான்; வில்லையும் அம்பையும் தூணியையும் பொடியாக்கினான்; பின்னும் இராவணனைக் கொல்ல நினைத்துச் சுற்றி மேலெழுந்து சிறகுகளை விரித்து இராவணனைத் தாக்கினான். இராவணன்

சீதையைப் பூமியில்விட்டு உடைவாளால் சடாயுவின் சிறகு களையும் கால்களையும் அறுத்தெறிந்தான். அஃதன்றிக் கழுத்தை ஊடுருவிச்செல்லும்படி பாணத்தையும் செலுத்தினன். அதனால் சடாயு மூர்ச்சித்து நிலத்தில் வீழ்ந்தான்.

இராவணன் நிலத்தில் நின்ற சீதையைத் தூக்கித் துடையில் வைத்துக்கொண்டு ஒரு மாத்திரைக்குள இலங்கையை அடைந்து அசோகவனத்தில் திரிசடை முதலியோர் காப்பில் அவளை வைத்தான். அது நிற்க.

இராமலக்குமணர்கள் சீதை யிருந்தவிடத்தில் வந்து அவளைக் காணுமல் மனந்தளர்ந்து தேடிக்கொண்டு பாலி நதியைக் கடந்து கந்தவரையில் வரும்போது, தேரும் வில்லும் பாணமும் ஒடிந்து கிடக்கவும், சிறகுகள் சிதைந்து கிடக்கவும், ஒரு கழுகு உதிரஞ்சொரிந்து கிடக்கவும் கண்டு இராமன் இவன் காலனே! கழுகுருவெடுத்து வந்து சீதையைப் பிடித்துத் தின்றுவிட்டான்; இவனைக் கொல்லுவேன் என்று பாணத்தை வில்லிற்றொடுத்தான்.

அப்பொழுது சடாயு, முன்னர்த் தன்னைத் தசரதமகாராசன் தம்பி யென்றுசொல்லி முறைதெரிவித்துப் பாணஞ் செலுத்தாமற் றடுத்துக்கொண்டு, பின்னர்த் தசரதர் வேட்டையாடத் தண்டகாரணியம்வந்தபோது, நிகழ்ந்தனவெல்லாங் கூறிப் பின், இராவணன் சீதையை யெடுத்து வந்தமையும், தான் அவளை விடுவித்தற்பொருட்டு அவனோடு பொருது அவனுடைய தேர் முதலியவற்றை அழித்ததையும், அவன் பாணம் பட்டுக் குற்றுயிரோடு விழுந்ததையும் விளங்க விரித்துக் கூறினன்.

இராமன் அந்த நல்வார்த்தைகளைக் கேட்டு அன்பு மிகுந்து மனமுருகி, சிறிய பிதாவே! உமதுயிர் நீங்குங்கா

லஞ் சமீபித்துவிட்டது; மனத்துயரை விடக்கடவீர். முன்னாளில் நீர் பூசைபுரிந்த வைத்தியநாத தலத்திலே சித்தாமிர்ததீர்த்தத்திற்கு வடதிசையிலும், வைத்தியநாதர் திருக்கோயிலுக்குத் தென்றிசையிலுமுள்ள விபூதி குண்டத்திற்கு அண்ணிதாகச் சிதையடுக்கி அதில் உமது உடம்பை வைத்துத் தகனஞ் செய்து, உத்தரக்கிரியைகளையும் புதல்வனாகிய யான் செய்து முடிப்பேனென்று கூறினான். அவ்வுறுதி மொழிகேட்டசடாயு மனமகிழ்ச்சியுடனே உயிர்துறந்தான். இராமன் தான் வாக்குத்தத்தஞ் செய்தபடி சடாயுவின் தேகத்தை எடுத்துவந்து சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அபரக்கிரியைகளைச் செய்துமுடித்து வெள்ளெருக்கநிழலில் பிதிர்பிண்டமிட்டுப் பிதிர்தருப்பணமுஞ் செய்தான்.

பின்பு இலக்குமணனோடு வைத்தியநாதக் கடவுளை வேதாகம விதிப்படி அன்போடு பூசைசெய்து நினைத்த வரங்கள் பெற்றுச் சீதையைத்தேடித் தண்டகாரணியத்தின் தென்றிசை நோக்கிச் சென்று சேதுபந்தனஞ் செய்து இலங்கையை யடைந்து, இராவணனைக் கொன்று இலங்கையை ஆளும்படி தன்னைச் சரணென்றடைந்த விபீடணனுக்கு முடிசூட்டிச் சீதையோடும் இலக்குமணனோடும் அயோத்தியை யடைந்து மிக்க மகிழ்ச்சியோடும் வாழ்ந்தான்.

சடாயுவருச்சனைசெய்சருக்கமுற்றிற்று.

# ௫௫. காலவச்சருக்கம்.

—❀—

சூதமுனிவர், சடாயுவருச்சனைசெய் மான்மியங் கூறக் கேட்ட சௌனகாதி நைமிசமுனிவர்க்கு ஈண்டுக் காலவ மான்மியங் கூறுகின்றார்.

விட்டுணு பக்தி, சிவபக்தியுடைய காலவ முனிவர் என்பவர் ஒருவர் மகேந்திர மலையில் இருந்தார். அவருக்குச் சீடர் எழுபது பேர். அவர் "வீழ்நாள் படாமை நன்றாற்றி னஃதொருவன்—வாழ்நாள் வழியடைக்குங் கல்" என்றபடி சிறிதும் வீண்காலம் போக்காமல் சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்கள் செய்தலினும், விண்டு தரிசன சிவதரிசனங்கள் செய்தலிலுமே காலங் கழிப்பார்.

இவ்வியல்புடைய காலவர் தல யாத்திரை செய்ய விருப்பி, காவிரியில் ஸ்நானஞ்செய்து சீரங்கத்தையடைந்து சந்திரபுட்கரணி தீர்த்தத்திற்படிந்து, ஸ்ரீரங்கநாதர் திருவடிகளைத் துதித்து வணங்கி, ஸ்ரீமுட்ட முதலிய நூற்றெட்டுத் திருப்பதிகட்குஞ் சென்று ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணி விண்டு தரிசனஞ் செய்து வணங்கித் தோத்திரம் பண்ணிக்கொண்டு மீண்டு தனது வாசஸ்தானமாகிய மகேந்திர மலையை யடைந்து புலித்தோல் விரித்து அதன்மேலிருந்து திருவேங்கட மலைக்கு ஒப்பான விண்டு தலம் வேறொன்றுமில்லையென்று நினைத்து, உதயகாலத்தில் தனுக்கோடி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, உச்சிக்காலத்தில் திருவேங்கடத்தில் சுவாமி புட்கரணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, திருவேங்கடநாதர் திருவடியில் திருத்துழாய் சாத்தி அருச்சித்து வணங்கி, மகேந்திர மலையை யடைந்து *விசுவதேவமும் விதிப்படிசெய்து பின் தாம் போசனஞ்

---

*விசுவதேவம்:—தேவபூசை, பிதிர்பூசை.

செய்வார். சாயங்காலத்தில் மதுரைக்குச்சென்று சோமசுந்தரக்கடவுளை அன்பினேடு துதித்து வணங்குவார். இவ்வியல்புடைய முனிவர் இந்நியமத்தில் வழுவினல் அக்கினியில் வீழ்ந்திறப்பேனென்று சபதங்கூறினர்.

இந்நியமப்படி காலையிற் சேதுஸ்நானமும், உச்சியில், திருவேங்கடநாதர் தரிசனமும், மாலையிற் சோமசுந்தரக்கடவுள் தரிசனமும் ஆயிரம் வருடம் செய்துகொண்டு வரும்போது, ஒருநாள் உதயத்தில் சேதுஸ்நானஞ் செய்து திருவேங்கடநாதனை உச்சிப்போதிற் றரிசித்தற்கு உத்தர திசையை நோக்கிச் †சித்தபாதுகையிலேறிச் சீடருடன் வரும்போதில் தண்டகாரணியத்திலே, உபயகாவேரி மத்தியிலே திருவெண்காட்டுக்கு மேற்றிசையில், மூன்றுகுரோச தூரத்திலும் வில்வவனத்திற்கு நிருதிதிசையில் மூன்று குரோச தூரத்தினும் பலாசங்காட்டுக்குக் கிழக்குத்திசையில் இரண்டு குரோச தூரத்திலும் உள்ள வைத்தியநாததலத்திலே ஒரு இராக்கதன் முனிவர் எதிரில் அவரைக் கொல்லும்படி வந்தான். அப்பொழுது முனிவர் "நரசிம்மாயநம." என்னும் நரசிம்மமந்திரத்தைச் செபித்துச் சித்தாமிர்த தீர்த்தநீரை அள்ளித்தெளிக்க, அவன் உக்கிரம்நீங்கிச் சாந்தமாகி முனிவர் பாதத்தில் வீழ்ந்திறைஞ்சி அவரை நோக்கி, முனிபுங்கவரே! திக்கற்ற சிறியேனுக்குப் பிதாவும் நீரே! மாதாவும் நீரே! குருவும் நீரே! கருணைக்கடலே! எளியேனைக் காப்பாற்றல்வேண்டும் என்று பிரார்த்தித்தான். முனிவர் அது கேட்டுத் திருவருள் நோக்கஞ் செய்து உனக்கு இராக்கத வடிவம் வருதற்குக் காரணமென்னை? என்று வினவினர்.

†சித்தபாதுகை:—சிந்தித்தவிடத்திற் றினைப்போதிற்கொண்டுபோய்விடும் பாதகுறடு.

முனிவர் பெருமானே! முற்பிறப்பில் யான்கந்தருவன். துந்திலனென்னும் பெயருடையேன். மல்லிகார்ச்சுன மகா தலத்திலே, பருப்பதநாதர் சந்நிதியிலே, சிவராத்திரியிலே ஒரு பிராமணர் சிவபுராணம் படித்துக்கொண்டிருந்தார். அவர் கண்ணிமைத்தல் முதலிய உடற்றொழிற்குற்றங்களும் வெடிகுரல், வெள்ளை, காகுளி, முதலிய சாரீரவோசைக் குற்றங்களும். கழிபோக்கோசை இழைத்தல் முதலிய பாடற்றொழிற் குற்றங்களும் பொருந்த எடுத்துக்கொண்ட விடயத்திற்கும், காலத்திற்கும், கவிக்கும் இசைந்த இராகத்திற் படியாமையால், கானம்பாடுங் கந்தருவகுலத்திற் பிறந்து இசைநூல் கற்ற எனக்குப் பெருந்துன்பம் உண்டாயிற்று. அதனாற் புராணிகரையும், புராணத்தையுந் தூஷித்தேன். அவ்வளவிலமையாது படித்துங் காட்டினேன். அங்கிருந்து புராணங்கேட்ட பிராமணரெல்லாம் அதுகேட்டு மனமகிழ்ந்து ஆச்சரியமடைந்தனர். புராணிகர் கோபங்கொண்டு கந்தருவனே! நீ சிவபுராண தூஷணஞ்செய்தமையால், பூமியிலே ஐந்து பிறப்பு இராக்கதனாய்ப் பிறக்கக்கடவை என்று சபித்து, பின்னும், நான்கு பிறப்பு வேறிடங்களிற் பிறப்பாய்; ஐந்தாம் பிறப்பு வைத்தியநாத தலத்திற் பிறந்து, காலவ முனிவரைப் பிடிக்கச் செல்லும்போது, அவர் நரசிங்க மந்திரம் செபித்துச் சித்தாமிர்த தீர்த்தம் தெளிப்பார்; அப்பொழுது இராக்கத வடிவம் நீங்கும் என்று சாபந்தீருங் காலமுங் கூறினார். கிருபா மூர்த்தியே! சித்தாமிர்த தீர்த்தநீர் பட்டமாத்திரத்தே இராக்கத வடிவம் நீங்கிக் கந்தருவ வடிவம் பெற்றேன். இனி என்னுலகத்திற்குப் போகின்றேனென்றுகூறித் தேவர் புடைசூழ விமானத்திலேறிக் கந்தருவலோகஞ் சென்றான். அது நிற்க.

காலவமுனிவர் கந்தருவன் வரலாறு கேட்டு உச்சிப்

போது கழிந்தமையால், அக்காலத்தில் வேங்கடநாதரைத் தரிசிக்கு நியமம் தவறிற்று. அதனால் சொன்ன சபதப்படி அக்கினிப் பிரவேசஞ் செய்ய நினைத்துச் சீடரிடம் அக்கினி வளர்க்கும்படி கட்டளையிட்டார். அவர்கள் எங்கள் குல குருவே! தேவரீரைப் பிரிந்து யாங்கள் எவ்வாறிருப்பேம்! திருமால் அடியாராகிய எங்களைத் தேவரீர் காத்தல் வேங் கடநாதர் தரிசனத்திற்குச் சமானமன்றோ! திருமாலடியவர் செய்யும் பூசைக்குத் தடை நேர்ந்தால் அத்திருமால் பொறுப்பாரென்று நூல் வழியாக முன்னம் எங்களுக்குத் தெரிவித்தபடியால், இப்பொழுது "திருமாலுக் கடிமை செய்"யுந் தாங்கள் வேங்கடநாதர் தரிசனத்திற்குத் தடை வந்தமை காரணமாக அக்கினிப் பிரவேசம் செய்யக் கூடா தென்று விண்ணப்பஞ் செய்கின்றேம் என்று கூறிய சீடரை முனிவர் பார்த்து, அவ்வார்த்தையை விட்டு அக்கினி மூட் டுங்களென்று பின்னரும் ஆஞ்ஞை செய்தார். பின் என் செய்வார்? "குரு வாக்கைத் தட்டாதே" என்ற திரு வாக்கை எண்ணிக் குரு வாக்கின்படி அக்கினி மூட்டினார் கள். முனிவர் தாங் கூறிய சபதம் தவறாமல் நரசிங்க மந்தி ரத்தை உச்சரித்து, அக்கினியில் வீழும்போது விட்டுணு மூர்த்தி வைத்தியநாதருக்கு வாயு திசையிலே கார்த்திகை மாதத்துப் பௌர்ணிமையிலே காலவமுனிவருக் கெதிரே தோன்றி, அவர் கரத்தைப் பிடித்து அக்கினியினின்று தூக்கி, முனிவனே! வேண்டியவரங் கேட்பாயாக வென்று கூறியருள, அத்திருவாக்கை முனிவர் கேட்டுத் துன்பம் நீங்கிப் பலமுறை வணங்கித் தோத்திரஞ் செய்து, இந்த தலத்தில் தேவரீர் எழுந்தருளியிருத்தல் வேண்டும்; அடி யேன் தேவரீருடைய ஸ்தலங்களில் வாசம் பண்ணல் வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார். அவ்வாறே

விஷ்ணுமூர்த்தி வரங் கொடுத்தார். வரங் கொடுத்தபடியால் அவரை வரதவேங்கட நாதரென்று சொல்லித் தேவுலகத்தாரும், பூவுலகத்தாரும் துதித்தார்கள். அவரை வணங்குவோர் இட்டகாமியம் பெற்றுப் பூரணவாயுளுடன் வாழ்வார்கள்.

காலவ முனிவரும், அவர் சீடரும் தலவாசஞ் செய்துவிண்டு பூசை பண்ணிக் கொண்டிருந்து நெடுங் காலஞ் சென்றபின் வைகுண்டபதவி யடைந்து இன்பமுற்றார்.

காலவச்சருக்கமுற்றிற்று

---

# ரு௬. சித்திரகேதுச்சருக்கம்.

சூதமுனிவர், காலவமான்மியங் கூறக் கேட்ட சௌனகாதி நைமிசமுனிவர்க்கு ஈண்டுச் சித்திரகேது மான்மியங் கூறுகின்றார்.

முற்காலத்திலே சித்திரகேது வென்னும் அரசன் ஹேமாங்கி என்னும் அரசியை மணம்புரிந்து சவ்வீர தேசத்தை ஆண்டுவந்தான். அவன் நெடுங்காலஞ் சென்றும் புத்திரப் பேறின்மையால், கவலை யடைந்து, அஃதின்மைக்குக் காரணம் சிவபெருமானையும் மற்றைத் தேவர் முதலியோரையும் பூசியாமற் கொடுங்கோல் செலுத்தினமையே யென்றெண்ணித் துன்பமடைந்திருந்தான்.

அக்காலத்தில் காற்கியமுனிவர் அரசன் கிருகத்திற்கு வந்தார். அவன் இருக்கை விட்டெழுந் தெதிர்கொண்டழைத்துச்சென்று ஆசனத்திருத்தி அருக்கியங்கொடுத்துப்

பூசித்துத் துதித்து, "விம்மி வெய்துயிர்த்து" நின்றான். அதுகண்ட முனிவர், அரச! நீ இங்ஙனம் வருந்துதற்குக் காரணம் யாதென்று வினவ, அவன், புத்திரப்பேறில்லாமையே என்று விடை கூறினான்.

அங்ஙனங் கூறக்கேட்ட முனிவர் அரசனே! உனக்குப் புத்திரப் பேறின்மைக்குக் காரணம் கூறுகின்றேன்; அதனைக் கேள்! நீ முற்பிறப்பிலே கலிங்க தேசத்தரசன்; தெய்வ பத்தி யின்மையால் விருத்தசீலன் என்னும் வேதப் பிராமண னொருவன் சிவராத்திரி காலத்திற் செய்த சிவ பூசையை இகழ்ந்து சிவபூசைக்கு வைத்திருந்த கனிந்த பழங்களை யெடுத்துத் தின்றாய். அவன் உனக்குப் பயந்து பிறிதோரிடத்திற் சென்று சிவபூசை செய்து முடித்தான். அதன்பின் நீ இறந்து இருபத்தொரு மனுவந்தரம்வரை நரகிற்கிடந்து வருந்திப் பின் சிவராத்திரி காலத்திலே சிவதரிசனஞ் செய்த பலத்தால் சவ்வீரதேசத் தரசனாய்ப் பிறந்தாய். அச்சிவத் துரோகத்தால் புத்திரப்பேறின்றி வருந்துகின்றாய். அதற்கு ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன்; உபய காவேரிக்கு மத்தியிலிருக்கின்ற வைத்தியநாத தலத்தை யடைந்து, வைத்தியநாதர், வாலாம்பிகை, வரதவேங்கட நாதர் மூவரையுந் தரிசித்து வணங்கினால், வேங்கடநாதர் புத்திரப் பேற்றிற்கு வழி காட்டுவார்; விரைந்து அங்குச் செல்லென்று கூறித் தமது யாகத்திற்கு வேண்டுந் திரவியம் பெற்றுச் சென்றனர்.

அரசன் அரசியோடு வைத்தியநாத தலத்திற் சென்று முனிவர் சொற்படி மூவரையுந் தரிசித்து வணங்கி நிற்க, வேங்கடநாதர் அரசனே! நீ வைத்தியநாத வள்ளலை வணங்கிச் சிவராத்திரி விரதம் அநுட்டித்தால் விரும்பிய பேற்

றைப்பெறுவாயென்று கூறியருளினர். அதுகேட்டஅரசன் மும்முறை பெரும்பேறுதவுந் தலப் பிரதட்சணஞ் செய்து, வைத்தியநாதரை வணங்கி, விடைபெற்றுத் தன்றேயஞ் சென்று, விதிப்படி மாதசிவராத்திரி விரதம் அநுட்டித்து வந்தான். அதன்பின் அவனுக்குத் தியூமற்சேனன் என்னும் சற்புத்திரன் பிறந்தான். சிலகாலஞ் சென்றபின் உரிய பருவத்திலே சித்திரகேது புத்திரனுக்கு மணிமுடி சூட்டி அரசாளவைத்துத் தான் வைகுண்ட மடைந்து அங்குள்ள போகங்களை அநுபவித்த பின் கைலையங்கிரி சென்று அங்குள்ள பேரின்பம் அநுபவித்துக்கொண்டிருக்கின்றான்.

சித்திரகேதுச்சருக்கமுற்றிற்று.

---

# ௫எ. வீரசேனச்சருக்கம்.

சூதமுனிவர், சித்திரசேன மான்மியங்கூறக்கேட்ட நைமிசமுனிவர்க்கு ஈண்டு வீரசேனமான்மியங் கூறுகின்றார்.

வாலிய தேசத்தரசன் வீரசேன னென்பான், "ஈதலிசைபட வாழ்த லதுவல்ல-தூதிய மில்லை யுயிர்க்கு" என்ற வண்ணம் கொடையினாலும் அதனால் வரும் புகழினாலும், மேம்பட்டுத் தருமமுடையவனா யிருந்தும், முற்செய் தீவினையால், புத்திரப்பேறின்றி வருந்தி, அதுபெறுதற்கு விரும்பி, பல மகத்துவம் பொருந்திய விரதங்களை அநுட்டித்து, அவ்வளவி லமையாது புராணபோதகர் மனமகிழும்படி இரத்தினாபரண முதலிய உயர்ந்த பொருள்களை நிரம்பக்கொடுத்து, அவரை ஆசனத்திருத்தி, தான் தரையிலிருந்து சிவபுராணங் கேட்குங்காலத்தில் மௌனமா யிராமல் பலருடன் பேசிக்கொண்டிருந்தான். பின்பு அரசனுக்கு ஒரு புத்திரன்

பிறந்தான். அவனுக்குச் சித்திரசேன னென்று பெயரிட்டு, பதினாறுட்டைப் பிராயத்தில் சவுராட்ட தேசத்தரசன் புதல்வியை அவனுக்கு மணஞ் செய்தான். இருபதாம் வயதில் கயரோகத்தால் பீடிக்கப்பட்டு மணிமந்திர ஔடதங்களாற் றீராது அதிகரித்தலால் என்பு எழுந்து புறத்தே தோன்றிச் சரீரங் கருகித் துன்பஞ்செய்ய அரசன் மனைவியுடன் கவலையுற்று, வாட்டமடைந்து, இனி என்ன செய்தாற் றீருமென்று எண்ணிக்கொண் டிருக்கும்பொழுதில், கௌதமமுனிவர் காவலனிடம் வந்தார்.

அரசன் அவருக்கு அருக்கிய முதலியவற்றைக் கொடுத்துபசரித்துப், பின் தனது புதல்வன் நிலையைத் தெரிவித்தான், அவர் நிட்டையிலிருந்து நோயின் காரணமுணர்ந்து, அரசனே! நீ புராணங் கேட்டபோது பிறருடன் பேசிக்கொண்டு பராமுகமாய்க் கேட்ட காரணத்தால், உன்புதல்வனை இந்நோயடுத்தது. நல்ல விஷயத்தை அரசனுக்குப் போதிப்பவர் உலகமுழுதுமுள்ளவர்களுக்குப் போதித்த பலன் பெறுவரென்று சாத்திரங் கூறுதலால், அரசனே! உனக்கு இப்பொழுது புராண சிரவண விதியைச் சிறிது கூறுகின்றேன் கேள்! புராணங் கேட்கும்போது பிறருடன் பேசுவோர் புத்திரர் கயரோகமடைவர். உயர்ந்த ஆசனத்திருந்து கேட்பவரும், புராணம்பொய்யென்று பரிகசிப்பவரும், இரௌரவ நரகமடைவர். புராணதூடணஞ்செய்வோர் சந்ததிநாசமும், கயரோகமும், நீரிழிவும் அடைவர். புராணங்கேட்டு இடையில் எழுந்துசெல்வோர் குட்டநோய் குன்மநோயடைவர்.

புராணம் வாசித்தவர்க்குப் பொருள் கொடாதவர் நரகத்தில் வீழ்வர்; பொருள் சொன்னவருக்குப் பொருளும், ஆடையாபரணங்களும், பீதாம்பரமும் கொடாதவர்கள்

கொடிய நரகத்தில் வீழ்ந்து வருந்தி, பின் குருடாய்ப் பிறந்திறந்து வருந்துவர் என்றிவ் வாறெடுத்துக்கூறிப் புதல்வன் இறத்தற்குமுன் வைத்தியநாத தலத்தையடைந்து, கார்த்திகைமாதத்திலே அபரபக்கத்திலே அட்டமிதிதியிலே புதல்வனைச் சித்தாமிர்ததீர்த்தத்தில்ஸ்நானஞ் செய்வித்து, வைத்தியநாதர் திருவடியைப்பூசித்து, சடாயுகுண்டத்து விபூதியைத்தரித்தால் அப்போதே விடாதநோயெல்லாம் விட்டுநீங்கும்; விரைந்து அங்கே செல்லுதியென்று கூறினார்.

அரசன் முனிவர் சொன்னபடியே யாவுஞ்செய்ய அந்நோய் நீங்கிற்று அரசன் மகிழ்ந்து சடாயுகுண்டத்திற்குப் பிட்டு, அதிரசம், வடை, மோதகம் முதலிய அளவில்லாத நைவேத்தியம் நிவேதித்துச் சடாயுகுண்ட வேதிகையைப் பொன்னாற்செய்து நவரத்தினங்கள் பதித்துத் திருப்பணி முடித்து, அக்குண்டவிபூதியை யாவருமணிந்து, அரசன் புத்திரன், பாரி, பரிசனம் தன்னைச்சூழநின்று, தானுளுந்தே சத்திற்பாதி வைத்தியநாதக் கடவுளுக்குக்கொடுத்து, புத்திரன், மனைவிஇருவரோடுந் தேர்மீதேறிப் பரிசனங்கள்சூழத் தன் தேசத்தையடைந்து செங்கோலோச்சி வாழ்ந்திருந்தான்

பிரதோடகாலத்திலே, செவ்வாய்க்கிழமையிலே, பிதிர் தினத்திலே சடாயுகுண்டத்து விபூதியை அணிந்தால், வெண்குட்ட முதலிய வியாதிகள்நீங்கும்; பகைவரை வெல்லலாம்; போகேன் போகேன் என்று சொல்லும் பேயும் பூதமும் போய்விட்டேன் போய்விட்டேனென்றுசொல்லிக் கொண்டோடும்.

ஆதலால், இப்பலன்களை விரும்புவோர் சடாயுகுண் விபூதியை விதிப்படி அன்போடு தரிக்கக்கடவர்கள்.

வீரசேனச்சருக்கமுற்றிற்று.

# ௫அ. சீலவிருத்தச்சருக்கம்.

சூதமுனிவர், வீரசேன மான்மியங் கூறக் கேட்ட நைமிசமுனிவர்க்கு ஈண்டுச் சீலவிருத்த மான்மியங் கூறுகின்றார்.

பார்ப்பனர் பாரியரோடும் எற்புறும் நியமம் இடையறு தியற்றி வாழும் பயிடீசினி என்னுந் தேசத்திலே, கண்ணுவ கோத்திரத்திற் பிறந்த கபிலனென்னும் பிராமணன் ஒருவனிருந்தான். அவன் மனைவி சுகுணை யென்பாள். அவள் சீலவிருத்த னென்னும் புத்திரனைப் பெற்றாள். அவனுக்குத் தந்தை *சாதகன்மம், உத்தாபனம், நாமகரணம், பிரவாசம், அன்னப் பிராசனம், பிண்டவர்த்தனம், சௌளம், உபநயனம் என்னுங் கிரியைகளை அவ்வக் காலங்களிலே செய்து, ஐந்தாம் வயதில் வித்தை கற்பித்து, இலக்கிய இலக்கண தருக்க சாமர்த்திய மடைந்தபின், வேதவித்தாகிய போதாகாசாரியரைக் கொண்டு வேத வேதாந்தங்களையும் ஓதுவித்தான்.

அவன் முற்பிறப்பிற்செய்த நல்வினையினாலே பிராமண வருணத்திற் பிறந்தும் அப்பிறப்பிற் செய்த பெருந் தீவினையினாலே தந்தை தாயர்களையும், பிறரையும், சந்ததமும்

---

* சாதகன்மம் - பிறப்பைக் குறித்துச் சிசுவுக்குச் செய்யுங் கிரியை. உத்தாபனம் - குழந்தையை அது பிறந்த அசுத்தவிடத்தினின்றும் சுத்தவிடத்திற் சேர்த்துவைக்குங் கிரியை. நாமகரணம் - பெயரிடுங் கிரியை. பிரவாசம் - குழந்தையை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லுங் கிரியை. அன்னப்பிராசனம் - சோறூட்டுங் கிரியை. சௌளம் - குடுமி வைக்குங் கிரியை. உபநயனம் - பூணூல் தரிக்குங் கிரியை.

நிந்தனைபுரிந்து மதுபானமுஞ் செய்தான்; அஃதன்றிக் கள்ளுண்ணும் வேசியர்களுடைய சேடத்தையும் உண்டான். இன்னும் அவன் செய்த கொடுமைகள் அளவற்றன.

அவன் காமபரவசனாய்த் தன்னேசியாகிய வேசியை அல்லும் எல்லும் புல்லிச்செல்லுங் காலத்திலே அவளொரு பெண்ணைப் பெற்ற பின் இறந்துவிட்டாள். அப்பெண் பூப்புப்பருவ மடைந்தவுடன் காமதூரந்தனாய்த் தருமம் தன்னை வருத்துமென் றெண்ணாது தனக்குப் பிறந்த பெண்ணையும் புணர்ந்தான். இன்னும் அவன் செய்த ஒரு பாவத்தை நினைத்துச் சொல்லப்புகின், நினைத்த மனமும் எரிந்துவிடும். அப்பெண் பெற்ற பெண்ணையும் புணர்ந்தான். அம்மகா பாவி அவளோடு ஆதிமத்தியார்ச்சுன தலத்தை யடைந்து, பகலில் வீடுகளில் நுழைந்து திரவிய மிருக்குமிடந் தெரிந்துகொண்டு இரவில் அத்திரவியத்தைத் திருடிச் செல்லுவான். அதுபோலப் பின்னும் அங்கே யவன்செய்த பாவங்களை அளவிட்டுச் சொல்லமுடியாது.

அவனங்கே அப்படிச் செய்துகொண்டிருக்கும்பொழுது சிவபத்தி மிக்க பிராமணனொருவன் நித்தியமும் நியமமாகத் தரிக்கக் கருதி, விபூதி குண்டத்தின் திருநீற்றை எடுத்து வஸ்திரத்தில் முடிந்துகொண்டு சென்று, ஆதிமத்தியார்ச்சுனதலத்தில் ஓரிடத்தில் வைத்துக்கொண்டு நித்திரை செய்தான். சீலவிருத்தன் முன்போல இரவில் திருடச் சென்று, விபூதி முடிச்சை எடுத்துப் பார்த்துப் பணமின்மையினாலே விபூதியை உதறிவிட்டு வஸ்திரத்தை எடுத்துக் கொண்டு செல்லும் வழியில் யமதூதர் வந்து பிடித்துச் செல்ல, சிவகணங்கள் வந்து யமதூதர்களைக் கோபித்து, இவர் திருடிய வஸ்திரத்தை உதறியபொழுது, அதிலுள்ள விபூதி யிவருடம்பிற் பட்டிருத்தலை நீவிர் காணவில்லையா?

இப்புண்ணிய புருடர் முன் நீவிர் நண்ணிட லாகாதென்று கடிந்துகூறி, அவர் கண்காண விமானத்திலேற்றிக்கொண்டு கைலாசத்தை யடைந்தார்கள்.

சடாயு குண்ட விபூதியை அணியும் பலன் இவ்வளவென்று எவராலுஞ் சொல்ல முடியாது. ஆதலால், எல்லாரும் அதனை யணிந்து பெரும்பயன் அடையக் கடவர்கள்.

சீலவிருத்தச்சருக்கமுற்றிற்று.

---

## ருசு. சுவாசினிச்சருக்கம்.

சூதமுனிவர், சீலவிருத்த மான்மியங் கூறக்கேட்ட சௌனகாதி நைமிச முனிவருக்கு நாரத முனிவர் கூறிய வண்ணம் ஈண்டுச் சுவாசினி மான்மியங் கூறுகின்றார்.

கங்கைக் கரையில் வசிக்கும் அந்தணன் மனைவி சுவாசினி யென்பாள் தோழியரோடு பூக்கொய்ய அங்குள்ள பூஞ்சோலைக்குப் போய், தோழியர், பூக்கொய்தும் என்றும், நீர் விளையாடுதும் என்றும், குயிலொடு கூவுதும் என்றும், மயிலொடு ஆடுதும் என்றும் பலவழியிற்பிரிய, சுவாசினி, புன்னைமா நிழலிற் றனித்துப் பூக்கொய்து நின்றாள். அப்போது, புன்னைமரப் பொந்திலும், கடப்பமரப் பொந்திலும், அரசமரப் பொந்திலு மிருந்து முறையே பேயும், வேதாளமும், பிரம ராட்சசும் அவளைக் கண்டு மோகித்து, அவளோடு சேர நினைத்து, அவளெதிரே வந்து சேர்ந்து, நான் முன்னர்க் கண்டேன், ஆதலால் கண்ட முறைப்படி இவளை அநுபவித்தலே நீதி; அஃதன்றி வலிமை பேசில் கொல்லு

வேன்; நீங்கிச் செல்லுக வென்று ஒன்றினேடொன்று கோபித்துக் கூறி நின்றன.

இவைகள் பேசும் இவ் வார்த்தைகளைச் சுவாசினி கேட்டு, அஞ்சி ஏங்கி மூர்ச்சையடைந்து, சிறிது நேரத்துள் தெளிவடைந்து வீட்டிற்குச் சென்று, உணவும் துயிலும் ஒழிந்து பித்தர்போலப் பிதற்றிக்கொண்டிருந்தாள். அது கண்ட கணவனும், தாய் தந்தையரும் முறையே ஒரு மாதம், நான்குமாதம், ஒருவருடம், மூன்று பன்னசாலை களில் முனிவர் காவலில் வைத்திருந்தார்கள்.

அலகைகள் மூவர் கருத்து முணர்ந்து சமயம் பார்த்து அவள் தனித்து நிற்கும்போது, அவ்விடத்துள்ள பாழ்ங் கிணற்றில் தள்ளிவிட்டு ஒளித்திருந்தன. கணவனும் பெற் றோரும் அவளைக் காணுமல், தேடிச் சென்று, கிணற்றுள் உயிரோடு நிற்கக் கண்டு, மேலே தூக்கி, முப்பது வருடங் காவல்செய்து வந்தனர். பின், முற்பிறப்பில் அவர்களும் அவளுஞ் செய்த புண்ணிய வசத்தால் வைத்தியநாத தலத்தை யடைய, பின் தொடர்ந்து சென்ற பேய்கள் அத் தலத்தைக் கண்டஞ்சி நடுங்கிக் கருத்து வேறுபட்டுப் புறத்தே நின்றன. சுவாசினி முன்போலக் கணவனை வணங் கினள். அதுகண்ட தந்தை தாயர் அதிசயித்து, அங்கிருந்த புராணிகரை நமஸ்கரித்து, அத்தல மகிமையைக் கேட்டு, அவர் சொற்படி மகளைச் சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வித்துத் தாமும் மூழ்கி, வைத்தியநாத சுவாமியைத் தரிசித்து, வணங்கிவலம்வரும்போது, சடாயுகுண்ட விபூதி யைச் சுவாசினி எடுத்தணிந்தாள். அப்பொழுதே தல வெல்லைக்குப் புறம்பேநின்ற பேய் முதலியன ஓடின; தீவினை களும் நீங்கின ; அதனுல், பேரின்பமுற்று முன்போல அழ

கும் விளக்கமுமடைந்து நின்றாள். கணவன் முதலிய மூவரும் சடாயு குண்டத்தின் மகிமையை அறிந்து அளவிடப்படாத ஆனந்தமுற்றனர்.

பின் நால்வரும் அக் குண்டத்தை அஞ்சலிசெய்து, மூன்றுதரம் வலம்வந்து, வைத்தியநாதரை வணங்கி, தமது ஊரை யடைந்திருந்தார்கள். இந்திரன் முதலிய இறையவராலும் சடாயுகுண்ட மகிமை அறிதலரிதென்று நாரதமுனிவர் கூறினர். ஆதலால் யாவரும் அக்குண்ட விபூதியைத் தரித்துப் பெரும்பயனடையக்கடவர்.

சுவாசினிச்சருக்கமுற்றிற்று.

---

## ௬௦. துச்சீலச்சருக்கம்.

சூதமுனிவர், சுவாசினிமான்மியங் கூறக்கேட்ட சௌனகாதி நைமிசமுனிவர்க்கு ஈண்டுத் துச்சீலமான்மியங் கூறுகின்றார்.

காம்பிலியமென்னுந் தேசத்திற்பிறந்த துச்சீலனென்னும் பிராமணன் வேதத்தை ஓதியுணர்ந்தும், "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்—நற்றா டொழாஅ ரெனின்" என்றபடி, வேதத்தாலும் முழுமுதற் கடவுளென்று நிரூபணஞ்செய்யப்பட்ட சிவபெருமானை வழிபடாமல், இங்ஙனந் தூஷிப்பானாயினான். பித்தன் முத்தனல்லன்; காட்டில்வசித்து ஓட்டை ஏந்துபவன் சிவனல்லன்; சர்வ தாதாவுமல்லன்; சர்ப்பாபரணன் சர்வசம்பன்னன் அல்லன்; நறுமலரிருக்க எருக்கவெறுமல ரணிபவன் நறுமணமறியுங் குணமிலனாகலான் எண்குணனல்லன் என்று இன்னன பலப்பலகூறிச் செகத்குருவும் அநாமய்ருமாகிய சங்கரரை

நிந்தனைபுரிந்தமையினால், திருடர்கள் அவன் வீட்டிலுள்ள பொருள்களெல்லாவற்றையும் திருடிக்கொண்டு, வீட்டிலுந் தீ...டடிச் சென்றார்கள்.

சிவதூஷணத்தைச் சகிக்கலாற்றாத சுற்றத்தாரும் மற்றை யறிஞர்களும் துச்சீலா! பெண்டுபிள்ளை பண்டபதார்த்தமாகிய எல்லாவற்றையும் சிவபெருமான் தரப்பெற்று வைத்தும், "செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்" என்ற வண்ணம் சிவபெருமானைச் சிறிதும் பேணாது, இகழ்ந்த சிவத்துரோகத்தால் உனது திரவியங்களெல்லாவற்றையுந் திருடர்கள் கவர்ந்தார்களே! இனி என் செய்வாய்! பூரியா! நீ இருந்தால் ஊருக்குக் கேடு விளையுமாதலால் ஊரைவிட்டுப் போ என்று கடிந்து சொல்லித் து...த்திவிட்டார்கள், அவன், மனைவி மைந்தர்களோடு பல ஊர்கடோறுஞ் சென்று பிச்சை பிச்சையென்று கத்தித் திரிந்தான். திரிந்துமென்னை ?

"ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்றாத வர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே"

என்றபடி பிச்சை கிடைத்திலது. அதனால் வேற்றூர்க்குச் செல்வேமென்றெண்ணிச் செல்லும் பொழுது, வழியில் இடிவிழுந்து மனைவி இறந்தனள். பின் காட்டு மார்க்கத்தில் பசி நோயால் நடக்கமுடியாமற் புதல்வரும் இறந்தனர். அதனால், துச்சீலன் மனந்தளர்ந்து, காட்டிலே தங்கி, அங்குள்ள காய் கனி கிழங்கு முதலியவற்றைப் புசித்துக்கொண்டிருந்து, சில காலங் கழிந்தபின்பு முற்செய் நல்வினைப் பயனால் வைத்தியநாத தலத்தையடைந்து, வைத்தியநாதருக்குத் திருமஞ்சனமெடுக்கும் பணிவிடைசெய்து சீவித்தான்.

சீவனத்தின் பொருட்டுப் பணிசெய்தலால், புண்ணிய மின்றிப் பாவம் வளர்தலின், ஓதியுணர்ந்த வேதமுற்றும் மறந்தான், சந்தியாவந்தனம், சிராத்தம் என்னு மிவற்றையுஞ் செய்யாது விடுத்தான். இத் தன்மையனாய் அங்கிருக்குங் காலத்தில், பங்குனி மாதத்து மகோற்சவ தரிசனத்தின் பொருட்டு அங்குச்சென்ற வயிற்றுநோயுடைய சந்நியாசி ஒருவர் சடாயுகுண்டத்தின் விபூதியணிந்தால், அந்நோய் நீங்குமென்றறிந்து, அந்நோயால் அக்குண்டத்தில் விபூதியைக் குனிந்து தாம் எடுத்தற்குச் சத்தி யின்மையின், அங்கு நின்ற துச்சீலனை எடுத்துத் தரும்படி சொல்ல, அவன் கேட்டும் கேளாதவன்போல் நின்றான். மீட்டும் எடுத்துத் தரும்படி சொல்ல, அவன் கோபங்கொண்டு, துர்மதியே; தூரப்போ! என்று கோபத்தோடு சொல்லி, பலவழியாற் பணம்பறிக்கக் கருதிச் சைவர்கள் வைத்த இச் சாம்பற் குவியல் உன் வியாதியைத் தீர்க்காது; ஞானியாகிய உனக்கு இது தெரியாதா! வைத்தியரிடத்தில் மருந்து வாங்கி உண்டால் நீங்குமென்று சொன்னான்.

அதுகேட்ட சந்நியாசி, மகா மகிமைபொருந்திய சடாயு குண்ட விபூதியைக் கோபத்தோடு தூஷித்தானே என்று பெருஞ் சீற்றங்கொண்டு, கோபத்தையுடைய புலியாய்ப் பிறப்பை என்று அவனைச் சபித்தார். உடனே அவன் பாம்பு கடித்திறந்தான். இயம தூதர்கள் அவனை எல்லா நரகங்களிலும் வீழ்த்தி வருத்தினார்கள். அவன் துன்பத்தை யநுபவித்து நெடுங்காலஞ் சென்றபின், வைத்தியநாத தலத்தில் அபுத்தி பூர்வமாகச் செய்த புண்ணியத்தால் அத் தலத்திற்குச் சமீபமாயுள்ள *ஆதிமத்தியார்ச்சுன தலத்திற் புலி

*ஆதிமத்தியார்ச்சுன தலம்—இக்காலத்து மருவத்தூர் என வழங்கப்படுகிறது.